இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பற்றிய விளக்க உரைகளும் சட்டத்தைப் பயன்படுத்தும் முறைகளும்

தொகுப்பாசிரியர்: கிஷாலி பின்ரோ ஜயவர்தன

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் வெளியீடு

இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பற்றிய விளக்க உரைகளும் சட்டத்தைப் பயன்படுத்தும் முறைகளும்

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

ஐ.எஸ்.பி.என் :978-624-5092-04-8

வெளீயீடு:

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு
அறை இல.203 - 204,
பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம்
பெத்தலோக்க மாவத்தை
கொழும்பு 07.
தொலைபேசி/தொலைநகல்: + 94 11 2691625/26
மின்னஞ்சல்: rti.commission16@gmail.com
இணையம்: http://www.rticommission.lk
பெப்ரவரி 2019

எல்லா உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் முன் சம்மதம் இல்லாமல் இந்த வெளீயீட்டின் எந்தவொரு பாகமும் இலத்திரனியல், இயந்திரவியல், பிரதியிடல் மற்றும் ஏனைய வழிமுறைகள் மூலம் எந்த வடிவத்திலும் மீள் உருவாக்கம், மீளெடுப்பு முறைமையிலான சேமிப்பு, பரப்புதல் முதலியன செய்தலாகாது.

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவே இத்தகைய வெளீயீட்டின் உள்ளடக்கத்திற்கு பொறுப்பாகும். இவ் வெளியீட்டின் நோக்கு எழுத்தாளர்களின் பிரதிபலிப்புகளினையே வெளிப்படுத்துகின்றது. தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் எந்தவித உத்தியோகபூர்வ கொள்கைகளினையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

அச்சிட்டது:

சமயவர்தன அச்சகம் தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி
இல.53 ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல நாகிமி மாவத்தை
(மாலிகாகந்தை) வீதி மருதானை, கொழும்பு-10

பொருளடக்கம்

முகவுரை v-viii
தவிசாளர் செய்தியும் நன்றி நவிலலும் ix-x
தொகுப்பாளரின் செய்தி xi-xxxvi

கட்டுரைகள்

1. **தகவலுக்கான உரிமை பற்றி சில பொதுவான விளக்க உரைகள்**

1.1 நல்லாட்சியின் அம்சம் ஒன்றாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் சில அம்சங்கள்- 1-10
அ. சர்வேஸ்வரன்

1.2 இலங்கையில் இரண்டு வருடங்களில் தகவல் அறியும் உரிமை பற்றிய விளக்க உரைகள் 11-27
பிரசாந்தி மஹிந்தரட்ன

1.3 இலங்கையின் சட்ட ஆட்சியின் முக்கிய ஆதாரமாக தகவல் அறியும் உரிமை 28-42
தீபிகா உடகம

1.4 இலங்கை அரச பொது சேவையின் மூடிமறைக்கும் போக்கு 43-50
சுசில் சிரிவர்தன

2. **தகவலுக்கான உரிமையும் ஊடகமும்**

2.1 நேர்மையான பத்திரிக்கையாளர்களுக்கான தகவல் உரிமைக்கானச்சட்டம் 51-59
சின்க ரட்ணதுங்க

3. **தகவலுக்கான உரிமைச்சட்டம் தொடர்பான சட்ட ரீதியான விளக்க உரைகள்**

3.1 இலங்கை, தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆணைகளில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு ஆணைகளின் விமர்சன ரீதியான மதிப்பீடு
ஜயந்த டீ அல்மெய்டா குணரட்ன 60 - 92

3.2 கூட்டுத்தாபன மற்றும் வங்கியியல் துறைகளில் தகவலுக்கான உரிமை
ஹர்ஷ பர்னான்டோ 93 -123

4. **ஓரங்கட்டப்பட்ட மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் தகவலுக்கான உரிமையினைப் பயன்படுத்துகின்ற முறைமை: தகவலுக்கான உரிமை அரச பொறுப்பு கூறுதலை ஏற்படுத்துவதற்கான பிரயோகப்படுகின்றமை தொடர்பான மதீப்பீட்டு சோதனை**
அஷ்வினி நடேசன் மற்றும் ஆதில் நாதனி 124-161

5 தன்னிச்சையாக முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு: தகவல் உரிமையின் நிவர்த்தி செய்யப்படாத கடப்பாடுகள்
விஜயானந்த ஜயவீர 162-179

6. **தகவலுக்கான உரிமைச்சட்டம் தொடர்பான ஒப்பீட்டு நோக்கு**

6.1 ஒப்பீட்டு நோக்கில் இலங்கையின் தகவலுரிமைக்கான சட்டப் பரப்பு
டோபி மென்டெல் 180-205

6.2 தென்னாபிரிக்காவில் தகவல் உரிமையின் ஆட்சி: ஒப்பீட்டு ரீதியான முக்கிய விடயங்கள்
ரிச்சர்ட் கலன்ட 206-221

7. தொகுப்பாளர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் பற்றிய விபரம் 222-230

முகவுரை

நவீனமயமான 21ம் நூற்றாண்டில், பகிரங்க அதிகாரசபையிடமிருந்து தகவல்களை நாடிப் பெற்று மனிதர்களுடைய அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் அங்கீரித்தல் என்பவற்றின் தேவைப்பாடு என்பது மறுக்கப்பட முடியாததாகும். மனிதர்கள் தகவல்களின் உண்மைத்தன்மையை ஆராய்ந்தறிவதையும் தகவல்களை தெரிவு செய்வதையும் பொறுப்புள்ள அரசாங்கத்தை நிலைநிறுத்துவதையும் உறுதி செய்வதற்கு இந்த உரிமை முக்கியமானதாகும். மக்களுக்கும் அவர்களுடைய அரசாங்கத்திற்கும் இடையிலான அதிகார சமநிலை அற்ற தன்மையை மறுசமநிலைப்படுத்துவதற்கு அது முக்கியமானதாகும்.

2000ம் ஆண்டிலிருந்து உலகம் முழுவதும் தகவல் உரிமைச்சட்டம் அதிவேக வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது 123 சட்டங்கள் உலகெங்கிலும் வளர்ந்து நிற்பது அதற்கொரு சாட்சியாகும். இந்த போக்கின் அடிப்படையிலேயே இலங்கையின் தகவலுக்கான உரிமைச்சட்டமானது 2017ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி நடைமுறைக்கு வந்தது. சட்டத்திற்கும் ஜனநாயகத்திற்குமான உலகலாவிய அமைப்பின் சுட்டெண்ணில் இலங்கையின் சட்டவாக்கத்திற்கு உலகலாவிய ரீதியில் 4வது இடமும் ஆசியாவில் 2வது இடமும் கிடைத்துள்ளது[1]. இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டவாக்கம் சில தனிப்பட்ட மற்றும் முற்போக்கான பிரிவுகளை கொண்டுள்ளது. அவை *Toby Mendel* இன் *Comparative Perspectives* என்ற அத்தியாயத்தில் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. "அவர் அதனை பின்வருமாறு விபரிக்கின்றார்." குறிப்பிடத்தக்க பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் தன்வசம் கொண்டிருப்பதனால் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு உலகிலே மிகவும் சக்திவாய்ந்த ஒன்றாகும்."[2]

---

1 உலகலாவிய தகவலுரிமைச்சட்ட தரவுகள் <https://www.law-democracy.org/live/rti-rating/global/>.

2 மெனடெல் டோபிஇ Sri Lanka's Legal Regime for the Right to Information *in Comparative Perspective*, p. 82.

எவ்வாறாயினும் வலுவான ஒரு சட்டம் இருத்தல் முதல்படியாகும். தகவல் உரிமைச் சட்டத்திற்கு ஒரு அர்த்தத்தைக் கொடுக்கும் பரீட்சை சட்டத்தின் வினைதிறனான அமுலாக்கமாகும். இவ் வெளியீடு, சட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து அதுதொடர்பாக ஒப்பீட்டு மற்றும் விமர்சன ரீதியான மதிப்பாய்வை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவினால் முன்வைக்கப்படுகிறது. பின்னடைவு மற்றும் குற்றச்சாட்டு ஏதேனும் இருக்குமானால் தன் மீதானதும் எதிர்கால நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்குமான முக்கியமான ஒரு அடையாளத்தை இவ் வெளியீடு வழங்குகின்றது.

இவ் வெளியீட்டில் எடுத்துரைக்கப்பட்டுள்ள முக்கியமான குறிப்புக்கள் சில கீழே குறித்துக்காட்டப்பட்டுள்ளன.

முதலாவது, ஆணைக்குழுவானது, அரசதரப்பிலுள்ள இலஞ்ச ஊழல், நிலைமாறுகால நீதி தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முயற்சிகள் மற்றும் தனியுரிமை மேலோங்கும் பொதுநலனை சமநிலைப்படுத்தல் உட்பட மிகவும் பரந்துபட்ட விடயங்களுடன் தொடர்புடைய 600 க்கும் மேற்பட்ட தீர்மானங்களினை மிகவும் உயர் தரத்தில் வழங்கியிருத்தல் குறிப்பிடத்தக்கது. இவ் விடாமுயற்சியின் மூலம், ஆணைக்குழுவானது இச்சட்டம் தொடர்பான நீதி பரிபாலனத்தை மேம்படுத்த முக்கிய வேலையை நிறைவேற்றத் தொடங்கியுள்ளது.

இரண்டாவது, அரசாங்கம் அதன் பங்கிற்கு ஆணைக்குழுவின் ஆணைகளுடன் இணங்கிச் செயற்படுவதோடு, வெளித்தோற்றத்தில் இன்னமும் இரகசிய கலாசாரம் இருந்தாலும் கூட ஆணைக்குழுவிற்கு பதிலளிக்கப்பட வேண்டும் என பகிரங்க அதிகாரசபைகளுக்கு ஆணைக்குழுவினால் அறிவிக்கப்படுகிறது. இது அரசாங்கத்தின் ஒப்புதலையும் அதாவது சட்டத்தேவைப்பாடுகளை பின்பற்று வதையும் நிரூபிக்கின்றதோடு ஆணைக்குழுவின் ஆணைகளுக்கு மதிப்பளிப்பதையும் குறித்துக்காட்டுகின்றது.

மூன்றாவது, ஏனைய சட்டவாக்கங்களின் விதிவிலக்குகளை உட்சேர்த்தல் தகவலுக்கான உரிமைச்சட்டதின் வளர்ச்சியை பின்னடையச் செய்கின்றது. இவ் வெளியீட்டில் மேலோட்டமாக குறித்துக்காட்டப்பட்டுள்ள ஆனால் நெருக்கமாக கவனிக்கவேண்டிய விடயம் ஆணைக்குழுவின் நிதிப்பற்றாக்குறை இச்சட்டத்தின் நிர்வாகத்தின் மீது உள்ளதான தடையாகும். கனடாவில் என்னுடைய சொந்த அனுபவத்தில் கூறுகிறேன், இப் பின்னடைவானது தகவல் உரிமையை செயலாற்றுவதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆகவே எல்லா பங்குதாரர்களுக்கும் எச்சரிக்கையாக கூறும் ஆலோசனை என்னவெனில் மேற்கூறிய பின்னடைவுகளை குறித்து மேலும் அவதானமாயிருத்தல் வேண்டும்.

நான்காவது, இலங்கை மக்கள் அவர்களுடைய உரிமையை பயன்படுத்துவதிலுள்ள ஆர்வம் கவனிக்கத்தக்கதாகும். தொடர்ச்சியான வெற்றிகான உத்திகள் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதாவது பொதுச்சேவையின் அனைத்து நிலைகளுக்கும் பயிற்சியளித்தல், எல்லா பிரஜைகளுக்குமான விழிப்புணர்வு, பயிலரங்குகள், செயல்திறன் மிக்க வெளிப்படுத்தலை அதிகரிப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள், ஊடகங்களின் ஈடுபாடு, மற்றும் மிகமுக்கியமாக அரசாங்கம் மற்றும் பொதுச்சேவை ஆகியவற்றின் உயர் தலைவர்களின் தலைமைத்துவம். இவை இல்லாமல் தகவலுக்கான உரிமை நிலைத்திருக்க முடியாது.

இலங்கை அதனுடைய முற்போக்கான சட்டவாக்கம், ஆணைக்குழுவினுடைய அர்ப்பணிப்பு, விடாமுயற்சி மற்றும் குறிக்கோள், ஆணைக்குழுவின் ஆணைகளுக்கு மதிப்பளிப்பதற்கான அரசாங்கத்தின் ஒப்புதல் மற்றும் மிகமுக்கியமாக அதனுடைய மக்கள் தமது தகவல் உரிமையை பயன்படுத்துவதில் காட்டும் ஆர்வம் என்பவற்றின் மூலம் தெளிவாக ஆசியாவின் தலைமைத்துவத்தை எடுத்துள்ளது.

என்னுடைய அனுபவத்தின்படி, தகவல் உரிமையையும் செயற்படுத்துவது என்பது காலப்போக்கில் பெரும் சவாலாக

மாறியுள்ளது. மேலும் அனைத்து பங்குதாரர்களிடமிருந்தான விழிப்புணர்வு, அர்ப்பணிப்பு மற்றும் தைரியம் ஆகியவை அது அர்த்தமுள்ளதாக நிலைத்திருப்பதனை உறுதிசெய்யும். தொடர்ச்சியான முன்னேற்றமானது அடிப்படை உரிமையை பாதுகாப்பதற்கு முக்கியமாகும். தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவிடமிருந்து வெளிவரும் இவ் வெளியீடு இலங்கையில் முதல் இரண்டு வருடங்களில் தகவல் உரிமையை நடைமுறைப்படுத்துவதில் எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பில் பங்குதாரர்களுக்கு சேவையாற்றுவதற்கும் இவ் மிக முக்கியமான அடிப்படை உரிமையை பாதுகாப்பதற்கு உதவியளிக்கும்.

ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் உரிமையின் ஒரு தீவிரமான விசுவாசியும், ஆதரவாளருமாக இருப்பதால் நான் மிகுந்த ஆர்வத்துடன் அதனை தொடருவேன். ஆகையால் இலங்கையின் தகவல் உரிமைச்சட்டத்தின் முன்னேற்றத்தை அநேக மக்கள் எதிர்பார்கின்றனர் என்பதை நான் நம்புகின்றேன்.

சூசன் லெகால்ட்

கனடாவின் முன்னால் தகவல் ஆணையாளர்

(2010ம் ஆண்டு யூன் மாதம் - 2018ம் ஆண்டு பெப்ரவரி)

தவிசாளர் செய்தியும் நன்றி நவிலலும்

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி செயலாட்சிக்கு வந்த தகவலுரிமைச் சட்டத்தின் இரண்டு வருட நிறைவை ஒட்டி தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் விளக்க உரைகள் மற்றும் தகவலுக்கான உரிமையின் செயற்பாட்டுமுறை பற்றிய கட்டுரைகள் ஆணைக்குழுவினால் இத் தொகுப்பில் வெளியிடப்படுகின்றது. இத்தொகுப்பின் முதல் பாகமாக ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சில ஆணைகள் தெரிவு செய்யப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பிலுள்ள ஒவ்வொரு ஆக்கமும் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற தகவலுரிமை நிர்வாகத்தின் வேறுபட்ட அம்சத்தினை பிரதிபலிக்கின்றது. இதனூடாக, ஏதோ ஒரு வடிவத்தில் தகவலுரிமைச் செயன்முறையில் ஈடுபடுவதற்கு வாசகர் ஊக்கப்படுத்தப்படுகின்றார். பிரஜைகள் பகிரங்க வாழ்க்கையில் முழுமையாக பங்குபற்றுவதனையும் நாட்டில் பரந்தளவில் நல்லாட்சி மேம்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்கிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதல் கலாசாரத்தினை வளர்க்கின்ற செயற்பாட்டில் இம்முயற்சியானது சிறிய அளவிலாவது ஒரு கருவியாக அமையும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். எங்களுடைய அழைப்பின்பேரில் தங்களுடைய பங்களிப்பினை சரியான நேரத்திலளித்து இத்தொகுப்பினை சாத்தியமாக்கிய தத்தம் துறைகளில் தேர்ச்சி பெற்றுள்ள திறமை வாய்ந்த நிபுணர்களுக்கும் எனது ஆழமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், இத்தொகுப்பிற்காக தமது விலைமதிப்பற்ற பங்களிப்பினை அளித்த தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் சட்ட ஆய்வாளர்களான சுஷ்மிதா தயானந்தன் கிரிசி அபயசேகர, ஜயனி பெரேரா, இமல்கா அபேசிங்க மற்றும் ருவினி பெரேரா ஆகியோரின் உதவி நன்றியுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.

இத் தொகுப்பிலுள்ள கட்டுரைகளை மூன்று மொழிகளிலும் வெளிக் கொண்டுவருகின்ற இக்கடினமான பணியினை முன்னெடுத்து இத்தொகுப்பினை பதிப்பித்த தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் செல்வி. கிஷாலி பின்ரோ ஜயவர்தனவிற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சட்டத்தரணிகளான ராதிகா குணரத்ன, துமிந்து மதுஷன், தவபிரியா தவகுமார் மற்றும் கிரிஜா சிவகுமார் ஆகியோரும் இத்தொகுப்பின் வெளியீட்டிற்கு வேறுபட்ட வழிகளில் தமது பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும். இத்தொகுப்பு ஆவணமொன்றாக வெளிவருவதற்காக இங்கு குறிப்பிடாத பலர் தமது பங்களிப்பினை நல்கியிருந்தனர். அவர்களுடைய பங்களிப்பு இல்லாவிடின், இத்தொகுப்பின் வெளியீடு சாத்தியமாயிராது. அவ்வாறு, பங்களிப்பளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹிந்த கம்மம்பில

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தவிசாளர்

தொகுப்பாசிரியரின் குறிப்பு

2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுரிமைக்கானச் சட்டம் (தகவலுரிமைக்கானச் சட்டம்) இலங்கையில் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றைய தினத்தில் அத்தகவலுரிமைக்கானச் சட்டத்தின் பிரதிகளைத் தமது கருவிகளெனக் கருதி பொலிஸ் நிலையங்களுக்குத் தயக்கத்துடன் சென்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பதினைந்து தமிழ்த் தாய்மார்கள், அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்ட தம்முடைய மகன்மார் மற்றும் மகள்மாருக்கு என்ன நடந்தது என்பதற்கானப் பதில்களைக் கோரியிருந்தனர்.

இது தொடர்பான பதில்களை வழங்குவதற்கு இயலாத நிலையில் பொலிஸாரால் காணப்பட்ட ஒரு வினோதமானச் சந்தர்ப்பமாக அச்சம்பவம் அமைந்தது. அப்பொலிஸாரின் முகங்களில் விட்டெறியப்பட்ட அச்சட்டத்தின் தமிழ்ப்பிரதிகளை எவ்வாறு வாசிப்பது என பெரும்பாலான பொலிஸாருக்கு விளங்கவில்லை. ஏனெனில், அக்கேள்விகளுக்கு இலக்காகிய பெரும்பாலான பொலிஸார் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாகக் இருந்தனர். பாராளுமன்றம் தகவலுரிமைக்கானச் சட்டத்தினை நிறைவேற்றியுள்ளதென்பதனை மாத்திரம் சிலர் அறிந்திருந்தார்கள் என்றபோதிலும் அச்சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பில் அவர்கள் அறிந்திருக்கவில்லை. இறுதியாக, அந்தத் தாய்மார்கள் தமக்குத் தெரிந்த சொற்ப சிங்கள மொழியறிவைப் பயன்படுத்தி அச்சட்டத்தின் முக்கியமான ஏற்பாடுகள் குறித்து வியப்பிற்குள்ளாகியிருந்த அப்பொலிஸாருக்கு விளக்க வேண்டிய நிலையேற்பட்டது.

இதையொரு சாதாரணமான விடயமாகக் கருதமுடியாது. 1970 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறுபட்ட இன மோதல்களை

எதிர்கொண்டுவரும் இலங்கையைப் பொறுத்தவரையில், மக்கள் தசாப்தங்களாக மோதல் வலயங்களில் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் கேள்விகள் கேட்கவில்லை, அதிகாரத்தை சவாலுக்குட்படுத்தவில்லை. 2009 இல் யுத்தம் நிறைவுற்ற பின்னரும்கூட இப்பயம் தொடர்ந்தும் நிலைத்திருந்தது. இத்தகைய பின்னணியில், இம் முன்னேற்றமானது குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஒரு புதிய சட்டமொன்றினூடாக அரச முகவர்களிடம் பொறுப்புடைமையைக் கோருவதற்கு தமிழ்த் தாய்மார்கள் வலுப்பெற்றுள்ளனர் என்பது ஒரு விசேட செய்தியே. தகவலுரிமைக்கான விசாரணைகளின் விளைவாக இப்பெண்களுக்கும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்குமிடையில் ஒரு உரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்ற நிகழ்வு குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

அண்மையில் நான் அத்தாய்மார்கள் சிலரைச் சந்தித்தேன். அச்சமயம் அவர்களுடைய தகவல் கோரிக்கைகளுக்கு என்ன நடந்தது என வினவினேன். சில விடயங்கள் தொடர்பான விசாரணைகள் தற்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏனைய விடயங்கள் தொடர்பிலான கோரிக்கைகளை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீளப்பெற்றுக் கொண்டிருந்தன. அவர்கள் மறுமொழியாக "குற்றவாளிகள் இராணுவ படை உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் அப்போது முதல் இப்போது வரை எங்களுடைய கிராமங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் எங்கள் மத்தியில் வாழ்கின்றனர். எனவே, நாங்கள் அவர்களை கேள்விக்குட்படுத்த விரும்பவில்லை" என்று கூறினர். ஆயினும், ஒரு சட்டம் அரச அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்துவதற்கும் மற்றும் அவர்களிடம் கேள்விகளை கேட்பதற்கும் தங்களை வலுப்படுத்தியிருப்பது தொடர்பில் அவர்கள் களிப்படைவதாகக் கூறினார்கள்; மேலும் "நாங்கள் கேள்வி கேட்பதற்கான செயன்முறையினை நிலைமாற்றத்தில் ஏற்படுத்தியுள்ளோம்" என்றும் அவர்கள் கூறினார்கள்.

தகவலுரிமைக்கானச் சட்டம் அமுலுக்கு வந்ததனூ டாக, மக்கள் தற்போது "கேள்விகள் கேட்கலாம்" என்ற இக்களிப்புணர்வானது இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் தோன்றியுள்ளது. சாதி, மத, இனம் போன்றவற்றினால் பிளவுபட்டுள்ள சமுதாயங்களில் பொதுவான காரணியொன்றாக அமைவது அவர்கள் அனைவரும் தகவலுரிமையினை பல வழிகளில் பயன்படுத்துதலாகும். பெரும்பாலும் முதற் தடவையாக, மக்கள் உண்மையில் அவர்களுடைய நலன்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. சட்டமென்பது கற்றறிந்தவர்களால் மட்டும் உணரப்படக்கூடியது மேலும் அது பாதிக்கப்பட்டவர்கள் வியப்படையும் பார்வையாளர்களாக என்ற ரீதியில் மாத்திரம் செயற்பட்டு, அவர்களுக்கு பெரும்பாலும் அந்நியமாக உள்ள ஒரு மொழியில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டத்தரணிகளின் வாதத்தினை கேட்கின்ற நீதிமன்ற அறைகளில் தீர்மானிக்கப்படுகின்ற ஒன்று என்ற நியமத்திற்கு முற்றிலும் வேறுபட்டதாக இச்சட்டம் அமைந்துள்ளது.

மிக ஆரம்பத்தில் இலங்கையின் தகவலுரிமை அனுபவத்தின் சுவாரஸ்யமான சம்பவமாக அமைந்தது யாதெனில், பிரஜைகள் இச்சட்டத்தினை உயர் அளவில் முரண்பட்டுள்ள பகிரங்க விடயங்கள் தொடர்பில் கேள்வியெழுப்புவதற்காக மாத்திரம் பயன்படுத்தவில்லை, மாறாக, அடிப்படை ஆட்சி செயன்முறை தொடர்பிலும் கேள்வியெழுப்பியிருந்தனர். இவ் ஆணைக்குழுவிற்கு முன்னிலையில் மிக ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட மேன்முறையீடுகளுள் ஒன்றாக, பிரஜையொருவர் பதிவு செய்த, தெற்கு மாகாணத்தில் பரபரப்பான சாலையொன்றில் மீள் விற்பனையாளர்களால் அன்றைய தினத்தில் பிடிப்பட்ட மீன்களை விற்பதற்காக அமைக்கப்பட்ட தற்காலிகக் கட்டமைப்பினை ஏன் வீதி அபிவிருத்தி அதிகார சபை நீக்கவில்லை என்ற தகவலுக்கான கோரிக்கை பிரஜை ஒருவரால் பதிவு செய்யப்பட்டது.

அத்தகவலுக்கான கோரிக்கையினைத் தொடர்ந்து வீதி அதிகார அபிவிருத்தி சபையானது குறிப்பிட்டத் தற்காலிகக்

கட்டமைப்பினை விரைவாக அகற்றியது. அதன் பின்னர், ஆணைக்குழு முன்னிலையில் முறைப்பாடு செய்த அப்பிரஜை, அத் தற்காலிக கட்டமைப்பினை நீக்குவது தொடர்பில் ஏன் சட்டம் பின்பற்றப்படவில்லை என்பது தொடர்பாக கொழும்பு வீதி அதிகார சபையின் சட்ட அதிகாரிகள் மற்றும் அதன் மாகாண அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற கடிதத் தொடர்பாடல்களை வெளிப்படுத்துமாறு கோரினார். இறுதியாக, தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு முன் தோன்றும்படி ஆணைக்குழு வழங்கிய அறிவித்தலினைத் தொடர்ந்து, அவருடைய கேள்விகளுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை பதிலளித்ததுடன் அக்கடிதத் தொடர்பாடல்களை வெளிப்படுத்தியது. அவை மாகாண அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய அதிகாரிகளின் கடமை அலட்சியத்தினைத் தெளிவாக வெளிப்படுத்திக்காட்டின. தவறிழைத்த அவ் அதிகாரிகளின் பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டமையானது எதிர்காலத்தில் இடம்பெறுகின்ற அத்தகைய சட்ட மீறல்களுக்கான ஊக்கத் தடையாக அமையும்.

அதிகாரிகள் தீர்மானங்களை எடுக்கின்றபோது சட்டத்தினைத் தவறாக பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில், தகவலுரிமையின்கீழ் அத்தகைய விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படலாம் என்பதனால் அவ்வாறு செய்வதனைத் தவிர்க்கும்படி அவர்களுடைய சக ஊழியர்களால் அல்லது தகவல் அலுவலர்களால் சுமூகமான முறையில் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பது இவ் ஆணைக்குழுவின் முன்னிலையில் மேன்முறையீட்டு விளக்கங்கள் கேட்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் வெளியாகியது. சிவில் சமூகங்கள் மற்றும் ஊடகங்கள் என்பன அரச அதிகாரத்தை பிரயோகிப்பது தொடர்பில் ஜனாதிபதி பிரதமர் மற்றும் ஏனையோரைக் கேள்விக்குட்படுத்துகின்ற மேன்முறையீடுகள் தேசிய ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. அதேவேளை, பிரஜைகள் அவர்களின் உள்ளூர் மற்றும் மாகாண அரச நிறுவனங்களைக் கேள்விக்குட்படுத்தக்கூடிய வகையில்

படிப்படியாக அதிகாரம் பெறுவதும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்ததவையாகும்.

அதிகளவு கவனத்தை ஈர்த்துக் கொண்ட முறையீடுகள் பலவகைப்படுகின்றன. தேசிய எயார்லைன் விமான சேவையின் முறையற்ற நிர்வாகம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் வெளியிடப்படாமை, ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் விவகாரம், தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பாளர் சர்ச்சைக்குரிய செய்தி வலைத்தளமொன்றைத் தடை செய்தமை, மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற சேமலாப நிதியின் முதலீடுகள் மற்றும் அரசியல்வாதிகளின் சொத்துக்களின் விபரங்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரகடனப்படுத்துதல் போன்றவற்றை அத்தகைய முறையீடுகளாக குறிப்பிடலாம். நாட்டில் வெளிப்படைத்தன்மைக் கலாசாரத்தை வளர்ப்பதற்கு இவ் உயர் மட்டச்சவால்கள் மிகவும் முக்கியமானவை என்பதில் எவ்வித ஐயங்களும் இல்லை. கவனத்தினை ஈர்க்காத வகையில் படிப்படியாக இடம்பெறுகின்ற "பிரஜைகளுக்கு அதிகாரம் என்ற வாசகம்" அரசியலமைப்பிலுள்ளடக்கப்பட்டு இதுவரையில் வெற்று வாசகமாக இருந்த "நாம், மக்கள்..." (*We, the People*) என்ற தத்துவத்திற்கு உயிர்கொடுப்பதாக அமைகின்றது. பிரஜைகளை அதிகாரமளித்தலென்பது தகவலுரிமைக்கான அமைப்பாட்சியின் மிக முக்கிய வாக்குறுதியாகும். இது ஊடகங்களின் கவனத்திற்கு அப்பால் இடம்பெற்று வருகின்றது.

இந்நன்மைகளை அடைந்து கொள்வதற்கு மிக நீண்ட காலம் தேவைப்பட்டுள்ளது. இலங்கை தகவலுரிமைக்கானச் சட்டத்தின் வரைவுச் செயன்முறையானது 2004 ஆம் ஆண்டு தகவலுக்கான அணுகுதல் சட்டமூலத்தை வரைந்த அப்போதைய சட்டமா அதிபர், சட்ட வல்லுனர், சட்டத்தரணிகள், தொகுப்பாளர்கள் மற்றும் ஊடக சட்ட கல்வியலாளர்கள் சிரேஷ்ட பகிரங்க அதிகாரிகளை உள்ளடக்கிய பிரதமர் குழுவுடன் ஆரம்பமாகியது. இவ்வரைவிற்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தபோதிலும்

அரசியல் குழப்பங்களின் காரணமாக அதனை பாராளுமன்றிற்கு சமர்ப்பிக்கமுடியவில்லை. அதற்கடுத்த தசாப்தத்தில், 2004 ஆம் ஆண்டு சட்டமூலத்திற்கு உயிர் கொடுப்பதற்கான பல துணிகரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் கூட தகவலுரிமையானது ஏனைய சிவில் சுதந்திரங்களைப் போலவே மழுங்கடிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்து, 2015 ஆம் ஆண்டு இரண்டாவது வரைவுக் குழுவானது சிறந்த பெறுபேறினைப் பெறும்பொருட்டு சட்டமூலத்தில் சில திருத்தங்களை மேற்கொண்டு அதனை சீரமைத்தது. அது 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டத்திற்கு வழிவகுத்தது.

இவ்விரண்டு வரைவுச் செயன்முறைகளின்போதும் கவனத்திற் கொள்ளப்பட்ட மிக முக்கியமான கோட்பாடு யாதெனில், அரசு மற்றும் பிரஜைகளுக்கிடையில் வெளிப்படைத்தன்மைக்கான மத்தியஸ்தராகச் செயற்படக்கூடிய (ஊடகம், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகம்) தகவலுரிமையின் பயனாளிகளை உள்ளடக்கிய ஒரு சுயாதீனமான தகவலுரிமைக்கான ஆணைக்குழுவினை உருவாக்குதலாகும். சட்டத்தின் கீழ் புரியப்படுகின்ற குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் நடவடிக்கையினை மேற்கொள்கின்ற பொலிஸ் அல்லது அரச சட்டத்தரணி என்போரை போலல்லாது இது ஒரு ஆணைக்குழுவாக அமைந்தாலும் தகவலுரிமைக்கான சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற குற்றங்கள் தொடர்பில் வழக்குத்தொடுப்பதற்கான அதிகாரங்கள் மற்றும் தகவலை வெளியிடுவதற்கானக் கட்டணத்தினைத் தீர்மானிக்கின்ற அதிகாரங்கள் என்பனவற்றைக் கொண்டுள்ள ஆணைக்குழுவாக இது உள்ளது.

ஆனாலும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு போதியளவு நிதி மற்றும் மனித வள ஆதாரமிருத்தல் அவசியமாகும். இதற்கு வழியமைக்க அரசாங்கம் தவறுவதாலேயே சீராக தமது கடமைகளை மேற்கொள்ளக் கூடிய ஆணைக்குழுக்கள் கூட பல அதிகாரத்துவ சிக்கல்களுக்கு உள்ளாகி வெறுமனே அரசாங்கம்

தற்பெருமைக்காக அதட்டிக் கொள்ளும் காட்சிப் பொருட்களாக மாறிவிடுகின்றன.

இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் விளக்க உரைகளும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளும்; என்பனவற்றைப் பிரதிபலித்து காட்டுகின்ற இக்கட்டுரைகளில், நாட்டில் வளர்ந்துவருகின்ற தகவற் கலாசாரத்தின் வெற்றி மற்றும் சவால்கள் நன்றாக வெளிக்காட்டப்பட்டுள்ளன.

தமிழ் வெளியீட்டின் முதலாவது கட்டுரையானது கொழும்பு சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு அ. சர்வேஸ்வரனால் எழுதப்பட்டுள்ளது. இவர் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அமுலாக்கம் நல்லாட்சியின் ஒரு அம்சமாக கருதுகின்றார். எவ்வாறு தகவலுக்கான உரிமை முதலில் அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தினூடாக ஓர் அடிப்படை உரிமையாய் இனங்காணப்பட்டதென்பதனை விளக்கிக் கூறியுள்ளார். இதன் பின்னர் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அமுலாக்கத்தையும் அதன் உள்ளடக்கத்தையும் விவரித்துக் காட்டியுள்ளார். தகவலைப் பெறுவதற்கான உரிமையை பற்றியும் அதனை பெறுவதில் சட்டத்திலுள்ள மட்டுப்பாடுகளையும் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும் பொது அதிகார சபைகளுக்கு தகவலைப் பேணுவதிலுள்ள கடப்பாட்டையும் அவை கோரப்படும் போது அவற்றை வழங்குவதற்கான இச் சட்டத்திலுள்ள நடபடிமுறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் உருவாக்கமும் தகவல் வழங்க மறுக்கப்பட்டதற்கு எதிராக ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யும் முறைமையையும் சர்வேஸ்வரன் விளக்கிக் கூறியுள்ளார். இச்சட்டமானது எவ்வாறு சிறுபாண்மை மக்களின் உரிமையை பாதுகாக்கின்றதென்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

இறுதியாக இச் சட்டமானது எவ்வாறு நாட்டின் பிரசைகளுக்கு தகவலுக்கான உரிமையை வழங்குவதற்கென

உலகில் ஆக்கப்பட்ட மிகச் சிறந்த சட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றதென்பதையும் நாட்டின் அரசியல் மற்றும் நிருவாக கலாசாரத்தில் முக்கிய மாற்றமொன்றையும் ஏற்படுத்தியுள்ளதையும இம் மாற்றமானது நாட்டில் நல்லாட்சி ஏற்பட வழிவகுக்கும் ஒன்றாக அமைந்துள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளார்

பிரஷ்ாந்தி மஹிந்தரத்ன இவ்வெளியீட்டில் எழுதப்பட்டுள்ள அவரது ஆக்கத்தில், "கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் தகவலுரிமைக்கானச் சட்டம் மிக பொருத்தமான தகவலின் வெளியிடுகைக்கு வழிவகுத்திருந்தபோதிலும்கூட, அதன் உள்ளாற்றலின் முழுமையானத் தொழிற்பாட்டினை பல தடைகள் பாதிப்படையச் செய்திருந்தது. வெளியீட்டினை மறுத்தல் என்பது விதிவிலக்கென்கின்ற அதேவேளை வெளியிட வேண்டுமென்பதே விதி என்ற தகவலுரிமையின் அடிப்படை நியமத்தினை பகிரங்க துறைகளிலுள்ளோர் முழுமையாக புரிந்து கொள்ளாமையைக் அல்லது போற்றாமை என்பதனை அத்தகையத் தடைகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம" என குறிப்பிட்டிருந்தார். அவர் அவதானிக்கப்பட்டதற்கு அமைய, "பகிரங்க அதிகாரிகள் தகவலுக்கான உரிமையினை தந்திரோபாயமான வழிகளினூடாக தவிர்க்கப்படவேண்டிய, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிர்வாகத் தலைவலியாக பார்க்கக்கூடாது."

ஒருங்கிணைப்பிற்குரிய நிறுவனத்தால் (வெகுசன ஊடக அமைச்சினால்) தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அமுலாக்கத்திற்கு ஆதரவளிக்கின்ற அரசாங்கக் கொள்கை மற்றும் சீரிய சிந்தனையுடன் ஆக்கப்பட்ட மூலோபாயம் என்பன விருத்திசெய்யப்பட வேண்டும் என அவர் முன்மொழிந்திருந்தார். அத்துடன், தகவல் அலுவலர்களுக்கு மட்டுமல்லாது அவர்களுடைய உயர் அதிகாரிகள் மற்றும் தகவல் கோரிக்கைகளின் ஆரம்ப நிராகரிப்பு தொடர்பான மேன்முறையீடுகளைக் கையாளுகின்ற குறித்தளிக்கப்பட்ட அலுவலர்களாக செயற்படுகின்ற நிறுவனங்களின் தலைவர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட வேண்டுமென அவர் முன்மொழிந்திருந்தார்.

அதேவேளை, தகவலுரிமைக்கான ஆணைக்குழு மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஈடுபாடு மாத்திரமல்லாது இச்செயன்முறையில் அனைத்து பயனாளிகளினது ஈடுபாடும் மிக முக்கியமாகும். மேலும், தகவலுரிமை பற்றிய வலுவான ஊடக வெளிப்படுத்துகையின்மை தொடர்பிலும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவ்விடயம் முதுபெரும் பதிப்பாளரும் இலங்கை தகவலுரிமைச் செயன்முறையின் முக்கிய ஆதரவாளருமான சிங்ஹ ரத்னதுங்க என்பவரால் எதிரொலிக்கப்பட்டுள்ளமையை நாம் காண இயலும்.

சிவில் சமூகம் தொடர்பில் பார்க்கின்றபோது, இலங்கையின் தகவலுரிமைச் சட்டமானது சிவில் சமூகங்களை இரண்டு வகையில் ஈடுபடச் செய்கின்றது அதன் பயனை பிரசாரப்படுத்துகின்ற பயனாளிகளாகவும் அதேவேளை தகவலுரிமையை நிலைநிறுத்த தேவையான வெளிப்படைத்தன்மை தொடர்பில் நடைமுறையாகவும் ஈடுபடச் செய்கின்றது. தகவலுரிமைச் சட்டம் சிவில் குழுக்களைத் தொல்லை செய்வதற்கு பயன்படுத்தப்படலாம் என்று சிலர் அச்சுறுத்துகின்றபோதிலும் இத்தகைய அச்ச உணர்வுகள் உலகளாவிய அல்லது பிராந்திய ரீதியான நடைமுறைகளினால் அவதானிக்க முடியாததாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

தகவலுரிமைச் சட்டத்தின் பயன் தொடர்பாகப் பார்க்கின்றபோது, "இந்த நியாயமான சட்டத்தினை நியாயமற்ற விதத்தில் பாவிக்கக்கூடாது" என மஹிந்தரத்ன கூறியுள்ளார். அவர் கீழ்வருமாறு வலியுறுத்துகின்றார்:

> *"...ஆணைக்குழு மற்றும் நீதிமன்றங்கள் என்பன வளர்ந்து வருகின்ற தகவலுரிமைக் கலாசாரத்திற்கு பாராதூரமான சிக்கல்களை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் உள்ள உயர் அரசியல் சர்ச்சைகளுக்கு மத்தியில் தம்மை உந்தித்தள்ளாமல், மூலோபாயமாக, சட்டமானது அதன் ஆரம்ப வருடங்களில், பகிரங்க நெறிமுறைத்தன்மை மற்றும் ஆதரவினைப் பெறக்கூடிய வகையில் இயற்கையாக விருத்தியடைவதற்கு அனுமதிக்கப்படவேண்டும்."*

மேலும், எதிர்காலத்தில் ஆக்கப்படுகின்ற சட்டங்கள் தகவலுரிமையினை பரந்தளவில் விலக்களிப்பதனை, தகவலுரிமை தொடர்பில் பெரும் தாக்கங்கள் எழக் கூடிய நடைமுறைப் பிரச்சினையொன்றாக அவர் அடையாளப்படுத்தியுள்ளார். இந்த அபாயமானது ஏற்கனவே தகவலுரிமைக்கான ஆணைக்குழுவினால் (1 ஜூன் 2018 அன்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையினைப் பார்க்க) மற்றும் இத்தொகுப்பின் ஏனைய கட்டுரையாசிரியர்களினால் (டோபி மென்டலின் கட்டுரை உட்பட) உணரப்பட்டுள்ளது.

இத்தொகுப்பின் இரண்டாவது கட்டுரையில், சிரேஷ்ட கல்வியியலாளர் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டவாட்சியின் அடிப்படை வரைபு என்ற அடிப்படையில் தகவலுரிமையின் முக்கியத்துவத்தினை வலியுறுத்தியுள்ளார். தகவலுரிமையின் கருத்தியல் அடிப்படைகள் தெளிவாகவுள்ளன அது "அரசாங்கத்தினை சவாலுக்குட்படுத்த மற்றும் பகிரங்க அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் பகிரங்க வளங்களின் துஷ்பிரயோகம் என்பனவற்றைத் தடுப்பதற்காக பிரஜைகள் தகவல்களைப் பயன்படுத்துகின்றமையுடன் தொடர்புறுகின்ற அதேவேளை, தகவலுரிமை அமைப்பாட்சியானது பிரஜைகள் அதனூடாக ஒரு பிரதிபலனைப் பெற்றுக் கொள்கின்றார்களா இல்லையா என்பதனைப் பொருட்படுத்தாது அவர்கள் பகிரங்க தீர்மானங்கள் தொடர்பில் "அறிந்து கொள்வதனை" இயலுமானதாக்குகின்ற ஓர் உள்ளார்ந்தப் பரிமாணத்தைக் கொண்டுள்ளது. இவ் அறிவானது சிவில் வாழ்க்கையில் பங்குபற்றுதலை வலுப்படுத்துகின்ற அம்சமாக அமைகின்றது.

கடந்த இரண்டு வருடங்களில் தகவலுரிமை ஆணைக்குழு மற்றும் பிரஜைகளின் அனுபவம் பரந்தளவில் நேர்மறையானதாகவும், பெரும்பாலும் வாழ்க்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தத் தக்கதாகவும் காணப்படுகின்ற அதேவேளை, பகிரங்க அக்கறை விஞ்சி நிற்கின்ற சட்டத்தின் பிரிவு 5(4) ஆனது துடிப்பான

வெளிப்படுத்துகைக் கொள்கைக்கு சார்பாக தொழிற்பட்டுள்ளமை குறித்து காட்டப்பட வேண்டிய விசேட விடயமாகும். இலங்கையின் தகவலுரிமைச் சட்டமானது தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வு நிறுவனங்கள் என்பனவற்றுடன் தொடர்புடைய தகவல்களை (ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய தகவல்கள் தவிர்ந்த) தகவலுரிமையினூடாக அடைந்து கொள்ள முடியாதென பிரகடனப்படுத்துகின்ற பிராந்திய நடைமுறையினை பின்பற்றவில்லை என்பது திருப்தியடைய வேண்டிய ஒரு விடயமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவதானிக்கப்பட்டுள்ளதன்படி, "தகவல்களுக்கான அணுகுதலானது அரசாங்க துஷ்பிரயோகங்களைத் தடுக்க முடியும் என்பதுடன் ஊழலை குறைக்கும், உதாரணமாக, இலங்கையில் நீண்ட காலமாக தீவிரமான பகிரங்க பாதுகாப்பிற்கு உட்பட்டிருந்த இராணுவ கொள்முதல் தொடர்பான ஊழல்களைக்கூட தகவல்களுக்கான அணுகுதல் குறைக்கும்."

"நிறுவனங்கள் முன்னுரிமைப்படுத்தப்படுவதற்கு மாறாக, நெறிமுறையான அரச அக்கறை மற்றும் பொதுமக்களின் அறிந்து கொள்வதற்கான உரிமை ஆகியவற்றுக்கிடையிலான பொருத்தமான சமநிலையினை உறுதி செய்யும்பொருட்டு ஒவ்வொரு முறையிடும் அதன் குணப்பண்புகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுதல் வேண்டும்" என்ற அவருடைய எச்சரிக்கை கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். **இது எழுப்பப்படும் இத்தகைய "கடினமான வழக்குகளில்" முக்கியமானதாகக் கருதப்படும்.**

ஆனால், பிராந்தியத்தில், குறிப்பாக நிலையான சிவில் பிரச்சாரங்களிலிருந்து அதிகளவான வெற்றிகள் பதிவாகியுள்ள இந்தியாவில் கூட தகவலுரிமைக்காக வாதாடுபவர்கள், செயற்படுவதற்கான அவர்களுடைய திறன் மட்டுப்படுத்தப்பட்ட காத்திரமான சூழ்நிலையே தகவலுரிமையின் பயன்களை அடைந்து கொள்வதற்காக போராடுகின்ற இப் பின்னணியினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, இலங்கையில்

தகவலுரிமைக்கு எதிர்காலத்தில் சாவல்கள் தோற்றம் பெறுமென்பது தவிர்க்க இயலாததொன்றாகும். தீமை தரும் அதிகாரத்துவத்தினால் தகவலுரிமைக்கானச் சட்டம் மழுங்கடிக்கப்படுவதனைத் தடுப்பதற்காக செயற்பாட்டாளர்கள் தங்களுடைய அனைத்து அதிகாரங்களையும் ஒன்றுதிரட்டி செயற்பட்டு வருகின்றனர். அவர் அவதானித்துள்ளதன்படி, சில ஊக்குவிக்கின்ற உதாரணங்களைத் தவிர்த்துப் பார்க்கின்றபோது, பங்களாதேஷ் மற்றும் நேபாள் போன்ற நாடுகளில் தகவலுரிமைச் சட்டங்கள் மக்களால் இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது என்பது புலப்படும். இலங்கையில் அதிகரிக்கின்ற அரசியல், சமூக, பொருளாதார நிலையற்றத்தன்மையினால் அரசியல் செயன்முறை மேலும் சிக்கலானதாக மாற்றமடையின் இலங்கையிலும் இக்குழப்பங்கள் ஏற்படும். அத்தகைய பின்வாங்கும் பின்னடைவு தோற்றம்பெறின் அதற்கெதிராக செயற்படுவதற்கான எத்தகைய வாய்ப்புக்களை இலகுவில் வழுவிழக்கூடியதும் புதிதாகத் தோற்றம் பெற்ற தகவலுரிமை ஆட்சி அமைப்பு கொண்டிருக்கும் என்பது கவனிக்கதக்க விடயமாகும்.

இத்தொகுப்பிலுள்ள அடுத்த கட்டுரையில், ஓய்வு பெற்ற பகிரங்க அலுவலர் சுசில் சிறிவர்தன, தகவலுரிமைக்கானச் சட்டம் தொடர்பில் பணியாற்றுவதற்கு அமர்த்தப்பட்டுள்ள பெரும்பாலான பகிரங்க ஊழியர்கள் பற்றிக் கொண்டுள்ள, நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள செய்திகளை மறைவாக வைத்திருக்கும் முறைமை பற்றி ஓர் உயரிய நடைமுறை எச்சரிக்கை ஒன்றினை அளித்துள்ளார். சட்டத்தின் உள்ளடக்கங்கள் மற்றும் அதன் நிர்வாக செயற்பாடுகள் போன்றவற்றிற்கு அப்பால் சென்று, அவர் இலங்கையின் பொது சேவையின் சீரழிவிற்கான காரணங்களை பரிசீலிக்கின்றார்.

இவ் தனிப்பட்ட நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குகின்ற அவர், அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை எனும் முக்கிய பண்பினை பிரயோகிக்குமாறு அழைக்கப்பட்டபோதும் இவ் அனுபவங்கள் பகிரங்க சேவையின்

எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதாக குறிப்பிட்டார். அவர் ஞாபகப்படுத்துவதற்கு அமைய, பகிரங்க சேவை கலாசாரமானது தகவலுரிமை தொழிற்படுகின்ற பின்னணியினை உருவாக்குவதனால் இதற்கு பயனளிக்கும் மாற்றமொன்று நிச்சயமாகத் தேவைப்படுகின்றது. இது அங்கீகரிக்கப்படவேண்டிய மிக முக்கிய விடயமாக கொள்ளப்பட வேண்டும்.

தகவலுரிமை ஆட்சியமைப்பின் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்திக் கொள்ளும்பொருட்டும் ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும்பொருட்டும், இந்நிலைத்து நிற்கின்ற இரகசிய கலாசாரத்திற்கான "பொதுவானதும் அதற்கு காரணமாய் அமையும் தவறுகளும்" பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் அதிக அரசியல்மயமும் அதிகாரமயமும் இரண்டும் பிரதான குற்றவாளிகளாகின்றன. இந்தியாவின் காந்தியமும் நேருவியம் இந்திய தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற அதேவேளை, இலங்கையின் தேசத்தைக் கட்டியெழுப்புகின்ற செயன்முறையானது "வினைத்திறனற்றதாகவும் பூரணமற்றதாயும் காணப்படுகிறது. அவை இன ரீதியான குழுமங்களைக் கட்யெழுப்புவதற்கே வழிவகுக்கின்றன என்ற கசப்பான உண்மை வற்புறுத்தப்படுகின்றது. இம் முழுமுறையான சீரழிவின் மேலதிக ஆக்கக்கூறாக அமைவது யாதெனில், ஒத்திசைவான மற்றும் சீரிய சிந்தனையினூடாக இயற்றப்பட்ட தேசியக் கொள்கைகளை படிப்படியாக "முழுமையற்ற, குறைபாடுகளையுடைய மற்றும் தற்காலிக கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும்" கொண்டு மாற்றப்பட்டமையாகும். இதன் விளைவாக "ஒழுங்கீனங்கள், பொருளாதார நட்டங்கள், அரசியல்வாதிகளினாலும் மற்றும் அவர்களுடைய அடியாட்களினாலும் செய்யப்படுகின்ற கொள்ளைகள், சூறையாடல்கள்" என்பன தோன்றியதென அவர் கூறுகின்றார்.

சிறிவர்தன இத்தகைய "செயல் பிறழ்ச்சிகளையுடைய சமூகத்தின் சூழலமைப்புக்களை" (அவரால் இனங்கானப்பட்டவாறு) முழுமையாக மாற்றுகின்ற உள்ளாற்றல் தகவலுரிமையில்

உள்ளதனை அவதானிக்கின்றார். அவ் உரிமை "சமூக மீளுருவாக்கம், அறிவினை முன்னிலைப்படுத்தல் மற்றும் தனிநபர்கள் மற்றும் சமுதாயங்களை வலுப்படுத்தல் என்பவற்றை செய்வதற்கான மூலோபாய ஆயுதமாக" தொழிற்படுத்தப்படலாம் என அவர் கருதுகின்றார். தகவலுரிமைக்கானச் சட்டம் உருவாக்கப்பட்டது முதல் அதற்கான பொதுமக்களின் துலங்கல் மிக அபூர்வமானதாக அமைந்துள்ளது என்பதுடன் நலிவடைந்துள்ள மற்றும் ஓரங்கட்டப்பட்டுள்ள தம்மை வலுப்படுத்திக்கொள்வதற்கான வழிமுறையாக பொது மக்கள் அச்சட்டத்தினை அங்கீகரித்துள்ளனர் என்பதனை அவர் குறித்து காட்டியுள்ளார்.

இலங்கையில் தகவலுரிமைத் தொழிற்படுகின்ற சூழ்நிலையினை விமர்சனரீதியாகப் பரிசீலிப்பதனூடாக தொடர்ச்சியாக நடைமுறைசார் விடயங்களை மையப்படுத்துகின்ற "சண்டே டைம்ஸ்" பத்திரிகையின் பிரதம பதிப்பாளர், சிங்ஹ ரட்ணதுங்கவின் சிந்தனை, தகவலுக்கான உரிமை என்பது ஊடகவியலாளர்களுக்கானதாகும், அது வெறுமனே கவனக்குறைவாக செய்திகளை வெளியிடுகின்ற அல்லது அரசியல்வாதிகளை கண்மூடித்தனமாகப் போற்றுகின்ற (எதிர்மறையான விடயங்களை ஆராய்நது கொள்ளாது நபர்களுக்கானதல்ல என்ற ஞாபகப்படுத்தலை நாட்டின் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு அளிப்பதனூடாக ஆரம்பிக்கின்றது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை நாட்டின் நியதிச்சட்டமாகக் கொண்டுவருவதற்கு நீண்ட காலம் போராட வேண்டியிருந்தது என்பதனையும், இறுதியாக அரசியல் தலைமைத்துவம் அச்சட்டத்தினை இயற்றுவதற்கு ஏறத்தாழ கட்டாயப்படுத்தப்பட்டது என்பதனையும் பலர் உணரவில்லை என்பதனை குறித்து காட்டியுள்ளார்.

ஆனாலும், அவரின் அவதானிப்பின்படி, தகவலுரிமைச் சட்டத்தினை அனுமதிக்கும்படி அரசியல் நிறுவனத்தைக்

கட்டாயப்படுத்துவதில் ஊடகம் பாரிய வகிபங்காற்றியபோதிலும் கூட, உண்மையில் ஒரு சில சிறந்த புலனாய்வு ஊடகவியலாளர்களைத் தவிர ஊடகங்கள் அச்சட்டத்தின் ஏற்பாடுகளை பலமான முறையில் பயன்படுத்துவதில்லை. உண்மையில், அவர் நாசூக்காக, "ஊடகங்கள் எதிர்பார்க்கப்பட்டத் தரத்தினை அடையத் தவறியுள்ளன" எந்தவொரு ஊடக நிலையத்திலும் தகவலுரிமைச் சட்டத்தினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வுகளை மையப்படுத்துவதற்கான தனியானதொரு தகவலுரிமை மேசை காணப்படுவதில்லை" எனக் கூறியுள்ளார்.

இருந்தும் கூட, "நம்பிக்கையை இழந்து விரக்தியடைய வேண்டிய அவசியமில்லை" என அவர் கூறுகின்றார். ஏனெனில், இப்பிராந்தியத்தில் தகவலுரிமை தொடர்பில் வெற்றிப் பெற்றுள்ள இந்தியாவில்கூட தகவலுரிமை தொடர்பான ஊக்கமின்மையும் வெறுப்புணர்வும் ஆரம்பத்தில் ஊடகவியலாளர்களிடையே ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஊடக நிலையங்களும், ஊடகச் சங்கங்களும் தகவலுரிமையினைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அதனூடாக பரபரப்பூட்டுகின்ற வதந்திகளிலிருந்து வித்தியாசப்படும் தரமான ஊடகத்துறையில் ஈடுபடுவதற்கு இளம் ஊடகவியலாளர்களை ஊக்கப்படுத்துகின்ற நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்துகின்றார். பாராளுமன்ற உறுப்பினரொருவர் அவருடைய ஒரு கேள்வியை சம்பிரதாய முறைப்படி பாராளுமன்றத்தில் கேட்டு அதற்கான பதிலினைப் பெற்றுக்கொள்வதனைவிட, அதற்கானப் பதிலை தகவலுரிமையினூடாக விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதால் தகவலுரிமையினைப் பயன்படுத்தியுள்ளார். இது தகவலுரிமையானது பல கோணங்களில் அரச பணித்துறையினைத் தட்டியெழுப்புகின்றது என்பதற்கு சான்றாக அமைகின்றது.

மேலும் தகவலுரிமைக்கானச் சட்டம் தொடர்பான முதலாவது சட்டப் பிரதிபலிப்பினை இத்தொகுப்பானது உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் நீதி ஆணைக்குழு தகவலுரிமைச் சட்டத்திற்கான ஒரு வரைபினை முன்வைத்த காலப்பகுதியில் அவ் ஆணைக்குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றிய மற்றும் தற்போது பிஜி குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வருகைதரு நீதிபதியாகப் பணியாற்றுகின்ற ஜயந்த டி அல்மெய்டா குணரட்ன தகவலுரிமை ஆணைக்குழுவின் இரண்டு தீர்மானங்களை முழுமையாக மற்றும் பகுப்பாய்வுரீதியாகவும் பரிசீலனைச் செய்கின்றார்.

அவர் குறிப்பிடப்படுவதன்படி, இத்தீர்மானங்களினால் பிரதிபலிக்கப்படுகின்ற வளர்ந்துவரும் தகவலுரிமை என்ற சட்டத்துறைக் கோட்பாட்டின் பொதுக் கோட்பாடுகள், ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்டுள்ள ஏனைய பல மேன்முறையீட்டுத் தீர்மானங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆணைக்குழுவானது ஒரு விசேடமான நிலைப்பாட்டிற்குள் வைக்கப்பட்டுள்ளது, அதில் அது சட்ட நியமங்கள் மற்றும் பாதுகாப்புக்களைப் பின்பற்ற வேண்டிய அதேவேளை, பிரஜைகள் அறிந்து கொள்வதற்கான உரிமைச் சட்டத் தொழிநுட்பங்களுக்கு மேலாக முன்னுரிமைப்படுத்தப்படுதல் வேண்டும் என்ற நெகிழ்வுத்தன்மைக்கான உயர் கடப்பாடொன்று சட்டத்தினால் அதற்கு விதிக்கப்பட்டுள்ளமை குறித்துக்காட்டப்பட வேண்டிய விசேட அம்சமாகும் என அவர் தன்னுடைய ஆரம்பக் கருத்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்துரையினை விளக்குவதற்காக அவர் இரண்டு சந்தர்ப்பங்களைத் தெரிவு செய்கின்றார். பகிரங்க அக்கறை விஞ்சியுள்ளமை (தகவலுரிமைச் சட்டத்தின் பிரிவு 5(4) இல்) மற்றும் மேன்முறையீட்டாளர் அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பால் நிகழ்ந்த ஒரு விடயத்தின் காரணமாக மேன்முறையீட்டினை சரியான நேரத்திற்குள் பதிவு செய்யத் தவறியுள்ளார் என ஆணைக்குழு திருப்தியுறுகின்ற சந்தர்ப்பத்தில் கால எல்லை தொடர்பான இறுக்கமான பிரயோகத்திற்கு அப்பால் சென்று அம்மேன்முறையீட்டினை ஏற்றுக் கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு

வழங்கப்பட்டுள்ள தற்துணிப்பு (தகவலுரிமைச் சட்டத்தின் பிரிவு 32(2) இல்) என்பனவே அவ்விரண்டு சந்தர்ப்பங்களுமாகும். இத்தற்துணிப்பானது, மேன்முறையீட்டாளரால் தாமதத்திற்கான நியாயமான காரணம் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மேன்முறையீட்டின் முதலாவது கட்டத்தின்போதும் (அதாவது குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு) வழங்கப்பட்டுள்ளது (தகவலுரிமைச் சட்டத்தின் பிரிவு 31 (5) இல்).

நீதிமன்ற அவமதிப்பு, நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கச்சார்பற்றத் தன்மையினைப் பேணுதல், சட்டத்தரணி மற்றும் கட்சிக்காரருக்கிடையில் காணப்படுகின்ற நம்பக உறவுமுறை அதேபோல தொழிற்சார் சிறப்புரிமை (முறையே, தகவலுரிமைக்கானச் சட்டத்தின் பிரிவுகள் 5(1) (ஒ), (எ) மற்றும் (ஊ)) போன்ற வரலாற்றுரீதியாக எதிர்ப்பு தெரிவிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற விதிவிலக்குகள் தொடர்பில் ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட்டுள்ள அணுகுமுறையினை ஆராய்வதனூடாக மேற்குறிப்பிட்ட இரண்டு ஏற்பாடுகள் தொடர்பிலான ஆணைக்குழுவின் செயற்பாட்டினை அவர் மதிப்பிடுகின்றார். பகிரங்க அதிகாரசபைகளின் "நிறுவனத் தீர்மானங்கள்" பொது நிதியின் செலவிடுதலுடன் தொடர்புறுகின்றபோது அங்கு தகவலுரிமைச் சட்டத்தின் பிரயோகத்தினை சாத்தியப்படுத்துகின்ற வளர்ந்துவருகின்ற கருத்தேற்பானது முக்கியமாக குறித்துக்காட்டப்பட்டுள்ளது. தகவலுரிமையின் பின்னணியில், "வெளிப்படைத்தன்மை" மற்றும் "பொறுப்புக்கூறுதல்" ஆகிய நியமங்களுக்கிடையிலுள்ள பொதுத்தன்மைகளை அங்கீகரிக்கின்ற அதேவேளை, அவ்விரண்டிற்குமிடையிலான சுவாரஸ்யமான வேறுபாடுகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹர்ஷ பர்னான்டோவினால் வரையப்பட்டுள்ள இரண்டாவது சட்ட பிரதிபலிப்பில், தொழிலிணையத்துறை தொடர்புறுகின்றபோது தகவலுரிமைச் சட்டமானது (சட்டத்தின் பிரிவு

43) சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய நிறுவனங்களை பகிரங்க அதிகார சபைகளாக வரையறுப்பதில் நடைமுறைசார் அணுகுமுறையினைக் கையாளுகின்றது என்பதனைக் குறிப்பிட்டு காட்டுகின்ற அவர், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகவலுரிமையினைப் பயன்படுத்துவதற்கு தொழிலிணையத்துறை மற்றும் வங்கித்துறைக்கு காணப்படுகின்ற உரிமையின் பரப்பு மற்றும் அவை பகிரங்க அதிகாரசபைகளாகக் கருதப்பட்டு அவற்றில் தகவல் உரிமை கோரிக்கைகள் பதியப்படுவதற்கான பரப்பு போன்றவற்றினை ஆராய்ந்து தகவலுரிமையானது தொழிலிணையத்துறை மற்றும் வங்கித்துறையுடன் சிக்கலான முறையில் பிண்ணிப்பிணைந்துள்ளவாற்றை விபரிக்கின்றார். அனுமதிப்பத்திரம் மற்றும் கட்டுப்பாட்டாளர்களின் கீழுள்ள வங்கியியல் நிறுவனங்கள் தொடர்பிலும் இதே கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

“மேலும், அவர் தகவலை நாடுபவர்களினால் தகவலுரிமைக்கானச் சட்டம் பயன்படுத்தமுடியுமா என்பதனைத் தீர்மானிக்கின்ற வரம்பாக உள்ள “உடைமை, பாதுகாவல் மற்றும் கட்டுப்பாடு” போன்ற சொற்கூறுகளின் (பிரிவு 3) அர்த்தம் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார். அத்துடன், அந்தரங்கம் மற்றும் வர்த்தக நம்பகத்தன்மை,” வர்த்தக இரகசியங்கள் (முறையே பிரிவுகள் 5 (1) (அ) மற்றும் (ஈ)) போன்ற தகவல்களை வழங்குவது தொடர்பிலுள்ள விதிவிலக்குகளின் பரப்பு அதேபோல அவ்விதிவிலக்குகள் தொடர்பில் பிரயோகிக்கப்படக்கூடிய “பரந்தளவிலான பகிரங்க அக்கறையின்” பரப்பு என்பனவற்றை விரிவாக ஆராய்கின்றார்.

அதேவேளை, சட்ட ஆய்வாளர்களான அஷ்வினி நடேசன் மற்றும் ஆதில் நாதனி ஆகியோர் தமது ஆக்கத்தில் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் பிரஜைகளினால் பதியப்பட்ட தகவல் கோரிக்கைகள் தொடர்பான ஆணைக்குழுவின் தீர்மானங்களை ஆராய்வதனூடாக ஓரங்கட்டப்பட்ட மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட

சமுதாயங்களுக்கு தகவலுரிமை விசேடமாக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை உலகளாவிய ரீதியில் அத்தகைய பின்னணிகளில் தகவலுரிமை பயன்படுத்தப்படுகின்ற முறையோடு ஒப்பிட்டு வலியுறுத்துகின்றனர்.

குறிப்பாக, இலங்கையின் அனுபவம் தொடர்புறுகின்றபோது மற்றும் ஆராயப்பட்டுள்ள மேன்முறையீடுகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற அனுபவத்தினைப் பார்க்கின்றபோது, இத்தொகுப்பிற்கு ஆக்கங்களையளித்து பங்களித்துள்ள வர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளதன்படி, பகிரங்க அதிகார சபைகள் அற்பத்தனமான காரணங்களுக்காக "வழக்கமான வெளிப்படுத்தல்களைக்" கூட மறுத்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மேன்முறையீட்டாளர் தகவலுரிமை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீட்டினை பதியச் செய்கின்ற அப்போக்கினை கையாளக்கூடாது என்பதனை மீள வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் சரியாக குறித்துக்காட்டியதற்கமைய, "தகவலுரிமை ஆட்சியானது உண்மையான பயனை அடைந்து கொள்ள வேண்டுமாக இருப்பின், அரசாங்க நிறுவனங்கள் துடிப்புடன் முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதுடன் விதிவிலக்கான சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த ஏனைய பொருத்தமான சந்தர்ப்பங்களில் தகவலுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டவுடன் உடனடியாகத் தகவல்களை வெளிப்படுத்த வேண்டும்."

மேலும், அவர்களுடைய பகுப்பாய்வின் தெளிவான ஆய்வுப்பொருள் இராணுவமயப்படுத்தப்பட்ட சூழலில் வாழ்கின்ற தகவலுரிமையினைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு உயர் பாதுகாப்பு வழங்கப்படுவதற்கானத் தேவையினை எடுத்தியம்புகின்றது. இம்மேன்முறையீடுகளில் தோற்றம்பெற்றுள்ள மேலதிக காரணி மொழித் தடையாகும். தகவலுக்கான கோரிக்கையொன்றினை விடுக்கின்ற நபர் அவருடைய தெரிவு மொழியில் அக்கோரிக்கையினை பதிவு செய்வதற்கு தகவலுக்கான உரிமைச் சட்டம் அனுமதிக்கின்றபோதிலும் கூட (பிரிவு 24 (5)(ஆ)),

அத்தெரிவு மொழியிலேயே தகவல்கள் வழங்கப்பட வேண்டுமென சட்டம் பகிரங்க அதிகார சபைகளைக் கட்டாயப்படுத்தவில்லை. மாறாக, குறிப்பிட்ட தகவல்கள் உத்தியோகப் பதிவேடுகளில் காணப்படுகின்ற அதே மொழியில் அவற்றை வழங்குவதற்கான கடப்பாடே பகிரங்க அதிகார சபைக்கு காணப்படுகின்றது. ஆகவே, பல சந்தர்ப்பங்களில், தமிழ் பிரஜைகள் பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து தகவல்களை சிங்கள மொழியிலேயேப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதுடன் இது பாரதூரமான பிரச்சினையினைத் தோற்றுவித்துள்ளது. இப்பிரச்சினையினை விரைவாகத் தீர்க்க வேண்டியது அரசாங்கம், தகவலுரிமைக்கான ஆணைக்குழு மற்றும் தகவலுரிமையின் அமுலாக்க நிறுவனம் (வெகுசன ஊடக அமைச்சு) என்பனவற்றின் கடமையாகும்.

அதேவேளை, "பணித்தளத்தில் இடம் பெறுகின்ற ஊழல் மற்றும் தவறான செயல்கள் குறித்தத் தகவல்களைத் தெரிவித்து அதற்கான பொறுப்புடைமையினை நாடுபவர்களை (*whistleblowers*) பாதுகாக்கின்ற தனியான ஒரு சட்டம் இருப்பில் இல்லாமையினால், அவ்வாறு செயற்படுகின்ற பகிரங்க அலுவலர்களின் பாதுகாப்பிற்கு ஊறினை ஏற்படுத்தக்கூடிய தகவல்களின் வெளிவிடுகைத்தொடர்பில் தீர்மானிக்கின்றபோது மிகவும் கவனமாக செயற்பட வேண்டிய கடமையினை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது" என்ற ஆணைக்குழுவின் அவதானிப்பினை மேற்கோள் காட்டி, ஏனைய முன்னேற்றமடைந்துள்ள நியாயாதிக்கங்களுடன் இணைந்து அத்தகைய பகிரங்க அலுவலர்களைப் பாதுகாப்பதற்கான தனியான சட்டமொன்றினை ஆக்குவது தொடர்பில் இலங்கை சிந்திக்க வேண்டுமென கட்டுரையாசிரியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

ஒப்பீட்டு பகுப்பாய்வினைப் பார்க்கின்றபோது, இந்தியா, மெக்சிகோ மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் பகிரங்க அதிகார சபைகள் வெளிப்படுத்தல் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படுகின்றதுடன் வெளிப்படுத்துவதற்கான சட்டக் கடப்பாடு காணப்பட்டபோதிலும் கூட அதனைப் பொருட்படுத்தாது அவை

இரகசியத்தன்மை மற்றும் வெளிப்படுத்தாமை என்பனவற்றுக்கு சார்பாகவே செயற்படுகின்றன. இங்கு ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் உரிமைகள் போக்கினைக் கையாளுகின்ற கல்வியியலாளர்கள் போன்றோர் தகவலைப் பயன்படுத்தி அரசின் பொறுப்புக்கூறுதலை சவாலுக்கு உட்படுத்தியுள்ள வெற்றிகரமான உதாரணங்கள் காணப்படுகின்றன. எவ்வாறெனினும், பாதிக்கப்பட்டுள்ள பிரஜைகள் அச்சட்டத்தினை அணுகாமை மற்றும் அச்சட்டத்தினைப் பயன்படுத்தாமை தொடர்பில் பரவலான பிரச்சினை நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்துறைகளில் நிலைத்துள்ள தண்டனையிலிருந்து விடுபடுகின்ற அரச கலாசாரம், அதிகாரிகளின் மூர்க்கத்தனம், தாமதங்கள் மற்றும் தகவலுரிமைத் தொடர்பான வழிப்புணர்வின்மையுடன் இணைந்துள்ள தடைகள் என்பன இச்சட்டத்தினைப் பயன்படுத்த எத்தனிக்கின்ற ஓரங்கட்டப்பட்டுள்ள சமுதாயங்களுக்கு தடைகளை விதிக்கின்றன. அவர்கள் அவதானிக்கின்றதன்படி, பகிரங்க அலுவலர்கள் அவர்களுக்கு மிகவும் பரிச்சயமான "தாமதம் மற்றும் மறுப்பு" என்ற மூலோபாயங்களைப் பயன்படுத்தி தகவலுரிமையின் பலத்தை இழக்கச் செய்கின்றனர்.

தகவலுரிமையினை வேறுபட்ட ஒரு கோணத்தில் அணுகுகின்றபோது, குறிப்பாக வெளிப்படுத்துகையினைக் கட்டாயப்படுத்துகின்ற (எதிர்வினை வெளிப்படுத்தல்கள்) சவால்கள் நிறுவனங்களில் பதியப்படுகின்றமைக்கு மாறாகத் துடிப்பான முன்கூட்டிய (தன்னார்வமான) வெளிப்படுத்துகை என்ற கண்ணோட்டத்தில் அணுகுகின்றபோது, அதனை இலங்கைச் சட்டத்தின் ஒரு பலவீனமான விடயமாக தொடர்பாடல்கள் கொள்கை ஆக்குனர் விஜயானந்தா ஜயவீர குறிப்பிடுகின்றார். உறுதியான உயிர்ப்பான முன்கூட்டிய வெளிப்படுத்துகைக்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ள நாடுகளில்கூட (அதாவது, இந்தியாவில் கூட) தகவல்களைத் தன்னார்வமாக வெளிப்படுத்துகின்ற ஏற்பாடுகளை அரச நிறுவனங்கள் பின்பற்றவில்லை என்ற சரியான அவதானிப்பினை அவர் குறித்து காட்டியுள்ளார்.

பகிரங்க அதிகார சபைகள் ஏன் செயற்திறனுடனான முன்கூட்டிய வெளிப்படுத்துகை நியமங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கு இணங்கக்கூடிய பல காரணங்களை அவர் பட்டியற்படுத்துகின்றார். அவற்றுள் முதன்மையான காரணமாக, அவ்வாறு முன்கூட்டியே வெளிப்படுத்தலானது பதியப்படுகின்ற தனிநபர்களின் தகவல் கோரிக்கையின் எண்ணிக்கையினைக் குறைக்கும் என்பதுடன் அக்கோரிக்கைகளுக்கு பதிலிறுப்பதற்கான பகிரங்க அதிகாரிகளின் நேர விரயம் மற்றும் சக்தி விரயம் என்பனவற்றை இல்லாதொழிக்கும் என குறிப்பிட்டுள்ளார். ஒரு நவீன வெளியீட்டுத் திட்டத்தினை முன்மொழிந்துள்ள அவர், ஆட்சி செயன்முறையின் உள்ளார்ந்த காரணியாக தகவல்களை வழங்கல் காணப்பட வேண்டுமென்பதனை அடிக்கோடிட்டுள்ளார்

அரசாங்கத் தகவல்கள் அடிப்படை வசதியின் ஒரு வடிவமாக உருவாகி வருகின்றது, எம்முடைய சமகால வாழ்விற்கு அவசியமாகின்ற கல்வி மற்றும் சுகாதார முறைகள், பாதைகள், மின்சார மற்றும் நீர் விநியோக அமைப்புக்கள் என்பனவற்றைப் போலவே அரசாங்கத் தகவல்களும் சம அளவில் முக்கியத்துவமுடையதாகின்றது. தகவல்களை உயிர்ப்பாக, முன்கூட்டியே வெளிப்படுத்துவதனை அதிகரித்தல் மற்றும் அரசாங்கத் தகவலை பொது மக்களுக்கான உண்மையான பயன்பாடாக ஆக்குதல் என்பன விடயங்களை அறிந்து அதனூடாக சிறந்த தீர்மானங்களை எடுக்கக்கூடிய பிரஜைகளின் இயலுமை தொடர்பில் அக்கறை காட்டுகின்ற எந்தவொரு ஜனநாயக அரசாங்கத்தினதும் கடப்பாடாகும்.

இத்தொகுப்பின் இறுதி இரண்டு கட்டுரைகளும் வெளிநாட்டு ஒப்பீட்டு கண்ணோட்டங்களை உள்ளடக்கியுள்ளன. வெளிப்படுத்தலுக்கான சுதந்திரம் மற்றும் தகவல் உரிமைக்கான சிரேஷ்ட பகுப்பாய்வாளர் டோபி மென்டெல், சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான நிலையத்தின் உலகளாவிய தரப்படுத்தலை விவரிப்பதனூடாக இலங்கை தகவலுரிமைக்கானச் சட்டத்தினை

ஆராய்கின்றார். தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள வழக்குத்தொடுப்பு அதிகாரங்கள் (தகவலுரிமைக்கானச் சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற குற்றங்கள் தொடர்பில்) மற்றும் தகவலை வெளியிடுவதற்கானக் கட்டணத்தினைத் தீர்மானிக்கின்ற அதிகாரங்கள் என்பன உள்ளடங்கலாக "புத்தாக்கமானது" என குறிப்பிடப்படுகின்ற சட்ட ஆட்சியின் பல்வேறு அம்சங்களை அவர் குறிப்பிட்டு காட்டியுள்ளார்.

முன்னேற்றத்தினைத் தேவைப்படுத்துகின்ற தகவலுரிமை ஆட்சியின் குறிப்பான பகுதிகள் குறித்து பார்க்கின்றபோது, தகவலுக்கான உரிமையினை உறுதிப்படுத்துகின்ற அரசியலமைப்பின் மொழி பிரயோகத்திலுள்ள (உறுப்புரை 14 அ) முரண்பாடுகளை சுட்டிக்காட்டுகின்றார். அவ் உறுப்புரையில் அவ் உரிமை கட்டமைக்கப்பட்டுள்ள முறையானது, "எந்தவொரு தகவலையும்" அணுகுவதற்கான உரிமை என்ற விதத்தில் அல்லது "பிரஜைகளின் உரிமையினைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்குத் தேவையானத் தகவல்களை" மாத்திரம் அணுகுவதற்கான உரிமை என்ற விதத்தில் புரிந்து கொள்ளப்படலாம். இது குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பினை கொண்டிருக்கும். மேலும், தகவலுரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களை வெளியிடுதலைத் தெளிவற்ற மற்றும் பொதுமயப்படுத்தப்பட்ட முறையில் விலக்களிக்கின்ற ஏற்பாடுகளை உள்ளடக்கிய சட்டங்கள் எதிர்காலத்தில் உருவாக்கப்படுகின்றமை தொடர்பிலானத் தன்னுடைய அக்கறையினை மீள மீள வெளிப்படுத்தியுள்ளார். ஏனையவற்றுக்கு மத்தியில், அவர் அடிக்கோடிட்டுக் காட்டுகின்ற விடயங்களாக தகவல்கள் "பிரஜைகளுக்கு" மாத்திரம் வழங்கப்படவேண்டுமென்ற மட்டுப்பாடு மற்றும் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு (வெளிப்படையாக) பகிரங்க அதிகார சபைகளில் சோதனைகளை மேற்கொள்வதற்கான அதிகாரமின்மை என்பனவற்றைக் குறிப்பிடலாம். அவருடைய கீழ்குறிப்பிடப்படுகின்ற எச்சரிக்கை மிகப் பொருத்தமானதாகும்

அதன் பலங்கள் மற்றும் பலவீனங்களுக்கு மத்தியில், தகவலுரிமைக்கானச் சட்டமானது அதன் அமுலாக்கம் தொடர்பில் சிறப்பாகத் தொழிற்படுகின்றதென அதன் ஆரம்ப சமிக்ஞைகள் எடுத்துக் காட்டுகின்றன. தகவலுரிமைச் சட்டத்தின் அமுலாக்கத்தின் ஆரம்ப நாட்களில் இத்தகைய தேனிலவு சூழ்நிலை எதிர்பார்க்கப்படலாம் என்கின்ற அதேவேளை, அது எந்நேரத்திலும் மாற்றமடைவதற்கு பிணிக்கப்பட்டுள்ளதாகும் என்பதனால் இது மிகவும் முக்கியமாகின்றது. தகவலுரிமைத் தொடர்பான சிறந்த நடைமுறைகளை நிறுவனமயப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்களை இத்தேனிலவு காலப்பகுதியில் இலங்கை ஆக்குவதனூடாக பிற்காலப்பகுதியில் நிறுவனங்கள் தகவலுரிமையுடன் இணங்காதிருப்பதனை கடினமானதாக்கலாம்.

தென்னாபிரிக்க கல்வியியலாளர் மற்றும் தகவலுரிமை பகுப்பாய்வாளர் ரிச்சர்ட் கலன்ட் இலங்கையை மையப்படுத்துவதற்கு அப்பால் சென்று தென்னாபிரிக்காவின் தகவலுரிமை அனுபவத்தினை முரண்பாடு மற்றும் ஒப்பீட்டிற்குரிய சுவாரஸ்யமான குறிப்பாக எடுத்தியம்பியுள்ளார். தகவலுரிமைச் செயன்முறையானது பல உயர்வு தாழ்வுகளைக் கொண்டுள்ளது என விபரிக்கின்ற அவர், தென்னாபிரிக்காவின் தகவலுரிமையானது சிக்கலான சூழ்நிலைகளின்போது கூட பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் அது உறுதியானதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது என்கின்றார். அத்துடன் அது நாட்டின் புதிய ஜனநாயக ஒழுங்கின் ஒரு பிரதான அம்சமாக விளங்குகின்றது என கூறுகின்றார்.

தென்னாபிரிக்காவில் 2000 ஆம் ஆண்டு ஆக்கப்பட்டத் தகவல்களை அணுகுதல் விருத்திச் சட்டத்தின் பரப்பு, அமுலாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலினை பகுப்பாய்வு செய்கின்ற அவர், “உறுதியான, சில சமயங்களில் தர்க்கரீதியாக தேவையற்ற சிக்கல்களைக் கொண்டுள்ள சட்டவாக்கத்தின்” பெறுமதியினை அங்கீகரிக்கின்ற அவர், “மலிவான, விரைவான

மற்றும் விசேடமயப்படுத்தப்பட்ட அமுலாக்க அமைப்பொன்று இல்லாமை" குறித்து அவர் மிக நீளமாக ஆராய்கின்றார்.

தகவல்களை அணுகுதல் விருத்திச் சட்டத்தின் நடைமுறை தொடர்பில் பார்க்கின்றபோது, குறிப்பான வெற்றிகள் அடையப்பெற்றுள்ளன. அக் குறியீட்டு ரீதியான வெற்றிகள் காணப்பட்டபோதிலும், தென்னாபிரிக்காவின் தீண்டாமை தொடர்பான மரபுவழி இரகசியங்கள் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றியமைக்கப்படவில்லை என்பதனை அவர் அதிகாரபூர்வமாக சுட்டிக் காட்டியுள்ளார். உண்மையில், பகிரங்கப் பதிவேடுகளை அணுகுகின்ற செயன்முறையானது சுமை மிக்கது. அவர் குறிப்பிடுகின்றதற்கமைய, இது "தவிர்க்கமுடியாத விதத்தில் ஒரு இடையீட்டு அமைப்பின் தலையீடு அல்லது ஆதரவினைத் தேவைப்படுத்துகின்றது." வழக்கமாக தகவலுக்கான கோரிக்கைகளை அலட்சியப்படுத்துதலானது நிலைத்திருக்கின்ற தகவல் மறுப்பு கலாசாரத்தின் ஓர் பகுதியாகும்.

2013 ஆம் ஆண்டு ஆக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு சட்டத்தின்கீழ், தகவல் கோரிக்கைகள் தொடர்பான மேன்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட தகவல் ஒழுங்கமைப்பு நிறுவனமானது தென்னாபிரிக்காவில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்தியது. முடிவாக தன்னுடைய அறிமுகக் கருத்துரைகள் தொடர்பான ஆய்வுப் பொருளை மீள இயம்புகின்ற அவர், "பல பாரிய சாதனைகள் காணப்பட்ட போதிலும்கூட, தென்னாபிரிக்காவின் தகவலுரிமையானது எதிர்ப்பாற்றல் மிக்க திறனின்மை கலாசாரத்தினாலும் சில நேரங்களில் பகிரங்க சேவையிலுள்ள இரகசியத்தன்மையினால் மழுங்கடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் எதிர்மறையான அரசியல் சிக்கல்களால் தாக்கப்பட்டுள்ளது என இயம்புகின்றார்.

தென்னாபிரிக்காவைப்போலவே இலங்கையிலும் தகவலுரிமையானது "எதிர்க்கப்படுகின்ற அரசியல் பரப்பாக" வளர்ந்து வருகின்றது. இவ் எச்சரிக்கையினை தவிர்த்துவிட்டு பார்க்கின்றபோது, இலங்கை பிரஜைகளால் கடந்த இரண்டு வருடங்களாக ஆர்வமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற தகவலுரிமைச் சட்டமானது, புதிய ஜனநாயக ஒழுங்கின் அடிப்படை ஆக்கக்கூறொன்றாக வளர்ந்து வருகின்ற சட்டமென்ற ரீதியில் சிக்கலான சந்தர்ப்பங்களின்போது பரிசீலனை செய்யப்படினும்கூட அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் என்ற பிரஜைகளின் எதிர்பார்ப்பு எவ்வித ஐயங்களுக்கும் இடமற்றதாகும்.

கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன
தகவலுரிமை ஆணையாளர் சிரேஷ்ட சட்டத்தரணி

நல்லாட்சியின் அம்சம் ஒன்றாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் சில அம்சங்கள்

அருளானந்தம் சர்வேஸ்வரன்

அறிமுகம்

எல்லாத் துறைகளிலும் தனிமனிதனிடம் இருந்த மன்னராட்சி நிலவிய காலத்தில் நாட்டில் நல்லாட்சி நிலவியது. நல்லாட்சி வழி நின்று ஆட்சி நடாத்திய மன்னர்கள் பலர் இன்றும் அழியாப் புகழுடன் உள்ளனர். ஆனால், மக்களாட்சி அறிமுகமாகிய பின் நல்லாட்சி பற்றிய பல சந்தேகங்கள் எழுந்தன. இவ்வாறான ஒரு பின்னணியில் ஊழலை ஒழித்து நல்லாட்சியை நிலவ செய்வதில் மக்கள் பங்கேற்பதை இயலச் செய்ய மக்களுடைய தகவலுக்கான உரிமை என்பது முக்கியத்துவம் பெற்றது. தகவலுக்கான சட்டம் ஆக்கப்படும் வரை இலங்கையில் மக்களின் தகவலுக்கான உரிமையை வெளிப்படையாக அளிக்கின்ற சட்டம் எதுவும் ஆக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும், 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உறுப்புரை 14 (1) (அ) இலுள்ள கருத்துச் சுதந்திரமானது, தகவலுக்கான உரிமையை உள்ளடக்குகின்றது என சில வழக்குகளிலே உயர்நீதிமன்றம் தீர்த்துள்ளது. ஆனால், இந்த உரிமையானது அடிப்படை உரிமை மீறலாக அமையும் சூழ்நிலைகளுக்கென வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது.

அரசியலமைப்பிற்கான திருத்தம்

அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாவது திருத்தச் சட்டமானது நல்லாட்சியின் அம்சங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தியது. அவைகளில் ஒன்றாக அடிப்படை உரிமையாக தகவல் அறியும் உரிமை என்பது

அறிமுகப்படுத்தப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 14 அ (1) ஆனது ஒவ்வொரு பிரசைக்கும் சட்டத்தால் அளிக்கப்பட்டவாறாக அரச நிறுவனங்களிடமிருந்து தகவலைப் பெறுவதற்கான உரிமை உள்ளது என்கின்றது. இந்த உரிமையானது, அரசு, அமைச்சு, அரச திணைக்களம், சட்டத்தால் தாபிக்கப்பட்ட நியதிச் சட்ட சபை, மாகாண அமைச்சு, மாகாணமொன்றின் நியதிச் சட்டதால் தாபிக்கப்பட்ட அமைச்சு அல்லது நியதிச் சட்டவமைப்பு, உள்ளூராட்சிச் சபை ஆகியவைகளிடமிருந்தும் மற்றும் இந்த நிறுவனமொன்றில் தகவலை வைத்திருக்கும் ஒருவர் ஆகியோரிடமிருந்தும் தகவலைப் பெறுவதற்கான உரிமையை உள்ளடக்குகின்றது.

ஆயினும், பத்தொன்பதாவது திருத்தச் சட்டமானது தகவலைப் பெறுவதற்கான இந்த அடிப்படை உரிமை மீது, தேசிய பாதுகாப்பு, ஆள்புல இறைமை, பொதுமக்கள் பாதுகாப்பு, குற்றமொன்றைத் தடுப்பது, சுகாதாரம், அறவொழுக்கம், ஒருவரின் நற்பெயர், அந்தரங்கம் ஆகியவைகளைப் பாதுகாப்பது, நீதிமன்ற அவமதிப்பைத் தடுப்பது, பாராளுமன்ற சிறப்புரிமையைப் பாதுகாப்பது, நம்பிக்கையில் வழங்கப்பட்ட தகவலைப் பாதுகாப்பது மற்றும் நீதித்துறையின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் பேணுவது போன்ற காரணங்களுக்காக சட்டத்தால் மட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை அனுமதிக்கின்றது.

தகவலுக்கான உரிமைச் சட்டம்

இச் சட்டமானது 03 - 02 - 2017 இலிருந்து நடைமுறைக்கு வந்தது. இச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஒழுங்கு விதிகள் 2017 இல் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் (அதி விசேட) வர்த்தமானி மூலம் ஆக்கப்பட்டன.[3] தகவலுக்கான சட்டம் ஆக்கப்பட்டதற்கான நோக்கமானது, இச் சட்டத்தின் நீள்தலைப்பு மற்றும் முகவுரை ஆகியவைகளில்

3 ஜனநாயக சோசலீச குடியரசான இலங்கை வர்தமானி இல.2004/66, பெப்ரவரி 03, 2017.

உள்ளது. நீள்தலைப்பானது, தகவலைப் பெறுவது, தகவலைப் பெறும் உரிமையை மறுப்பதற்கான சந்தர்ப்பங்கள், தகவலறியும் ஆணைக் குழுவைத் தாபிப்பது, தகவல் வழங்கும் உத்தியோகத்தர்களின் நியமனம் மற்றும் நடபடி முறைகள் பற்றி ஏற்பாடு செய்வதற்காக ஆக்கப்பட்ட சட்டமொன்று என்கின்றது.

இச் சட்டத்தின் முகவுரையானது, அரசியலமைப்பின் உறுப்புரை 14 அ ஆனது தகவலைப் பெறுவதற்கான உரிமையை உத்தரவாதமளிப்பதாலும், தகவலைப் பெறும் உரிமையை வழங்குவதன் மூலம் பகிரங்க அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் வெளிப்படையாந்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை போன்ற கலாசாரங்களை ஊக்குவிக்க வேண்டியுள்ளதாலும் அதன் காரணமாக ஊழலை இல்லாதொழித்து பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் நல்லாட்சியை முன்னேற்றுவதன் ஊடாக பகிரங்க வாழ்க்கையில் பங்கேற்கும் இலங்கை மக்கள் சமூகமொன்றை ஊக்குவிக்க வேண்டியுள்ளதாலும் இச் சட்டமானது ஆக்கப்படுகின்றது என்கின்றது.

தகவலைப் பெறுவதற்கான உரிமை

ஒவ்வொரு பிரசைக்கும் பகிரங்க அதிகாரவமைப்பு ஒன்றின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ள தகவலைப் பெறுவதற்கான உரிமை உள்ளது.[4] இச் சட்டத்தின் நோக்கத்திற்காக பகிரங்க அதிகாரம் என்பது அரசாங்கத்தின் அமைச்சு, அரசியலமைப்பினால் அல்லது எழுத்திலாக்கப்பட்ட சட்டமொன்றால் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அலுவலகம், அரசாங்க திணைக்களம், பகிரங்க கூட்டுத்தாபனம், இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசு கொண்டுள்ள அல்லது கட்டுப்படுத்தும் அக்கறையை அரசு கொண்டுள்ள கம்பனி, உள்ளூராட்சி சபை, அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றிற்கு அமைய நியதிச்சட்ட அல்லது பகிரங்க கடமையைக் கொண்டு

4 பிரிவு 3(1).

நடாத்துகின்ற தனியார் நிறுவனம் அக் கடமையினளவிற்கு, மாகாண சபையால் தாபிக்கப்பட்ட திணைக்களம், அரசாங்கத்தினால் கணிசமானளவு நிதியுதவியளிக்கப்படும் அரசாங்க சார்பற்ற தாபனத்தினால் வழங்கப்படும் அத்தகைய சேவை சம்பந்தப்பட்ட விடயங்கள், உயர் கல்வி நிறுவனம், நீதிமன்றம் ஆகியவைகளை உள்ளடக்குகின்றது.[5]

தகவலைப் பெறுவதற்கான மட்டுப்பாடுகள்

தகவலறியும் சட்டமானது, தகவலைப் பெறுவதற்கான உரிமை மீது பல மட்டுப்பாடுகளை விதிக்கின்றது. ஒருவரின் தனிப்பட்ட தகவல், அந்தரங்கம் மீது அத்துமீறலாக அமையும் தகவல், அரசின் பாதுகாப்பு அல்லது அரசின் ஆள்புல இறைமை அல்லது தேசிய பாதுகாப்பு என்பவைகளைப் பாதிக்கும் தகவல், ஏதேனும் அரசுடனான உறவுகளை மோசமாகப் பாதிக்கக்கூடிய ஏதேனும் தகவல், இலங்கையின் பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கக்கூடிய வகையில் நாணய மாற்று வீதங்கள், வங்கியியல் ஒழுங்காக்கல்கள், வரிவிதிப்பு, வெளிநாட்டு வர்த்தக உடன்படிக்கைகள் ஆகியவைகள் பற்றிய காலத்திற்கு முந்தியதான தகவல், வர்த்தக இரகசியங்கள், புலமைச் சொத்துச் சட்டத்தால் பாதுகாக்கப்படும் புலமைச் சொத்து பற்றிய தகவல், மருத்துவ அறிக்கைகள் பற்றிய தகவல், நம்பக உறவில் வழங்கப்பட்ட தகவல், ஏதேனும் குற்றமொன்றைத் தடுப்பதை அல்லது கண்டறிவதை அல்லது குற்றவாளிகளைக் கைதுசெய்வதை அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதைப் பாதிக்கக்கூடிய தகவல், நீதிமன்ற அவமதிப்பாக அமையக் கூடிய அல்லது நீதித்துறையின் பாரபட்சமின்மையைப் பாதிக்கக் கூடிய தகவல், பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையொன்றின் சிறப்புரிமைகளை மீறக்கூடிய தகவல், பரீட்சையொன்றின் நம்பகத்தன்மையை பாதிக்கக் கூடிய தகவல், தீர்மானம் எடுப்பதற்கு முன்னரான அமைச்சரவைப் பத்திரம் பற்றிய தகவல் மற்றும் தேர்தல் தொடர்பில் இரகசியத்தன்மையைப்

5 பிரிவு 43.

பேண வேண்டிய தகவல் போன்றவைகள் தொடர்பிலான தகவலை ஒருவர் பெறமுடியாதென தகவலறியும் சட்டத்தில் உள்ளது.[6]

தகவலைப் பேணுவதற்கான கடப்பாடு

ஒவ்வொரு பகிரங்க அதிகாரத்திற்கும் தகவலைப் பெறும் உரிமையை இயலச் செய்யும் வகையில் தகவலை முறையாக அடையாளக் குறியிட்டுப் பேணும் கடப்பாடு உள்ளது.[7] இச் சட்டம் நடைமுறைக்கு வரும்போது இருந்த பதிவேடுகளைப் பத்து வருடங்களுக்கு குறையாத காலப்பகுதிக்குப் பேணும் கடப்பாடு உள்ளது. இச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் ஆக்கப்பட்ட பதிவேடுகளை அப் பதிவேடுகள் ஆக்கப்பட்டதிலிருந்து பன்னிரண்டு வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குப் பேணும் கடப்பாடு உள்ளது.[8] இச் சட்டத்தின் கீழ் தகவல் கோரப்பட்டுள்ள விடயம் தொடர்பான பதிவேடு ஒன்றை அத் தகவல் கோரப்பட்டுள்ள காலப்பகுதியில் அல்லது அத் தகவல் தொடர்பாக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள காலப்பகுதியில் அல்லது வழக்கு நடவடிக்கை உள்ள காலப்பகுதியில் அழித்தல் ஆகாது.[9]

தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு

இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தகவலுக்கான உரிமை ஆணைக் குழு என்பது தாபிக்கப்பட்டுள்ளது.[10] இந்த ஆணைக்குழுவானது அரசியலமைப்புப் பேரவையின் விதந்துரையின் மீது ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.[11] இந்த ஆணைக்குழுவின் கடமைகள், இச் சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகாரங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கடமைகளுக்கு இணங்க அவைகள் செயற்படுகின்றனவா

6 பிரிவு 5.
7 பிரிவு 7(1).
8 பிரிவு 7(3).
9 பிரிவு 7(4).
10 பிரிவு 11.
11 பிரிவு 12.

என்பதனைக் கண்காணிப்பது மற்றும் இச் சட்டத்தின் கீழ் தகவலை வழங்குவதற்காக பகிரங்க அதிகாரங்களால் அறவிடப்படும் கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவது என்பவைகளை உள்ளடக்குகின்றது.[12] இந்த ஆணைக் குழுவின் தத்துவங்களானவை, விசாரணைகளைச் செய்வது, ஒருவரின் உடைமையிலுள்ள தகவலைச் சமர்ப்பிக்குமாறு கோருவது, பகிரங்க அதிகாரத்திடமுள்ள தகவலைப் பரிசீலனை செய்வது, குறிப்பிட்ட வடிவத்தில் தகவலை வழங்குமாறு பகிரங்க அதிகாரமொன்றை நெறிப்படுத்துவது, பகிரங்க அதிகாரத்திடமுள்ள தகவலைப் பிரசுரிக்குமாறு நெறிப்படுத்துவது மற்றும் மேன்முறையீடுகளை கேட்டு தீர்மானிப்பது என்பவைகளை உள்ளடக்குகின்றது.[13]

தகவல் வழங்கும் நடைமுறை

ஒவ்வொரு பகிரங்க அதிகாரமும் இச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக தகவல் அலுவலர் அல்லது அலுவலர்களையும், மேன்முறையீடுகளைக் கேட்பதற்காகக் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரையும் நியமித்தல் வேண்டும்.[14] இச் சட்டத்தின் கீழ் எதேனும் தகவலைப் பெற விரும்புகின்ற பிரசையொருவர் தகவல் அலுவலருக்கு எழுத்திலான வேண்டுதலொன்றைச் செய்தல் வேண்டும்.[15] அவ்வாறான வேண்டுதலொன்றைப் பெற்றதும் தகவல் அலுவலர் உடனடியாக எழுத்திலான அத்தாட்சியினை வழங்குதல் வேண்டும்.[16] வேண்டுதலைச் செய்பவர் தான் அத் தகவலைப் பெறவிரும்பும் மொழியைக் குறிப்பிடுதல் வேண்டும்.[17]

தகவல் அலுவலர் சாத்தியமானளவு விரைவாகவும் எச் சந்தர்ப்பத்திலும் வேண்டுதலொன்று கிடைக்கப் பெற்றதலிருந்து பதினான்கு வேலை நாட்களுக்குள்ளேயும் தகவலை வழங்குவது

12 பிரிவு 14.
13 பிரிவு 15.
14 பிரிவு 23(1).
15 பிரிவு 24(1).
16 பிரிவு 24(3).
17 பிரிவு 24(5).

அல்லது அந்த வேண்டுதலை ஏற்கமறுப்பது பற்றிய தீர்மானத்தை எடுத்தல் வேண்டும் என்பதுடன், உடனடியாக அத் தீர்மானத்தை வேண்டுதலைச் செய்தவருக்கு அறியத்தருதலும் வேண்டும்.[18] வேண்டப்பட்ட தகவலை வழங்குவதற்கான தீர்மானத்தை எடுத்தால், அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத் தகவலை வழங்குதல் வேண்டும்.[19] தகவலுக்கான வேண்டுதலானது, உயிர்வாழ்க்கை அல்லது பிரசையொருவரின் ஆள்சார் சுதந்திரம் பற்றியதாக இருந்தால், அதற்கான பதிலளிப்பானது அத் தகவல் கோரப்பட்டதிலிருந்து நாற்பத்தி எட்டு மணித்தியாலங்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.[20] தகவலை வழங்குவதற்கென வழங்கப்பட்டுள்ள பதினான்கு நாட்கள் என்ற காலப்பகுதியானது, தகவலை வழங்குவது அதிக பதிவேடுகள் சம்பந்தப்பட்டதாக உள்ள போது அல்லது பதிவேடுகளை வேறுபட்ட இடங்களிலிருந்து பெறவேண்டியுள்ள போது இருபத்தியொரு நாட்களுக்கு மேற்படாத மேலுமொரு காலப்பகுதிக்கு நீடிக்கப்படலாம்.[21] ஒவ்வொரு பகிரங்க அதிகாரமும், ஆணைக்குழு மற்றும் அதன் அங்கத்தவர்களைத் தொடர்பு கொள்வது பற்றிய விபரங்களையும், தகவல் அலுவலர் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர் ஆகியோரை தொடர்புகொள்ளும் விபரங்களையும், மற்றும் தகவலை வழங்க அறவிடப்படும் கட்டணம் பற்றிய விபரங்களையும் காட்சிப்படுத்துதல் வேண்டும்.[22] தகவல் அலுவலரால் தகவலுக்கான வேண்டுதலானது மறுக்கப்பட்டால், அதற்கான காரணங்களையும், அவ்வாறு மறுக்கப்பட்டதற்கு எதிராக எக்காலப்பகுதியினுள் எவருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்ற தகவலையும் வழங்குதல் வேண்டும்.[23]

---

18 பிரிவு 25(1).
19 பிரிவு 25(2).
20 பிரிவு 25(3).
21 பிரிவு 25(5).
22 பிரிவு 26(1).
23 பிரிவு 28.

தகவல் வழங்க மறுக்கப்பட்டதற்கு எதிரான மேன்முறையீடுகள்

தகவலுக்கான வேண்டுதல் மறுக்கப்பட்டமை, சட்டத்தினால் விலக்களிக்கப்பட்ட தகவல் என்ற அடிப்படையில் தகவல் மறுக்கப்பட்டமை, சட்டத்தால் விதிக்கப்பட்ட காலப் பகுதிகளை மீறியமை, முழுமையற்ற அல்லது பொய்யான தகவல் வழங்கப்பட்டமை, அதிகளவு கட்டணங்கள் விதிக்கப்பட்டமை, கோரப்பட்ட வடிவத்தில் தகவல் வழங்காமை அல்லது தகவல் பெறுவதனைத் தடுப்பதற்காக தகவலானது அழிக்கப்பட்டது அல்லது இடம்மாறி வைக்கப்பட்டது என நம்புவது போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்ட பிரசையொருவர் அவ்வாறு மறுக்கப்பட்டதிலிருந்து அல்லது அது பற்றி அறிய வந்ததிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீட்டைச் செய்யலாம்.[24] அந்த குறித்தளிக்கப்பட்ட அலுவலரானவர் அந்த மேன்முறையீடு கிடைக்கப் பெற்றதிலிருந்து மூன்று வாரங்களுக்குள் அந்த மேன்முறையீடு தொடர்பான தனது தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.[25] இந்த மேன்முறையீட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் அல்லது விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் மேன்முறையீடு தொடர்பான தீர்மானம் எடுக்கப்படாமையால் பாதிக்கப்பட்டவர் இரண்டு மாத காலப்பகுதியினுள் தகவலறியும் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன் அந்த ஆணைக்குழுவானது முப்பது நாட்களுக்குள் தனது தீர்மானத்தை எடுத்தல் வேண்டும்.[26] ஆணைக்குழுவின் தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட பிரசையொருவர் அல்லது பகிரங்க அதிகாரமொன்று அத் தீர்மானத்திற்கு எதிராக ஒரு மாதத்தினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.[27]

---

24 பிரிவு 31(1).
25 பிரிவு 31(3).
26 பிரிவு 32(1).
27 பிரிவு 34(1).

சிறுபான்மை மக்களின் உரிமை

இலங்கையில், இனப்பிரச்சினையானது தோற்றம் பெறுவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக சிறுபான்மை மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாரபட்சங்களும் இருந்தது. ஆயினும், 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் உறுப்புரை 12 ஆனது எந்தவொரு பிரசையும் இனம், மதம், மொழி மற்றும் சாதி போன்ற காரணங்களுக்காகப் பாரபட்சங்களுக்கு உட்படுதலாகாது என்கின்றது. இந்த அடிப்படை உரிமையானது சிறுபான்மை மக்களினைப் பாரபட்சங்களிலிருந்து பாதுகாக்கின்ற முக்கிய சட்ட ஏற்பாடு ஒன்றாக அரசியலமைப்பில் உள்ளது. அரசியலமைப்பிலுள்ள இந்த உரிமையைப் பயன்படுத்தி அடிப்படை உரிமை மீறல் வழக்கிடுவதற்குப் பாரபட்சம் உள்ளதா என்பது பற்றிய தகவலைப் பெறுவது அவசியமாகின்றது. இவ் வகையில் தகவலுக்கான உரிமைச் சட்டமானது, சிறுபான்மை மக்கள் தமக்கு எதிரான பாரபட்சம் உள்ளதா என அவர்களை அறிய இயலச் செய்வதால், சிறுபான்மை மக்கள் அரசியலமைப்பின் உறுப்புரை 12 இனால் அவர்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு உரிமையின் பாதுகாப்பைப் பெறக் கூடியதாகவுள்ளது. இவ் வகையில் தகவலறிதலுக்கான சட்டமானது, நாட்டில் பாரபட்சத்தை இல்லாதாக்குவதற்கும், நல்லிணக்கத்திற்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் வழி செய்கின்றது எனலாம்.

முடிவுரை

தகவலுக்கான உரிமைச் சட்டமானது, பிரசைகளுக்கு பகிரங்க அதிகாரங்களின் செயற்பாடுகள் தொடர்பான தகவலை வழங்குவதற்கான சிறந்த ஏற்பாடுகளையும் பொறிமுறைகளையும் கொண்டுள்ளது. இச் சட்டமானது நாட்டின் பிரசைகளுக்கு தகவலுக்கான உரிமையை வழங்குவதற்கென உலகில் ஆக்கப்பட்ட மிகச் சிறந்த சட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இச் சட்டமானது நாட்டின் அரசியல் மற்றும் நிருவாக கலாசாரத்தில்

முக்கிய மாற்றமொன்றையும் ஏற்படுத்தியது. இந்த மாற்றமானது நாட்டில் நல்லாட்சி ஏற்பட வழிவகுக்கும் ஒன்றாக அமைந்தது. இச் சட்டமானது, நாட்டிலுள்ள மக்கள் அரசியலமைப்பால் அவர்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதனை மேம்படுத்தவும் வழிசெய்கின்றது. இவ் வகையில், தகவலுக்கான உரிமைச் சட்டமானது, அரசியலமைப்பிலுள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளை நாட்டு மக்கள் அனுபவிப்பதற்கான உரிமையைப் பரந்ததாக்குவதாகவும் உள்ளது. இச் சட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது என்பது துடிப்புள்ள சமூகம், பற்றுறுதியுள்ள ஆட்சிமுறைமை மற்றும் நீதித்துறைச் செயலூக்கம் என்பவைகளிலேயே தங்கியுள்ளது.

இலங்கையில் இரண்டு வருடங்களில் தகவல் அறியும் உரிமை பற்றிய விளக்க உரைகள்

பிரசாந்தி மஹிந்தரட்ன

1. அறிமுகம்

நாட்டின் தகவல் அறியும் உரிமையின் செயற்பாடானது அதன் இரண்டாம் வருடத்தை அண்மித்துள்ள நிலையில் இந்த வெளியீடு நேரடியாகவே அவசியமாகின்றது. காரணம் ஏற்கனவே இருக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் உருவாக சாத்தியமாகவுள்ள சவால்களை அறிய வேண்டிய அவசியமும் இந்த நாட்டின் பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்துள்ள எல்லைகளில் இந்த தகவல் அறியும் உரிமையானது பின்வாங்குவதாக தோன்றுகின்ற காரணத்தினாலும் இந்த வெளியீடு அவசியமாகின்றது. உதாரணமாக இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையானது, 13 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியாவில் மத்திய அரசாங்கத்தின் 1950 பொது அதிகார சபைகள் மீதான பொதுமக்களின் தகவல் பெறும் கோரிக்கையானது தகவல் அலுவலர்களின் கடுமையான போக்கு மற்றும் முறையீடுகளை மெதுவாக அகற்றுதல் என்பன காரணமாக 2015 - 2016 தொடக்கம் 2016 - 2017 வரையான காலப்பகுதியில் 6% வீதத்தால் குறைவடைந்துள்ளது.[28] இந்த கீழ் நோக்கிய போக்கிற்கு காரணம் தகவல்களை பெறுவதிலுள்ள சிரமங்கள் மற்றும் மத்திய மாநில அரசாங்க மட்டங்களில் ஆணைக்குழுவின் நியமனங்களில் இடம்பெறும் அரசியல் தலையீடுகள் என்பனவே இந்த திட்டத்தின் மீதான நம்பிக்கையிழப்புக்கு காரணம் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

28 இந்திய தகவலுக்கான உரிமையின் மென் சாவு (*"How RTI Act is dying a slow death in India"*), இந்துஸ்தான் டைம்ஸ் 3 மே *2018 <https://www.hindustantimes.com/india-news/how-rti-is-dying-a-slow-death-in-india/storysTpdC63K7s42vxgV1bxwTI.html >*.

மேற்கூறிய சூழலில் 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அமுலாக்கமானது முதல் இரண்டு வருடங்களில் எதிர்பாராத திருப்பதிகரமானதாக அமைந்துள்ளது. குறித்த தகவல் அறியும் உரிமை பற்றிய அனுபவ ரீதியான ஆய்வு இல்லாத நிலையில் கடந்த இரண்டு வருடங்களில் தகவல் அறியும் உரிமையின் ஆணைக்குழுவானது முறையீடுகளை அகற்றும் அளவு மற்றும் குணாம்ச இயல்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட முடிவுகள் என்ற இரண்டு அடிப்படையில் ஒரு குறிப்பிட்டளவான செயற்பாடுகளை தனது செயற்திறன் அடிப்படையில் மேற்கொண்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குமுவானது கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 839 மேன்முறையீட்டு மனுக்களில் 610 இடைகால மற்றும் இறுதி ஆணைகளை வழங்கியுள்ளது. இவ்விதமாக ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட முறையீடுகளில் 73%ற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.[29] இது ஏனைய நீதிமன்றங்களில் முறையீடுகளை அகற்றும் வீதத்துடன் ஒப்பிடுகையில் இது அதிகளவானதாக உள்ளது. தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட முடிவுகள் பொது நிர்வாகத்தின் முடிவெடுக்கும் திறனை வெளிப்படையாக வலியுறுத்துவதற்காக சட்டத்தின் பல்வேறு அம்சங்களில் 383 முடிவுகள் முழுமையாக நிறைவேற்றும் வகையில் அவை முழுமையாக பரிசீலிக்கப்படுகின்றன.[30]

அரசாங்கம் ஆணைக்குழுவின் மறுசீரமைப்பிற்கு தனியான ஒதுக்கீடுகளை வழங்கத் தவறிய காரணத்தால் குறைந்தளவான மனித வளங்களே பயன்படுத்தப்பட்டன. மேலும் ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட மூன்று மில்லியன் ரூபாய்

29 இத் தரவுகள் ஆகஸ்ட் 2018ல் இக் கட்டுரை எழுதப்படும் போது ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது. 31 டிசம்பர் 2018 அன்று ஆணைக்குழு மொத்தம் 1030 மேல்முறையீட்டு மனுக்களில் 654 முடிவுகளை வழங்கியுள்ளது. மீதமான மனுக்களில் இடைக்கால அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

30 <***http://www.rticommission.lk/web/index.php?lang=en***>.

பணத்தொகைக்குள்ளேயே ஆணைக்குழு செயற்பட வேண்டியும் இருந்தது.[31]

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் வலைத்தளத்திலும் செய்தி ஊடகங்களிலும் குறிப்பிடப்பட்டதன் படி ஆணைக்குழுவிற்கான மேன்முறையீடுகள் பின்வருவன பற்றியதாக அமைந்திருந்தன. அவை அரசாங்க நிறுவனங்களில் சேவையை வழங்குவதிலுள்ள சிக்கல்கள், அரசாங்க நடைமுறையில் உள்ள முறைகேடுகள், அரசாங்க நிறுவனங்களின் பெறுப்புக்கூறும் தன்மை, விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகள் மற்றும் வரைபுச்சட்டங்கள் தொடர்பான விண்ணப்பங்கள், முன்னணி அரச நிறுவணங்களின் ஊழல் மோசடிகள், மத்திய வங்கியால் பிணைமுறி வழங்கப்பட்ட செயல்முறைக்கு உட்படுத்தப்பட்ட முறைகேடுகள் என்பனவாகும். இது தகவல் அறியும் உரிமையின் பெறுமதி பற்றிய விழிப்புணர்வு பொதுமக்களிடையே அதிகரித்துள்ளதையும் குறித்த உரிமையை பயன்படுத்தும் தன்மை அபிவிருத்தியடைந்துள்ளதையும் காட்டுகின்றது. மேன்முறையீடுகளானது குறித்த சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மொத்த விண்ணப்பங்களை கணக்கிடுவதற்கு உதவாது என்பது வெளிப்படையானதாகும். இந்த சட்டத்தை மக்கள் பல்வேறு வகையான தகவல்களை பெற்றுக்கொள்ள பயன்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக பொலிஸார் காணாமல் போயுள்ளவர்கள் தொடர்பில் மேற்கொண்டுள்ள விசாரணையின் நிலை பற்றி தகவல்களை பெற்றுக்கொள்ள காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் விண்ணப்பித்துள்ளனர். இது அரசதுறையிலுள்ள ஊழல்கள் முதல் காணாமல் போணவர்கள் எங்கே உள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ளல் வரையிலான பல்வேறுபட்ட விடயங்களை அறிந்து கொள்வதற்கு அதிகளவான பொதுமக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தியுள்ளார்கள்.

---

31 *"RTI Commission cash-starved"*, ***Sunday Times, 12*** பெப்ரவரி, 2017 <http://www.sundaytimes.lk/170212/news/rti-commission-cash-starved-228323.html>.

நமது பொது தகவல் உரிமைச் சட்டமானது சாதாரண குடிமக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தகவலின் வெளிப்பாட்டிற்கு வழிவகுத்துள்ளது என்பதோடு குறிப்பாக பொது நிதியை தவறாக பயன்படுத்துவதையும் குறிப்பிடுகின்றது. உதாரணமாக 10.8 மில்லியன் ரூபாய் *EPF* பணத்தொகையானது 7 தனியார் முதலீடுகளில் முதலிடப்பட்டுள்ளது. ஆனால் அவற்றில் ரூபாய் 9.3 மில்லியனுக்கு எந்தவிதமான வருமானமும் வழங்கப்படவில்லை.[32] மத்திய கிழக்கு நாடுகளுக்கும் எமது நாட்டு அரசாங்கத்தினருக்கும் இடையில் வெளிநாட்டு தொழிலாளார்கள் தொடர்பில் செய்து கொள்ளப்பட்ட இருதரப்பு ஒப்பந்தமானது தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பின்னர் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் அந்த நாட்டில் வேலை செய்யும் இலங்கையர்களின் உரிமைகள் அடங்கியிருப்பதால் அதனை பாதுகாக்க மக்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டியது அவசியமாகும்.[33]

மேலும் சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகளினால் மீறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள்[34] தொடர்பான தகவல்கள் மற்றும் முறையற்ற கட்டுமானங்களுக்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் வழங்கப்பட்டுள்ள அனுமதி தொடர்பான விடயங்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினால் சாதாரண மனிதர்களை சென்றடைந்துள்ளன.[35] தகவல் அறியும் உரிமைச்சட்டமானது பொது அதிகாரசபைகளின் தவறான நடத்தையை மட்டுமின்றி சரியான

32 ஊழியர் சேம நிதியத்திற்கு தனியார் மூலதன முதலீடுகளிலிருந்து எந்தவித பயனுமில்லை (*'EPF gets zero returns from majority of private equity investments')* டெய்லி மிரர் (6 பெப்ரவரி 2018) <*http://www.dailymirror.lk/article/EPF-gets-zero-returns-from-majority-of-private-equity-investments-145232.html*>.

33 பைஸல் சமாத் எதிர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புபணியகம் *RTIC/201/2017:* <*http://www.rticommission.lk/web/images/pdf/31032018/feizal--samath-revised-appeal.pdf*>.

34 <*https://www.colombotelegraph.com/index.php/shocking-discovery-under-rti-act-on-death-of-two-jaffna-students/*>.

35 தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஊடக அறிக்கை: <*http://www.rticommission.lk/web/images/mediareleases/media-statement-Eng-6th-Feb.pdf*>.

நடத்தைகளையும் மக்களை சென்றடைய வழிவகுத்துள்ளது. உதாரணமாக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு வந்த மேன்முறையீட்டின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தின் வெற்றிகரமான செயற்பாட்டால் 12, 186 முன்னால் விடுதலைப்புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 594 பேர் சிறுவர் இராணுவ சிப்பாய்கள்[36] என்ற விடயம் மக்களை சென்றடைந்துள்ளது. விண்ணப்பிக்கப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தும் போது அது பொது அதிகாரசபையின் மற்றும் அரசாங்கத்தினுடைய செயற்பாட்டுடன் தொடர்புபட்ட நலன் சார்ந்ததாக இருக்குமானால் அது பொது நலன் சார்ந்தது என கருதப்படலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.[37]

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் முடிவுகளில் இருந்து வரும் கொள்கைகள் அரசாங்கத்தால் பின்பற்றப்பட்டால் அது நல்லாட்சிக்கு மிகப் பெரிய பங்களிப்பை அளிப்பதாக இருக்கும். உதாரணமாக தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவானது சட்டமுன்வரைபின் உள்ளடக்கங்கள் பற்றி பொதுமக்களிடமிருந்து கருத்து பெறுவதற்கு அதனை மக்கள் முன்வைப்பதற்கான தேவையை வெளிப்படுத்தியுள்ளது.[38] இது சட்டத்தை உருவாக்கும் போது கருத்தொற்றுமைக்கு இட்டுச் செல்லும் நன்மையான செயல்முறையாகும். இது உண்மையில் ஒரு உலகலாவிய நடைமுறையாகும். மேலும் இது பல நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது.[39]

36 இலங்கை அரசாங்கம் 12000 முன்னாள் போராளிகளை மறுசீரமைப்பித்திருக்கின்றது (*Sri Lankan government rehabilitates over 12,000 LTTEs') The New Indian Express (22* ஜனவரி *2019) <http://www.newindianexpress.com/world/2018/jul/24/sri-lankan-government-rehabilitates-over-12000-lttes-1847949.html>*.

37 தரிந்து ஜயவர்தன எதிர் மறுசீரமைப்பு ஆணையாளர் நாயகததின் அலுவலகம் *RTICAppeal/119/2017 <http://www.rticommission.lk/web/images/pdf/comm-order-tharindu-jayawardena-v-rehab-comm.pdf>*.

38 கலாநிதி. மரியோ கோமெஸ் எதிர் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு *RTIC/51/2018 <http://www.rticommission.lk/web/images/pdf/10062018/mario-gomez-v-ministry-social-empowerment.pdf>*.

39 தரிந்து ஜயவர்தன எதிர் மறுசீரமைப்பு ஆணையாளர் நாயகததின் அலுவலகம் *RTICAppeal/119/2017 <http://www.rticommission.lk/web/images/pdf/comm-order-tharindu-jayawardena-v-rehab-comm.pdf>*.

அறிக்கையின் படி மேல்நீதிமன்றத்தில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் முடிவுகளுக்கு எதிராக 2018 ஆகஸ்ட் மாதம் வரை மக்களோ அல்லது பொது அதிகாரசபையினாலேயோ எந்தவொரு மீளாய்வு விண்ணப்பமும் செய்யப்படவில்லை. இது தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் முடிவுகளுடன் 100 வீதம் ஒத்துப்போகின்ற தன்மையை காணக்கூடியதாகவுள்ளது.[40] இது குறிப்பாக நிகழ்வுப் பெறுமதியான ஒரு அறிக்கையாகும். குறிப்பாக வளர்ச்சியடைந்த தகவல் அறியும் உரிமை நியாயாதிக்கத்தில் இந்த ஒத்துப்போகின்ற வீதம் காணப்படும் உதாரணம் இந்தியா.[41]

ஆணைக்குழுவில் நான் வேலை செய்த அனுபவத்தின் அடிப்டையில் நான் நம்புவது ஆணைக்குழுவின் முடிவுகளின் இணக்கவீதத்திற்கு பிரதான காரணம் நியாயமான சிறந்த தீர்ப்புக்களினூடாக முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆணைக்குழு தனது மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை பயன்படுத்தும் போது இரண்டு தரப்பினர்களையும் முழுமையாக விசாரிப்பதோடு தீர்மானங்கள் சட்டத்தின் கோட்பாடுகளுக்கு உட்பட்டதாக மட்டும் அமையவேண்டும் என தீர்மானிக்கலாம். பொதுமக்கள் நலன் மற்றும் தேசிய பாதுகாப்பு, தனியுரிமை, சட்டம் மற்றும் கட்டளைகள் போன்ற பல்வேறு விடயங்களையும் கவனத்திற்கொண்டு அவற்றையும் சமநிலைப்படுத்தும் வகையிலும் செயற்படுகின்றது. ஆகையினால் மக்களும் பொது அதிகாரசபையும் இது தகவல் அறியும் உரிமையின் மத்தியஸ்த ஆணைக்குழு என்பதை ஏற்றுக்கொண்டுள்ளமை வெளிப்படுகின்றது.

---

40 எனினும் 16.08.2018 அன்று மக்கள் வங்கி மேல்நீதிமன்றத்தில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிற்கெதிராக இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் எதிர்மக்கள் வங்கி RTIC/ 8/2018 தொடர்பில் மேன்முறையீடொன்றினை தாக்கல் செய்தது.

41 இந்திய தகவலுக்கான உரிமையின் மென் சாவு (*"How RTI Act is dying a slow death in India"),* இந்துஸ்தான் டைம்ஸ் மே *3 2018* <*https://www.hindustantimes.com/india-news/how-rti-is-dying-a-slow-death-in-india/storysTpdC63K7s42vxgV1bxwTI.html*>.

ஆகவே இலங்கையில் தகவல் அறியும் உரிமையின் இளமைப்பருவத்தில் மிகவும் சாதகமான காலம் என நம்பப்படும் ஒரு பெரும்பகுதிக்கு காரணம் ஆணைக்குழுவின் பணியாகும் என நான் நியாயமாக நம்புகின்றேன். எப்படியிருந்த போதிலும் சட்டத்தின் பிரிவுகளுக்கு இணங்கி தகவல்களை மறைக்காமல் தகவல்களை வெளியிட்ட பொது அதிகாரசபைகளுக்கும் இந்த பெருமை அல்லது பாராட்டு குறையாது. கடந்த இரண்டு வருடங்களில் அதிகளவான விண்ணப்பங்களை பெற்றுக்கொண்ட பொது அதிகாரசபைகள் விரைவாக தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது[42]. இது தேசிய எண்ணக்கருவுக்கு உட்பட்டு பிரஜைகளின் தகவல் அறியும் உரிமை என்ற எண்ணக்கருவை வெளிப்படுத்துவதில் பங்களிப்பு செய்துள்ளது.

இது இலங்கையில் பொதுத்துறையானது ஒரே இரவில் அலுவலக இரகசியத்தன்மை எனும் மூடிய பாதுகாப்பான வலயத்திலிருந்து வெளிப்படையான திறந்த போக்குத் தன்மைக்கு மாறுவதற்கான நடத்தையையும் மனநிலையையும் உருவாக்கியது என எண்ணத் தோன்றுகின்றது. அதனடிப்படையில் சட்டத்துடன் இணங்கிச்செல்லும் பொது அதிகாரசபைகளின் நேர்மறையான வெளிப்பாடுகள் உறுதியான தன்மையை வெளிப்படுத்துகின்றது. மேலும் நாட்டில் தகவல் அறியும் உரிமை நிறுவனமயமாக்கப்படுவதில் பொது அதிகாரசபைகளின் முக்கிய பங்களிப்பு தெளிவான பிரதிபலிப்பாக உள்ளது.

இருப்பினும் சட்டத்தை முறையாக அமுலாக்கம் செய்வதற்கு எல்லா பங்குதாரர்களும் ஒத்துழைப்பு செய்தால் மாத்திரமே முறையாக நிறுவனமயப்படுத்தப்பட்ட தகவல் அறியும் உரிமை முறைமையை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்து கொள்வது முக்கியமாகும். அரசியலமைப்புச் சட்டத்தின்

42 தகவலுக்கான உரிமைச் சட்டம் செவ்வனே அமுல்படுத்தப்பட்டுள்ளது ஆனால் மேலும் விழிப்புணர்வு தேவைப்படுகின்றது *"RTI implemented successfully – more awareness required: TISL", Daily FT,* 24 ஆகஸ்ட்இ *2018 <http://www.ft.lk/news/RTI-implemented-successfully--more-awareness-required--TISL/56-648841.>.*

அதிகாரம் 3 இன் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஏனைய எல்லா உரிமைகளையும் போன்றே தகவல் அறியும் உரிமையும் ஒரு பிரஜையின் அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமை என்பதை அடையாளப்படுத்துவதற்கு எல்லா பொது அமைப்புக்களும் மற்றும் பிரஜைகள், சிவில் சமூக அமைப்புக்கள் என்பன ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஒரு பொது அதிகாரசபையின் கட்டுப்பாட்டில் அல்லது பாராமரிப்பில் உடமையில் உள்ள தகவலை அணுக மறுக்கும் போது சட்டத்தின் பிரிவு 5 இன் கீழான வகைப்பாட்டுக்குள் உள்ளடங்குகின்றதா எனவும் பொது நலனைவிட மேலோங்கியதாக கூட அது இல்லை என்பதையும் கவனத்திற் கொள்ளவேண்டும். நீதித்துறையின் முக்கிய பங்களிப்பானது குறிப்பாக அரசின் பிரதம சட்ட ஆலோசகரான சட்டமா அதிபர் பொது அதிகார சபைகளின் தகவல் வெளிப்படுத்தும் பொறுப்பு தொடர்பிலான கடமையினை உணர்த்துவதில் பெரும் பங்காற்றுதல் வேண்டும்.

தகவல் அறியும் உரிமையின் அடிப்படை நெறிமுறையை பொதுத்துறை முழுமையாக புரிந்து கொள்ளவில்லை. அதாவது வெளிப்படுத்தல் என்பது விதியாக இருக்கின்ற போது வெளிப்படுத்தலை இல்லாமல் செய்வது விதிவிலக்காக உள்ளது.[43] போதுமான புரிதல் இல்லாமையால் அதிகளவான பொது அதிகாரிகள் சட்ட மீறல்களுடன் இணங்கிச் செல்வதாக தோன்றுகின்றது. பல சந்தர்ப்பங்களில் தகவல் அதிகாரிகள் கோரப்பட்ட தகவல்களை தவறாக பொருள்கோடல் செய்து அதனை பிரிவு 5 இன் கீழான அளவீட்டுக்குள் உள்ளடக்குவதோடு குறித்த தகவல்களை வழங்க மறுக்கின்றார்கள். அல்லது தகவலை வழங்க மறுப்பதற்கு தேவையற்ற காலத்தை எடுக்கின்றார்கள். எவ்வாறாயினும் பிரிவு 5 இன் கீழான வகைப்பாட்டுக்குள் வரும் தகவல் விண்ணப்பமாக இருந்தால் கூட பொதுநலன் சார்ந்த தகவலை வெளிப்படுத்துவதால் வரும் தீமையான விளைவைவிட

43 தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஊடக அறிக்கை: <*http://www.rticommission.lk/web/images/mediareleases/media-statement-Eng-6th-Feb.pdf*>.

மிக முக்கியமானதாக இருந்தால் குறித்த தகவல் விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியாது என சட்டம் கூறுகின்றது.[44] இது சட்டத்தின் மிகச் சிறந்த சாராம்சமாகும். இதனை இன்னும் சில பொது அதிகாரசபைகள் புரிந்து கொள்ளவில்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டமானது பொதுச் சேவைக்கு வெளியிலுள்ள தேவைகளை மாத்திரம் வெளிப்படுத்தும் ஒரு சட்டவாக்கம் அல்ல. அது பொது அதிகாரிகளின் தனிப்பட்ட நலன்களையும் பாதுகாக்கும் என்பதை பொது அதிகாரசபைகள் புரிந்து கொள்ளவேண்டும். உதாரணமாக ஒரு பொது அதிகாரசபையில் ஒரு பொது அதிகாரி அவரது பதவியுயர்வில் நியாயமற்ற வகையில் நடத்தப்பட்டால், இடமாற்றம் செய்யப்பட்டால், நீக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட பொது அதிகாரி குறித்த தீர்மானமானது எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது எனும் தகவலை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும். குறித்த தகலை சாதாரண முறைமையில் பெற்றுக்கொள்ள முடியாததாக இருக்கும். ஆகையால் பிரஜைகள் எல்லோருடைய நலனுக்காகவும் அவர்கள் பொது அதிகாரிகளோ அல்லது தனியார் அமைப்புக்களாகவோ இருந்தாலும் குறித்த சட்டம் முறையாக அமுலாக்கம் செய்யப்பட வேண்டும். தகவல் அறியும் உரிமையின் எண்ணமானது பொதுநிர்வாகத்தில் ஒரு மூலைக்கல் ஆகிவிட்டது.

2. தீர்வுகள் - கொள்கைகள், மூலோபாயங்கள், பயிற்சி, பொது சொற்பொழிவுகள்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமுலாக்கம் செய்யும் திட்டத்திற்கு வெளியில் அரசாங்க கொள்கைகள் இருப்பதனால் அதன் ஆதரவு தகவல் அறியும் சட்டத்திற்கு இல்லாதிருப்பது பிழை என நான் நம்புகின்றேன். சட்டத்தை வெறுமனனே உருவாக்குதல் மட்டும் போதாது. அது அரசாங்க கொள்கைகளால் ஆதரரிக்கப்படாவிட்டால் அதனை முழுமையான

44 பிரிவு 5 (4) தகவல் அறியும் உரிமைச் சட்டம்.

திட்டமாக கருத முடியாது. ஊடக அமைச்சினால் தகவல் அதிகாரிகளுக்கான பயிற்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. குறிப்பாக திட்டத்தின் இளமைப்பருவத்தில் அதிகளவான பயிற்சிகளும் பயிற்சிப்பாசறைகளும் செய்யப்பட வேண்டும். காரணம் ஒரு வளர்ச்சியடைந்த திட்டமாக இருக்க வேண்டுமானால் அதன் பரிணாம வளர்ச்சி முறையானதாக இருக்க வேண்டும். பயிற்சிகளானது தகவல் அதிகாரிகளுக்கானதாக மாத்திரம் மட்டுப்படுத்தாமல் அதனை நிறுவனங்களின் தலைவர்களுக்கென நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கும் நீடிக்கப்பட வேண்டும். பொது அதிகாரிகள் தகவல் அதிகாரிகளா அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகளா என்பதனை பொருட்படுத்தாமல் அவர்களுக்கும் இடைநிலைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். பெரும்பாலான பொது அதிகார சபைகளில் தகவல் அதிகாரிகள் கனிஸ்ட பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளாக உள்ளனர். அவர்களுக்கு போதுமான அதிகாரங்களோ அல்லது மேலதிகாரிகளை மேலோங்கி செயற்படும் தகமையோ இல்லாதவர்களாக உள்ளனர். இதன் விளைவாக பெரும்பாலான தகவல் அதிகாரிகள் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை குறித்த விண்ணப்பத்திலுள்ள விடயத்தை கையாளும் உயர் அதிகாரியிடம் குறித்த விண்ணப்பத்தை பரிந்துரை செய்துவிட்டு அவர்களின் முடிவுக்காக குறித்த விண்ணப்பத்தை ஒத்திவைக்கிறார்கள். ஆகையால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பயிற்சியும் அது பற்றிய கல்வியும் நிறுவனமட்டங்களில் இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும்.

பொது அதிகாரசபைகள் சட்டத்துடன் இணங்கிய வகையில் தகவல் அறியும் உரிமையிலுள்ள உள்ளூர் நிறுவன கொள்கைகளை ஏற்று பின்பற்ற வேண்டும். அத்தோடு சுற்றறிக்கைகளையும் வழிகாட்டுதல்களையும் வெளியிட வேண்டும். ஆகவே தகவல் அதிகாரிகள் வெளிப்புற ஆதாரங்களில் இருந்து மட்டுமல்லாமல் நிறுவனத்திற்குள் இருந்தும் தங்களது கடமைகளை திருத்தியமைக்க முடியும்.

தகவல் அறியும் உரிமை மற்றும் சட்டம் பற்றிய ஒரு வலுவான பொது சொற்பொழிவு செய்தி ஊடகங்களில் இருக்க வேண்டும். தகவல் அறியும் உரிமை மீதான வருந்ததக்க செய்தி மற்றும் ஊடக அறிக்கைகள் பங்குதாரர்களிடையே ஒரு தோற்றத்தை உருவாக்க போதுமானதல்ல. ஆணையகத்தின் உயர்ந்த கோரிக்கைகள் மற்றும் முடிவுகள் ஊடாக அனைத்து பங்குதாரரர்களிடையே தகவல் அறியும் உரிமை தொடர்பில் விழிப்புணர்வை உருவாக்குவதில் ஊடகங்களின் ஒருங்கிணைந்த தீவிரமான ஈடுபாடு தெளிவாக இல்லை. "திறைசேறி ஆணைக்குழுவின்"[45] விசாரணை நிலையான ஊடக அறிக்கையின் தாக்கத்தின் எடுத்துக்காட்டாகும். இதன் விளைவாக பாடசாலை மாணவர்களும் பிணைமுறி மோசடி பற்றி பேசுகின்றனர். இந்த அனுபவம் ஊடகங்களுக்கு மக்களிடையே விழிப்புணர்வையும் அவர்களின் மனப்போக்கையும் மாற்றும் திறன் உண்டு என்பதை காட்டுகின்றது. தகவல் அறியும் சட்டத்தின் பெறுமதி தொடர்பில் பங்குதாரர்களிடையே போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கடப்பாட்டிலிருந்து ஊடகங்கள் முற்றாக விலகி இருப்பது வருந்ததக்க விடயமாக உள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் திட்டத்திலிருந்து வரும் நலன்களில் பிரதானமாக தங்கியிருக்கும் பங்குதாரர் ஊடகமாகும். எனவே நன்கு திட்டமிடப்பட்ட மூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் தகவல் அறியும் உரிமையை ஊக்குவிக்ககூடிய ஒரு கூட்டு ஊடக பிரச்சாரம் இருக்க வேண்டும்.

நாடு என்ற முறையில் நாட்டின் சட்டத்தின் கீழான இரகசியம் என்ற நிலைப்பாட்டிலிருந்து பொதுச் செயல்கள் தொடர்பில் வெளிப்படையான தன்மை இருக்க வேண்டும் என்ற நிலைக்கு சட்டபூர்வமான மாற்றத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். இதனை தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவும் ஊடக அமைச்சும் தனியாக செய்ய முடியாது. இந்த நடவடிக்கைகளில் எல்லா பங்குதாரர்களும் ஈடுபட வேண்டும். சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள

45 2017 ல் இலங்கை மத்திய வங்கியில் விநியோகிக்கப்பட்ட திறைசேறி முறிகள் பற்றி விசாரிக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு.

பிரஜைகளின் தகவல் அறியும் உரிமையானது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள ஒரு நியாயமான உரிமை என்பதனை எல்லா பொதுத்துறையும் அறிந்து கொள்ளவேண்டும். இந்த சூழ்நிலையில் உச்ச நீதிமன்றமானது 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 14A இன் கீழ் வரையப்பட்டதால் பகுதியளவில் அரசியலமைப்புப் பாதுகாப்பு (*quasi-constitutional protection*) இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.[46] இந்த நிலையில் நீதி பரிபாலன அமைப்பின் வலிதாந்தன்மை முன்னேற்றுவிக்கப்படுகின்றது.

இறுதியில் ஒரு துடிப்பான மற்றும் முதிர்ந்த தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் திட்டத்தில் லிட்மஸ் சோதனை பிரஜைகள் மூலமான தனிப்பட்ட விண்ணப்பங்களின் தேவைகளை குறைப்பது பொது அதிகாரிகளின் செயற்றின் மிக்க வெளிப்படுத்தல் கடமையை பொறுத்து அவர்களின் இணக்கத்தின் அளவில் தங்கியிருக்கும். மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டமானது வெளிப்பாட்டிற்கான வழிகாட்டுதல்களை சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 9 இன் கீழ் வழங்கியுள்ளது.[47] மேலும் எவ்வளவு விரைவாக பொது அதிகாரிகள் அவற்றிற்கு இணங்கி செயற்படுகின்றார்கள் என்பதனை காத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

3. சிவில் சமூகமும் தகவல் அறியும் உரிமையும்.

நாட்டில் தகவல் அறியும் உரிமைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொதுத்துறையின் பங்களிப்பு மட்டுமல்லாது பிரஜைகளின் குறிப்பாக சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமாகும். தகவல் அறியும் உரிமையின் தீர்மானம் பொது அதிகாரிகளின் மீது கவனம் செலுத்துவதாக உள்ளது. பிரஜைகளின் பொறுப்பு என்ன? பிரஜைகள் தமது தகவல் அறியும் உரிமையை பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவது

46 இழப்பீட்டுக்கான அலுவலக வரைபின் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பக்கம் 7 பார்க்க *S.C.S.D. 19/2018 & S.C.S.D. 20/2018.*

47 <*http://www.rticommission.lk/web/index.php?option=com_content&view=article&id=21&Itemid=152&lang=en*>.

முக்கியமாகும். அதாவது சட்டத்தை அதன் நோக்கத்தின் அடிப்படையில் பொறுப்புள்ள விதத்தில் பயன்படுத்த வேண்டும். மாறாக அரசியல் நோக்கத்திற்காக அல்லது பொது அதிகாரசபை மீதுள்ள தனிப்பட்ட விரோதத்தை தீர்த்துக் கொள்வதற்கான ஆயுதமாக பயன்படுத்தக்கூடாது. சட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் குறிக்கோள் என்பன சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஊழல் அற்ற தகவல்களை மக்கள் அணுக அனுமதிப்பதன் மூலம் வெளிப்படையான தன்மை எனும் கலாசாரத்தை உருவாக்குவதும் அரச துறையில் பொறுப்புள்ள நல்லாட்சி அரசாங்கத்தை தோற்றுவிப்பதுமே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஆகையால் குறித்த குறிக்கோளை மேம்படுத்தும் வகையில் சட்டத்தை பயன்படுத்த வேண்டுமே தவிர பொருத்தமற்ற தனிப்பட்ட விடயம் தொடர்பில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு பயன்படுத்துவதற்கல்ல.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவானது முறையற்ற விண்ணப்பங்களில் தோன்றியுள்ளதனை ஏற்றுக் கொண்டது.[48] சட்டம் இயற்றப்பட்ட உடனேயே சிவில் சமூக அமைப்பிடமிருந்து வந்த விண்ணப்பத்தின்படி பத்திரிகை அறிக்கைகள் இருந்தன. அது தகவல் அறியும் உரிமையின் திட்டத்தை தாக்க கூடிய சாத்தியப்பாடுடையதாக இருந்தது. சில தகவல் அறியும் உரிமைச் செயற்பாட்டாளர்கள் பெறுமதிமிக்க இச்சட்டத்தை உருவாக்குவதற்கு முன்னரே முறையான சட்டத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு பதிலாக குறித்த கோரிக்கை விடுக்கப்படும் என்பதனை அவதானித்திருந்தார்கள்.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை முன்னேற்றுவதற்கு முரணாக உள்ள கோரிக்கைகளை எதிர்க்கின்றோம். காரணம் சட்டத்தை இயற்றிய சட்டவாக்குனர்கள் குறித்த சட்டத்திற்கு திருத்தங்களை கொண்டுவரக்கூடிய வகையிலும் குறித்த

48 தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஊடக அறிக்கை: <*http://www.rticommission.lk/web/images/mediareleases/media-statement-Eng-6th-Feb.pdf*>.

சட்டத்தை மாற்றியமைக்க கூடிய விதத்திலுமே குறித்த சட்டத்தை இயற்றியுள்ளார்கள். உதாரணமாக ட்ரம்ப் ஆட்சியின் கீழ் வெள்ளை மாளிகையின் அறிக்கையானது அமெரிக்காவின் தகவல் சுதந்திரச்சட்டமானது அதன் நோக்கத்திற்கு உட்பட்ட வகையில் அதன் விதிகள் மாற்றியமைக்கப்படலாம் என அறிவித்துள்ளது.[49] எங்களது சட்டவாக்குனர்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டமானது அரச அதிகார சபைகளுக்கு எதிரான ஆயுதமாக பயன்படுத்தப்படுகின்றன என்றோ அல்லது முரண்பாடுடையதாக பயன்படுத்தப்படுகின்றது என்றோ அவதானித்தால் அப்போது நாங்கள் குறித்த சட்டத்தினை இழக்க நேரிடும். இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சரவைக்கூட்டத்தில் ஊடகத்துறை அமைச்சர் குறித்த சட்டத்தை அமுல்படுத்துவதில் பொதுஅதிகாரசபைகளுக்கு ஏதும் சவால்கள் ஏற்படுமாக இருந்தால் அவசியம் ஏற்படின் குறித்த சட்டத்தை திருத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குமாறு கோரியிருந்தார். ஆனால் அரச தாபனங்கள் எதுவும் குறித்த சட்டத்தை திருத்துவதற்கான எந்தவொரு பரிந்துரைகளையும் செய்யவில்லை.[50] ஊழல் அற்ற சமூகத்தை அடைவதற்கு பெறுமதிமிக்க இச்சட்டம் அவசியம் என்பதோடு அதில் எந்ததவறும் இல்லை. ஆகையால் சட்டத்தை உள்ளவாறே பாதுகாக்க வேண்டுமானால் மக்கள் பொறுப்புள்ள விதத்தில் இச்சட்டத்தை பயன்படுத்த வேண்டுமே தவிர அதனை தவறாக பயன்படுத்தக்கூடாது. முரண்பாடான வகையில் சட்டத்தை பயன்படுத்துபவர்களுக்கு எதிராக தண்டணை வழங்குவது தொடர்பில் இச்சட்டம் எந்தவொரு ஏற்பாட்டையும் கொண்டிருக்காமை ஒரு துரதிஸ்டவசமான விடயமாகும்.

---

49 *'Explaining the White House FOIA rule repeal'(USA Today, 17 March 2015)* <*https://www.usatoday.com/story/news/nation-now/2015/03/17/white-house-office-of-administration-freedom-of-information-act-foia/24906463/*>.

50 தகவலுக்கான உரிமைச் சட்டத்தை மாற்றியமைக்க திட்டமில்லையென அரசாங்கம் உறுதி (*'Government Denies Moves To Amend RTI Act'*) 27 ஜூன் 2017 <*https://www.rti.gov.lk/media/news/144-government-denies-moves-to-amend-rti-act*>.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு உள்ள மற்றுமொரு தடை இது பின்னர் உருவாக்கப்படும் சட்டங்களால் குறைமதிப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றது. உதாரணமாக அண்மையில் உருவாக்கப்பட்ட 2018ம் ஆண்டின் 19ம் இலக்க தேசிய தணிக்கைகள் சட்டமானது தகவல் அறியும் சட்டத்தின் பிரிவு 9(1)(B) இரந்து விலக்களிக்கும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது. அதாவது ஒரு தகவலைப் பெறுவதாக இருந்தால் குறித்த தகவலை வழங்கிய அமைப்பினுடைய அல்லது பொருத்தமான நபருடைய எழுத்துமூலமான அனுமதி இன்றியும் கணக்காளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட குறித்த தகவலுடன் தொடர்புடைய அறிக்கை பாராளுமன்றத்தில் சமாப்பிக்கப்படும் வரையும் எந்தவொரு தகவலும் வெளிப்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. காரணம் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கும் குறித்த விடயம் தவறான நபர்களின் கைகளில் சென்றுவிடட்டால் குறித்த விசாரணை தாமதப்படுத்தப்படக் கூடும் என்பதனால் ஆகும். குறித்த சூழ்நிலைகளை வெளிப்படுத்துவதற்கு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 5 (1)(h)(i) ஐ பின்வருமாறு திருத்தியமைக்கலாம். அதாவது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிதி மற்றும் சிவில் விசாரணைகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படுதல் இச்சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்டுள்ளது என குறித்த பிரிவை திருத்தியமைக்கலாம். (தற்போது குறித்த பிரிவின் கீழ் குற்றவியல் விசாரணையுடன் தொடர்புடைய தகவல்கள் மாத்திரமே விலக்களிக்கப்பட்டுள்ளது.) தேசிய தணிக்கைகள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பரந்த விலக்களிப்புக்கு பதிலாக இதனை இலகுவாக கையாளமுடியும்.

4. தகவல் அறியும் உரிமை எதிர் தனியுரிமை

தகவல் அறியும் சட்டத்திற்கு மேலும் சவால் விடுக்கும் ஒரு சிக்கலான பிரச்சினை என்னவென்றால் இலங்கையில் தனியுரிமை தொடர்பில் தனியான சட்டம் இல்லாமை அல்லது அரசியலமைப்பில் குறித்த உரிமை உத்தரவாதப்படுத்தப்படாமையாகும். மேலும்

தரவுகளை பாதுகாக்கும் சட்டமும் இலங்கையில் இல்லை. எதிர்காலத்தில் தனியுரிமைச்சட்டமும் தரவுப்பாதுகாப்பு சட்டமும் இருந்தால் எதிர்காலத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தால் உருவாக்கப்படும் நியதிச்சட்டங்களின் சிக்கல்களை சமாளிக்க வேண்டிய அவசியமில்லை. அவற்றை தனியுரிமைச் சட்டமும் தரவுப் பாதுகாப்புச்சட்டமும் எதிர்கொள்ளும்.

இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் தகவல் அறியும் உரிமைச்சட்டமானது எல்லாவகையான பிரச்சினைகளுக்கும் தீர்வாகாது. ஒரு சக்தி வாய்ந்த ஜனநாயகமானது பொதுத்துறை நிறுவனங்களின் வெளிப்படைத்தன்மையை ஊக்குவிப்பதற்கு சிறந்த தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை மட்டுமின்றி வேறுவழிவகைகளையும் கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக சொத்துக்களை வெளிப்படுத்தி பிரகடனப்படுத்தும் சட்டமானது ஜனாதிபதி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பொதுத்துறை அதிகாரிகள் என்போர் தமது சொத்து விபரம் தொடர்பில் வெளிப்படுத்தல் பிரகடனத்தை செய்ய வேண்டும் என மாற்றியமைக்கப்பட வேண்டும். மேலும் இது அரசதுறையிலுள்ள உயர்மட்ட அதிகாரிகளுடன் மட்டுப்படுத்த வேண்டும். ஏனென்றால் எல்லா பொதுத்துறை அதிகாரிகளும் தமது சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் எனக்கூறுவது நியாயமற்ற ஒரு செயலாகும். தங்களை சாதாரண குடிமக்களாகக் கொண்ட பொது அதிகாரிகளுக்கு ஆயிரக்கணக்கான சட்டங்கள் உண்டு.. எனவே சட்டத்தின் முக்கியத்துவத்தின் கீழ் பொதுமக்களின் கண்காணிப்பின் கீழ் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை அமைப்பதன் மூலம் அவர்கள் நியாயமற்றவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்களில் ஊழல் சந்தேகம் அவர்களின் நடத்தையை ஆராய போதுமான சட்டங்கள் உள்ளன.

ஒரு துடிப்பான ஜனநாயகம் தனிப்பட்ட நபரின் தனியுரிமையுடன் தொடர்புடைய வெளிப்படையான தகவல்களை வெளிப்படுத்தும்

போது பொதுநலன்களை சமநிலையில் வைத்திருப்பதற்கான திறனைக் கொண்டிருக்க வேண்டும் என நான் முடிவு செய்கின்றேன். இரண்டு உரிமைகளான தனியுரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை என்பன ஒன்றுடன் ஒன்று சமமான உரிமையல்ல என நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். தகவல் வெளிப்பாட்டின் போது முக்கியமாக பொதுநலனுக்கு பிரதான இடம் கொடுக்கப்பட வேண்டும். தகவல் அறியும் உரிமை பிராதானமாக இருக்கும் போது தனியுரிமை விதிவிலக்காக இருக்கும்.

இலங்கையின் சட்ட ஆட்சியின் முக்கிய ஆதாரமாக தகவல் அறியும் உரிமை

தீபிகா உடகம

1. அறிமுகம்

2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் தகவல் உரிமைச் சட்டம் மற்றும் 2017ம் ஆண்டு பெப்ரவரி 3ம் திகதி அதனுடைய நடைமுறைப்படுத்தல் என்பன பிரஜைகளின் வாழ்வில் தகவல் உரிமை வாழ்வை மாற்றும் பாத்திரமாக செயற்பட இயலுமானதாக்கியுள்ளது. அதேவேளை ஜனநாயக அரசாங்கத்தை வளர்ச்சியடையச் செய்துள்ளது, இலஞ்ச ஊழலை எதிர்த்து இலங்கை மக்களின் இறைமையை மறுசீரமைப்பு செய்யும் ஒரு கருவியாகவும் செயற்படுகின்றது.

தகவல் உரிமையானது அரசாங்கத்தின் மூடப்பட்டிருக்கும் முக்காட்டை துளைக்கும் உரிமையை மக்களுக்கு வழங்கியுள்ளது. இதன்காரணமாக சட்ட ஆட்சியின் உள்ளடக்கத்தில் இந்த உரிமைக்கு குறிப்பிட்ட முக்கியத்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது. தகவல் உரிமையானது அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு பின்னால் உள்ள காரணத்தை அதாவது குறித்த தீர்மானம் ஏன் எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் மக்கள் அதிகம் அறிந்து கொள்வதற்கு இடமளித்துள்ளது. மேலும் தகவல் உரிமையானது வேறுபட்ட மட்டங்களில் உள்ள அரசாங்கத்தை சவாலுக்குட்படுத்த தகவலை பயன்படுத்துகின்றது. மேலும் பொது மக்களின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதை தடுக்கவும் பொது வளங்களை தவறாக பயன்படுத்துவதை தடுக்கவும் முயல்கின்றது.

குடியரசின் எல்லா அதிகாரங்களும் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமையானது அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தினை பயன்படுத்த

அவசியமானது. பொதுமக்கள் தேசிய, மாகாண மற்றும் உளளூ ராட்சிகளின் வரவுசெலவு திட்டம், அபிவிருத்திக்கான உத்திகள் மற்றும் தேசிய செயற்பாட்டு திட்டம், பன்னாட்டு நிறுவனங்களுடனான ஒப்பந்தம், உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான திட்டங்கள், அரசாங்க அமைச்சர்கள் திணைக்களங்கள் மற்றும் வேறு தாபனங்களுக்கான செலவுகள், கொள்முதலுக்கான தீர்மானங்கள், பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக்கான கொள்முதல் உட்பட, பொதுமக்களின் நெருக்கடிகளுக்கு பதிலளிப்பதற்காக எவ்வாறு பொதுவளங்கள் பயன்படுத்தப்படுகின்றன, பொதுமக்களின் வாழ்வில் தாக்கம் செலுத்தும் ஏனைய தீர்மானங்கள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கான உரிமையை கொண்டிருக்கின்றார்கள்.

எப்படியிருப்பினும், தேசிய பாதுகாப்பு, குற்றச்சாட்டுக்களுக்கெதிராக வழக்கு தொடுத்தல், தனியுரிமை அல்லது இராஜதந்திரம் என்று வரும்போது இரகசியத்தன்மை பொதுநலனை விட சில சந்தர்ப்பங்களில் குறித்த தகவலை பொதுமக்களிடமிருந்து தடுத்துவைக்கப்படுவது நியாயாப்படுத்தப்படக்கூடும். ஆனாலும்கூட, தகவலை வெளிப்படுத்துவதன் மூலம் பொதுநலன் மேலோங்கக்கூடும் என்பதற்கான சில சந்தர்ப்பங்களும் உள்ளன. இதன் பொருட்டே இலங்கையின் தகவல் உரிமைச்சட்டத்தின் பிரிவு 5(4) பொதுநலன் மேலோங்கும் என்ற அம்சத்தை உட்கொண்டுள்ளது. மேலும், பொதுவானதொரு விதி, பொதுத்தீர்மானங்கள் பொதுமக்களால் அணுகக்கூடியதாயிருக்க வேண்டும். அரிதான சில விதிவிலக்குகளில் மாத்திரம் தகவல் தடுத்துவைக்கப்பட வேண்டும்.

தெற்காசியா பல்வேறுபட்ட தகவல் உரிமைச்சட்டங்களை கொண்டுள்ளது. குறித்த சட்டங்களின் பலாபலன்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. இந்தியாவின் தகவல் உரிமைச் சட்டம் மக்களால் பயன்படுத்தப்படுவது பற்றி பின்னர் இதில் ஆராயப்படும். அண்மைக்காலமாக இச்சட்டம் பல சவால்களை சந்தித்துள்ளது.[51]

51 <*https://www.thehindu.com/news/cities/Hyderabad/secularism-at-risk-as-rti-act-weakens-says-aruna-roy/article23867597.ece*.>.

2014ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளில் ஆசிய அமைப்பினால் தகவலை அணுகுவதில் பிரஜைகளின் நிலை பற்றி தெருவோர நேர்முக கலந்துரையாடல், குழு ரீதியான கலந்துரையாடல் மற்றும் தகவல் உரிமை பற்றிய விண்ணப்பங்களை பூர்த்தி செய்தல் என்பன மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது[52].

குறித்த ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவு சுவாரஸ்யமானது. பொதுவாக, தகவல் உரிமைச்சட்டம் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வு போதாமை மற்றும் அதனுடன் தொடர்புடைய மக்களின் நாளாந்த வாழ்க்கை என்பன சான்றுகளாயிருந்தன. மொத்தமாக 263 தெருவோர நேர்முகதேர்வு நடாத்தப்பட்டது. ஆய்வில் 52 வீதமானோர் அரசாங்கத்தின் வேலைகளில் மிகவும் பொறுப்புள்ள தன்மையையும் பொறுப்புக்கூறும் தன்மையையும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற காரணத்தில் அவர்கள் தகவலை அணுக வேண்டியுள்ளதாக உணர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

தகவலை நாடுவதற்கு இரண்டாவது மிக முக்கிய காரணம் தனிப்பட்ட குறைபாடுகளை வெளிப்படுத்துவதற்காகவாகும் (45 வீதமானோர்). ஊழலை வெளிப்படுத்தல் என்பது பதிலளித்தவர்களால் அரசாங்கத்திடமிருந்து தகவலைப் பெற முயலுவதற்கு முன்வைக்கப்பட்ட மற்றுமொரு காரணமாகும்.

தகவல் உரிமைச்சட்டத்தை இயற்றுவதற்கான இலங்கையின் பயணமானது நீண்டகாலமானது என்பதுடன் மிகவும் சிக்கலுக்குரியதாகும். 2016ம் ஆண்டு யூன் மாதம் 23ம் திகதி, இலங்கையின் பாராளுமன்றத்தால் 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டு பிரஜைகளின் அடிப்படைத் தகவல் உரிமைச்சட்டத்திற்கு அர்த்தம் வழங்கப்பட்டது. தகவல் உரிமைச்சட்டமானது பிரஜைகளுக்கு எந்தவொரு புதிய உரிமையையும் வழங்கவில்லை. அது 2015ம் ஆண்டின் 19வது

52 *<https://asiafoundation.org/resources/pdfs/CitizensAccesstoInformationinSouthAsia.pdf>*.

அரசியலமைப்பு திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட அணுகுதலுக்கான உரிமையை பயன்படுத்துவதற்கான நடபடிமுறைகளை மாத்திரம் வழங்குகின்றது.

2017ம் ஆண்டு பெப்ரவரி 3ம் திகதி இலங்கை அரசாங்கமானது வர்த்தமானியில் தகவல் உரிமைச்சட்டத்தின் கீழாக விதிகள் மற்றும் ஒழுங்கமைப்புக்களை வெளியிட்டது. இதன் விளைவு, இலங்கைக்கு ஏற்கனவே கனடாவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சட்டம் மற்றும் ஜனநாயகத்திற்கான அமைப்பினால் உலகலாவிய ரீதியில் தகவலைப் பேணுவது தொடர்பில் வழங்கப்பட்டுள்ள 150க்கு 121 புள்ளிகளுடன் மேலும் 10 புள்ளிகள் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவால் தகவல் உரிமையை கவனத்திற்கொள்வதில் இலங்கை ஒரு பலமான சட்ட வரையறையை பெற்றுள்ளது.

2. நடைமுறையில் தகவல் உரிமைச்சட்டம் மீதான சில அவதானிப்புக்கள்.

சட்டத்தின் நோக்கமாக கூறப்பட்டுள்ளது என்னவெனில், தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு பயன்கொடுப்பதன் மூலம் பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பயன்பாட்டைப் பேணிவளர்த்து அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக முழுமையாக பங்கேற்கக் கூடியதும் நாட்டின் பொதுவாழ்வில் தீவிரமாகப் பங்கேற்க கூடியதுமாகவிருக்கும் ஒரு தேவைப்பாட்டு உள்ளது என்பதாகும்.

தகவல் உரிமைச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவானது தன்முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்கதான உயர்ந்தளவு எண்ணிக்கையிலான மேன்முறையீடுகளை பதிவு செய்துள்ளது. பெரும்பாலான வழக்குகளில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த

மேன்முறையீடுகளில் பெரும்பாலானவை சாதாரண பிரஜைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தவையாகும். ஆணைக்குழுவின் படி தகவல் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டதன் விளைவை ஊடகங்களை விட சாதாரண மக்களே அதிகம் அனுபவிக்கின்றனர்.

அண்மைய பேட்டி ஒன்றில், சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திலிருந்து இலங்கை பெருமளவானவற்றை அடைந்துள்ளது என இலங்கையின் தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளரான சட்டத்தரணி கிஷாலி பின்ரோ ஜயவர்தன அவர்கள் குறிப்பிட்டுள்ளார்[53]. தகவல் உரிமைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து முதல் ஆறுமாதங்களில் தகவலுக்கான கோரிக்கைகள் சாதாரண மக்களால் பகிரங்க அதிகாரசபைக்கும் மற்றும் தகவல் உரிமைக்கான ஆணைக்குழு ஆகிய இரண்டிற்கும் பல்வேறுவகைப்பட்ட மற்றும் அதிகளவு எண்ணிக்கையிலானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன என் மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். தகவல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அல்லது தகவல் விண்ணப்பங்களின் தன்மை மற்றும் தரம் என்பவற்றை மதிப்பீடு செய்கின்ற போது தகவல் உரிமை பொதுத்தாக்கத்தை ஏற்படுத்தவில்லையாயின் அத்தகைய ஒரு கோரிக்கை எழுந்திருக்கவோ அல்லது நீடிக்கவோ முடியாது.

சட்டத்தரணி கிஷாலி பின்ரோ ஜயவர்தன அவர்களின் கூற்றின்படி. பெரும்பாலான விண்ணப்பங்கள் தலைநகரிலிருந்தோ அல்லது பெரிய நகரங்களிலிருந்தோ மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் மாத்தறை, ஹம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் பொலநறுவை போன்ற தூர இடங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. ''கிராமப்புறங்களில் உள்ள மக்கள் இச்சட்டத்தை பற்றி நன்கு தெரிந்து வைத்துள்ளார்கள். அவர்கள் இச்சட்டத்தை பற்றியும் அதனுடைய ஒழுங்கு விதிகள் பற்றியும்

53 *<https://www.rti.gov.lk/media/news/152-sri-lanka-s-right-to-information-act-is-a-weapon-of-the-people-op-ed-interview-with-commissioner-right-to-information-commission-of-sri-lanka-attorney-at-law-kishali-pinto-jayawardena>.*

நன்கறிந்திருக்கிறார்கள். அவர்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக தங்கள் கருத்துக்களை செவ்வனே தெரிவிக்கின்றார்கள்[54].

இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில் தகவல் உரிமைச்சட்டம் எல்லா வகையான தகவல்களையும் அணுகுவதற்கான ஏற்பாட்டை வழங்கவில்லை. சட்டத்தின் பிரிவு 5 ஆனது தகவலை வெளிப்படுத்துவதற்கான விதிவிலக்குகளை கொண்டுள்ளது. எவ்வாறாயினும் குறித்த தகவலை வெளியிடுவதில் உருவாகும் தீங்கை விட பொதுநலன் மேலோங்கி நிற்குமானால் சட்டத்தின் பரிவு 5(4) இன் கீழ் குறித்த தகவல் வெளியிடப்படமுடியும்.

தகவல் உரிமை படிப்படியாக வளர்ச்சியடைவதற்கு மற்றைய அம்சங்களும் மிக முக்கியமானவையாகும். உதாரணமாக அவரால் சுட்டிக்காட்டப்பட்டது என்னவெனில் பிரிவு 5(1)(ஓ) இல் தகவல் வெளியிடப்படுவதை மறுக்கும் விதிவிலக்குகளில் பாராளுமன்றத்தின் அதிகாரம், சிறப்புரிமைகள் மற்றும் நடைமுறைகள் என்பனவும் உள்ளடங்கும். இது இச் சிறப்புரிமை கண்மூடித்தனமாக பிரயோகிக்கப்படும் என்று பொருள் கொள்ளப்படமுடியாது என ஆணைக்குழு சந்தேகத்திற்கிடமற்ற ஒரு நிலையை எடுத்துக் கொண்டுள்ளது. பிரிவு 5(4) இன் நோக்கத்தை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பொதுநலனானது தகவலை வெளியிடுவதா இல்லையா என்பதனை தீர்மானிப்பதில் முதன்மையானது.[55]

மாகாணசபையால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில் பத்திரிகை நிரூபர் ஒருவரால் கோரப்பட்ட தகவலை சிறப்புரிமை அடிப்படையில் வழங்க மறுத்தமை தொடர்பான மேன்முறையீடு ஆணைக்குழுவின் முன் வந்த போது இந்த கொள்கையானது விளக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட தகவல் தொடர்பான விண்ணப்பங்கள் அங்கிருக்கவில்லை. ஆனாலும் குறித்த மாகாணசபையானது சிறப்புரிமையை காரணங்காட்டி தகவல் கோரிக்கையை மறுத்திருந்தது.

54 மேற்குறிப்பிட்டதிலுள்ளது.

55 மேற்குறிப்பிட்டதிலுள்ளது.

குறித்த நிராகரிப்பை தொடர்ந்து, ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. நிகழ்வுகளை ஆராய்ந்து பின்னர் குறித்த தகவல் வெளியிடப்பட வேண்டும் அது சிறப்புரிமை என்பதன் கீழ் பொதுநலன் மறுக்கப்படுகின்றமைக்கு சான்றாக அமைந்துள்ளது என ஆணைக்குழு கண்டறிந்து குறித்த நியமனங்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பன பொதுநிதியை பயன்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையால் பொதுமக்கள் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமைகளை கொண்டுள்ளார்கள் என ஆணைக்குழு தீர்மானித்தது[56].

இன்னுமொரு நிகழ்வு, அமைச்சர்களின் வெளிநாட்டுப்பயணம் தொடர்பான தகவல்களை சிறப்புரிமை என்ற அடிப்டையின் கீழ் பாதுகாக்க முயற்சிக்கப்பட்டுள்ளது. இங்கும் ஆணைக்குழு தீர்மானித்ததாவது, பொதுநிதி பயன்படுத்தப்படும் போது தகவலை அணுகுதலுக்கான உரிமையானது சிறப்புரிமை என்ற அடிப்படையை பயன்படுத்தி மறுக்கப்படமுடியாது. மாகாணசபையானது கோரப்பட்ட தகவலை வெளியிடுவதன் மூலம் தனது அலுவலக நடைமுறைக்கு எவ்வாறு எதிர்மறையான விளைவு ஏற்படும் என்பதனை விபரிக்கவேண்டும்.[57] 2018ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவானது வெளிநாட்டில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் தொடர்பில் சவூதி அரேபியா, கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட இருதரப்பு உடன்படிக்கை தொடர்பான தகவலை குறித்த நாடுகளில் வேலை செய்யும் இலங்கை பிரஜைகளின் உரிமையை பாதுகாக்கும் பொருட்டு பொதுநலன் கருதி வெளியிடுமாறு உத்தரவிட்டது.[58]

இந்த உதாரணங்களிலிருந்து பொதுநலன் கருதி பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் தகவல் கோரிக்கையானது

56 மேற்குறிப்பிட்டதிலுள்ளது.

57 மேற்குறிப்பிட்டதிலுள்ளது.

58 *<http://www.rticommission.lk/web/images/pdf/31032018/feizal--samath-revised-appeal.pdf>*.

பரந்தளவு வித்தியாசமானது என்பது தெளிவாகின்றது. பொதுவாக பிரஜைகள் தகவல் உரிமைச்சட்டத்தை ஒரு பயனுள்ள கருவியாக பயன்படுத்தியிருக்கின்றார்கள். ஒரு வகையில் பிரஜைகள் சட்டத்தினை தனிப்பட்ட நிலையில் பயன்படுத்தியுள்ளார்கள். மற்றொருவகையில் பொதுநலன் மற்றும் பொதுஅக்கறை என்ற அடிப்படையில் பலர் பயன்படுத்துகின்றனர்.[59] ஆணைக்குழு தனது தீர்மானங்களை வெளிப்படுத்தும் போது பிரிவு 5(4) இல் சொல்லப்பட்டுள்ள பொதுநலன் மேலோங்கும் என்ற விடயத்தை நல்ல பயனுள்ள வகையில் பயன்படுத்துவது ஒரு சான்றாக அமைந்துள்ளது.

3. பிராந்திய எல்லைக்குள் தகவல் உரிமைச்சட்டத்தின் பயன்பாடு

இந்தியாவின் 2005ம் ஆண்டு தகவல் உரிமைச்சட்டமானது ஒரு ஜனநாயக கருவியாகும். அது இந்திய அரசாங்கத்துடன் ஒரு பொதுமகன் உறவைப் பேண அதிகாரமளித்திருந்தது. ''இந்திய அரசியலமைப்பின் 19வது உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள தகவலுக்கான உரிமையை பயனுள்ளதாக்குவதற்கான பயனுள்ள ஒரு கட்டமைப்பை வழங்குவது'' என்பது மத்திய சட்டவாகக் சபையின் இலட்சிய சாசனம் முன்னுரையில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

1923ம் ஆண்டின் அலுவலக இரகசிய சட்டமானது இரகசியமானது என்ற அடிப்படையில் பல ஆவணங்களை மக்கள் அணுகுவதை அரசாங்கம் தடை செய்வதற்கு அனுமதியளித்திருந்தது. 60 வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு அலுவலக நடைமுறை மீது காலணித்துவமரபு நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னரும் கூட அத்தாக்கம் இருந்தது. 2005ம் அண்டு யூன் மாதம் 15ந் திகதி

59 *<https://www.rti.gov.lk/media/news/152-sri-lanka-s-right-to-information-act-is-a-weapon-of-the-people-op-ed-interview-with-commissioner-right-to-information-commission-of-sri-lanka-attorney-at-law-kishali-pinto-jayawardena>.*

தகவல் உரிமைக்கான சட்டத்தின் தோற்றம் 1923ம் ஆண்டின் அலுவலக இரகசிய சட்டத்தின் அநேகமான பிரிவுகளை விட மேலோங்கியுள்ளதோடு பகிரங்க அதிகாரசபைக்கும் பொதுமனிதனுக்கும் இடையிலான உறவை மாற்றியமைத்துள்ளது.

உதாரணமாக பகிரங்கசேவையில் தொழில் புரியும் மக்களுக்கான நியதிச்சட்ட ரீதியான குறைந்தபட்ச கொடுப்பனவை ஊதியமாக பெறுவது அவ்வாறான சவால்களில் ஒன்றாகும். *Mazdoor Kisan Shakthi* எனபது தொழிலாளர் மற்றும் விவசாயிகளை ஊக்கவிக்கும் ஒரு அமைப்பாகும். அதன் அலுவலக பதிவுகளுக்கிடையில் வெளிப்படுத்தப்படாத பல முரண்பாடுகள் இருந்தன. தகவல் உரிமைச்சட்டத்தினூடாக இறந்த நபர்களுடைய பெயர்களும் தொழிலாளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்ததோடு ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வேலை செய்வதாக பதியப்பட்டுள்ளதென்றும் உடல் உழைப்பால் வேலைசெய்யாதவர்களும் உடல் உழைப்பாளர்கள் என பட்டியலிடப்பட்டுள்ளனர் என்ற உண்மை வெளிவந்தது.

இந்தியாவில் தகவல் உரிமைச்சட்டம் இயற்றப்பட்டு 13 ஆண்டுகளாகியிருக்கின்றது. அதன் முக்கியத்துவமும் அதன் விளைவும் தெளிவாக உள்ளது. இதற்கு சிறந்ததொரு உதாரணம் 2G மோசடியாகும். அது 2011ம் ஆண்டில் மிகப்பெரிய தொலைத்தொடர்பு மோசடியுடன் தொடர்புடையது. ஆண்டிமுத்து ராஜா தலைமமையிலான தொலைத்தொடர்பு அமைச்சு கைத்தொலைபேசிகளுக்கான அலைவரிசை ஒதுக்கீட்டு உரிமங்கள் இலஞ்சம் வாங்கி வழங்கப்பட்டமையால் இந்திய அரசாங்கத்திற்கு சுமார் ரூபா 176, 645 கோடி நட்டம் ஏற்பட்டது. இந்த விடயம் தொடர்பில் தகவல் உரிமைச்சட்டமானது ஒரு முக்கிய பங்காற்றியுள்ளது. ஏனெனில் காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கத்தில் எவ்வாறு மோசடி பரவியுள்ளது என்பதனை வெளிக்காட்ட இது உதவியுள்ளது[60].

60 *<http://www.facenfacts.com/NewsDetails/10204/if-not-for-rti-2g-action-taken-would-be-a-secret.htm>.*

தகவல் உரிமையை பயன்படுத்துவதில் பொதுநலன் என்பது ஒரு மையப்புள்ளியாகும். அரசால் அல்லது அதனுடைய முகவரால் கொள்கைகள் கட்டமைக்கப்பட்டு அதனுடைய நடைமுறைப்படுத்தல் பொதுநலனுக்கு முரணாக அமையும் போது அல்லது அரசியலமைப்பின் கொள்கைகளை மீறும் போது அது தெளிவாகின்றது. நியதிச்சட்ட ரீதியான அல்லது நீதிமன்றங்களின் கடமை இந்த விடயங்களை விசாரணை செய்து பெருமளவில் பொதுநலனை நிலைநிறுத்துதலாகும்[61].

இன்னுமொரு உதாரணம் தகவல் உரிமைச்சட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டு மாதங்களின் பின்னர் இந்தியாவின் செஞ்சிலுவைச்சங்கத்தினால் பணம் வீணாக்கப்பட்டதுடன் தொடர்புடையதாய் வந்த விண்ணப்பம். இதன் பொருட்டு கார்கில் போர் நிவாரணத்துக்காக இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஒதுக்கிய பணத்தை நியதிச்சட்ட அமைப்பான இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் பொதுஅதிகாரிகள் எவ்வாறு மோசடி செய்தார்கள் என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

பத்து ஆண்டுகளுக்கு பிறகு கூட தகவல் உரிமை விண்ணப்பங்களை கையாலும் அலுவலரிமிருந்து ஒரு பதிலை பெறுவது எவ்வளவு கடினமானது என்பதனை மேற்குறிய விண்ணப்பத்தை செய்த ஹிட்டென்டர் ஜெயின் நினைவுபடுத்தினார். மாவட்ட நிர்வாகத்திடமிருந்து வந்த அழுத்தம் தகவல் தொடர்பில் இல்லாததால் ஜெயின் அதனை வழங்க மறுத்துவிட்டார்[62]. சட்டமானது ஒரு மாதத்தில் தகவல் வழங்கப்பட வேண்டும் என தேவைப்படுத்தியிருந்த போதும் ஜெயினின் விண்ணப்பம் முதல் விண்ணப்பமாக இருந்ததால் தந்திரமாக 19 மாதங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனாலும் அவர் தனது

---

61 *<https://www.huffingtonpost.in/2015/10/12/5-most-critical-scams-exp_n_8263302.html>.*

62 *<https://www.huffingtonpost.in/2015/10/12/5-most-critical-scams-exp_n_8263302.html>.*

திறமைகளை பரிட்சிப்பதற்கு கிட்டத்தட்ட 4,522 பக்கங்களை கொண்ட அரசாங்க ஆவணத்தை நோக்க வேண்டியிருந்தது.

இதுபோன்ற வெற்றிக்கமைவான பல கதைகள் உள்ளன. இன்னுமொரு சம்பவம் கம்பனிகளுக்கு நிலக்கரி சுரங்கத்தை ஒதுக்கீடு செய்வதில் புரியப்பட்ட மோசடி தொடர்பான குற்றச்சாட்டுடன் தொடர்புடையது. 2004 – 2009ம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அரசாங்கம் 194 தொகுதி நிலக்கரி சுரங்கத்தை உண்மையான விலையை விட குறைந்த விலைக்கு பல்வேறுபட்ட தனியார் மற்றும் பொதுகம்பனிகளுக்கு ஒதுக்கியது. பொதுவாக குறித்த ஒதுக்கீட்டு முறைக்கென ஒரு நடைமுறையுள்ளது. அதாவது முதலில் குறித்த கம்பனிகளிடமிருந்து குத்தகை கோரப்படும். பின்னர் ஏலம் நடைபெறுவதனூடாக கூடிய விலையுள்ள கொள்வனவாளருக்கு நிலக்கரி சுரங்கம் ஒதுக்கப்படும். மேற்கூறப்பட்ட நடபடிமுறைகளுக்கு மாறாக அரசாங்கம் மிகப்பெரிய கம்பனிகளான *Jindal Group, Essar Group, Laxmi Mittal* போன்றவற்றால் வழங்கப்பட்ட இலஞ்சத்தின் அடிப்படையில் நிலக்கரி சுரங்கத்தை குறித்த கம்பனிகளுக்கு விற்பனை செய்தது. இதன்காரணமாக கம்பனிகளின் வருமானம் அதிகரித்த வேளையில் அரசாங்கம் ரூபா 1.86 இலட்சம் கோடி வருமானவரியை இழந்துள்ளது.

தகவல் உரிமையுடனான இந்தியாவின் பல வெற்றிகரமான சம்பவங்கள் இருப்பினும் அண்மைக்கால சவால்கள் குறித்துக்காட்டப்பட வேண்டியுள்ளது. தெற்காசியாவின் ஏனைய பகுதிகளில் அறிவதற்கான உரிமையுடன் பரவரலாக அறியப்படாத வகையில் அனுபவங்கள் கலந்துள்ளன. பங்களாதேஷில் தகவல் உரிமைச் சட்டத்திலுள்ள குறிப்பிட்ட விதிவிலக்குகளை பொதுவாக மேலோங்கும் விடயமாக பொதுநலன் மேலோங்குதல் அமைந்துள்ளது. வேறுவகையில் கூறுவதாயின் தகவலை வெளியிட மறுப்பதற்கு சட்டத்தின் கீழ் மட்டுப்பாடுகள் என்ன இருப்பினும் பொதுநலனுடன் தொடர்புடையதாயிருந்தால் பகிரங்க அதிகாரசபையானது பிரஜைகளுக்கு தகவலை வழங்க மறுக்க

முடியாது. அத்தகைய வெளிப்பாட்டின் ஆரம்பமாக இருப்பது குறித்த தகவலை வெளியிடுவதால் உருவாகும் தீங்கை விட பொதுநலன் என்பது மேலோங்கியிருத்தலாகும். ஆனால் இது பங்களாதேஷில் உள்ள சட்டம் போன்றதல்ல.

பங்களாதேஷில் சில குறைபாடுகள் உள்ள போதும் சிவில் சமூக அமைப்புக்கள், கல்வித்துறையினர், தனிநபர்கள், நிபுணர்கள் மற்றும் பங்களாதேஷில் சர்வதேச அபிவிருத்திப்பங்காளர்கள் போன்றோர் 2009ம் ஆண்டின் தகவல் உரிமைச்சட்டத்தை வரவேற்றுள்ளனர். மேலும் ஜனநாயகத்தை வலுப்படுத்தி வெளிப்படுத்தலை தாபித்து அரசாங்க செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான ஒரு வாய்ப்பாகவே இதனை பார்க்கின்றனர். ஏனெனில் தகவல் உரிமைச் சட்டம் மாத்திரமே பங்களாதேஷிலுள்ள ஒரேயொரு சட்டமாகும். அதனுடைய நோக்கம் தகவல்களை வழங்குவதனூடாக பொதுமக்களுக்கு அதிகாரமளித்தலாகும்.

நேபாளத்தில் தகவல் உரிமைச்சட்டமானது 2007ம் ஆண்டின் இடைக்கால அரசியலமைப்பு, 2007ம் ஆண்டின் தகவல் உரிமைச் சட்டம், 2009ம் ஆண்டின் தகவல் உரிமைக்கான ஒழுங்கு விதிகள் மற்றும் தகவல் உரிமைச்சட்டத்தின் உறுப்புரை 27 இற்கு அமைய உருவாக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கான குழு மூலம் வெளியிடப்படும் வகைப்படுத்தலுக்கான வழிகாட்டுதல்கள் என்பன மூலம் ஆளப்படுகின்றது. இந்த ஏற்பாடுகளுக்கு அப்பால் பல எண்ணிக்கையிலான வேறு நியதிச்சட்டங்களும் தகவலுக்கான உரிமையை ஒழுங்குபடுத்துகின்றன.

2007ம் ஆண்டின் இடைக்கால அரசியலமைப்பின் உறுப்புரை 27 அனது தகவலுக்கான உரிமையை ஒரு அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தியுள்ளது. அது பிரஜைகள் தமக்கு தேவையெனக்கருதும் தகவல்களை பெறுவதற்கான அல்லது கோருவதற்கான உரிமையை வழங்குகின்றது. அது சட்டத்தால் பாதுகாக்கப்படும் தகவல்களை வழங்க கட்டாயப்படுத்தவில்லை.

2007ம் ஆண்டின் தகவல் உரிமைச்சட்டத்தின் பிரிவு 3 மற்றும் 30 ஆனது பொதுமக்களுக்கு முக்கியமான மற்றும் தனிநபர்களுக்கு தேவையான தகவல்களை பெறுவதற்கான உரிமையை நேபாள பிரஜைகள் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கின்றது. மேலும் இச்சட்டமானது பிரிவு 27 மற்றும் 28 ஆகிய பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான வேறான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. மனித உரிமைப் பயன்பாட்டாளர்கள் மிகவும் பயனுள்ள வகையில் இச்சட்டத்தை பயன்படுத்தியுள்ளனர்.

இன்னுமொரு நிகழ்வு, அரசியலமைப்பு உருவாக்கத்தில் வெளிப்படைத்தன்மையை பேணுவதில் மக்கள் தமது உரிமையை பயன்படுத்த தகவல் உரிமைச்சட்டம் வெற்றிகரமாக செயற்பட்டுள்ளது. நேபாளம் 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ந் திகதி தனது முதலாவது அரசியலமைப்பு ரீதியான சபைக்கான தேர்தலை நடாத்தியிருந்தது. இரண்டு ஆண்டுகளில் ஒரு புதிய அரசியலமைப்பை பிரகடனப்படுத்துவதற்கு நியதிச்சட்ட ரீதியாக அதனுடைய 601 உறுப்பினர்கள் தேவைப்பட்டனர். அதனை செய்ய அது தவறிய போது 2012ம் ஆண்டு மே மாதம் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை தொடர்ந்து இறுதியாக அது தீர்த்துவைக்கப்படும் வரை அரசியலமைப்பு சபையின் கால எல்லை பல்வேறு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டுள்ளது.

4. முடிவுரை

இந்த விரிவான மதிப்பீடானது தகவலுக்கான உரிமையின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு காட்டி அதனுடைய முழுப்பாவனையையும் உறுதி செய்வதற்கு சரியான சட்டம் ஒரு நாட்டில் தேவை என்பதனையும் காட்டுகின்றது. அதேநேரம் குறிப்பாக சமூக செல்வாக்கு அதாவது தனியார் அமைப்புக்கள், கூட்டுறவு அலுவலகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள், மக்களின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள்

போன்றோர் உரிமை பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றனர் என்பது நினைவில் வைத்துக்கொள்ளவேண்டிய ஒன்றாகும். மேலும் சட்டம் சரியான இடத்தில் முறையான நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமின்றி, பிரஜைகள் அறிந்துகொள்வதற்கான உரிமையானது இலஞ்ச ஊழலை குறைப்பதற்கு உதவுவதோடு பொதுமக்களின் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையும் தடுக்கின்றது. பொதுஅதிகாரம் பொதுமக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். தகவலுக்கான உரிமையானது பொதுஅதிகாரம் மற்றும் வளங்கள் பயன்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்கான உரிமையை வழங்குகின்றது. இவற்றுக்கெல்லாம் அப்பால் தகவலுக்கான அதிகார எல்லையானது பிரஜைகள் சாதாரணமாக குறித்த விளைவை அடைந்துள்ளார்களா அல்லது இல்லையா என்பதனை பொருட்படுத்தாமல் அவர்கள் பொதுமுடிவுகளைப்பற்றி தெரிந்து கொள்ள இயலுமானதாக்குகின்றது.

தகவலுக்கான உரிமைச்சட்டமானது கருத்துருவான நிலைக்கு ஆளுமைத்தன்மையை மாற்றியமைக்கின்றது தகவலை வெளியிடுதலானது அரசாங்கத்தின் விருப்பத்தில் தங்கியிருக்கவில்லை. பொது உறுப்பினர்களின் தகவலை கோருவதற்காக கொண்டுள்ள உரிமைக்கு பதிலாக அனேக சட்டஅமைப்புக்கள் முன்னெச்சரிக்கையாக அவ்வப்போது தகவலை வெளியிடுமாறு அரசாங்கத்தை தேவைப்படுத்துகின்றது.

தேசிய பாதுகாப்பு விதிவிலக்கானது தகவல் உரிமைச்சட்டத்தின் மிகவும் போட்டித்தன்மையான விதிவிலக்காகும். அனேகமான ஆட்சி எல்லைகள் பொதுதகவலை அணுகுவதற்கான அனுமதிக்கு பொதுவான பிரிவுகளை கொண்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு நலனுக்கு ஆபத்து ஏற்படும் தகவலாயிருப்பின் குறித்த தகவலை நிராகரிக்க முடியும். இந்த விதிவிலக்கு நடைமுறையில் எவ்வாறு செயற்படுகின்றது என்பது அரசாங்கத்தின் நியாயமான

நலன் மற்றும் பொதுமக்களின் அறிந்துகொள்வதற்கான உரிமை ஆகியவற்றிற்கிடையே பொருத்தமான சமநிலை உள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதில் முக்கியமானது ஆகும். ஒருபுறம் தகவலை அணுகுதலானது அரசாங்கத்தின் துஷ்லபிரயோகத்தை தடுக்கவும் இலஞ்ச ஊழலை குறைக்கவும் முடியும். மற்றொருவகையில் இராஜதந்திரம், புலனாய்வு சேகரிப்பு இராணுவ நடவடிக்கைகளில் இரகசியத்தன்மை என்பன தேவையாயுள்ளது. இரண்டிற்கும் இடையே சமநிலையை நிறுத்தி வேறுபாட்டை வழங்குவது ஒரு சவாலான விடயமாகும்.

தெற்காசியாவில் தேசிய பாதுகாப்பு பல்வேறு வகையான மனித உரிமை மீறல்களை நிறைவேற்றுவதற்கானதும் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கானதுமான ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகின்றது. அது தகவலை அணுகுவதனை தடுப்பதற்கு அதேமுறையில் பயன்படுத்தப்படமுடியாது. அது பொதுமக்களின் இராச்சியத்தில் தங்கியிருக்கும்.

இந்த எல்லா அம்சங்களிலும், இலங்கையில் தகவல் உரிமையின் அனுபவங்களும் தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவின் முயற்சிகளும் சாதகமாயுள்ளன. நாட்டினதும் அதன் மக்களினதும் நலன்களில் இந்த நேர்மறையான போக்குகள் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை அரச பொது சேவையின் மூடிமறைக்கும் போக்கு

சுசில் சிரிவர்தன

1. முன்னுரை

இலங்கை அரச பொது சேவையின் அடிப்படை பண்பாகவே மூடிமறைக்கும் கலாசாரம் காணப்படுகின்றது என்றால் தவறாகாது. ஆனால் இது 2016ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமை பிரச்சாரத்தின் மூலம் பெருமளவில் தகர்க்கப்பட்டது. இந்த மூடிமறைக்கும் கலாச்சாரம் முடிவுறுவதற்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தது சிவில் அமைப்புக்களின் பாரிய முறைப்பாடுகளும் பல தசாப்பதங்களாக இந்த மூடிமறைக்கும் கலாசாரத்தின் குறைபாடுகளுமாகும். 2016ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட இச்சட்டத்தின் வாயிலாக இக்கலாச்சாரம் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இந்த கட்டுரை இலங்கையின் அரச பொது சேவையின் மூடிமறைக்கும் கலாசாரம் தொடர்பான ஒரு பிரதிபலிப்பாகும்.

2. தனிப்பட்ட அனுபவங்கள்

இதை வலுப்படுத்துவதற்காக நான் மூன்று தனிப்பட்ட அனுபவங்களை எடுத்துக்காட்ட விளைகின்றேன். நான் இலங்கை நிர்வாக சேவையில் 1965 ஆம் ஆண்டு இணைந்ததில் இருந்து இன்று வரை நடந்தேறிய அனுபவங்களே இவை.

எனது முதலாவது அனுபவமானது தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுடன் அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட தீர்வு விவசாயமுறை தொடர்பான தொடர்ச்சியான கலந்துரையாடல் ஆகும். எல்லா மாவட்டங்களும் பெருமளவில் கருத்தில் கொள்ளப்பட்டு கூடிய

நேரமும் செலவிடப்பட்டது. தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சியின் மூலம் இது மேற்கொள்ளப்பட்டது. இவ்வாராய்ச்சியின் போது இளைஞர்கள் மற்றும் திட்ட ஊழியர்களின் பங்களிப்புடன் நீண்ட நேர்முக உரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு அதில் கடந்தகால, தற்போதய மற்றும் எதிர்காலம் தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட்டது. இளைஞர்கள் அரச ஊழியர்களை குறை கூறுவது மிகவும் பொதுவாக இருந்தது. இங்கு நோக்கப்பட வேண்டியது பரஸ்பர முரண்பாடுகள் அல்ல ஆனால் மனப்பாங்கும் அனுகுமுறைகளும் ஆகும். அதாவது அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை பெரும்பாலும் முற்றாக மறுப்பதனால் பல பதற்றமான சூழ்நிலைகள் உருவாவதுடன் அதை தீர்ப்பதற்கு நானே பொறுப்பேற்க வேண்டியும் இருந்தது. இங்கு நம்பகத்தன்மை மிகவும் முக்கியமானது. இது நம்பிக்கை மற்றும் சமூக ஒப்பந்தம் சம்பந்தப்பட்டிருந்தது.

இரண்டாவது அனுபவம் மிகவும் தனிப்பட்டதும் நயவஞ்சகமானதுமாக இருந்தது. நான் அரசாங்க மூலோபாய திட்டத் துறையின் தலைவராக இருந்தேன். வளர்ச்சி நிர்வாகத்தில் இரண்டு நடைமுறைகளை நான் உறுதியாக நம்பினேன். நிறுவனத்தின் பரிமானமல்ல உறுதியான தலைமைத்துவும் உற்சாகமான ஆக்கபூர்வமுள்ள திறமையும் தான் முக்கியம் என்று உணர்ந்தேன். ஒவ்வொரு பணிக்கும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் போது அவர்களின் திறமை அப்பணிக்கு உகந்ததா என்பதில் மிகவும் கவனமாக இருந்தேன். நான் எப்போதும் முழுமையான திறமையையும் அர்ப்பணிப்பும் உள்ள ஊழியர்களுடனேயே பணி புரிந்தேன். ஒவ்வொரு தீர்மானமும் எல்லோருடனும் கலந்தாலோசித்தே எடுக்கப்பட்டது. நம்பிக்கை மிகவும் முக்கியமாக இருந்தது இதனால் ஒவ்வொரு வெற்றிடம் வரும் போதும் அதற்கு தகுந்த அதிகாரியை தெரிவு செய்வதற்கு காலம் தேவைப்பட்டது. நான் நம்பியது யாதெனில் சிறந்த தகுதியுடயவர்கள்

இருக்க வேண்டியது மாவட்ட மட்டத்தில் ஏனெனில் பல பிரச்சினைகள் எழுவது அங்கேதான். இதன் அனுமானம் யாதெனில் இதனூடாக மத்தி தானக மேம்படும் என்பதே ஆகும்

ஒரு நாள் என்னால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நான் கோபம் அடைந்தேன். இதற்கு காரணம் எனக்கு கீழ் ஊழியர் பதவியில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் என்னுடைய மறுத்தலின் பின்பும் அமைச்சரால் என்னுடைய பதில் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். குறித்த அதிகாரி நியமிக்கப்படுவதை நான் மறுத்ததற்கு காரணம் அவருக்கு அப்பதவிக்கு தேவையான தகுதிகள் இருக்கவில்லை என்பதே. நான் மறுப்பதற்கான காரணம் தெரிந்திருந்த போதிலும் அமைச்சரின் சிபாரிசின் பெயரிலும் சிலபல உட்பூசல் நிகழ்வுகளினாலும் இந்த தீர்மானம் இரகசியமாக நடந்தேறியது.

இறுதியான அனுபவம் யாதெனில் நான் ஒரு அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகராக பணிபுரியுமாறு தொலைபேசியின் மூலம் அழைக்கப்பட்டேன். நான் ஓய்வு பெற்று இருபது வருடம் கடந்திருந்தாலும் மரியாதைக்காக நான் அதை ஏற்றுக்கொண்டேன். நான் மீண்டும் அரச சேவைக்கு திரும்பிய போது அடுத்தடுத்து எனது பிரத்தியேகமான உத்தியோக அறை மாற்றப்பட்டது. ஒரு கட்டத்தில் எனக்கு வழங்கப்பட்ட உத்தியோக அறை எனது பதவிக்கு பொருத்தமற்றது என்பதை புரிந்து கொண்டேன். நான் போதிய காரணங்களுடன் முறைப்பாடு மேற்கொண்ட போதும் ஐந்து மாதங்களாக முடிவுக்கு கொண்டு வரப்படாமல் இரகசிய நடவடிக்கைகள் திரைக்கு பின்னால் நடைபெற்றன. சிரேஷ்ட முகாமைத்துவம் இது பற்றி என்னிடம் எதுவும் கலந்துரையாடவில்லை. இது மிகவும் வியப்பாக இருந்தது. இது கலந்துரையாடலின் மூலம் மிக இலகுவாக தீர்த்திருக்ககூடிய ஒன்று. ஏனெனில் அனைவரும் முன்பே நன்கு தெரிந்தவர்கள். இறுதியாக என்னை மீண்டும் இடம் மாற கட்டாயம் செய்ததால் நான் தன்னிச்சையாக ஓய்வு பெற்றேன்.

நான் இரு தசாப்தங்களுக்கு பின் பொது சேவையில் இணைந்த போது நிறுவன மற்றும் நிர்வாக கலாசாரத்தில் காணப்பட்ட மாற்றமானது மிகவும் பெரிது. இன்றைய கலாசாரமானது எவ்வித கலந்துரையாடலும் அற்ற ஒருவரின் கட்டுப்பாட்டு பெட்டிக்குள் இயங்குவதை போன்றது. இந்த இரகசிய கலாசாரம் இன்று பெரிதும் கடைப்பிடிக்கப்படுவதுடன், இதனை தடுக்க வேண்டிய உயர் அதிகாரிகளும் பாராமுகமாக இருப்பது தான் இன்றைய நல்லாட்சி அரசாங்கத்தின் கலாசாரம் ஆகும். இதை நல்லாட்சி என பெருமிதம் கொள்கின்றனர்!

3. பொதுவான தவறுகள்

இந்த இரகசிய கலாசாரம் உருவாவதற்கான முக்கிய காரணங்கள் தொடர்பாக ஆராய்வது மிகவும் பயனுள்ளதாகும். இக்காரணங்களை இனங்காணுதல் தகவல் அறியும் உரிமை தொடர்பான வளர்ச்சிக்கு வித்திடும். மேலும், தகவலறியும் உரிமையின் சொந்தக்காரர்களான மக்களுக்கும், இத்துறையில் பணி புரிவோருக்கு அவர்களின் பங்கு தொடர்பாக சிறந்த முறையில் விளக்கமளிக்கவும் உந்து சக்தியாக அமையும்.

அதிகளவான அரசியல் மயமாக்கல் மற்றும் அதிகாரத்துவத்தினைக் கொண்டு பிரஜைகளின் பங்காற்றலை குறைவடையச் செய்வதே இவற்றுள் முதல் காரணமாகும். மக்களின் இறையாண்மை அதிகாரமும் செல்வமும் நிறைந்த அரசால் மறுக்கப்படுகிறது. இதில் இருந்து தெளிவாக விளங்குவது யாதெனில் அரசியலமைப்பு நித்தம் நிராகரிக்கப்படுவதே ஆகும். நன்கு அறியப்பட்ட சிவில் சமூகம் - அரசு - சந்தை/ தனியார்த்துறை எனும் முக்கோணத்தில், சிவில் சமூகத்தின் பங்கு மிகவும் துன்பகரமானது. அரசின் மேலாதிக்கமும் அதன் விசுவாசிகளும், அரசியல்வாதிகளும், அதிகாரத்துவவாதிகளும் இக் கலாசாரத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இரண்டாவது தவறு யாதெனில் தேசிய கட்டமைப்பு தொடர்பான அமைப்பு முறையும் ஏனைய முக்கியமான பாரிய செயல்முறைகளும் ஆகும். எமது தேசிய கட்டுமானத்தில் காணப்படும் குறைபாடு இதற்கு முக்கியமாக வழிகோலுகின்றது. எங்களுடைய நாட்டின் விடுதலைக்கான செயற்பாட்டை முன்னெடுக்கும் காலப்பகுதியில் நாம் நிறுவிய அஸ்திவாரம் ஒரு நாட்டின் ஒருமித்த விடுதலையை விட இன ரீதியான செயற்பாடாகவே அதிகம் இருந்தது. காந்தியும் நேருவும் இந்தியாவை கட்டியெழுப்பும் போது நாாங்கள் இனப்பிரச்சினைக்கு வழிக்கோலியுள்ளோம். இது தேசிய சுதந்திரத்தை மூலபாய இலக்காகக் கொண்டு துருவமுனைப்பு இன அரசியல்வாதம் உருவாகியது. இதுதான் 28 வருட இன யுத்தத்திற்கு வித்திட்டது. நாங்கள் நாமாகவே விரும்பி எம்மை பிரித்துக்கொண்டோம். ஏனைய இனப்பிரிவினர்களை நாம் எதிரியாகக் காண நேரிட்டது. யுத்தத்திற்குப் பின் நாம் எமது முட்டாள் தனத்தை உணர்ந்தாலும் பரப்பபட்ட இந்த இனவெறி என்ற வைரஸ் இப்போதும் செறிந்து காணப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை. இதுவே கண்டி(2018) மற்றும் பேருவலையில் (2016) நடந்த சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களுக்கு அடிப்படையாகும்.

மூன்றாவது தவறு யாதெனில் சமூகவியல் ரீதியான நோக்கில் ஆரோக்கியமான அரசால் ஆளப்படும் சமூகம் மற்றும் அதிகமாக அரசியல்மயப்படுத்தப்பட்ட அரசால் ஆளப்படும் சமூகத்திற்கும் இடையிலான வேறுபாடு. எமது சமூகத்தை 1920 இல் இருந்து இன்றுவரை இரண்டு கட்டங்களாக பிரித்து நோக்கலாம். இந்த வேறுபாடு மிகவும் சிறப்பாக தெளிவுப்படுத்துவது கீழ்க்காணும் சில மூல அம்சங்களால் ஆகும். முதலாவது 1920 இலிருந்து 1950 வரை எமது சமுகம் ஆரோக்கியமாகவும் ஜனநாயக ரீதியிலும் ஆளப்பட்டது. இதன் பிரதான அம்சமாக அரசியல் சமூக மற்றும் பொருளாதார தூண்கள் ஆரோக்கியமானதாகவும் ஜனநாயக ரீதியிலும் வழிநடத்தப்பட்டது. இதன் விளைவாக சமூக மற்றும் அரசியல் பொறியியலை தரமான நிலைகளாலும் மதீப்பீடுகளாலும்

வழி நடத்த உதவியாக இருந்தது. உயர்மட்டத்திலே அபிப்பிராயங்களுக்கும் இடமிருந்தது. (உதாரணமாக Bracegirdle மற்றும் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ் அனுபவங்கள்) பொது நிர்வாகம் தனிமனித விருப்புகளுக்கு அப்பால்பட்டு மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது. சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் நிரந்தர அரசியல் உறுதிப்படுத்தப்பட்டது. அரசசபை ஊடாக உருவாக்கப்பட்ட சட்டங்கள் ஒதுக்கப்பட்ட மக்கள் சார்பாக இருந்ததுடன் இவை நிலம் மற்றும் தீர்வுக் கொள்கை, உள்ளுராட்சி, பொதுவேலைகள், போக்குவரத்து, விவசாயம், உணவு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக அமைந்தது. அது காலணித்துவ ஆட்சியில் அடிமைப்பட்ட மக்களுக்கு புத்துணர்ச்சி அளித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக காலணித்துவ ஆட்சியில் மறுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் மக்களுக்கு வழங்கப்பட்டது மேலும் ஒரு வளர்ச்சிப்படியாக அமைந்தது.

இதற்கு மாறாக சிங்களம் மட்டும், 1950 இற்கு பின் ஏற்பட்ட இனக்கலவரங்கள் மற்றும் அதிகளவிலான அரசியமயமாக்கலடைந்த 1972 அரசியலமைப்பு போன்றவை வேறு விதமான சமூகத்திற்கு அடிக்கல் இட்டது. காலணித்துவத்தின் தாக்கத்தை நீக்குவதற்காக கொண்டுவரப்பட்ட கொள்கைகளும் திட்டங்களும் சரியாக அமுல்படுத்தப்படாததாலும் அவற்றின் பொருத்தமின்மையாலும் பாரிய பொருளாதார நட்டங்களும் அரசியல்வாதிகளின் அபகரிப்புக்களும் ஏற்பட்டன. ஒருபக்கத்தில் யுத்தசெயற்பாடுகளும் மறுப்பக்கத்தில் ஆரோக்கியமான நிர்வாக சேவைகளும் கைவிடப்பட்டது. இவை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் அவற்றின் தாக்கம் மிகக்குறைவாகவே இருந்தது. இந்த கட்டுப்படுத்தப்படாத செய்முறைகளால் தான் ஆரோக்கியமான அரசைக் கொண்டு நடத்துவதற்கு இடையூறாக இருந்தது. எனவே இந்த அசமந்தப் போக்குதான் அரச நிறுவனங்களின் இரகசிய போக்கிற்கு வித்திட்டது.

எனவே இந்த அசமந்த நிர்வாக முறைமையே இலங்கையை கடந்த 50-60 ஆண்டுகளாக ஆண்டு வருகிறது. இது பல பாரிய

மாற்றங்களை இலங்கை சமூகத்தில் உருவாக்கியுள்ளது. இதன் பாரிய விளைவுகளால் சிறந்த மற்றும் உயர்தரத்திற்கு உறுதுணையாக இருந்து பங்காற்றும் மனித இயல்பு அழிக்கப்பட்டது. இலங்கையில் முன்பு காணப்பட்ட மனிதாபிமானம் மிக்க முன்மாதிரியான செயற்பாடுகள் மற்றும் நபர்கள் தற்போதைய காலகட்டத்தில காண்பது மிகவும் அரிதாகிவிட்டது. உதாரணத்திற்கு நோக்கின் மத்திய பாடசாலைகள் மற்றும் பழைய தனியார் பாடசாலைகளும் உள்ள அதிபர்களின் தரம் மூலம் புலப்படுகிறது. ஒவ்வொருவரும் பெரும் முன்மாதிரியாக இருந்தார்கள். ஆனால் தற்போது இலங்கையில் தார்மீகமிக்க மனிதர்தளால் மக்கள் ஆளப்படுகிறார்களா என்பது பாரிய கேள்விக்குறியே.

அடிப்படையான குறைப்பாடுகள் பற்றிய இச்சிறிய விளக்கத்திற்கு பின் நாம் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு மீள் பரிசீலனை செய்து பொறுப்புள்ள இலங்கையை உருவாக்க தகவலறியும் உரிமையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

4. சூழவமைப்புகளை மாற்றுதல்

இந்த கட்டுரையை முடிக்க பொதுவான மற்றும் பாரிய வகையான Ecosystem எனும் கருப்பொருளை உயிராக்க விளைகின்றேன். எமது பார்வையில் தகவல் பெறும் உரிமையானது ஒரு மூலோபாய ஆயுதம் ஆகும். இந்த இரண்டு வருடங்களுக்கும் குறைந்த காலப்பகுதியில் அடைந்துள்ள வெற்றி மிகவும் பாராட்டத்தக்கது. தகவல் பெறும் இந்த உரிமையானது நியாயமான மற்றும் ஒழுக்கமான மறுசீரமைப்பு ஊடகமாக திகழ்வதுடன் சிவில் சமூகத்தின் நடத்தை ஆட்சியில் உயர்வதற்கும் இது முக்கிய ஊடகமாக திகழ்கிறது.

தகவல் பெறும் இந்த உரிமையானது ஒரு செயற் திறன் மிக்க உத்வேக சக்தியாக இருப்பதுடன் இது மக்களுக்கு

அதிகாரம் அளிக்கும் செயற்பாடாக உள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. 2015 மற்றும் வணக்கத்திற்குரிய சோபித தேரர் அவர்களின் இயக்கமானது இதன் ஆரம்ப உதாரணங்களாகும். எனவே தகவல் பெறும் உரிமையானது அதற்கான வரலாற்றை உறுதிப்படுத்துவது தெளிவாகின்றது.

நேர்மையான பத்திரிக்கையாளர்களுக்கான தகவல் உரிமைக்கான சட்டம்

சின்கா ரட்ணதுங்க

1. ஆரம்பக் கருத்துக்கள்

இளம் பத்திரிக்கையாளர்களுக்கு, மூத்த பத்திரிக்கையாளர்கள் எவ்வாறு அவர்களது காலத்தில் உத்தியோகபூர்வ செய்திகளை சிறு துணுக்குகளிலிருந்து கண்டறிந்தார்கள் என்ற கதைகளை கேட்பதை விட எரிச்சலூட்டுவது வேறொன்றும் இருக்க முடியாது.

இன்றைய இளைஞர்களுக்கு இவை "கோப்பி கால்ம" என்ற ஒன்றரை சகாப்தத்திற்கு முன்னரான காலப்பகுதியின் கதைகளே. ஆனால் மூத்தோர்களுக்கு தன் சகாக்கள், முன்னாள் சகாக்களுடனான நினைவுகளை மீட்டு பார்க்க இக்கதைகள் உறுதுணையாக உள்ளன. அவர்கள் எவ்வாறு சிறப்பான யுக்திகளை கையாண்டு இரகசியம் பேண சட்டத்தின் முன் உறுதியெடுத்த அரச ஊழியர்களிடமிருந்து இரகசியமான, வகைப்படுத்தப்பட்ட செய்திகளை பெற்றுக்கொண்டனர் எனக் கூறுவர்.

அவ்வாறாக சேகரிக்கப்பட்ட சில கதைகள் பழம்பெரும் தன்மையானவை. அவற்றிலொன்றே, நிருபர் ஒருவர் மூத்த அரசாங்க அதிகாரியின் (ஏற்கனவே குவிக்கப்பட்ட அதிகாரபூர்வமான கோப்புகள் குவிந்த) மேசைக்கு அவரை காண செல்லும் போது, தன் கோப்புகளை வைத்து விட்டு மீண்டும் அவைகளை எடுத்து செல்லுகையில் தன் கோப்புகளுடன் சேர்த்து மேலதிகமாக இன்னும் வேறு சில கோப்புக்களையும் மூத்த அதிகாரியின் மேசையிலிருந்து எடுத்து செல்கிறார். அவர் மறுநாளே தவறுதலாக இடம்பெற்றதென குறிப்பிட்டு அக்கோப்புக்களை மீள கையளித்தல் அரசாங்க தகவல்களை பெறும் அவரின் முறையாகும்.

நிதி அமைச்சரினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மந்தமான கடிதங்கள், அவ்வமைச்சின் எழுத்தர்களால் கசியவிடப்பட்டதும் தகவல் பெற்றுக்கொள்ளும் வழியாக காணப்பட்டது. இங்கு எழுதுவினைஞர் கைப்பற்றிய கடிதம் நிரு-பரிடம் வழங்கப்பட்ட போதிலும் அவ்விருவருக்கும் அக்கடிதத்தின் மொழி அந்நியமானதால் அதன் முக்கியத்துவத்தை அறிய முடியவில்லை ஆயினும் கடிதத்தில் பொறிக்கப்பட்ட முத்திரை மூலம் அது இரகசியமானது என அறிந்து கொள்ள முடிந்தது. இங்கு கடிதமானது கொழும்பு கோட்டையில் வைத்து எழு-துவினைஞரால் நிருபரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இதழாசிரியரிடம் நிருபரினால் ஒப்படைக்கப்பட்டது. இவ் இரகசியம் கசிந்த போது அமைச்சர் ஜனாதிபதியையே சந்தேகித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக கடந்த சகாப்தத்தில் தகவல் பெறப்பட்டிருப்பினும் இன்றைய நிருபர்களுக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் நேரடியாக தகவலை கோர கூடியதாக உள்ளமை சிறப்பானதே. இவ்வுரிமையின் மூலம் அரசாங்கம் அல்லது பகிரங்க ஆணைக்குழுக்கள் மறைக்க முயலும் இரகசிய தகவல்களை வெளிக்கொணர்ந்து ஊடகவியலாளர்கள் தங்களது வேலையை இலகுபடுத்த முடிகிறது. ஆனால் தகவல் அறியும் சட்டம் கொண்டு வரப்பட்டு ஒரு வருட காலப்பகுதியின் பின்னரும் மிகச் சில ஊடகவியலாளர்கள் மட்டுமே இதுவரை காலமாக மறைக்கப்பட்டு வந்த கண்டுபிடிக்கப்படாத விடயங்களை கண்டறிய இச்சட்டத்தை பயன்படுத்தியுள்ளனர்.

கடும் போராட்டங்களுக்கு கிடைத்த கூலியே இந்த தகவல் அறியும் சட்ட மூலம் என்பதை பல இளம் ஊடகவியலாளர்கள் உணர்வதில்லை. சிலர் நினைப்பது போல இது சாதாரணமாக நடந்தேறிய விடயமல்ல என்பதே உண்மை.

2. தகவலறியும் உரிமைச் சட்டத்திற்கான பிரச்சாரம்

இரு தசாப்பதங்களிற்கு முன்னர் இதழாசிரியர் மற்றும் பதிப்பாளர் மீதான தொடர்ச்சியான குற்றவியல் அவதூறு பிரச்சாரத்தின் பின் அரசாங்கத்திற்கு எதிராக ஊடகங்கள் அணிதிரண்ட போது பதிப்பாளர், இதழாசிரியர், ஆர்வலர்களால் சுதந்திர தகவல் சட்டமானது கோரப்பட்டது ஆனால் அதற்கான அதிகாரபூர்வமான கோரிக்கையானது 1998ஆம் ஆண்டின் ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்பு மீதான கொழும்பு பிரகடனம் ஊடாகவே கொண்டு வரப்பட்டது.

இச்சட்டமானது 2004ஆம் ஆண்டிலே ஊடகங்களுடன் நட்புறவு கொண்ட அரசாங்கத்தினால் பத்திரிக்கையாளர் சமூகத்தின் பங்களிப்புடன் வரையப்பட்டு அமைச்சரவையும் இச்சட்ட வரைபினை அங்கீகரித்தது ஆனால் இச்சட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையால் முழு செயன்முறையும் கைவிடப்பட்டது இல்லாவிடில் இவ்வாறானதொரு முற்போக்கான சட்டத்தை உருவாக்கியதன் மூலம் ஜனநாயக உலகின் பிற நாடுகளுக்கு எடுத்து காட்டாக இலங்கை திகழ்ந்திருக்கவும் இம்முயற்சியை மேற்கொண்ட முதல் தெற்காசிய நாடாக இருந்திருக்கவும் முடியும்.

இச்சட்டதை அதில் ஆர்வம் கொண்ட தரப்பினர் அவர்களது நன்னோக்கிற்காக விரும்பவுமில்லை, ஒரு வேளை அப்போதே அது வெளிக்கொணரப்பட்டிருந்தால் இன்று ஜனாதி-பதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையிலும் நீதிமன்றங்கள் முன்னிலையிலும் கட்டவிழும் ஊழல் ஒப்பந்தங்கள் எல்லாம் அன்றே வெளிப்பட்டிருக்குமோ என்னவோ.

பொதுமக்கள் ஒரு தசாப்த காலமாக கிளர்ச்சிகளை மேற்கொண்டு அரசியல் தலைமைத்துவத்தினை கட்டாயப்படுத்தியே

சுதந்திர தகவல் சட்ட வரைபின் வாரிசான தகவல் அறியும் உரிமை சட்டத்தை கொண்டு வந்தனர் இவ் இடைக்காலத்திலே தகவலுக்கான சுதந்திரமானது பிரஜைகளின் ஒரு உரிமையாக விருத்தியாகி தகவல் அறியும் உரிமை சட்டத்திற்கு வித்திட்டது. அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாம் திருத்தச் சட்டத்தினூடாக அரசியலமைப்பு அந்தஸ்தை பெற்றிருந்தாலும் அதில் பல குழறுபடிகள் இருந்தமையை மறுக்கமுடியாது.

இலங்கையில் தகவல் அறியும் உரிமை சட்டத்தை கொண்டு வருவதற்கான போராட்டமானது ஊடக துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் எம் அயல் நாடான இந்தியாவிலே இந்நிலை முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. இந்திய நாட்டின் மாநிலமொன்றான ராஜஸ்தானிலுள்ள கிராம புறங்களின் அடிமட்ட செயற்பாடுகளினால் இவ்வுரிமைக்கான கோரல் ஆரம்பிக்கப்பட்டு பிற மாநிலங்களின் வாயிலாக தலைநகரான புது டில்லிக்கும் பாராளுமன்றத்திற்கும் செல்ல கூடிய நிலையும் காணப்பட்டது.

சாதாரணமாக இடம்பெறும் வீதிபோராட்டங்கள், உண்ணாவிரத போராட்டங்கள், பொது கூட்டங்கள் பேரில் இந்திய நாட்டிலே தன்னார்வ குழுக்களால் மற்றும் ஒன்று திரட்டப்பட்ட விவசாயிகளும் தொழிலாளர்களும் ஈடுபட்டு இச்சட்டத்தை கோரிய போதும் இந்திய அரசியல்வாதிகள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதிகளிலிருந்து பின்வாங்கி தகவல் அறிதலை நிர்வாக கட்டளை மூலம் கொண்டுவர முயன்றனர். இருப்பினும் இந்திய நாட்டின் ஆர்வலர்கள் இவை எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

“இந்திய தகவல் அறியும் உரிமையின் தாய்” என அழைக்கப்படும் அருனா ரோய் என்ற எழுத்தாளர் இந்திய நாட்டின் தகவல் அறியும் உரிமையை பற்றி *‘The RTI Story – Power to the People’* என்ற தனது நூலில் “தகவல் அறிதலானது சாதாரண மக்களுக்கு சக்தியை வழங்குவதுடன்

அவர்களின் பங்களிப்புடன் நவீன இந்தியாவின் ஜனநாயக நீதியின் தூண்களை வலுப்படுத்த தனது பங்களிப்பினை வழங்கி வருகிறது." என கூறியுள்ளார்.

மேற்கூறிய விடயங்களினூடாக பார்க்கையில் இந்தியாவிலே சட்ட பிரச்சாரம் தொடர்பாக அடிமட்டத்திலிருந்தும் கருத்து கேட்கப்படும் அதேவேளை இலங்கையில் வெறு-மனே கொழும்பை மையமாக கொண்டு சட்டபிரச்சாரங்கள் உருவாகிறது என கூறலாம். இதனாலேயே இலங்கையின் சட்டப்பிரச்சாரங்களின் பெறுமதி குறைவாக உணரப்படுவதுடன் அதன் பரவலும் குறைவாக உள்ளது. குடியியல் சமூக குழுக்கள் கிராமபுறங்களிற்கு சட்டத்தை கொண்டு செல்ல முயற்சி செய்த போதிலும் அதிகாரப்பூர்வ தகவலை பெறும் உரிமையின் புதிய வாய்ப்பை பெறுவதற்கு விரைவாக இருந்தவர்கள் பெருநிறுவனங்களை தமது கட்சிக்காரராக கொண்ட வழக்கறிஞர்களே. அதே சமயம் பகிரங்க அதி-காரசபைகள் தாம் பாதுகாக்க விரும்பும் தகவல்களை பாதுகாக்கவும் வழக்கறிஞர்களை தக்க வைத்து கொள்கின்றது இவ்வழக்கறிஞர்களே இதனை பயன்படுத்தி தமது வேலை-யையும் முடித்து கொள்கின்றனர்.

3. ஊடகங்களினால் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பயன்பாடு

தகவல் அறியும் உரிமை சட்டமானது அதன் ஆரம்ப கட்டத்தில் இருப்பது போல ஊடகங்களின் உற்சாகமும் அதே மட்டத்தில் தான் உள்ளது. சமீபத்தில் இலங்கை பதிப்பக நிறுவனமானது தகவல் அறியும் சட்டத்தின் முதலாமாண்டை முன்னிட்டு வெளியிட்ட வெளியீட்டில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழான விண்ணப்பங்களினூடாக பெறப்பட்ட தகவல்களை கொண்டு ஊடகங்களில் வெளிவந்த கட்டுரைகளை தொகுப்பதற்காக மிகவும் சிரமப்பட்டுள்ளதாக

தெரிய வருகிறது ஊடகவியலாளர்களில் சிலர் மாத்திரமே இச்சட்டத்திற்காக முன்னோக்கி செயற்படுவதுடன் இலங்கை பிரஜைகளின் பொது நலனுக்காக ஆர்வம் காட்டுகின்றனர் இவர்கள் எய்த முன்னேற்றங்கள் இவர்களின் சகாக்களையும் தமது பாத சுவடுகளை பின் தொடருமாறு ஊக்குவிக்க வேண்டும்.

"தகவல் அறியும் உரிமை - செய்திவடிவில் உருவாக்கம்" (*RTI – Making the News*) கையேடு தகவல் அறியும் உரிமை சட்டத்தினூடாக பெறப்பட்ட சில புலனாய்வு செய்திகளை குறித்துக் காட்டுகின்றது. சண்டே டைம்ஸ் (Sunday Times) பத்திரிக்கையில் நாமினி விஜயதாஸ வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது சுற்றுப்புற சூழல் மாசு தொடர்பான மதிப்பீட்டினை செய்யாது பொருளாதார நலனை மாத்திரம் கருத்தில் கொண்டு ருவன்புற அதிவேக நெடுஞ்சாலை வேலையை தொடங்கியதை குறிப்பிட்டு காட்டினார். டெய்லி மிரர் (*Daily Mirror*) பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட சாந்தீப வெட்டிசிங்கவின் *"EPF gets zero returns from majority of private equity investments"* பெரும்பாலான தனியார் முதலீடுகளில் ஊழியர் சேமலாப நிதியம் மூலமான வருவாய் பூச்சிய மட்டத்திலேயே உள்ளது என்ற அறிக்கையில் தகவல் அறியும் உரிமையை பயன்படுத்திய விதம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது..

இதையடுத்து வந்த காலப்பகுதியில் இச்சட்ட பயன்பாட்டாளர்களது எண்ணிக்கை அதிகரித்தே உள்ளது என்பதற்கு எடுத்துகாட்டாக, தகவல் அறியும் உரிமை சட்டம் அமுலுக்கு வந்த ஆண்டிலேயே பயன்படுத்திய முன்னோடியான ஊடகவியலாளர்களான பிரசாந்த அபேவிக்ரம (லக்பீம), அஜந்த பண்டார ரத்நாயக்க (வயம்ப டுடே - வலைத்தள ஊடகவியலாளர் - குருணாகலை), ராகுல் சமந்த ஹெட்டியாராச்சி (இலங்கை செய்தி வலைத்தளம்), சந்தனி கிரிந்தே மற்றும் சந்துன் ஜெயவர்தன (சண்டே டைம்ஸ்),

சரத் மனுல விக்ரம (இலங்கை பதிப்பக நிறுவனம்) உதயந்தி முனசிங்க (மௌபிய), பிகன் மேனகா, ஹரிந்து உடுவரகெதர மற்றும் தரிந்து ஜயவர்தன (லங்காதீப) பிரமனா தேஜ் வெரபிடிய (இரிதா) மற்றும் உதயன் பத்திரிக்கையின் நிருபர்களை கூறலாம். இவ் எண்ணிக்கையானது வரும் ஆண்டுகளில் இரட்டிப்பாக அதிகரிக்க வேண்டும்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக பெறப்பட்ட தகவல்களினூடாக உருவாக்கப்பட்ட செய்திகளை பிரித்தறியும் வகையில் இதுவரையில் எந்தவொரு ஊடகத்திலும் தனியான ஒரு பிரிவு இல்லையென்பது கவலைக்குரியதாகும். மற்றுமொரு பிரச்சினை என்னவெனில் பத்திரிக்கையாளர்கள் தகவல்களை வலைத்தளங்களில் 24-7-365 செய்தி சுழற்சிக்குள் உட்புகுத்துவதில் கவனம் செலுத்தி சிக்கலான ஆராயப்பட வேண்டிய செய்திகளுக்கு முன்னுரிமை வழங்காதமையால் தகவல் அறியும் உரிமைக்கான தனியான ஒரு பிரிவு சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

சில வருடங்களிற்கு முன்னர் இந்திய நாட்டிலும் கூட தகவல் அறியும் சட்டம் மூலம் ஒரு வித சோம்பலும் ஒரு வித வெறுப்பு மனப்பாண்மையுமே இருந்நது. அநேகமானோர் இலங்கையை போன்று பாரம்பரிய முறையில் தகவல் பெறுவது போதியளவானதென கருதியிருந்தனர். உலகலாவிய ரீதியில் ஆயுத உரிமங்களை பெற்ற தனியார் நபர்கள் பற்றிய தகவல்களை தகவலறியும் சட்டத்தின் கீழான 700 விண்ணப்பங்களிலிருந்து நான்கு வருடங்களாக தரவுகளை சேகரித்த ஸியாமல் யாதவ் என்ற எழுத்தாளர் அவரது "தகவல் அறியும் உரிமையினூடான ஊடகவியல் மற்றும் தகவல் விசாரணையின் தாக்கம்" *'Journalism through RTI – Information Investigation Impact',* என்ற தனது நூலில் இந்திய நாட்டின் ஊடகவியலாளர்கள் தனக்கு தகவல் அறியும் அதிகாரம் இருப்பதனை ஏற்றுக்கொள்ள காலம் சென்றதெனக் கூறுகிறார். அந்தவகையில் ஒரு சில ஊடகவியல் முன்னோடிகள்

தகவல்களை புலனாய்வு செய்வதனூடாக நன்மைகளை அனுபவித்தே தீருகின்றனர்.

மேலும் அவர் கூறுவதாவது இந்த வரலாற்று சட்டவாக்கத்தின் எழிலென்னவெனில் தகவலறியும் சட்டத்தை வாசிக்காமலும் அது பற்றி அறியாமலும் கூட ஒருவரால் அச்சட்டத்தை பயன்படுத்த முடியுமென்றார். அவர் ஆராய்ந்த ஒரு கதையில் ஆயுதங்களை வைத்துக்கொள்ள அனுமதி பெற்ற தனி நபர்கள் பற்றிய விபரங்களை சேகரிக்க யாதவ் என்பவர் 4 வருடங்களில் 700 தகவலறியும் முறைப்பாடுகளை செய்துள்ளார்.

பாரதூரமான தகவல்களை தேடிச்செல்லும் பத்திரிக்கையாளர்களுக்கு இவ்வாறான விடாமுயற்சியும் இடைவிடாத சக்தியும் தேவைப்படுகிறது. ஆனால் அவர் கூறுவது யாதெனில் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்திய நாட்டிலே தகவல் அறியும் உரிமை சட்டத்தின் சாத்தியமான பகுப்பாய்வுகளை ஆய்வு செய்வதற்கு அங்குள்ள ஊடகம் போதுமானதாக இல்லை. அதனால் அனைத்து இந்திய பிரஜைகளுக்கும் தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பாக கற்பிக்க வேண்டுமென பரிந்துரை செய்கிறார்.

4 தகவலறியும் உரிமையை இலங்கையில் ஊக்குவித்தல்

இந்தியாவின் நிலைப்பாட்டினை தொடர்ந்து இலங்கையில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் போக்கினை நோக்குகையில் உற்சாகமளிக்கும் விடயம் யாதெனில் இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவான "கிராமபுறங்களில் தகவல் அறிதல் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த நடமாடும் சேவை மற்றும் நாடு பூராகவும் பாடசாலை மட்டங்களில் தகவல் அறிதல் சம்பந்தப்பட்ட போட்டிகளை நடத்தும் செயற்திட்டம்" 2018 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டமை ஆகும்.

மேலும் ஊடகவியலாளர்களை வலுவாக்கவும் வளர்ந்து வரும் ஊடகவியலாளர்களது வளர்ச்சிக்காகவும் ஊடக குழுக்கள், ஊடகவியலாளர் சங்கம், இலங்கை பதிப்பக நிறுவனம் , சுதந்திர ஊடக இயக்கம், இதழாசிரியர் குழுக்கள் போன்றோர் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பலனினூடாக ஊடகவியலாளர்களுக்கு தங்கள் தொழில் துறையினை மேலும் வளர்ச்சி பாதைக்கு இட்டு செல்ல முடியும் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதுடன் பொதுமக்களின் நன்மைக்காக உத்தியோகபூர்வமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் நடபடிமுறை பற்றி அவர்கள் தமது அறிவை வளர்த்து கொள்ள வேண்டும்.

மேலும் தரம் வாய்ந்த ஊடக துறையொன்றிற்கு தன் பங்களிப்பினை வழங்க ஊடகவியலாளர்கள் இச்சட்டத்தினூடாக தகவல் பெறுகையில் உலகின் போலியான வலைத்தளங்களினால் வழங்கப்படுகின்ற போலியானதும் கவர்ச்சிகரமானதுமான தகவல்களில் கவனம் செலுத்தாது நல்லாட்சி மற்றும் தேசிய நலன் என்பவற்றிற்கு முக்கியம் கொடுக்க வேண்டும். சமீபத்தில் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் கூட தகவல் அறியும் செயன்முறையை பயன்படுத்தி மிக துரிதமாக தனக்குத் தேவையான தகவலை பெற்றுள்ளார். இம்முறையானது உத்தியோகபூர்வமான பாரம்பரிய முறைகளை பயன்படுத்தி தகவல் அறிவதனை விட விரைவாக இருந்தமை சிறப்பம்சமாகும்.

தொகுப்பாக நோக்குகையில், பொது அலுவலகங்களில் பணிபுரிவோர் மக்கள் நிதிகளை செலவு செய்ய முன்னரும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட முன்னரும், அவர்கள் செய்யும் ஒவ்வொரு விடயமும் சட்டப்படி ஒரு நாள் நிச்சயமாக மக்கள் கண்காணிப்புக்கு உட்படும் என்பதால் எச்சரிக்கையுடனும், சீரான மனநிலையுடனும் செயற்பட தகவல் அறிதல் சட்டம் வழிவகுக்கின்றது.

இலங்கை, தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆணைகளில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு ஆணைகளின் விமர்சன ரீதியான மதிப்பீடு

ஜயந்த டீ அல்மெய்டா குணரட்ன[63]

1. அறிமுகம்

அண்மைக்காலத்தில் அதாவது 2015ம் ஆண்டு காலப்பகுதியில் 'தகவலுக்கான உரிமை' ஆனது அரசியலமைப்புச்சட்டத்தை திருத்தியமைத்ததன் மூலம் உறுப்புரை 14(அ) இன் கட்டமைப்புக்குள் ஒரு அடிப்படை உரிமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.[64] அதற்கு முன்னர் உயர் நீதிமன்றம் தனது அடிப்படை உரிமைக்கான நியாயாதிக்கத்தை பயன்படுத்துகின்ற போது உறுப்புரை 14 ஐ உறுப்புரை 12[65] உடன் சேர்த்து வாசிக்கின்ற சந்தர்ப்பத்தில் அந்த கட்டமைப்பின் கீழ் 'தகவல் உரிமை' சில மட்டுப்பாடுகளுடன் உட்கிடையாக இருப்பதாக ஏற்றுக்கொண்டது. அதனைவிட மேலதிகமாக வேறெதுவும் பொதுவான தகவல் உரிமையை அடையாளப்படுத்தவில்லை.[66]

அரசியலமைப்புச்சட்டத்தில் பேணப்பட்டுள்ள ஏனைய அடிப்படை உரிமைகளில்[67] இருந்து தகவலை அணுகுவதற்கான

---

63 ஜனாதிபதி சட்டத்தரணி, பிஜி குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்ற வருகைதரு நீதிபதி, இலங்கை சட்ட ஆணைக்குழுவின் முன்னால் உறுப்பினர், கொழும்பு பல்கலைக்கழகத்தினதும் சட்டக்கல்லூரியினதும் முன்னால் வருகைதரு விரிவுரையாளார் மற்றும் ஆய்வாளர்.

64 19வது திருத்தச்சட்டத்தில் உறுப்புரை 14(அ).

65 சமத்துவத்திற்கான அரசியலமைப்பு உரிமை.

66 அது தொடர்பில் பார்க்க *Embattled Media; Democracy, Governance and reform in Sri Lanka (eds: Crawley, Page and Pinto – Jayawardena), Sage(India) 2015,* குறிப்பாக அதிலுள்ள அத்தியாயம் 9.

67 அத்தியாயம் 4 – அரசியலமைப்பச்சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள உரிமைகள்.

உரிமையானது வேறுபடுத்தப்பட்டு சட்டத்தால் வழங்கப்பட்டுள்ளது[68]. இதனால் ஒரு சட்டம் இயற்ற வேண்டிய தேவையிருந்தது. அதாவது 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டமாகும். வேறுபட்ட சட்டம் ஏன் அவசியம் என்பதற்கு வேறுபல காரணங்களும் இருந்துள்ளன.

முதலாவது, அடிப்படை உரிமை மீறலுக்கான விண்ணப்பங்கள் நிறைவேற்று அல்லது நிர்வாக செயற்பாடுகளுக்கு[69] மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் தகவலுக்கான சட்டமானது அதனை கடந்து அப்பால் செல்லும். இரண்டாவது, அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தை பிரயோகிக்கும் உயர் நீதிமன்றம் போது நீதிமன்றம் நீதியானதும் ஒப்புரவானதும் எனக் கருதுகின்ற தீர்வை வழங்குகின்ற அல்லது அறிவுறுத்தலை மேற்கொள்ளகின்ற அதிகாரத்தைக் கொண்டுள்ளது.[70] கடந்த நான்கு தசாப்தங்களாக 2ம் குடியரசு அரசியலமைப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவற்றை உயர் நீதிமன்றம் பின்பற்றியதன் மூலம் நீதிபாலணம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட நீதியானதும் ஒப்புரவானதுமான தீர்வு என்பது அடிப்படை உரிமை மீறுனர்களுக்கு எதிராக நட்டஈட்டை விதிப்பதனை கருதுவதோடு நிறைவேற்று அல்லது நிர்வாக தீர்மானங்களை மாற்றியமைப்பது ''அறிவுறுத்தல்களை மேற்கொள்ளல்'' என்ற சொற்தொடரினுள்ளும் உள்ளடங்குகின்றன[71]. இதற்கு மாறாக, சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ள தகவல் உரிமை ஆணைக்குழுவிற்கு, தகவல் அணுகுவதற்கான பிரஜைகளின் உரிமையை மீறும் பகிரங்க அதிகாரசபையை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இதனால், சாதாரணமாக அடிப்படை உரிமை மீறல் வழக்குகளில் வழங்கப்படும் நட்டஈட்டுத்தொகைக்கு

68 உறுப்புரை 14(அ).

69 அரசியலமைப்புச்சட்டத்தின் உறுப்புரை 17.

70 அரசியலமைப்புச்சட்டத்தின் உறுப்புரை 126(4).

71 மேற்குறிப்பிட்ட உறுப்புரை.

மாறாக உரிமை மீறல்கள் குற்றவியல் விளைவுகளுக்கும் வழிவகுக்கின்றன.

மூன்றாவது, நாங்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான வேறுபாடொன்று உள்ளது. இச்சட்டத்தால் விதிக்கப்பட்டபடி பொது அதிகாரிகள் - தகவல அதிகாரிகள் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அதிகாரிகள் என நியமிக்கப்பட்டிருந்தாலும் இது பல தசாப்பதங்களாக மறுப்புக்கலாச்சாரத்தில் வளர்க்கப்பட்டு, அதிகாரத்தின் பிரமைக்குள் இருப்பவர்களை வைத்தே வகுக்கப்பட்டுள்ளது. மேலும் அண்மைக்காலமாக இலங்கை உயர் நீதிமன்றமானது தேசிய நலன் மற்றும் அல்லது பாதுகாப்பு நலன் என்பவற்றை கொண்ட நிர்வாக இயக்கத்தில் கைவிடும் கொள்கையை தன்னகத்தே ஏற்றுக்கொண்டிருப்பதானது அதிகாரத்துவ கலாச்சாரம் அதிகளவு சுமத்தப்பட்டுள்ளது என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதனை காட்டுகின்றது. இந்த பழமைவாதத்திலிருந்து விலகி தகவலுக்கான சட்டமானது பொது நலத்தினைக் கருதி வெளியிடுமாறு கோரப்படும் தகவலானது முக்கியமாக இந் நாட்டிற்கும் மக்களுக்கும் சிறந்த முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதனை உறுதிபடக் கூறுகின்றது.

மேலும் தகவல் கோரிக்கையை தகவல்அதிகாரிக்கு அனுப்புதல் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்தல் மற்றும் அங்கிருந்து ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்தல் என்பவற்றுக்கான கால எல்லை தொடர்பில் கவனஞ் செலுத்துகின்ற போது அதுஅரசியலமை மப்புச்சட்டத்தின் அத்தியாயம் 4இன் கீழான உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தில் கால எல்லையானது ‘‘செயல்திறன் சாத்தியமற்றது’’ என்ற கோட்பாட்டிற்கு மட்டுமே கட்டாயமாக உட்பட்டது என்பதுடன் மாறுபட்டதாகவுள்ளது.[72] தகவலுக்கான சட்டமானது கோரப்பட்ட தகவலுக்கான விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு என்பவை தொடர்பான சுயேட்சையான உபயோகத்தில் அவை

72 கமதிகே எதிர் சிறிவர்தன மற்றும் பலர் *[1998] 1 SriLR 384.*

சமர்ப்பிக்கப்பட்டதாக சொல்லப்படும் திகதியானது தகவலுக்கான சட்டத்தின் நோக்கத்திற்கும் அதில் சொல்லப்பட்ட விடயங்களுக்கும் உட்பட்டது எனக் கருதுகின்றது. மேன்முறையீடுகளானது கால எல்லை கவனத்திற் கொள்ளப்படவில்லை போன்ற சாதாரண தொழிநுட்ப காரணங்களினடிப்படையில் நிராகரிக்கப்படக் கூடாது. இச்சட்டத்தின் கீழ் பரந்தளவான நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ள ஆணைக்குழுவானது தனது செயற்பாட்டை மேற்கொள்ள எவ்வாறு அணுகுமுறைகளை கையாளவேண்டும். ஆணைக்குழுவானது உயர் நீதிமன்றத்தாலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தாலும் தீட்டப்பட்டுள்ள நீதிமுறைக் கோட்பாடுகளை பின்பற்ற வேண்டுமா? அல்லது ஆணைக்குழு தனக்கான புதிய அணுகுமுறையை உருவாக்கி கொள்ளலாமா?

சந்தேகத்திற்கிடமின்றி, ஆணைக்குழுவானது நீதிமுறைக் கோட்பாடுகளால் வழிநடத்தப்படும். காரணம் தகவலுக்கான சட்டத்தில் எதிர்மறையான நடவடிக்கைகள்[73] பற்றி குறிப்பிட்டுள்ளதோடு அது சட்ட பிரதிநிதித்துவத்தையும் அனுமதித்துள்ளது. இதன் விளைவாக அரசியலமைப்பு சட்டம் மற்றும் நியதிச்சட்ட பொருள்கோடல்கள் ஆகியவை உட்பட்ட சட்டக்கொள்கைகளில் வளர்க்கப்பட்ட சட்டத்தரணிகள் நீதித்துறை முன்மாதிரியை மேற்கோள்காட்டி நிற்பார்கள் சந்தேகமில்லை.

இவை தான் ஆணைக்குழு செயற்படும் போது பின்னணி சூழ்நிலையாக இருந்தது[74]. இதனால் இந்த சவால்களால் ஆணைக்குழுவானது சட்டத்தில் வெளிப்படையாக கூறப்பட்டுள்ள பிரிவுகளுக்கும் நீதிமுறை முன்னுரிமை மூலம் உருவாக்கப்பட்ட கொள்கைகளுக்கும் இடையிலான ஒரு ஊடகமாக செயற்பட்டு நீதித்துறை கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு தள்ளப்பட்டுள்ளது. குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் உருவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழும் ஆணைக்குழுவின்

73 பகிரங்க அதிகாரசபை மற்றும் தகவல் கோரிக்கையாளர் ஆகிய இருவருக்கும் இடைப்பட்ட முரண்பாடுகள்.

74 2017ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ம் திகதி.

சொந்த சட்டபூர்வமாக அங்கீரிக்கப்பட்ட விதிகளின் கீழும் நிலையான கொள்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அதாவது நியாயமன்றுகள் தான் அவற்றின் நடவடிக்கைமுறைகளுக்கான எசமான் ஆகும். தொழிநுட்பங்கள் மீது கவனஞ் செலுத்துவதை விடுத்து சட்டத்தின் எழுத்துக்களுக்கும் அதன் உயிர்ப்புத்தன்மைக்கும் எவ்வாறு ஆணைக்குழு விளைவுகொடுக்கும்?

மேற்கூறப்பட்ட அறிமுக குறிப்புரைகளுடன் தற்போது நான் ஆணைக்குழு மேன்முறையீட்டு அமைப்பாக அதனது செயற்பாட்டினை செய்த வேளையில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட முடிவுகளில் இரண்டை தெரிவு செய்து அவற்றை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யவுள்ளேன். ஆணைக்குழுவானது தனது குறுகிய கால செயற்பாட்டில் நீதிமுறைகட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது என்பது குறித்த முடிவுகளில் இருந்து வெளிப்படுகின்றது. மேற்கூறப்பட்ட சட்ட கருத்துக்களை ஆணைக்குழு தொட்டுச் சென்றுள்ளதையும் காணமுடியும். அவை தகவல் கோரிக்கையாளரின் உரிமைகள், கோரப்பட்ட தகவலுக்கான விண்ணப்பம் தொடர்பில் பகிரங்க அதிகாரசபையின் கடமைகள், அதன் முன்னால் உள்ள நடவடிக்கைமுறைகளில் நிரூபிக்கும் பொறுப்பிலிருந்து தள்ளுபடி செய்தல் மற்றும் நடைமுறை அம்சம் (மேன்முறையீட்டு அமைப்பு என்றாலும் உச்ச நியாயாதிக்கம் கொண்ட எந்தவொரு நியாயசபையும் செயற்படும் போது விளக்கமளிக்கும் செயற்பாட்டை ஏற்புடையதாக்க வேண்டும்.), மன்றாய்வு என்ற விதியின் அல்லது கருத்தின் உள்ளடக்க நோக்கம், பாரபட்சமற்ற நீதித்துறை மற்றும் அதிகாரசபை என்பவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் என்பன அவற்றுள் சிலவாகும். ஆணைக்குழுவானது இந்த முயற்சிகளை எல்லாம் ஒப்பீட்டு நியாயாதிக்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட வழிகாட்டுதல்களின் படி திட்டமிட்டிருந்தது என்பது சுவாரஸ்யமான விடயமாகும்.

2. இலங்கை, வங்கி ஊழியர் சங்கம் எதிர் மக்கள் வங்கி என்ற மேன்முறையீட்டு விண்ணப்பத்திலுள்ள விளக்க உரைகள்.[75]

2.1. தேடப்பட்ட தகவலின் தன்மை

பிரதிவாதியானவர் அவருடைய சில ஊழியர்களுடன் தொடர்புடைய ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விடயத்தில் தனது சட்ட ஆலோசகர்களின் கருத்தை கவனத்திற் கொள்ளாமல் தனியார் சட்டத்தரணிகளை நியமித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த பல வழக்குகளை நடத்திச் சென்றார். மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடப்படவில்லை. மேற்கூறப்பட்ட தனியார் சட்டத்தரணிகளை தெரிவு செய்ய என்ன அடிப்படை பயன்படுத்தப்பட்டிருந்தது? அவர்களுடைய பெயர் என்ன? அவர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணம் என்ன? அவை அளவுக்கு அதிகமானதா? குறித்த கட்டணத்தை செலுத்துவதற்கு கணக்காளர் நாயகத்தின் அனுமதி அல்லது மற்றும் தற்காலிக அனுமதி பெறப்பட்டதா? ஆளுநருக்கு மற்றும் அல்லது மத்தியவங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு மேற்படி வழக்குகள் உள்ளன என்றும் அவற்றின் போக்கு பற்றியும் அறிவிக்கப்பட்டிருந்ததா?

2.1.1 பகிரங்க அதிகாரசபையால் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலைப்பாடு

தகவல் அதிகாரியானவர் குறித்த கோரப்பட்ட தகவலானது, தகவல் அறியும் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழுள்ள விதிவிலக்குகளில் ஒன்றினுள் அல்லது பலவற்றினுள் அமைந்துள்ளது எனும் அடிப்படையில் அவற்றை வழங்க மறுத்துவிட்டார். சட்டத்தில் முதலாவது மேன்முறையீடானது குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு

75 தகவல் உரிமை ஆணைக்குழுவிற்கான மேன்முறையீட்டு இல: 58.2018, விளக்கம் கேட்கப்பட்ட திகதிகள்: 30.01.2018, 27.03.2018 மற்றும் 22.05.2018 ,தீர்க்கப்பட்டது: 17.07.2018.

செய்யப்பட வேண்டும். அதன்படி குறித்தளிக்கப்பட்ட அலுவலர் பதிலளிக்காத காரணத்தினால் மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்துள்ளார்.

2.1.2 சம்பந்தப்பட்ட விடயங்களை ஆராய்தல்

தகவலை வெளியிட மறுத்ததால் ஆணைக்குழு முகங்கொடுத்த சிக்கல்கள் பின்வருமாறு ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அவற்றில் சில ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாயுள்ளன.

2.1.3 தனியார் சட்டத்தரணிகளை தொடர்ந்து வைத்திருப்பது தொடர்பிலான தீர்மானம் சட்டமா அதிபருடன் கலந்துரையாடப்படவில்லை.

தனியார் ஆலோசகர்களை தேர்ந்தெடுக்கும் தீர்மானம் தொடர்பிலான தகவலை வெளியிடுதலானது யாரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற பகிரங்க அதிகாரசபையிற்கு பணிப்பதற்கு சமமாகும் என பகிரங்க அதிகாரசபை வாதிட்டது.

2.2 ஆணைக்குழுவின் தீர்மானம்

குறித்த வாதத்தை ஆணைக்குழு நிராகரித்து கூறியதாவது, மேற்சொல்லப்பட்ட வாதமானது அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானதாகும். மிகஉயர்ந்த தரத்திலான பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படையான தன்மை என்பவற்றின் உயர்தரம் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பிலான பிரச்சினைகளே இங்கு சம்பந்தப்பட்டுள்ளன[76]. (முடிவொன்று எடுக்கப்படும் போது பொதுநலன் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்)[77]

---

76 ஆணைக்குழுவின் ஆணையில் பக்கம் 9 – 10.

77 அடைப்புக்குறிக்குள் இருப்பது என்னுடையது.

2.3 ஆணைக்குழுவின் தீர்மானத்திலுள்ள விளக்க உரைகள்

பிரதிவாதிகளினுடைய ஊழியர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமான உள்விவகாரத்துடன் தொடர்புடைய விடயங்களில் தனியார் சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு முன்னர் சட்டமாஅதிபரை கலந்தாலோசிக்க வேண்டும் என்பது தொடர்பில் எந்தவிதமான சட்டக்கடப்பாடும் தங்களுக்கு இல்லை என பகிரங்க அதிகாரசபையின் வாதம் அமைந்திருந்தது. பகிரங்க அதிகாரசபையின் அவ்வாறான வாதம் தவறானது.[78] சட்டத்தின் பிரிவு 5 இன் கீழுள்ள விதிவிலக்கு வகைப்பாட்டுக்குள் வருகின்றவை ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டவை என்பதற்கு ஆணைக்குழு கூறியதாவது, கோரப்பட்ட தகவல் பொதுநிதியை கையாள்வதுடன் தொடர்புடையது. அது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சி என்பவற்றை பிரதிபலிக்கும் பொதுநலன் வெளிப்படுத்தல் என்ற அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு நியாயாதிக்கத்தை வழங்குகின்றது.[79]

நீதிமன்ற அவமதிப்பாக உள்ளது அல்லது நீதித்துறையின் அதிகாரத்தையும் பாரபட்சமின்மையையும் பேணுவதற்கு பங்கம் ஏற்படும் என்ற அடிப்படையில் கோரப்பட்ட தகவலை வெளியிட மறுத்தமையை நியாயப்படுத்த கூடியதாக இருந்ததா? மன்றாய்வு என்ற கருத்தினடிப்படையில் அதனை நியாயப்படுத்த கூடியதாக இருந்ததா?

சட்டத்தின் பிரிவு 5(1)(ஒ) இன் கீழுள்ள சாத்தியமான விதிவிலக்கு வகைப்பாட்டின் அடிப்படையில் அது பிரதிவாதிகள் சார்பான மிகவும் மேம்பட்டவாதமாக இருந்தது. அது நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்பில் பொதுவான அடிப்படையாக உள்ளது.

---

78 உட்பிரிவைப் பார்க்க.

79 சட்டத்தின் முன்னுரை.

1. அதன் மீதான ஆணைக்குழுவின் தீர்மானம்

ஆணைக்குழு குறித்த வாதத்தை நிராகரித்து அதனை இவ்வாறு நியாயப்படுத்தியது:

> ''நீதித்துறையின் அதிகாரத்தையும் பாரபட்சம் இன்மையையும் பேணுவதற்கு பங்கம் ஏற்படும் என்பதற்கான உண்மையான அபாயம் வெளிப்படுத்தப்படவில்லை.''[80]

2. அதன் மீதான விளக்க உரைகள்.

இந்த நேரத்தில் ஆணைக்குழுவின் மேற்கூறப்பட்ட தீர்மானத்திலுள்ள பல்வேறு அம்சங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கப்படலாம். பிரதிவாதியான பகிரங்க அதிகாரசபை தகவல் வெளியிடப்படுதலை மறுத்தமைக்கு விதிவிலக்கு காரணம் உண்டு என்பதை தனது எதிர்வாதமாக குறிப்பிட்டது. அவ்வாறாயின் அதனை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு பகிரங்க அதிகாரசபைக்கே இருந்தது என ஆணைக்குழு நியாயப்படுத்தியது. வழக்கு நிலுவையிலுள்ளது என சாதரணமாக குறிப்பிடுவது மட்டும் நிரூபிக்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து வெளியேறுவதற்கு போதுமானதாக அமைந்திருக்கவில்லை. அது சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை தடுத்துவிடும்.

3. மன்றாய்வு என்ற கருத்தும், அது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் நீதித்துறையின் பாரபட்சம் என்பவற்றுடன் கொண்டுள்ள தொடர்பும்

மன்றாய்வு என்ற விதியின் மூலம் எதிர்பாக்கப்படுவது என்ன? அது ''நீதிமன்ற நடவடிக்கையுடன் தொடர்புடைய வெளிப்படுத்துதல்கள் மற்றும் கருத்துக்கள் என்பவற்றை

80 ஆணையின் பக்கம் 10.

மட்டுப்படுத்தும் ஒரு விதியாகும்". நிலுவையிலுள்ள நீதிமன்ற நடவடிக்கையானது பிரதிவாதியினால் அதனுடைய ஊழியர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்ட சட்டநடவடிக்கையாகும். அதனுடன் தொடர்புடையதான எந்தவொரு கருத்தும் பொருத்தமற்றதாக இருப்பின் அதனை தடுக்க வேண்டியது நீதிமன்றத்தின் விடயமாகும். ஆனால், எவ்வாறு தனியார் ஆலோசகர்களை வைத்திருத்தல் தொடர்பான தகவல் பொதுநிதியை கையாளுவதுடன் தொடர்புபட்டது என்பதுடன் அது எவ்வாறு செலவழிக்கப்பட்ட தொகை மன்றாய்வு விதியினுள் வரும் என்பதுடன் மற்றும் நீதித்துறையின் அதிகாரம் மற்றும் நீதித்துறையின் பாரபட்சமின்மை என்பனவற்றை பாதிக்கும்?

இதன் விளைவாக இரண்டு நியாயாதிக்க அதிகாரசபைகள் அதாவது மேற்கூறப்பட்ட வெளியிடுதலுக்கான ஆணைக்குழுவின் கட்டளை மற்றும் தனக்கு முன்னாலுள்ள வழக்கினை தீர்மானித்து அதனை கொண்டுசெல்லும் நீதித்துறை ஆகியன வெவ்வேறானவை. அவ்வாறாயின் "நீதிமன்ற அவமதிப்பு" என்பதனுள் குறித்த கொள்கை உட்பட்டது என எவ்வாறு பகிரங்க அதிகாரசபை வாதிட்டிருக்க முடியும்?

2.4 இணையான நியாயாதிக்கங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் வழிகாட்டுதல்கள்

ஆணைக்குழுவானது அதனது ஆரம்பப்பருவத்தில் இருந்தபோது முன்னோடியான இந்தியாவிலிருந்து வழிகாட்டுதல்களை பெற்றுள்ளது. இந்தியாவின் தகவலுக்கான சட்டத்தின் பிரிவு (8)(1)(1) ஆனது எங்களது தகவலுக்கான சட்டத்தின் பரிவு 5(1)(ஒ) ஐ ஒத்த தன்மையான விடயங்களைக் கொண்டுள்ளது. *Sh. PD Bansal v Food Corporation of India (Case No. CIC/LS/A/2009/000937*) என்ற இந்திய வழக்கில்

வெளியிடுதலுக்கான விதிவிலக்குப் பிரிவான 8(1)(ஆ) கவனத்திற் கொள்ளப்பட்டது. அதில் குறித்த தகவல் எந்தவொரு நீதிமன்றத்தாலோ அல்லது நியாயசபையினாலோ அல்லது வெளியிடுதல் மூலமோ வெளியிடப்படுதல் வெளிப்படையாக தடுக்கப்பட்டுள்ளதோ அது நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்கு இட்டுச் செல்லவும் கூடும்.[81]

"வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக எதுவும் இல்லை"

ஆணைக்குழுவானது தீர்மானத்திற்கு வருவதற்கு, சட்டத்தில் மேற்குறிப்பிட்டவாறு சொல்லப்பட்டுள்ளதன் படி மேற்சொன்ன பிரிவினை உதவிக்கு அழைத்து பார்த்தது.

அந்த அடிப்படையில் பின்வருமாறு நான் விரிவாக கருத்து தெரிவிக்க விரும்புகின்றேன்.

"முடிக்குரிய சிறப்புரிமை", "அரசிற்குரிய சிறப்புரிமை" மற்றும் "பொதுநலனுக்குரிய சிறப்புரிமை"

மேற்கூறப்பட்ட கருத்துக்களின் வரலாற்று ரீதியான முன்னேற்றத்தை தடமறிந்து நோக்கினால்,[82] ஆணைக்குழுவானது சான்றுக்கட்டளைச் சட்டத்தின் (பல திருத்தங்களுக்குட்பட்டது,) பிரிவு 123 மற்றும் 124 கொண்டுள்ள எழுத்திலான சட்டங்களை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.(குறித்த பிரிவு நியதிச்சட்டப் புத்தகத்தில் இன்னும் எஞ்சியுள்ளது).[83] நிர்வாகம் தகவலை வழங்காமல் வைத்திருப்பதற்கு அரசுக்குரிய சிறப்புரிமையை நாடும் போது அதனை மறுக்கும் எந்தவொரு முயற்சியையும் நீதிமன்றம் எடுத்திருக்க கூடாது என

81 இலக்கம் 15 இல் சொல்லப்பட்ட ஆணைக்குழுவின் கட்டளையின் பக்கம் 10.

82 தி அல்மெய்டா குனரத்ன, '*Public Interest Privilege – A Comparative Study, , Master's Thesis* (கொழும்பு பல்கலைக்கழகம்) 1984.

83 V*ol 1 Legislative Enactments of Sri Lanka (LESL) 1980 (Revised Cap 21)*.

உயர்நீதிமன்றம் அந்தசமயத்தில் உறுதியாக தெரிவித்தது. மேற்சொல்லப்பட்டவாறு இருக்கையில், நீதிமன்ற தீர்மானங்கள் சட்டம் என்ற பதத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சட்டம் என்ற பதத்திற்கு விரிவான அர்த்தம் வழங்கப்படுவதாக இருந்ததால் அரசியலமைப்புச்சட்டத்தின் உறுப்புரை 170 இல் எழுத்திலான சட்டம் என சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

2.5 ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்தின் நோக்கம் - அதன் விளக்க உரைகள்

ஆணைக்குழுவிற்கு தனது தீர்மானத்தை ஆதரிப்பதற்கோ அல்லது அதுபோல சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் கொண்டுள்ள அதனது நியாயாதிக்கத்தை ஆதரிப்பதற்கோ தகவலுக்கான சட்டத்தின் பிரிவு 4 ஐ நாடவேண்டி தேவைப்பாடு இல்லை. சட்டத்தின் பிரிவு 4 பின்வருமாறு கூறுகின்றது:

> "இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் பயனுறுவதால் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு உள்ள விடயத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்."

ஆயினும் அது கூறப்பட வேண்டியது அதாவது, மேற்கூறப்பட்ட ''எது எவ்வாறிருப்பினும்.'' என்ற பதத்தின் தொடர்புடைமையானது குறித்த சட்டப்பிரிவை உயரத்தில் வைத்துள்ளது. அதற்கு காரணம் அதனூடாக அதிகளவான எச்சரிக்கையை செய்திருக்கலாம். ''பொதுநலன் மேலோங்கும்'' என்ற அனுமானத்தினடிப்படையில்

சந்தேகத்திற்கிடமின்றி ஆணைக்குழுவிற்கு நியாயாதிக்கம் கையளிக்கப்பட்டுள்ளது.

3. கோரப்பட்ட தகவலை வெளியிட மறுத்தமையானது நியாயப்படுத்தப்படக்கூடிய தாயிருந்ததா?

சட்டத்தின் பிரிவு 5(1)(எ) இல் குறிப்பிட்டுள்ளதன்படி சட்டத்தரணி மற்றும் திறத்தவருக்கிடையிலான நம்பக உறவு இருப்பதனால் அது உயர்தொழில் சிறப்புரிமை என்பதற்குள் உள்ளடங்குகின்றது என்ற அடிப்படையில் கோரப்பட்ட தகவலை வெளியிட மறுத்தமையானது நியாயப்படுத்தப்பட்டிருந்ததா?

3.1 ஆணைக்குழுவின் உறுதிப்படுத்தப்பட்ட தீர்மானம்

நம்பகமான உறவுமுறை என்ன வரையறைகளை கொண்டுள்ளது என ஏற்றுக்கொள்ள ஆணைக்குழு கூறிய காரணம், ''பகிரங்க அதிகாரசபையினால் எடுக்கப்பட்ட நிறுவன ரீதியான தீர்மானம்'' தொடர்பிலேயே இந்த வழக்கில் பிரச்சினையுள்ளது. அதனடிப்படையில் ஆணைக்குழு குறித்த வாதமானது வெற்றிகரமானதாக அமையவில்லை என கூறியுள்ளது.[84] உயர்தொழில் தொடர்பாடல் என்ற அடிப்படையில் அமைந்த வாதத்திற்கும் ஆணைக்குழுவின் இந்த தீர்மானம் ஏற்புடையதாகும்.

அதிலுள்ள வெளிப்பாடுகள்

சட்டத்தரணிக்கும் திறத்தவர்களுக்குமிடையிலான உறவானது ஒப்பந்த உறவுமுறைக்கு முன்மாதிரியானது. அதனை பொதுவான ஒரு விதியாக பகிரங்க அதிகாரசபையினால்

84 ஆணைக்குழுவின் ஆணையின் பக்கம் 11.

எடுக்கப்படும் நிறுவன ரீதியான தீர்மானத்திற்கு பிரயோகிக்க முடியாது. ஆணைக்குழுவானது பொதுநிதியை கையால்வதுடன் தொடர்புபட்ட வழக்காக இந்த பிரச்சினைக்குரிய வழக்கை குறித்துக்காட்டுகின்ற போது குறித்த தன்மையை காணக்கூடியதாகவுள்ளது. செலவழிக்கப்பட்ட நிதி தொடர்பான வெளியிடுகை பொதுநலனை வேண்டுகின்றது. குறித்த சட்டம் கொண்டுவரப்பட்டதன் மிக முக்கியமான நோக்கம் அதுவாகும்.

இன்னொரு கோணத்தில் அதனை நோக்கினால், உதாரணமாக ஒரு தனியார் தரப்பு இன்னொரு தனியார் தரப்புடன் ஒப்பந்தம் செய்ய அழைக்கப்படும் போது அது ஒருவருடைய தெரிவுக்கு அதனை வழங்குகின்றது. குறித்த விவகாரம் தனியார் அதிகாரவரம்பிற்குட்பட்டதாகும். ஆனால் அதேவகையான காரணங்களை அரசாங்க அதிகாரசபைகளின் ஒப்பந்தங்களுக்கு பிரயோகிக்க முடியுமா? இதற்கான பதில் எதிர்மறையானதாகவே இருக்க வேண்டும். காரணம் பகிரங்க அதிகாரசபையானது பொதுநிதியைகையால்வதுடன் தொடர்புபட்டதே தவிர தனியார் நிதியை கையால்வதுடன் அல்ல. உயர்தொழில் தொடர்பாடல் என்பதனை அடிப்படையாகக் கொண்ட வாதத்திற்கும் இதேவிடயம் ஏற்புடைதாகும். கேள்விக்குள்ளாகியுள்ள இந்த வழக்கிற்காக சட்டத்தரணியால் கோரப்படும் கட்டணம் பகிரங்க அதிகாரசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சூழ்நிலைகள் அங்குள்ள இறுதி பேச்சுவார்த்தையுடன் முடிவடைந்துள்ளது.

பகிரங்க அதிகாரசபையின் மேற்கூறப்பட்ட வாதமானது ஆணைக்குழுவின் பரந்தகற்கை, உயர்நீதமன்றத்தின் பொருத்தமான விதிகளுடனான அதனுடைய ஒன்றரை வருட கால இடைவெளியில் ஆராயப்பட்ட கடந்தகால முற்சான்றுகள்

மற்றும் சான்றுகட்டளைச்சட்டத்தின் பிரிவு 126 ஆகியவற்றின் தன்மையுடன் ஒத்ததாக அமையவில்லை.

3.2. பகிரங்க அதிகாரசபையால் நியமிக்கப்பட்-டுள்ள சட்டத்தரணிகளின் பெயர்களை எவ்வாறு வெளியிடுதல்? அவர்கள் வெளியிடுகைக்கு உட்பட்டவர்களா? அவர்களை தெரிவு செய்ய பிரயோகிக்கப்பட்ட அடிப்படை விதிகள் வெளியிடப்படுவதற்கு உட்பட்டதா? பகிரங்க அதிகாரசபையானது தான் செய்த இரண்டையும் மறுத்தமையை ஆணைக்குழுவானது உறுதிப்படுத்தியுள்ளது.

அ) நியமிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகளின் பெயர்கள் தொடர்பான விடயம் தனியுரிமையுடன் தொடர்புபட்டது.

ஆ) மேற்குறித்த சட்டத்தரணிகளை தெரிவு செய்ய பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள் அதனுடைய நியாயாதிக்கத்திற்குள் வரும் ஒரு விடயமல்ல.

அதிலுள்ள விளக்க உரைகள்

மேற்கூறப்பட்ட (அ) தொடர்பில் நோக்குகின்ற போது, கோரப்பட்ட தகவலானது உட்கிடையாக குறித்த சட்டத்தரணிகளின் பெயர்களையும் கொண்டுள்ளது. ஆணைக்குழுவானது அதனை வெளியிட மறுத்த நிலையை குறித்த விடயம் நம்பக உறவு என்ற கருத்தினுள் மற்றும் அல்லது ஒப்பந்த உறவு என்பதனுள் உள்ளடங்கியுள்ளது என்ற அடிப்படையில் நியாயப்படுத்தியது.

3.3. அவசியமான சமநிலையை ஆணைக்குழு எவ்வாறு தடுத்தது?

கட்டணமாக செலுத்தப்படும் தொகை பொதுநலனில் வெளியிடப்பட வேண்டும். கட்டணம் செலுத்தப்பட்ட சட்டத்தரணிகளின் பெயர்கள் வேறுபட்ட அடிப்படையைக் கொண்டது. அவ்வாறு அதன் வெளியிடுகையானது தனியுரிமை என்ற தனிப்பாதையில் நம்பகஉறவு மற்றும் அல்லது ஒப்பந்த உறவு என்ற கருத்துக்களுடன் தொடர்புபட்டது. ஆகவே தகவல் கோரிக்கையாளர் மேற்குறித்த சட்டத்தரணிகளின் பெயர்களை கோருவதற்கு தவறிவிட்டனர். ஆணைக்குழுவானது குறித்த தகவலை வழங்க மறுத்தமையை சிறந்த முறையில் நியாயப்படுத்தியுள்ளது.

கோரப்பட்ட தகவல்கள் தொடர்பில்

(அ) கணக்காளர் நாயகம் மற்றும்

(ஆ) ஆளுநர் மற்றும் அல்லது மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளர் மேற்குறிப்பிட்ட பிரச்சினைக்குரிய வழக்கின் இருப்பு மற்றும் அதன் நடவடிக்கை தொடர்பில் தகவல் தெரிவிக்கப்பட்டதா?

அதன்மீதான ஆணைக்குழுவின் தீர்மானம்

மேல் அ மற்றும் ஆ கூறப்பட்டவற்றை வெளியிடுமாறு ஆணைக்குழு கட்டளையிட்டது.

தீர்மானத்திலுள்ள சில பொதுவான கருத்துக்கள்.

அ) ஆணைக்குழுவினுடைய நியாயாதிக்கத்தின் நோக்கம் - பொறுப்புக்கூறும் தன்மைக்கு எதிரான வெளிப்படைத்தன்மையின் அடிப்படை

தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் கீழ் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புகூறும் தன்மை என்பவற்றுக்கான அடிப்படை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதனால் இரண்டு கருத்துக்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து செல்லும். இந்த இணைவுக்கு காரணம் பொறுப்புக்கூறும் தன்மையின் எண்ணம் பொதுவான பகிரங்க பொறுப்புக்கூறும் தன்மையாக அமையக்கூடாது. அது தொடர்பில் வேறொரு கருத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

நியமிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகளுக்கு செலவழிக்கப்பட்ட தொகையின் அளவை வெளிப்படுத்துவதன் மூலம் வெளிப்படையான தன்மை தோன்றும். பகிரங்க அதிகாரசபை தனது சட்டஆலோசகரின் ஆலோசனையின்றி மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையிலுள்ள பொறுப்புக்கூறும் தன்மையானது ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

என்னுடைய கண்ணோட்டத்தில், வேறுவகையில் விவாதிப்பதாயின் அதனுடைய தீர்மானம் ஏற்கனவே ஆராயப்பட்டதன் படி ‘‘தனியுரிமை’’ என்ற அடிப்படையில் எதிர்க்க கூடியதாயிருக்கும். கணக்காளர் நாயகம் மற்றும் ஆளுநர் மற்றும் அல்லது மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளர்களுக்கு நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகளின் பெயர்களை தெரிவிப்பதைவிட அவர்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தின் அளவை தெரிவிப்பதன் மூலம் என்ன நோக்கம என்பது அறியப்பட்டு இருக்கலாம்.அவ்வாறாயின் குறித்த விடயம் நிச்சயமாக ஈர்க்கப்பட்டிருக்க வேண்டும். மன்றாய்வு என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்த வாதம் மற்றும் நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பாரபட்சம் என்பவற்றை பாதிக்கும் என்ற அடிப்படையிலான வாதம் என்பனவற்றை ஆணைக்குழுவானது ஏற்கனவே நிராகரித்துவிட்டது.

ஆ) பொதுநலனின் மேலோட்டமான அளவுகோல்

பொதுநிதியில் வெளிப்படைத்தன்மையை எதிர்பார்க்கும் போது அங்கே செலவு செய்யப்படும் தொகையை பொதுநலன்

என்ற அடிப்படையில் வெளியிடப்பட வேண்டப்படுகின்றது. குறித்த ஒன்றுக்கொன்று துணைவகையையுடைய ''நம்பகமான உறவுமுறை'' ''நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கும் அதன் பாரபட்சமற்ற செயற்பாட்டிற்கும்'' ''மன்றாய்வு விதி'' மற்றும் ''உயர்தொழில் சிறப்புரிமை'' என்ற கொள்கைகளுக்கு எதிரானது என்பன தகவலை வெளியிட மறுத்தமைக்கான எதிர்வாதத்தின் அடிப்படையாகவிருந்தது. அவை அனைத்தும் பொதுநலனுக்கு மேலேட்டமான அளவுகோலாகும்.

பொதுநலனின் மேலோட்டமாக அளவுகோல் என ஆணைக்குழுவினால் இயற்றப்பட்ட மூன்று தொடர்புபட்ட கொள்கைகள் உள்ளன - இரண்டு நிலையான கொள்கைகள், மற்றையது நடபடிமுறை தன்மை கொண்டது

1. நிலையான கொள்கைகள்

நம்பகமான உறவுமுறை என்ற பொதுவான கொள்கையானது ''நிறுவனத்தின் தீர்மானம் என்ற கொள்கை'' மூலம் தகுதி பெற்றுள்ளது.

முன்னைய பகுப்பாய்வு மூலம் கருதப்படுவது – தனியார் வழக்குகளில், சட்டத்தரணிக்கும் திறத்தவர்களுக்குமிடையில் நம்பகஉறவுமுறை என்ற கருத்து பொதுவாக பிரயோகிக்கப்படலாம். அதனால் அந்த வழக்கு உயர்தொழில் சிறப்புரிமையுடன் தொடர்புடையது. ஆனால் பொதுநிதியானது பகிரங்க அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணிகளுக்கு கட்டணமாக செலுத்தப்பட்டது என்பது தொடர்பான விடயத்தில் அது ஏற்புடையதாகாது. ஆணைக்குழு பகிரங்க அதிகாரசபையின் தீர்மானத்தை மாற்றி ஆணையிட்டது.

ஆணைக்குழுவானது நம்பகஉறவுமுறை என்ற கருத்தின் நோக்கம் மற்றும் அதன் வரையறை என்பவற்றிற்கு கீழே அமையக்கூடிய கொள்கைகளையும் அது பொதுநிதியை

கையாலும் நிறுவனரீதியான தீர்மானமாக இருந்தாலும் கூட அதனையும் அழைத்திருந்தது.

கட்டணம் என்ற வழியில் செலவழிக்கப்பட்ட பணம் பற்றிய விடயம் பொதுநலன் என்ற வரம்புக்குள் வருகின்றது. பகிரங்க அதிகாரசபையால் நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணிகளின் பெயர்கள் தனியுரிமை என்ற ஆட்சிஎல்லைக்குட்பட்டதாகும். மேற்குறித்த தனியார் சட்டத்தரணிகள் தங்களது பெயரை வெளியிடுவதற்கு இணக்கம் தெரிவிப்பதென்பது வேறுபட்டதொன்றாகும். அது நிகழ்வதற்கு சாத்தியமில்லை எனவேதான் பகிரங்க அதிகாரசபை மேற்குறித்த சட்டத்தரணிகளின் பெயர்களை வெளியிட மறுத்தது.

தனியார் சட்டத்தரணிகளின் பெயர்களை வெளியிடாத பகிரங்க அதிகாரசபையின் தீர்மானத்தை கண்டுகொள்ளாது, தனியார் சட்டத்தரணிகளுக்கு செலவழிக்கப்பட்ட தொகையை பொதுநலனின் வெளியிடும் பகிரங்க அதிகாரசபையின் கடப்பாட்டுக்கும் மற்றும் குறித்த கட்டணம் செலுத்தப்பட்ட தனியார் சட்டத்தரணிகளின் பெயர்கள் நம்பகமான உறவுமுறை என்ற கருத்தைக் கொண்ட தனியுரிமை என்பதற்குள் வருகின்றது என்பதற்கும் இடையிலான தொடர்பாடலை ஆணைக்குழுவானது நிறுத்தியது.

2. நடபடிமுறை ரீதியான கொள்கை - நிரூபிப்பதற்கான பொறுப்பு

பகிரங்க அதிகாரசபையானது மன்றாய்வு விதி மற்றும் நீதித்துறையின் அதிகாரத்திற்கும் பாரபட்சமற்ற செயற்பாட்டிற்கும் அவமதிப்பாக இருக்கும் என்ற அடிப்படையில் கோரப்பட்ட தகவலை மறுப்பதற்கான விதிவிலக்கினை எடுத்துக்கொண்டது. அதன் காரணமான அதனை நிரூபிக்கும் பொறுப்பு பகிரங்க அதிகாரசபையை சார்ந்ததாகும். ஆனால் குறிப்புக்களின்படி பகிரங்க அதிகாரசபை அதனை செய்யத்தவறிவிட்டது. அதன் விளைவாக பாதிப்பின்றி பொதுநலன் மேலோங்கிவிட்டது.

இ) குறிப்பாக தீர்மானத்திலுள்ள சுவாரஸ்யமான விடயங்கள். கணக்காளர் நாயகம் மற்றும் மத்தியவங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளர் என்போரின் பங்கு தொடர்பில் வினா எழுந்தது. மேற்கூறப்பட்டவற்றின் செயற்பாடு தொடர்பில் பகிரங்க அதிகாரசபையின் கடப்பாடு ஆணைக்குழுவினால் உணரப்பட்டுள்ளது. ஆனாலும் அது தனியார் சட்டத்தரணிகளுக்கு செலவழிக்கப்பட்ட பொதுநிதியின் அளவு தொடர்பான தகவலை வெளியிடுவதற்கான ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானத்தை பாதிக்காது. இரட்டைக் கோரிக்கைகளான சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பன பகிரங்க அதிகாரசபையால் தகவலை வெளியிட மறுத்தமைக்கு வலியுறுத்திக்கூறப்பட்ட பல்வேறு அடிப்படைகளை ஆணைக்குழு நிராகரித்த போது அவை அங்கே சந்தித்துக்கொண்டன.

இதன் விளைவாக, ஆணைக்குழுவிற்கு கணக்காளர் நாயகம் மற்றும் ஆளுநர் மற்றும் மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளர் என்போருடன் தொடர்புபட்ட விடயங்கள் அதனது நியாயாதிக்கத்திற்கு அவசியமற்றததாக இருந்தது. குறித்த வினாவிற்கு பதிலளிப்பது தவறான கேள்வியை கேட்பது மற்றும் அதற்கு பதிலளிக்க முனைவது என்பன நியாயாதிக்கத்தை தாண்டியதாக இருந்தது.[85]

விசேட குறிப்பு என்னவெனில் ஆணைக்குழு இந்த தீர்மானத்திற்கு வருவதற்கு சில சட்டக்கருவிகளை பயன்படுத்தியுள்ளது. (அ) வேறு நியாயாதிக்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட தகவலை அணுகுவதற்காக உரிமை பற்றிய கருத்தின் பொருள்கோடல் (ஆ) அதனுடைய முன்னைய ஆணைகளை பரிசீலித்தல் (இ) ஆணைக்குழுவினால்

85 அநிஸ்மினிக் என்ற ஆங்கிலேய பிரபுக்களின் சபை தீர்மானத்தில்[1983] 2AC237, நிறுவப்பட்ட இக் கொள்கை இலங்கை உயர் நீதிமன்றத்தால் முசாஜிஸ் லிமிடட் எதிர் ஆர்தர் [2004] 2 Sri LR 1 என்ற தீர்மானத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

குறித்துக்காட்டப்பட்ட இலங்கை நீதித்துறையின் முற்சான்றுகள் என்பனவாகும்.

3. இலங்கை விமானசேவை விமானிகள் சங்கம் எதிர் இலங்கை விமான சேவை என்ற மேன்முறையீட்டிலுள்ள விளக்க உரைகள்

தகவல் உரிமை ஆணைக்குழுவிற்கான மேன்முறையீட்டு இல. 99/2017
ஆணைக்குழுவின் முழு அமர்வின் முன்னிலையில்
விளக்கம் கேட்கப்பட்ட திகதிகள்:13.11.2017, 08.01.2018, 06.02.2018, 23.03.2018, 24.04.2018 மற்றும் 09.05.2018
தீர்க்கப்பட்டது: 12.06.2018

3.1 சுருக்கமான நிகழ்வுப்பின்னணி

மேன்முறையீட்டாளர் பரந்தளவான தகவலை கோரியிருந்தார். நடவடிக்கைமுறையின் ஆரம்பத்தில் பிரதிவாதியானவர் குறித்த மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு நியாயாதிக்கம் இல்லை என்ற ஆரம்ப ஆட்சேபனையை எழுப்பியிருந்தார். குறித்த விடயம் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, திறத்தவர்கள் குறித்த ஆட்சேபனை தொடர்பில் அவர்களது சமர்ப்பணத்தினை (வாய்மொழி மூலம் மற்றும் எழுத்து மூலம்) செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

3.2. நியாயாதிக்க ஆட்சேபனையின் அடிப்படை

பிரதிவாதியான இலங்கை விமான சேவைகள் ஆனது ஆணைக்குழுவிற்கு அதன் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டினை விசாரிப்பதற்கும் அதனை தீர்மானிப்பதற்கும் நியாயாதிக்கம் இல்லை என்ற விதிவிலக்கினை எடுத்துக்கொண்டது. கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1979ம் ஆண்டளவில் கூட்டினைக்கப்பட்ட

எயார் லங்கா லிமிடெட் என்ற பெயர் கொண்ட கம்பனி ஒன்று உள்ளது. 1982ம் ஆண்டின் 17ம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் படி எயார் லங்கா லிமிட்டட் அதனது பெயரை 1999ம் ஆண்டு ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ் லிமிட்டட் என மாற்றி தன்னை மீண்டும் ஒரு கம்பனியாக பதிவு செய்து கொண்டது. தற்போதைய 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிகள் சட்டம் வெளிவந்த போது அதன் கீழும் தன்னை மீண்டும் பதிவு செய்து கொண்டது.

மேற்சொல்லப்பட்ட சட்டமாற்றங்களை ஏற்றுக்கொண்ட போதிலும், பிரதிவாதியின் வாதமாக அமைந்திருந்தது என்னவெனில், தகவலுக்கான சட்டத்தின் பிரிவு 43 ஆனது ''பகிரங்க அதிகாரசபை'' என்பதனால் குறித்துக்காட்டப்படுவது என்ன என்பது பற்றி குறிப்பிட்டுள்ளது. அதில் 2007ம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டடிணைக்கப்பட்ட கம்பனிகளை குறிப்பிட்டுள்ளது. ஆனால் குறித்த சட்டத்தின் கீழ் இக்கம்பனி கூட்டிணைக்கப்படவில்லை. அதனால் அது தகவலுக்கான சட்டத்திற்கும் ஆணைக்குழு அதன் முன்னிலையிலுள்ள மேன்முறையீட்டை விசாரிக்கும் நியாயாதிக்கத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

பிரதிவாதியின் வாதத்திற்கு எதிராக மேன்முறையீட்டாளரால் வாதிக்கப்பட்டது என்னவெனில் நியதிச்சட்ட மாற்றத்தின் கீழ் கம்பனி ஒன்று கூட்டிணைக்கப்படுவது புதிய கூட்டிணைப்பு என்பதற்குள் அடங்காது. ஆனால் அது ஏற்கனவே இருந்த கம்பனியின் தொடர்ச்சியான இருப்பாகும்.

ஆணைக்குழுவின் தீர்மானம்

2007ம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் பகுதி XVII கொண்டுள்ள பிரிவுகளின் தலைப்பை நோக்கும் போது அது ''ஏற்கனவே உள்ள கம்பனிகளுக்கான பிரயோகம்'' என அமைந்துள்ளது. குறிப்பாக பிரிவு 485(6), அந்தபிரிவினை பிரயோகிப்பது தொடர்பில் ஆணைக்குழு கூறி காரணம் அதாவது

"...கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 485(6)இன் கீழ் வரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்கான கூட்டிணைப்புச் சான்றிதழானது இச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள முன்னரே உள்ள கம்பனிகளுக்கும் விபரிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவானது கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 529 ஐ கவனத்திற் கொண்டது. அது கம்பனி என்பது இச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி என வரைவிலக்கணப்படுத்தியது. அது தகவலுக்கான சட்டத்தின் பிரிவு 43(உ) வில் வரைவிலக்கணப்படுத்தியுள்ள பகிரங்க அதிகாரசபை என்பதுடன் தொடர்புபட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தீர்மானத்துடன் தொடர்புடைய சில அம்சங்கள்

ஆணைக்குழுவின் சிந்தனையிலிருந்து வெளிவந்த மிகப்பெரிய கொள்கை, பிரதிவாதியின் வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் அதன்விளைவான கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவுசெய்யப்பட்ட பல்வேறு கம்பனிகள் தகவலுக்கான சட்டத்தின் ஆதிக்கவரம்புக்கு அப்பால் இருக்கும்.

சட்டவாக்கசபையின் நோக்கம் 2007ம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் தகவலுக்கான சட்டத்துடன் சேர்த்து வாசிக்க வேண்டும் என்ற வகையில் இருந்ததா? ஏற்கனவே உள்ள கம்பனிகள் மீள்பதிவு செய்யப்பட்டமைக்கும் 2007ம் ஆண்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை வரைவதற்கு என்ன காரணம் கண்டறியப்பட்டுள்ளது? குறித்த வித்தியாசத்தை வரையறுக்கவில்லை என்றால் தகவலுக்கான சட்டத்தில் அதன் நீடிப்பு அவசியமற்றதா? பிரதிவாதியின் வாதம் வித்தியாசம் இன்றி வேறுபாட்டை வரைவதற்கான செயற்பாட்டை குறிப்பிடப்படவில்லையா?

2007ம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 485 – 487 இல் உள்ள பிரிவுகள் இச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதாக இருப்பதற்கான மீள் பதிவுடன் தொடர்புபட்டவை. குறித்த பிரிவுகள் கட்டாயமான பிரிவுகளாகும் அவற்றுடன் இணங்கியொழுக வேண்டும். பிரதிவாதி ஒரு சட்டரீதியான நபரா?

ஆணைக்குழு குறித்த வினாக்களுக்கு நியதிச்சட்ட பொருள்கோடலை பயன்படுத்தி ஒட்டுமொத்தமாக தனது ஆணையில் பதிலளித்துள்ளது.

ஆணைக்குழு தனது தீர்மானத்திற்கும் காரணங்களுக்கும் வருவதற்கு வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொண்ட நியதிச்சட்ட பொருள்கோடல் நியதிகள்

அந்த நியதிச்சட்ட பொருள்கோடல் நியதிகளை ஆணைக்குழுவின் ஆணையின் பக்கம் 5 – 6 வரையிலானதில் காணலாம்

1. நியதிச்சட்டங்கள் நியாயமான அர்த்தத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். அது தான் சட்டவாக்கத்தின் எண்ணத்திற்கு விளைவைக் கொடுக்கும். அது நியாயமற்ற மற்றும் பொருத்தமில்லாத முடிவுகளைத் தடுக்கும்

2. ஒவ்வொரு முயற்சியும் குறித்த அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதாக அமைய வேண்டும். அது தீங்குகளை தடுக்க வேண்டும் என்பதோடு அது மேலதிகமான தீர்வாகும்.

3. நியதிச்சட்டமானது *"ut res magis valeat quam pereat"* என்ற கொள்கைக்கு விளைவு மற்றும் செயல்விளைவு கொடுப்பதாக அமையக்கூடாது. அது கூறுவது என்னவெனில், இரண்டு பொருள்கோடல்

தெரிவுகள் இருந்தால் குறுகிய அர்த்தத்தைக் கொண்ட பொருள்கோடல் சட்டவாக்கத்தின் நோக்கத்தை அடைவதில் தவறிவிடும். பரந்த பொருள்கோடலை ஏற்றுக்கொள்வதன் மூலம் அது சட்டவாக்கத்தின் நோக்கத்தை குறைப்பதாக அமையாது.

முடிவாக நான் கூறுவது என்னவெனில், ஆணைக்குழுவானது தனது ஆணையில் அதனது நியாயாதிக்கம் தொடர்பான ஆட்சேபனையை விசாரணையில் பெறப்பட்ட கருத்துக்களைக் கொண்டு ஒதுக்கித்தள்ளிவிட்டது.

3.3. தகுதியின் அடிப்படையில் தீர்மானங்களை பகுப்பாய்வு செய்தல்[86]

மேன்முறையீட்டாளரால் பரந்தளவிலான தகவல் கோரப்பட்டிருந்தது. அந்த தகவலானது பகிரங்க அதிகாரசபையால் மறுக்கப்பட்டிருந்தது. நான் கோரப்பட்ட தகவலின் ஒவ்வொரு வகையுடனும் தொடர்புபட்ட ஆணையின் சில அம்சங்களை ஆலோசிக்கப்போகின்றேன்.

கோரப்பட்ட தகவலின் தன்மை(1) – கேள்விக்குரிய அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட ஊதியம், கொடுப்பனவு மற்றும் சலுகைகள்.

பகிரங்க அதிகாரசபையனது தனியுரிமை மற்றும் நம்பகமான உறவு முறை என்ற கருத்துப்படிவத்தின் அடிப்படையில் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் பாதுகாப்பை எடுத்துக்கொண்டு தகவல் விண்ணப்பத்தை நிராகரித்தது. மேற்குறித்த வார்த்தைகளானது (சாக்குப்போக்கு வார்த்தைகள்) ''தனியார் வேலை ஒப்பந்தங்கள்'' உடன் தொடர்புபட்ட இந்தியாவின் முற்சான்றுகளின் அடிப்படையில் நியாயப்படுத்தப்படக்கூடியதாயிருந்தது.[87]

---

86 18.06.2018ந் திகதிய ஆணை.

87 மேற்கூறப்பட்ட ஆணையின் பக்கம் 7 – 8.

ஆணைக்குழு குறித்துக்காட்டியது, எப்படியிருந்தபோதிலும் ஒழுங்குவிதி 20 (1) (ii) (2)[88] ஐ சட்டத்தின் முன்னுரையுடன் சேர்த்து வாசிக்கின்ற போது அது நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் பங்குபற்றும் விடயங்களுடன் தொடர்புடைய வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்ற கலாசாரத்தை மேற்படுத்துவதை தெளிவாக காட்டுகின்றது. கோரப்பட்ட தகவலை வழங்க மறுத்து குறித்தளிக்கப்பட்ட அலுவலகரினால் வழங்கப்பட்ட தீர்மானத்தை ஆணைக்குழுவானது தயக்கமின்றி மாற்றியமைத்திருந்தது. பெயரிடப்பட்ட அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்ட சம்பளம், ஊதியம் போன்றன பொதுமக்களின் பணப்பையுடனும் வரி செலுத்துபவர்களின் பணத்துடனும் தொடர்புபட்டது. அதனை பொதுமக்கள் மேற்குறித்த தகவலை பெற்றுக்கொள்வதற்கான உரிமையுடன் சேர்த்து முதலிடுகின்றார்கள். அதனடிப்படையில் பொதுநலன் என்பது மேலோங்குகின்றது. தனியுரிமை மற்றும் நம்பகமான உறவுமுறை என்பதனை அடிப்படையாகக் கொண்ட எதிர்வாதமானது வெற்றியளிக்கவில்லை.

பொதுமக்களின் பணப்பையுடன் தொடர்புபடுகின்ற நிறுவன ரீதியான தகவல்களை பகிரங்க அதிகாரசபையானது வெளியிடுவதற்கான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதனை ஆணைக்குழுவினது ஆணையானது நினைவுபடுத்தியுள்ளது. அவ்வாறு செய்யாவிடின் அதன் முன்னிலையில் மேன்முறையீடு தீர்மானிக்கப்படும் அதிகாரம் பயன்படுத்தப்படும் போது குறித்த தகவலை வெளியிடுமாறு ஆணை பிறப்பிக்கப்படும் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

குறித்த வெளியிடுகையின் மூலம் என்ன நோக்கம் அடையப்பெறுகின்றது? சந்தேகத்திற்கிடமின்றி, பகிரங்க அதிகாரசபையின் அலுவலர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் போன்ற விடயங்களை கேள்விக்குட்படுத்துவதற்கு பொதுமக்கள் நிலையான உரிமை எதனையும் கொண்டிருக்கவில்லை. அது

88 மேற்கூறப்பட்ட ஆணையின் பக்கம் 6.

அரசாங்க கொள்கை மற்றும் தீர்மானத்திற்குட்பட்ட விடயமாக அமைந்திருக்கும். எவ்வாறாயினும் இது ஒரு பொதுமக்களின் உரிமையாகும். அதாவது பகிரங்க அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சேவையின் தரம் பற்றி மக்களின் எண்ணத்தை மதிப்பீடு செய்வதற்கு அந்த தகவல்கள் அவசியமாகும் (இதற்கு உதாரணம், தேசிய விமான சேவைகள்). வேறுவகையில் கூறுவதாயின், பணமானது சம்பளமாக செலவளிக்கப்பட்டு அதிகாரிகளுக்கு செலுத்தப்பட்டால் அதற்கு ஈடான தரமுள்ள சேவை மக்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு அவர்கள் அதனை பெற்றுக்கொள்கிறார்களா என்பதனை மக்கள் மதிப்பீடு செய்யக்கூடியதாயிருக்கும். வெளியிடுதலுக்கான ஆணையின் நோக்கம் இது தான் என்பது என்னுடைய எண்ணமாகும், ஆனாலும் ஆணைக்குழு அதனை தனது ஆணையில் பல சொற்களால் கூறவில்லை.

அதில் குறிப்பிட்ட ஒரு விடயம் கட்டாயம் குறித்துக்காட்டப்பட வேண்டும். சட்டத்தின் முன்னுரையின் பெறுமதியானது அதனது வரலாற்றுத் தோற்றத்தின் நியதிச்சட்ட பொருள்கோடலுக்கு உறுதுணையானது. இது ஒரு நிலையான சட்டவாக்க செயற்பாடாகும். முன்னுரையானது நியதிச்சட்டத்தின் பகுதிகளை பொருள்கோடல் செய்வதற்கான முறையான துணையாக பார்க்கப்பட்டுள்ளது.[89] எவ்வாறாயினும் இந்த செயல்முறையானது குறைவடைந்துள்ளது, இது தொடர்பில் பிரபுக்கள் சபையானது வருத்தத்தை வெளிப்படுத்தியுள்ளது.[90]

இலங்கையின் தகவல் உரிமைச் சட்டமானது பொதுநலவாய நியதிச்சட்டமாக தரமுயர்ந்துள்ளது. சட்டத்திலுள்ள பிரிவுகளை பொருள்கோடல் செய்ய சட்டத்தின் முன்னுரையை பயன்படுத்தும் ஆணைக்குழுவின் அணுகுமுறையானது அதனுடைய சொந்த அணுகுமுறையாகும். ஆகையால் அது வரவேற்கத்தக்கதாகும். இது நியதிச்சட்டத்தின் முன்னுரைக்கு முக்கியமளித்து புத்துயிர்

89 *Sussex Peerage Claim (1844) 11 CI & f 85.*

90 *Per Lord Alverston in L.C.C v B.B.Co, Ltd (1911) 1 LB 455.*

அளித்துள்ளது. இது இலங்கையின் தகவல் உரிமையை கோருவோர்களுக்கு மிகப்பெரிய அனுகூலமாகும்.

ஆணைக்குழுவானது அதனுடைய முடிவுக்கு வருவதற்கு பல்வேறு இந்திய நீதித்துறை முன்னோடிகளிலிருந்து உதவிகளை பெற்றுள்ளது.

(i) ''தனியார் தொழில் ஒப்பந்தங்கள்'' (பிரதிவாதியின் வாதத்தினை அடிப்படையாகக் கொண்டல்ல) தொடர்புடைய கருத்துக்கள்.

(ii) பொதுமக்களின் ஆதிக்க எல்லைக்குள் வருகின்ற விடயமான பொது அதிகாரிகளுக்கு செலுத்தப்படும் சம்பளத்துடன் தொடர்புடைய இந்திய நீதித்துறை எண்ணங்களை ஏற்றுக் கொண்டது.[91]

தகவல் கோரிக்கை இரண்டாவதின் இயல்பான தன்மை- ''விமானம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் தொடர்புடைய ஒப்பந்தம்.''

ஆணைக்குழுவின் முன்னிலையிலுள்ள நடவடிக்கை முறைகளின் கோப்பிலிருந்து பின்வருவனவற்றுடன் தொடர்புடைய தகவல்களை கோரியிருந்தது என்பது வெளிப்பட்டது:

A. Memorandum of Understanding (SL Airline & PIA)
B. Wet Lease Agreement (SL Airline & PIA)
C. Wet lease extension Agreement (SL Airline & PIA)

கோரப்பட்ட தகவலானது பின்வரும் காரணங்களினடிப்படையில் பகிரங்க அதிகாரசபையால் மறுக்கப்பட்டது:

1) மேற்குறித்த ஒப்பந்தம் தொடர்பிலான வெளியிடுகையானது ஏனைய அரசுகளுடனான

91 18.06.2018 ந் திகதிய ஆணைக்குழுவின் ஆணையின் பக்கம் 6 – 9.

இலங்கையின் உறவுகள்/ ஒப்பந்தங்கள்/ கடப்பாடுகள் மீது பாரதூரமான பாதகத்தை ஏற்படுத்தும்[92]

2) பாரிய பொதுமக்கள் அக்கறை அத்தகைய தகவலின் வெளியிடுகையை அனுமதிக்கின்றதென பகிரங்க அதிகாரசபை திருப்பதிப்பட்டாலொழிய, 2003ம் ஆண்டின் 36ம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் வர்த்தக அந்தரங்கம், வியாபார இரகசியம் அல்லது புலமைச் சொத்து உட்பட தகவலின் வெளியிடுகையானது மூன்றாம் திறத்தவரொருவரின் போட்டி நிலைக்கு தீங்குவிளைவிக்குமாக குறித்த தகவல் உள்ளது.[93]

3) *Wet Lease Agreement* ஆனது அந்தரங்கமான பிரிவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.[94]

PIA உடனான பிரதிவாதியின் வணிக நடவடிக்கையானது இரண்டு தரப்பினரதும் முறையற்ற நடவடிக்கை மற்றும் இரண்டு தரப்பினரதும் பரந்தளவிலான நட்டத்தின் விளைவால் ஏற்பட்ட இலஞ்ச ஊழல் என்ற அடிப்படையில் பொதுமக்களின் வாதத்திற்குள் ஆழ்ந்திருந்தது.

ஆரம்பத்தில், ஆணைக்குழுவானது இரண்டு பிரதான பிரிவுகளுக்குள் வருகின்ற கோரப்பட்ட தகவல் தொடர்பான பிரதிவாதியின் செயற்பாடுகளை அடையாளப்படுத்தியிருந்தது.

1) *MOU* மீது காலங்கடந்த ஒப்பந்தங்களிலிருந்து எந்தவொரு சட்டரீதியான அல்லது நிதி ரீதியான கடப்பாடுகளும் எழுந்திருக்கவில்லை.

2) PIA உடன் நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்கள்

92 சட்டத்தின் பிரிவு 5(1)(ஆ)(ii) இன் அடிப்படையில்.

93 சட்டத்தின் பிரிவு 5(1)(ஈ) இன் அடிப்படையில்.

94 பிரிவு 24.3 (ஆணைக்குழுவின் ஆணையின் பக்கம் 10 இல் குறிப்பிடப்பட்டள்ளது.).

3.4. முடிவடைந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் இயற்றப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அறுதியுரைகள்

Transnet Ltd. and Another v. SA Metal Machinery Co (PTY) Ltd (வழக்கிலக்கம் தென்னாபிரிக்க உயர் நீதிமன்றம்)[95] மற்றும் *Public & Private Development Centre v Power Holding Company of Nigeria & The Honorable Attorney-General of the Federation (FHC/ABJ/CS/582/2012, Federal High Court of Nigeria)*[96] ஆகிய முன்னோடிகளிலிருந்து பெற்றுக்கொண்ட துணையாக்கங்கள் மற்றும் அந்த நியாயாதிக்க சட்டவாக்கங்களுக்கும் இலங்கையில் தகவல் உரிமைச் சட்டத்திற்கும் இடையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை. அவற்றிலிருந்து ஆணைக்குழுவானது பின்வரும் கொள்கைளை உருவாக்கியிருந்தது:

1. ஒரு பகிரங்க அதிகாரசபையானது தனது செயற்திட்டங்களை வெளிப்படையாகவும் பொறுப்புக்கூறும் தன்மையுடனும் செய்வதற்கு கடப்பாடுடையது.[97]

2. ஒப்பந்தம் வழங்கப்பட்டு(முடிவுறுத்தப்பட்ட) பின்னர் அந்தரங்கமான விடயங்களை கொண்ட பிரிவுகள் ஏலம் பற்றிய தகவல்களை வெளிப்படுத்துவதை பாதுகாக்க முடியாது.[98]

---

95 டரன்ஸ்நெட் லிமிட்டட் மற்றும் ஏனையோர் எதிர் எஸ்.எ மெடல் மெசினரி கம்பனி லிமிடட் *Transnet Ltd. and Another v. SA Metal Machinery Co (PTY) Ltd* ((வழக்கு இல. 147/05, 29 நவம்பர் 2005.

96 பகிரங்க மற்றும் தனியார் அபிவிருத்தி நிலையம் எதிர் பவர் கோல்டிங் கம்பனி நைஜீரியா மற்றும் மதிப்பிற்குரிய கூட்டாச்சிமுறையின் சட்டமாஅதிபர் (FHC/ABJ/CS/582/2012).

97 டரன்ஸ்நெட் லிமிட்டட் மற்றும் ஏனையோர் எதிர் எஸ்.எ மெடல் மெசினரி கம்பனி லிமிடட் *Transnet Ltd. and Another v. SA Metal Machinery Co (PTY) Ltd* ((வழக்கு இல. 147/05, 29 நவம்பர் 2005).

98 மேற்குறிப்பிட்டதிலுள்ளது.

3. கேள்விக்குள்ளாகியுள்ள பரிமாற்றமாற்றத்துடன் தொடர்புடைய தகவல்களை மறுப்பதாயின் குறித்த பரிமாற்றமானது பேச்சுவார்த்தை (பேரப்பேச்சு) என்ற நிலையில் இருக்க வேண்டும்.[99]

4. வெளிப்படுத்தக் கோரும் தகவலானது மூன்றாம் தரப்பினருடனான ஒப்பந்தத்துடன் அல்லது வேறு பேச்சுவார்த்தையுடன் தலையீடு செய்வதாக நியாயமாக எதிர்பார்க்க கூடியதாக இருக்க வேண்டும்.[100]

5. தற்போது நைஜீரிய தகவல் சட்ட எல்லைக்குட்பட்ட ஒப்பந்த பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய பிரிவுகளை ஒப்பீட்டு பார்க்கும் போது அவை இலங்கைச் சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. வர்த்தக அந்தரங்கம் மற்றும் போட்டித்தன்மை[101] என்பனவற்றுக்கு தீங்கு ஏற்படும் என்ற அடிப்படையில் தகவல்கள் மறுக்கப்படும் போது குறித்த தீங்கானது சாதாரணமாக சாத்தியம் என்ற அடிப்படையில் அல்லாது நிகழக்கூடியது என்பதனை காட்ட வேண்டும் நீண்ட அமுலாக்கம் கொண்டவையாக இல்லாதிருந்தால் ஒப்பந்தங்கள் அல்லது பிரச்சினைக்குரிய கேள்விகளாக அவை நிறைவடைதலுக்கு உட்பட முடியாதிருந்திருக்கும். சட்டவாக்கத்தின் நோக்கத்தை பொதுநலன் மேலோங்கும் என்ற வாதத்தினடிப்படையில் குறித்த விடயத்தை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு பகிரங்க அதிகாரசபையை சார்ந்ததாகும். (பிரிவு 5(1)(ஈ) ஐ பிரிவு 5(4) உடன் சேர்த்து வாசித்தல்) இது வழக்கில் வெளிப்படுத்தப்பட்ட நிகழ்வு அணிவகுப்பாகும். பிரதிவாதியானவர் குறித்த தகவலை வெளியிடுதலானது பாரியளவிலான தீங்கை ஏற்படுத்தும் என்பதிலிருந்து விடுபட்டிருக்கவில்லை.

99 பகிரங்க மற்றும் தனியார் அபிவிருத்தி நிலையம் எதிர் பவர் கோல்டிங் கம்பனி நைஜீரியா மற்றும் மதிப்பிற்குரிய கூட்டாச்சிமுறையின் சட்டமாஅதிபர் (FHC/ABJ/CS/582/2012).

100 மேற்குறிப்பிட்டதிலுள்ளது.

101 சட்டத்தின் பிரிவு 5[1][ஈ]பிரதிவாதியினால் வழக்கு கொண்டுவரப்பட்டது.

3.5. காலங்கடந்த ஒப்பந்தங்கள் மற்றும் நடைமுறையிலுள்ள ஒப்பந்தங்கள் என்பனவற்றிற்கு இடையிலான வேறு-பாடுகள்

நடைமுறையிலுள்ள ஒப்பந்தம் தொடர்பான தகவலை வெளியிடுவதை விட முடிவடைந்த ஒப்பந்தம் பற்றிய தகவலை வெளியிடுதல் பொருத்தமானதாயிருந்தது. அதன் அடிப்படை என்னவெனில் குறித்த தகவலை வெளியிடுதலானது அந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் நடந்து கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளில் எதிர்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

எப்படியிருப்பினும், என்னுடைய கண்ணோட்டம் என்னவெனில், அதாவது அதனை ஒரு பொதுவான கொள்கையாக கொள்ளமுடியாது ஆனால் வழக்கிற்கு வழக்கு பொதுநலன் மேலோங்கும் என்ற அடிப்படையில் கவனத்திற்கொள்ளலாம். பொருத்தமான வழக்கொன்றில் நடைமுறையிலுள்ள ஒப்பந்தத்துடன் தொடர்புடைய தகவலாக இருந்தாலும் அது பகிரங்க அதிகாரசபையின் நடத்தையுடன் தொடர்புடைய வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சி என்ற அடிப்படையிலான தகவல் உரிமையாக இருக்கும் போது அத்தகவல் வெளியிடப்படவேண்டியதாயிருக்கும்.

4. தகவலுக்கான சட்டத்தின் சூழலில் வளர்ந்து வரும் நீதிபரிபாலணம்

அதனுடைய குறுகிய செயற்பாட்டுக்காலத்தில், ஆணைக்குழுவானது தன்னை காகிதப்புலி போல் நிருபிக்காமல் தகவல் உரிமைச் சட்டத்தை முறையாக அமுல்படுத்துவதற்கு தண்டணை விதிக்கும் அதிகாரத்தையும் கொண்ட மேன்முறையீட்டு அமைப்பாக செயற்பட்டுள்ளது. ஆணைக்குழுவானது நியதிச்சட்ட புத்தகத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டதற்கான சட்டவாக்க

கடப்பாடுகளை குறித்துக்காட்டும் வகையில் முன்னோக்கி செயற்பட்டுள்ளது. மேலும் தகவல் கோரிக்கையாளர் மற்றும் பகிரங்க அதிகாரசபை என்பவற்றுக்கிடையில் சமநிலையை ஏற்படுத்தும் ஒரு பங்கினையும் செய்துள்ளது. இதனால் நாட்டின் அதிகாரத்துவ கலாசாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலோட்டமான அளவுகோலாக இருப்பது பொதுநலன் மேலோங்குதலாகும்.

நான் நினைக்கிறேன் மேலே முன் பகுப்பாய்வு செய்யப்பட்ட சரியான தன்மையை வழங்கியிருந்த ஆணைக்குழுவின் இரண்டு கட்டளைகளுக்கும் பொருத்தமான வகையில் தான் இது தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆணைக்குழு முட்டிமோதி கையாண்ட பரந்தபொதுவான விதமாகும். ஆணைக்குழுவின் முன்னால் வரும் ஏனைய மேன்முறையீடுகள் பொதுவான விடயத்துடன் செல்வதாக அமைந்திருந்தது.

இறுதியான பகுப்பாய்வு, இந்த பகுப்பாய்வு என்ன அடிப்படையில் செய்யப்பட்டது. ஆணைக்குழுவானது வளர்ந்து வரும் கட்டமைப்புக்கும் தகவலுக்கான சட்டத்தின் நிலையான நீதிபரிபாலணத்திற்கும் அமைக்கப்பட்டுள்ளது. அது இலங்கையின் தகவலுக்கான சட்டத்தின் அபிவிருத்திக்கும் நியதிச்சட்டத்தின் பங்கின் முழுமைக்கும் மிக முக்கியமானதாயிருக்கும் என விபரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபன மற்றும் வங்கியியல் துறைகளில் தகவலுக்கான உரிமை

*ஹர்ஷ பர்னான்டோ**

1. தகவலுக்கான உரிமை

தகவலுக்கான உரிமையானது அடிப்படையில் பிரஜைகளுக்கு தகவலை அணுகுவதற்கான உரிமையினை வழங்குகின்றது. சட்டவாக்குனரின் எண்ணமானது 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கத் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பாயிரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழலை எதிர்ப்பதனூடாக மற்றும் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லாட்சியினை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பிரஜைகள் பகிரங்க வாழ்க்கையில் முழுமையாகப் பங்குபற்றக்கூடிய ஒரு சமுதாயத்தினைத் தோற்றுவிப்பதற்காகவே தகவலுக்கான உரிமை வழங்கப்பட்டுள்ளதென பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது "தகவலுக்கான உரிமையினை" ஆட்சி என்ற பரப்பிற்குள் வகைப்படுத்துகின்றது.

தகவல்களை அணுகுவதற்கான உரிமையானது (உறுப்புரை 14 அ) அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் *III* இல் உள்ளடக்கப்பட்டிருப்பதனூடாக அடிப்படை உரிமையொன்றாகக் கருதப்படுகின்றது. அத்தியாயம் iii இல் குறிப்பிடப்பட்டுள்ள சில அடிப்படை உரிமைகள் (உதாரணமாக உறுப்புரை 10 மற்றும் 11 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள்) மட்டுப்படுத்தப்படாதவையாக அல்லது முழுமையானவையாக காணப்படுகின்ற அதேவேளை ஏனைய உரிமைகள் உறுப்புரை 15 இல் குறிப்பிடப்படுமளவிற்கு மட்டுப்படுத்தப்படலாம். 14 அ

---

* நூலாசிரியரின் தனிப்பட்டரீதியிலான நோக்கு அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் எந்த ஸ்தாபனத்தினையோ தனிப்பட்ட நபரினையோ பிரதிபலிக்கவில்லை. குறிப்புகள் ஏற்கனவே தகவல் அறியும் ஆணைக்குழு சார்பில் நூலாசிரியரால் தாயாரிக்கப்பட்டது.(நூலாசிரியரினை தொடர்பு கொள்ளக்கூடிய மின்னஞ்சல் முகவரி *harshafnd@gmail.com).*

இனை அறிமுகப்படுத்திய 19வது திருத்தமானது உறுப்புரை 14 அ இனை உட்சேர்க்கும்பொருட்டு உறுப்புரை 15 இனை திருத்தவில்லை. மாறாக, மட்டுப்பாடுகள் உறுப்புரை 14 அ இலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. உறுப்புரை 14 அ இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வெளிப்படையான மட்டுப்பாடுகளாக: (1) தகவல்களை அணுகுவதற்கான உரிமை பிரஜைகளுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது மற்றும் (2) அவ்வுரிமை "சட்டத்தினால் குறிப்பிடப்படுகின்றதன்படி", அந்தளவிற்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது, என்பனவற்றைக் குறிப்பிடலாம். இச்சந்தர்ப்பத்தில் முதனிலை சட்டமாக தகவலுக்கான உரிமைச் சட்டம் காணப்படுவதுடன் தகவல்களின் வெளியிடுகையினை குறிப்பாக மட்டுப்படுத்துகின்ற ஏனைய சட்டங்களும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "சட்டம்" என்ற வகைப்பாட்டிற்குள் உள்ளடக்கப்படுவதாகப் பொருட்கோடல் செய்யப்பட இயலும்.

தகவலுக்கான உரிமை ஆட்சியினால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை அணுகுவதற்கான உரிமையானது பகிரங்க அதிகார சபைகளின் உடைமையில், காவலில் மற்றும் கட்டுப்பாட்டிலுள்ளத் தகவல்களுக்கான அணுகுதலை வழங்க வேண்டிய ஒத்திசைவான சட்டக் கடப்பாடொன்றினை பகிரங்க அதிகார சபைகளுக்கு வழங்குகின்றது. தகவலினை மறுப்பது விதிவிலக்காகும். பகிரங்க அதிகார சபைகள் வைத்திருக்கின்ற தகவல்களை அணுகுகின்ற இலங்கையின் அணுகுமுறையில் இது ஒரு அடிப்படை மாற்றமாக அமைந்துள்ளது. தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர், பகிரங்க அதிகார சபைகள் வைத்திருக்கும் தகவல்களை வெளியிடுவதனை பல்வேறு சட்டங்களும் தாபன விதிக் கோவையும்[102] மட்டுப்படுத்தின.[103] சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளதன்படி தகவல்களை வெளியிடுகின்ற அலுவலர்களுக்கு தகவலுக்கான உரிமையானது சட்ட பாதுகாப்பினை வழங்குகின்றது.[104]

---

102 உதாரணமாக பாகம் XLVII உடன் ஒப்பிடல் ஸ்தாபனச்சட்டத்தின் பந்தி 6.

103 தண்டணைச் சட்டக்கோவையின் பிரிவு 19 பொறுப்பினை சுமத்துகின்றது "குற்றம் பற்றிய தகவலினை" "பகிரங்க அலுவலகர்" அளிக்க வேண்டும்.

104 சட்டத்தின் பிரிவு 30 மற்றும் 40.

2. ஊழல் எதிர்ப்பு, பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லாட்சி

ஊழல் எதிர்ப்பு, பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லாட்சி என்பன ஒன்றுடனொன்று தொடர்புற்றுள்ளன என்பதுடன் கருத்தேற்புக்கள் என்ற ரீதியில் அவை வேறுபடுத்தப்படக்கூடியவை. ஊழல் என்பது தனிப்பட்ட நலன்களுக்காக அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்தலாகும். இலஞ்சம் மற்றும் ஊழல் என்பன இலங்கையில் குற்றங்களாகும்[105] என்பதுடன் இவற்றுக்கு குற்றவியல் தண்டனைகள் வழங்கப்படும். இவற்றை சரியான முறையில் தீர்க்காவிட்டால், அவை நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் பாரதூரமான மற்றும் தொலைநோக்குடைய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விளைவுகளைத் தோற்றுவிக்கும். பொறுப்புக்கூறுதல் என்பது ஒரு நிறுவனம் அல்லது ஒரு தனிநபர் அதன் அல்லது அவரது செயற்பாடுகளுக்கு பொறுப்பாவதற்கான, அவற்றுக்கான பொறுப்புடைமையினை ஏற்றுக்கொள்வதற்கான மற்றும் அத்தகைய தீர்மானங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையினை வெளிப்படுத்துவதற்கான (வெளிப்படைத்தன்மை) கடப்பாடாகும். தீர்மானமெடுப்பவர்களின் மற்றும் பகிரங்க அதிகார சபைகளின் செயற்பாடுகள் மற்றும் நடத்தை என்பன பொது நன்மைக்கானவை, அதன் பிரதிபலன்கள் நிலையானவை மற்றும் அவை வினைத்திறனான மற்றும் செயலூக்கமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனைப் பொறுப்புக்கூறுதல் உறுதி செய்கின்றது. அதிகாரிகளினால் அதிகாரம் பிரயோகிக்கப்படுகின்ற ஒரு முறையாக ஆட்சி காணப்படுகின்றது. அதிகாரமானது பயனுறித்தாளிகளின் பங்குபற்றுகை மற்றும் இணக்கத்துடன், நிலையான மனித அபிவிருத்திக்கான நீண்டகால மூலோபாய நோக்குடன், பொறுப்புக்கூறுதல் மற்றும் நியாயத்தன்மையுடன் சட்டக்கட்டமைப்பிற்குள்ளாக நெறிமுறைத்தன்மையான முறையில் பிரயோகிக்கப்படுகின்றபோது அங்கு நல்லாட்சி தோற்றம் பெறுகின்றது.

---

105 திருத்தப்பட்டதற்கு அமைய இல.8 1973 ஆம் ஆண்டின் இலஞ்ச ஊழல் சட்டப்பிரிவு பிரிவு 70.

மேலே கூறப்பட்டதற்கு, தகவல்கள் கிடைக்கக்கூடியதாக உள்ளமை மிகவும் அவசியமானதாகும். தகவலுக்கான உரிமை ஆட்சியானது தகவல்களுக்கான அணுகுதலை வழங்குகின்றது மற்றும் ஒழுங்கமைக்கின்றது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள "உரிமையின்" தன்மையினைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. "தகவல்": பொருள்

பொருளாதார அறிவில்[106], "தகவல்" பாரிய உபயோகப் பெறுமதியினைக் கொண்டுள்ளது. அப்பின்னணியில் பார்க்கின்றபோதும், தகவலுக்கான உரிமை ஆட்சியானது குறிப்பிடத்தக்க உள்ளாற்றலைக் கொண்டுள்ளது.[107]

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பொருட்கோடல் பிரிவானது[108] "தகவலுக்கான" உள்ளான (முழுமையானதன்று) வரைவிலக்கணமொன்றை அளிப்பதுடன், அது பதிவேடுகள், ஆவணங்கள், குறிப்புகள், மின்னஞ்சல்கள், அபிப்பிராயங்கள், மதியுரைகள், பத்திரிகை வெளியீடுகள், சுற்றுநிருபங்கள், கட்டளைகள், சம்பவத்திரட்டுகள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், பத்திரிகைகள், மாதிரிகள், உருப்படிவம், கடிதத்தொடர்பு, குறிப்பறிக்கை, விரைவுச்சட்டவாக்கம், புத்தகம், திட்டவரைபு, வரைவு, வரைபடம், பட அல்லது வரைபட வேலை, புகைப்படம், திரைப்படம், குறும்படம், ஒலிப்பதிவு, ஒளிநாடா, இயந்திரம் மூலம் வாசிக்கக் கூடிய பதிவுகள், கணணிப்பதிவுகள் மற்றும் வேறு ஆவண பொருள், உள்ளடங்கலாக அதனது பௌதீக படிவம் அல்லது பண்பு பொருள்படுத்தாமல் ஏதேனும் படிவத்திலான

106 "பொருளாதார அறிவு" அறிவு என்பது பெறுமதியின் இயங்கி மற்றும் தரவினை பொருள்கோடல் செய்வதன் அர்த்தத்தினை விளங்கிக்கொள்வது தகவலிற்கு எதிரானது அது மூல தரவாகும்

107 உதாரணமாக பிரிவு 7(3) இன் கீழ் தேவைப்படுத்தும் எல்லா தகவல்கள் என்பது சட்டம் நிலவுகின்ற திகதியிலிருந்தானதும் 10 வருடங்களுக்கு பாதுகாக்கப்பட்டதானதும் மற்றும் சட்டம் உருவாக்கப்பவெதற்கு 12 வருடங்களுக்கு பிற்பாடதானதையும் குறிக்கின்றது. .

108 இல.12 2006 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டம் பிரிவு 43.

ஏதேனும் பொருள் மற்றும் அதன் ஏதேனும் பிரதி என்பனவற்றை உள்ளடக்குகின்றது. உதாரணமாக பிரிவு 7(3) இன் கீழ் தேவைப்படுத்தும் எல்லா தகவல்கள் என்பது சட்டம் நிலவுகின்ற திகதியிலிருந்தானதும் 10 வருடங்களுக்கு பாதுகாக்கப்படதானதும் மற்றும் சட்டம் உருவாக்கப்படதற்கு 12 வருடங்களுக்கு பிற்பாடதானதையும் குறிக்கின்றது.

பிரஜையொருவர் தனது உரிமைகளை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு தனது இறைமையினைப் பிரயோகிப்பதற்கு இவ்வரைவிலக்கணம் அவசியமாகும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை அரசியலமைப்பின் உறுப்பரை 14 அ உடன் இணைத்து வாசிக்கின்றபோது அது, பகிரங்க அதிகார சபைகள் வைத்திருக்கின்ற அனைத்து தகவல்களும் இறைமை மிக்க மக்களுக்கு சொந்தமானது என்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இந்திய உச்ச நீதிமன்றமானது, "தனியார் அமைப்பொன்றிடமிருந்து பகிரங்க அதிகார சபைகளினால் பெறப்பட்ட அத்தகையத் தகவல்களை பொது மக்களுக்கு கிடைக்கக்கூடியதாக்குவதே சட்டவாக்குனரின் எண்ணமாக அமைந்துள்ளது... பேச்சு சுதந்திரம் என்ற கருத்தேற்பிலிருந்து தோற்றம் பெறுகின்ற அறிந்து கொள்வதற்கான உரிமை முழுமையானதாக இல்லாதபோதிலும் கூட பகிரங்க பாதுகாப்பில் எவ்வித பிரச்சனையினையும் எவ்வளவிலும் ஏற்படுத்தாத பரிமாற்றங்கள் தொடர்பில் இரகசியம் பேணப்படுகின்றபோது அது எச்சரிக்கையுடன் கையாளப்பட வேண்டிய ஒரு காரணியாக அமையும்"[109]என கூறியது.

இது பல்வேறு பிராந்தியங்களின் மற்றும் சர்வதேசத்தின் தகவலுக்கான உரிமை ஆட்சியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட

109 ரிசவ் வங்கி இந்தியா மற்றும் ஏனையோர் எதிர் ஜெயன்டிலால் மற்றும் ஏனையோர் A.I.R 1982 SC149; பெற்றுக்கொள்ளக்கூடிய வலைத்தலம்: *<http://judis.nic.in/supremecourt/imgs1.aspx?filename=43192>.*

அறிவினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் தகவலுக்கான உரிமை ஆட்சியிலும் ஏற்புடையதாகும்.

4. நிதி மற்றும் வங்கியியல் கூட்டுத்தாபன நிறுவனங்கள்

கூட்டுத்தாபன மற்றும் வங்கியியல் துறைகள் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பிரஜைகளின் நலனுக்கும் முக்கியமானவை ஆகும். கூட்டுத்தாபன மற்றும் வங்கியியல் நிறுவனங்களுக்கும் பகிரங்க வாழ்க்கையில் முழுமையாகப் பங்குபற்றுவதற்கான, ஊழலை எதிரப்பதற்கான மற்றும் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லாட்சியினை மேம்படுத்துவதற்கான நெறிமுறைத்தன்மையான உரிமையும் (மற்றும் கடமையும்) காணப்படுகின்றது. நிதி மற்றும் வங்கியியல் நிறுவனங்கள் தொடர்பாகப் பார்க்கின்றபோது, இரண்டு வினாக்கள் எழுகின்றன (1) இந்நிறுவனங்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களை அணுகுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளனவா மற்றும் (2) தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்களை வழங்குவதற்கான கடமை இந்நிறுவனங்களுக்கு காணப்படுகின்றதா என்பனவே அவ்விரண்டு வினாக்களுமாகும்.

4.1 கூட்டுத்தாபன நிறுவனங்கள் மற்றும் தகவல்களை அணுகுவதற்கான உரிமை

கூட்டுத்தாபன மற்றும் வங்கியியல் நிறுவனங்கள் தகவலுக்கான உரிமை ஆட்சி தொடர்பில் கொண்டுள்ள இணைப்பினைப் பார்க்கின்றபோது, முதலாவதும் மற்றும் முதன்மையானதுமான விடயமாக அமைவது யாதெனில், சட்டத்தின் பிரிவு 3(1) ஒவ்வொரு பிரஜைக்கும் இவ் உரிமையினை வழங்குவதனால் கூட்டுத்தாபன நிறுவனங்களுக்கு அப்பிரிவின்படி தகவல்களை அணுகுவதற்கான உரிமை காணப்படுமா என்பதே ஆகும். தகவலுக்கான உரிமைச்

சட்டத்தின் பிரிவு 43 ஆனது, "கூட்டிணைக்கப்பட்ட" (உதாரணம்: கம்பனிகள்) மற்றும் "கூட்டிணைக்கப்படாத" (உதாரணம். ஒரு சங்கம்) ஆகிய இரண்டினையும் உள்ளடக்கும் விதத்தில் "பிரஜை" என்பதனை வரையறுக்கின்றது. கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அமைப்புக்களில் 75% ஆன அங்கத்தவர்கள் பிரஜைகளாகக் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே உறுப்புரை 14 அ இன்கீழ் வழங்கப்பட்டிருக்கின்ற உரிமையினைப் பிரயோகிக்க முடியும் என்பது தேவைப்பாடொன்றாக அமைந்துள்ளது. தகவல்களுக்கான அணுகுதலை வழங்குவதற்கு முன்பதாக குறிப்பிட்ட கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அமைப்பானது 75% அங்கத்தவர் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்துள்ளது என்பது தொடர்பில் திருப்தியுறுகின்ற உரிமை பகிரங்க அதிகார சபைக்கு உண்டு.

4.2 கூட்டுத்தாபன நிறுவனங்கள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கான கடப்பாடு

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமானது வருடாந்த விவரத்தாக்கல், தணிக்கை அறிக்கைகள், நிதி அறிக்கைகள் போன்ற வடிவங்களில் தகவல்களின் வெளியிடுகையினை தேவைப்படுத்துகின்றது.[110] ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தனியார் துறையானது ஏற்கனவே தகவல்களை வெளிப்படுத்துவதற்கு உட்பட்டதாகவே காணப்படுகின்றது. வங்கியியல் நிறுவனங்கள் 1988 ஆம் ஆண்டு வங்கியியல் சட்டம் மற்றும் துறை ஒழுங்கமைப்பாளராக விளங்குகின்ற இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டிகளின் கீழும் இதற்கான மேலதிகத் தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொள்கின்றன.

110 இல.7 2007 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டம் பாகம் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்.

4.3 ஒரு கூட்டுத்தாபன நிறுவனம், "பகிரங்க அதிகார சபை" ஆகும்

தகவலுக்கான உரிமை ஆட்சியினால் வழங்கப்பட்டுள்ள அணுகுவதற்கான உரிமையானது பகிரங்க அதிகார சபைகள் வைத்திருக்கும் தகவல்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவை ஆகும். வங்கியியல் மற்றும் கூட்டுத்தாபன நிறுவனங்கள் "பகிரங்க அதிகாரசபை" என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்படுமாயின், அவை தகவல்களை வழங்குவதற்கு பிணிக்கப்பட்டவையாகும். ஒரு கம்பனியில் 25% ஆன அல்லது அதற்கு அதிகளவான சொந்தம் அல்லது கட்டுப்படுத்துகின்ற அக்கறை அரசிடம் அல்லது பகிரங்க அதிகார சபையிடம் காணப்படுமாயின் அத்தகைய கம்பனி தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக "பகிரங்க அதிகாரசபையாகக்" கருதப்படும்.

பாரம்பரியமாக பகிரங்க நிறுவனங்களினால் முன்னெடுத்து வரப்பட்ட பகிரங்க பணிகள் மற்றும் சேவைகள் என்பன தனியார்மயமாக்கல், புற ஒப்படைப்பு மற்றும் பொது/ தனியார் திட்டங்கள் என்பவற்றினூடாக தனியார் துறைக்கு மாற்றப்படுகின்றமையே தற்கால போக்காக அமைந்துள்ளது. தனியார் துறை நிறுவனங்கள் வேறுபட்ட வகையிலானப் "பகிரங்க பணிகளை" முன்னெடுக்கின்றபோதும், அவை பொதுவாக மூன்று அம்சங்களைப் பகிர்ந்து கொள்கின்றன: விநியோக அபாயத்துடன் கூடிய வகையில் பகிரங்க பணிகளை தனியார் நிறுவனங்களுக்கு மாற்றுதல் விநியோகஸ்தரைத் தெரிவு செய்வதற்கு சந்தை பாணியிலான போட்டிமுறையினைப் பயன்படுத்துதல் அடைந்து கொள்ளல்கள் மற்றும் பலன்களுக்கான செயன்முறையை கவனத்திலெடுத்து செயல்திறனை மதிப்பிடுவதில் மாற்றம். உள்ளக சந்தைகள், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படை பொது சேவைகளுக்கான ஏற்பாடுகளுக்குள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன, "கொள்வனவாளர்கள்" மற்றும் "வழங்குனர்கள்" ஆகியோருக்கி

டையிலானபிரிப்பினை ஒழுங்குபடுத்தியுள்ளன மற்றும் அவை அதிநவீன வர்த்தக ஒப்பந்தங்களினால் ஆளுகை செய்யப்படுகின்றன.[111] பொதுவாக, அரசாங்கத்தின் வகிபாகத்தினுடைய மாறுபடுகின்றத் தன்மையினைக் கருத்திற் கொள்கின்றபோது, பகிரங்க பணிகளை மேற்கொள்கின்ற பல கூட்டுத்தாபன நிறுவனங்களை தகவலுக்கான உரிமை ஆட்சிப் பரப்பிற்குள் கொண்டு வரக்கூடிய வகையில் "பகிரங்க பணிகள்" என்பதற்கு பரந்தளவான வரைவிலக்கணம் வழங்கப்படுதல் வேண்டும்.[112] கீழுள்ள பகுப்பாய்வு எடுத்துக்காட்டுவதனைப் போன்று, தகவலுக்கான உரிமைச் சட்டமானது பாரம்பரியமாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதன்படி, தனியார் மற்றும் பகிரங்க அதிகார சபைகளுக்கிடையில் திட்டவட்டமான வரையறையினைக் கொண்டிருப்பதில்லை. சர்பஜித் ரோய் எதிர். டெல்லி மின்சார ஒழுங்கமைப்பு ஆணைக்குழு[113] என்ற இந்திய வழக்கில் இந்திய மத்திய தகவல் ஆணைக்குழுவானது தனியார்மயப்படுத்தப்பட்டுள்ள பொது பயன்பாட்டு கம்பனிகள் அவற்றின் தனியார்மயத்தினைப் பொருட்படுத்தாது தொடர்ச்சியாக இந்திய தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்கு உட்பட்டனவாகவே காணப்படும் என கூறியது.

தகவலுக்கான உரிமைச் சட்டமானது பகிரங்க அதிகார சபையினை வரையறுப்பதற்கு சட்டரீதியான அணுகுமுறையினை விட தொழிற்பாட்டு ரீதியான அணுகுமுறையினையே[114] அதிகளவில் கையாளுகின்றது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் காணப்படுகின்ற "பகிரங்க அதிகாரசபை" எனும்

---

111 முரே ஹான்ட்"*Constitutionalism and Contractualisation of Government in the United Kingdom, in the province of administrative Law "(Michael Taggart ed., Hart 1997*).

112 பார்க்க வை எல் எதிர் பேர்மிங்காம் நகர சபை [2007] UKHL 27, [2008] 1 A.C. 95, [86].

113 விண்ணப்ப இலக்கம்: *CIC/WB/A/2006/00011* (தகவல் அறியும் சட்டத்தின் பிரிவு-19). 2006.

114 தொழிற்பாட்டு அணுகுமுறை பின்வரும் வழக்கிலிருந்து கரிசனை கொள்ளப்பட்டது. ஆர் எதிர் பனல் ஒன் டேக் ஓவர்ஸ் மற்றும் மேஜர்ஸ் எக்ஸ்பாடெடோபின் (*R. v. Panel on Take Overs and Mergers exparte Datafin) (1987)*

கருத்தேற்பானது அந்நிறுவனத்தின் சொந்தம், கட்டுப்பாடு மற்றும் பொதுத்தன்மை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறுகின்றது. சட்டத்தின் பிரிவு 43 இல் (பொருட்கோடல் பிரிவு) வரையறுக்கப்பட்டிருக்கும் "பகிரங்க அதிகாரசபை" ஆனது 12 வகையான நிறுவனங்களை உள்ளடக்குகின்றது. இவ் 12 வகையான நிறுவன வகைப்பாட்டிற்குள் ஏதேனும் ஒன்றின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற நிறுவனம் "பகிரங்க அதிகார சபையொன்றாகக்" கருதப்படும். அரசியலமைப்பின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் (சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்றவை) பகிரங்க அதிகார சபைகளாகக் கருதப்படும்.[115]

இவ் வரைவிலக்கணமானது அரசாங்கம் பங்குதாரர்களாக உள்ள கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கியியல் நிறுவனங்கள் அல்லது ஓர் ஒப்பந்தம், பங்குடைமை, உடன்பாடு அல்லது அரசாங்கம் அல்லது அதன் ஏதேனும் நிறுவனங்கள் அல்லது உள்;ராட்சி சபைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரத்தின் கீழ் நியதிச்சட்ட அல்லது பகிரங்கப் பணியொன்றினை முன்னெடுக்கின்ற நிறுவனங்களையும் உள்ளடக்கும்.[116]

4.4 "கட்டுப்படுத்துகின்ற அக்கறை"

மேற்கூறப்பட்டவற்றில், 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியொன்றில் அரசு அல்லது பொது கூட்டுத்தாபனம் இருபத்தைந்து வீதம் அல்லது அதற்கதிகமானப் பங்குகளை வைத்திருக்கின்றபோது

115 இந்திய வழக்கான பீகார் பகிரங்க சேவை ஆணைக்குழு எதிர் சயிட் குசைன் ரிஸ்வி மற்றும் ஏனையோர் (2012)13 SCC 61 இவ்வழக்கில் தீர்க்கப்பட்ட விடயம் யாதெனில் அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட அங்கம் அல்லது ஸ்தாபனம் கட்டாயம் பகிரங்க அதிகாரசபையாகவே இருத்தல் வேண்டும். இத்தகவல் பகிரங்க சேவை ஆணைக்குவிடமிருந்து பெறப்பட்டது. கிடைக்கப்பெறப்படக்கூடிய வலைத்தளம்: *<http://www.supremecourtcases.com/index2.php?option=com_content&itemid=99999999&do_pdf=1&id=45279>*.

116 பிரிவு 43 இல.12 2006ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டம்.

அல்லது அரசு மற்றும் பொது கூட்டுத்தாபனம் என்பன அனைத்து இருபத்தைந்து வீதம் அல்லது அதற்கதிகமானப் பங்குகளை வைத்திருக்கின்றபோது அல்லது கட்டுப்படுத்துகின்ற அக்கறையினைக் கொண்டிருக்கின்றபோது அது பகிரங்க அதிகார சபையாகக் கருதப்படுமென்ற வரைவிலக்கணமானது பரந்தது ஆகும். பின்னைய சந்தர்ப்பமானது (அதாவது, கட்டுப்படுத்துகின்ற அக்கறைகள்) என்பது குறிப்பிட்ட தரப்பு கம்பனியின் விவகாரங்களைக் கட்டுப்படுத்தத்தக்களவு போதுமான வாக்களிப்பு பங்குகளைக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தினைக் குறிப்பிடுகின்றது.[117] ஒரு திறத்தவர் 50% பங்குகளுடன் மேலதிகமாக ஒரு பங்கினைக் கொண்டிருக்கின்றபோது அவருக்கு "கட்டுப்படுத்துகின்ற அக்கறை" உள்ளது என்பதே பொதுவான விதியாகும். எவ்வாறெனினும், 50மூ வாக்களிப்பு பங்குகளுடன் மேலதிகமாக ஒரு வாக்களிப்பு பங்கிற்கான நேரடியானசொந்தம் காணப்படாத சந்தர்ப்பங்களிலும் சட்டம் கட்டுப்படுத்துகின்ற அக்கறை இருப்பதாக அங்கீகரிக்கின்றது. கம்பனிகள் சட்டமானது பல்வேறு வகைப்பட்ட பங்குகளை[118] விநியோகிப்பதனை அனுமதிக்கின்றது என்பதுடன் அவற்றுக்கான உரிமைகளையும் குறிப்பிடுகின்றது.[119]

"கட்டுப்படுத்துகின்ற அக்கறைகளுக்கான" சோதனை இன்றியமையாததாகின்றது. ஏனெனில், கம்பனி அகவிதிகளில் குறிப்பிடப்பட்டிருக்குமாயின், திறைசேரியின் செயலாளர் "தங்கப்பங்கு" என குறிப்பிடப்படுகின்ற விசேட வகைப் பங்கொன்றினை வைத்திருப்பதனை சாத்தியப்படுத்துவதனூடாக அவருக்கு ஒரு விசேட கவனிப்பினை கம்பனிகள் சட்டம் அளிக்கின்றது. தங்கப்பங்கு என்ற கருத்தேற்பு யாதெனில் அது பங்குதாரர்களின் கூட்டத்தில் அளிக்கப்படுகின்ற அனைத்து

---

117 பார்க்க இலங்கை விமான போக்குவரத்து சிரேஷ்டமுகாமைத்துவத்தின ஊதியத்தினை தகவலுக்கான உரிமைச்சட்ட ஆணைக்குழு வெளிப்படுத்தியது. கிடைக்கப்பெறப்பட கூடிய வலைத்தளம் *<http://www.sundaytimes.lk/180617/news/rti-commission-orders-srilankan-to-disclose-vip-salaries-298673.html>* - 14 ஒக்டோபர் 2018 அன்று அணுகப்பட்டது.

118 பிரிவு 49(2) இல.7 2007 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டம்.

119 பிரிவு 198 இல.7 2007 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டம்.

வாக்குகளுக்கும் எதிராகத் தீர்மானிக்கின்ற வாக்கினை அளிக்கின்ற அதிகாரம் தங்கப் பங்கினைக் கொண்டிருப்பவருக்கு காணப்படும் என்பதாகும். கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 139(2) இற்கு அமைவாக, திறைசேரியின் செயலாளர் ஒரு கம்பனியில் தங்கப் பங்கொன்றினை வைத்திருக்கின்றபோது, விசேட வாக்களிப்பு சிறப்புரிமைகளை அனுபவிப்பார்.[120]

அரசாங்கமானது ஊழியர் சேமலாப நிதியினைப் பயன்படுத்தி பங்குகளை கொள்வனவு செய்துள்ள பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளில் அரசாங்கமானது போதுமானளவு பங்குகளைக் கொண்டிருக்கின்றபோது மற்றும் அல்லது கட்டுப்பாட்டினைப் பிரயோகிக்கின்றபோது அது "பகிரங்க அதிகார சபையாக" கருதப்பட முடியுமா என்பது இங்கு எழுகின்ற ஒரு பிரச்சனையாகும். அரசாங்கத்தின் பணிகள் தொடர்பிலான தகவல்களை கிடைக்கக்கூடியதாகச் செய்வதனூடாக அதன் செயற்பாடுகளை வெளிச்சம்போட்டு காட்டுதலே தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் குறிக்கோளாக அமைகின்றது என்பதனால், அரசாங்கமானது நியதிச்சட்ட வரம்பெல்லையான 25% இனை விஞ்சுகின்ற அந்த நொடி அல்லது கட்டுப்பாட்டினை பிரயோகிக்கின்றபோது அத்தருணம் முதல் தகவலுக்கான உரிமைச் சட்டம் ஏற்புடையதாகும். ஊழியர் சேமலாப நிதியானது நியதிச்சட்டரீதியாக ஓய்வுகாலத்திற்கான நிதியாக உள்ளமையினால் மற்றும் அது நியதிச்சட்டரீதியாக மத்திய வங்கி என்ற மற்றுமொரு நியதிச்சட்ட அமைப்பிற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளமையினால் அது தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை ஈர்த்துக் கொள்கின்றது.

---

120 கம்பனிச்சட்டத்தில் எது எவ்வாறு காணப்படினும் திறைசேியின் செயலாளர் கம்பனியொன்றின் பொற்பங்கை வைத்திருப்பவராக இருக்குமிடத்துதிறைசேரியின் செயலாளர் அதன் பொற்பங்குதாரராக ஒரேவேளையில் தனது பதிலிக-ளாக சமூகமளிப்பதற்கு மூன்றுக்கு மேற்படாதவேறு ஆட்களை நியமிக்க உரித்துடையவர்.

4.5 கூட்டுத்தாபன நிறுவனங்கள் அரசாங்கத்துடன் ஒப்பந்தங்களை செய்து கொள்ளல்

அதேபோல, உப பந்தியான (எ) ஆனது ஒப்பந்தம், பொது தனியார் பங்குடைமை உள்ளடங்கலான பங்குடைமை, உடன்பாடு அல்லது அரசாங்கம் அல்லது அதன் ஏதேனும் நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி சபைகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்பனவற்றின் கீழ் நியதிச்சட்ட அல்லது பகிரங்கப் பணியொன்றினை முன்னெடுக்கின்ற தனியார் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் அவை நியதிச்சட்ட அல்லது பகிரங்க பணி அல்லது சேவையினை செய்கின்ற அவ்வளவிற்கு பகிரங்க அதிகார சபைகளாகக் கருதப்படும் என கூறுகின்றது. இது பொது சேவைகள் தனியார் நிறுவனங்களினால் வழங்கப்படவேண்டும் என ஒப்பந்தம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களினை உள்ளடக்குகின்றது.

4.6 அனுமதிப் பத்திரத்தின் கீழான வங்கியியல் நிறுவனங்கள்

மத்திய வங்கியினால் வங்கியியல் சட்டத்தின்[121] கீழ் அளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் தொழிற்படுகின்றமையினால் தனியார் வங்கிகள் (அதாவது அரசு 25 % பங்குரித்தினை அல்லது கட்டுப்பாட்டு அக்கறையினைக் கொண்டிராதவை) பகிரங்க அதிகார சபைகளாகக் கருதப்படுமா என்ற கேள்வி எழுகின்றது. வங்கிகள் வாடிக்கையாளர்களின் குறப்பிட்ட எண்ணிக்கையிலான இரகசியமான மற்றும் கூருணர்திறன் மிக்க தகவல்களைக் கொண்டிருக்கும் என்பதுடன் அவற்றை சட்டங்களில் பல்வேறு இடங்களிலுள்ள இரகசிய ஏற்பாடுகளினூடாக மற்றும் வர்த்தக மற்றும் விசேடமயப்படுத்தப்பட்ட வங்கிகளுக்கு ஏற்புடையதாகின்ற ஒழுங்குவிதிகளினூடாக

121 திருத்தப்பட்டதற்கு அமைய இல.30 1998 ஆம் ஆண்டு வங்கிச்சட்டம்.

வெளியிடுதல் தடை செய்யப்பட்டுள்ளது.[122] தகவல்களுக்கான அணுகுதலை வழங்குகின்ற கடப்பாட்டினை வர்த்தக வங்கிகள் தொடர்பில் நீக்குவதற்கு பிரதானமாக இரண்டு வாதங்கள் முன்வைக்கப்படலாம்(1) அனுமதிப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டாலும் வங்கிகள் நியதிச்சட்ட பணியொன்றினை அல்லது பகிரங்கப் பணியொன்றினை ஆற்றவில்லை. வங்கிகளின் தொழிற்பாடானது தனியார் நிறுவனமாக வளர்ச்சியடைந்து வருவதுடன் அது நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிட்டளவானத் தாக்கங்களினை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் அது அரசின் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு செயற்பட்டு வருகின்றது மற்றும்(2) வங்கிகள் வைத்திருக்கின்ற முக்கியமானத் தகவல்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5 இல் கூறப்பட்டுள்ளதன்படி அவ்விதிவிலக்கிற்குள் உள்ளடக்கப்படலாம். ஒரு தனிநபருடைய வங்கித் தகவல்களைக் கோரியிருந்த தகவல் கோரிக்கையானது, மூன்றாந் திறத்தவர்களாகக் கருதப்படக்கூடிய வங்கியின் வாடிக்கையாளர்களுடைய கணக்குகள் தொடர்பான இரகசியத் தன்மையினை பேண வேண்டிய கடப்பாடு வங்கிக்கு உண்டு என்ற அடிப்படையில் இந்திய மத்திய தகவல் ஆணைக்குழுவினால் மறுக்கப்பட்டது.[123] மேலும், அத்தகவலை அணுகுவதிலுள்ள நல்லெண்ணத்திலான பகிரங்க அக்கறையினை அல்லது அக்கம்பனியுடன் அவருக்கு இருந்த ஏதேனும் தொடர்பினை அல்லது வியாபார உறவுமுறையினை ஸ்தாபிக்கத் தவறியுள்ளார் என்றும் மத்திய தகவல் ஆணைக்குழு குறிப்பிட்டது.

தற்போது எஞ்சியிருக்கின்ற மற்றுமொரு பிரச்சினை யாதெனில், பாராளுமன்றச் சட்டங்களினூடாக ஸ்தாபிக்கப்பட்ட மற்றும் கூட்டணைக்கப்பட்ட அரச வங்கிகள்[124] பகிரங்க

122 உதாரணமாக பகுதி IVA வங்கிச்சட்டத்திற்கு அமைய வங்கிக் கணக்கின் உரிமையாளரினை கணக்கிலக்கம் கொண்டு அடையாளம் காண்பது முற்றுமுழுதாக மீறப்படக்கூடாததாக கருதப்பட வேண்டும்.

123 எ.பீ சிங்க் எதிர் பஞ்சாப் தேசிய வங்கி *<Appeal No. 12/IC(A)/2006, dated 14.3.2006 available at: http://www.excisesurat1.nic.in/Trade%20Notice/RTI/Rajan_Madhav_v._SBI.pdf>.*

124 உதாரணமாக இலங்கைவங்கி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்பு வங்கி இலங்காப்புர அபிவிருத்திவங்கி.

அதிகார சபைகளாகக் கருதப்பட முடியுமா என்பதாகும். இத்தகைய வங்கிகள், அரசினால் "அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரப்பணி நிறுவனங்கள்"[125] என வகைப்படுத்தப்படுவதனால் அவை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பகிரங்க அதிகார சபைக்கான வரைவிலக்கணத்தினை ஈர்த்துக் கொள்கின்றன. மேலும், இத்தகைய வங்கிகளின் பணிப்பாளர்கள் குழாமின் பணிப்பாளர்கள் அமைச்சர்களின் செயற்பாட்டினூடாக நியமிக்கப்படுகின்றார்கள்.[126] இது அரசாங்கங்கள் அத்தகைய வங்கிகளை சொந்தங் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன என்பதனை குறிக்கின்றது. ஆகவே இவை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 43 இன் கீழ் பகிரங்க அதிகார சபை என்பதன் வரைவிலக்கணத்திற்குள் உட்படுத்தப்படுகின்றன. எவ்வாறெனினும், வங்கியில் தனிப்பட்ட கணக்கொன்றினைப் பேணுகின்ற பகிரங்க அலுவலரொருவருடைய (உதாரணம்: ஒரு அமைச்சர்) தகவலை அணுகுவதற்கான கோரிக்கையினை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) இன் கீழ் மறுக்க இயலும். அத்தகைய தகவலின் வெளிப்படுத்துகையானது "பாரிய பகிரங்க அக்கறையினை" கொண்டிராது என்ற அடிப்படையில் அத்தகவல் மறுக்கப்படலாம்.

5. உயர் கல்வி நிறுவனங்கள்

கல்வியானது அரசின் தனிப் பொறுப்புடைமையாக அமைய வேண்டுமா என்ற கேள்விக்குரிய பதில் எதிர்மறையானதாகவே அமைதல் வேண்டும். சட்டம் தொடர்பான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பானது (உச்ச நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டது), கல்விக்கான உரிமை என்பது இலவசக் கல்விக்கான உரிமை என்று அர்த்தப்படாது என்ற கொள்கை கோட்பாட்டின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது.

---

125 நிதியமைச்சின் வருடாந்த அறிக்கை [2017] இலங்கை வங்கியின் மக்கள் முயற்சியாண்மை திணைக்களத்தின்.

126 பிரிவு 6(1) மக்கள் வங்கியின் கட்டளைச்சட்டம் (பாகம் 302).

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 43 இல் கூறப்பட்டுள்ள பகிரங்க அதிகார சபை என்பதன் வரைவிலக்கணமானது உயர் கல்வி நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றது. எவ்வாறெனினும், இது உயர் கல்வி நிறுவனங்களுக்கும் (ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட அல்லது அரசினால் அல்லது பகிரங்க அதிகார சபையொன்றினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்படுகின்ற தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்சார் நிறுவனங்கள் உள்ளடங்கலாக) தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் (ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட அல்லது அரசினால் அல்லது பகிரங்க அதிகார சபையொன்றினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்படுகின்ற தொழிற்பயிற்சி அல்லது தொழில்நுட்பக் கல்வியினை அளிக்கின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக) இடையிலான வேறுபாட்டினை வழங்குகின்றது. இது ஒரு உள்ளான வரைவிலக்கணமாக உள்ளமையினால் தனியாரினால் சொந்தங் கொள்ளப்படுகின்ற கல்வி நிறுவனங்களும் இதற்குள் உள்ளடக்கப்படுகின்றன. எவ்வாறெனினும், ஒரு நிறுவனம் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின்கீழ் "ஸ்தாபிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு அல்லது அனுமதியளிக்கப்பட்டிருப்பின் மாத்திரமே" தகவலுக்கான உரிமைச் சட்டம் ஏற்புடையதாகும்.

"ஏதேனும் எழுதப்பட்டச் சட்டம்" என்பது கம்பனிகள் சட்டத்தினை உள்ளடக்குமா என்பது மற்றுமொரு சந்தேகமாகும். கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள் தனியாக உப பிரிவான (உ) இன் கீழ் கையாளப்படுவதனால், இவ் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள "ஏதேனும் எழுதப்பட்ட சட்டம்" என்பது பல்கலைக்கழகங்கள் சட்டம் போன்று குறிப்பாக கல்வி/உயர்கல்வி துறை தொடர்பில் ஏற்புடையதாகின்ற சட்டங்களையே அர்த்தப்படுத்துகின்றது. நியதிச்சட்டத்தின் கீழ்[127]

127 உதாரணமாக இல. 34 1974 ஆம் ஆண்டு பட்டயக் கணக்காளர் ஸ்தாபன உருவாக்கச்சட்டம்.

அல்லது நியதிச்சட்ட அதிகாரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு தொழிற்சார் நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவை தொடர்பில் தகவலுக்கான உரிமைச் சட்டம் ஏற்புடையதாகும்.

6 ஒழுங்கமைப்பாளர்கள் தகவல்களின் வைப்புக்கள்

பகிரங்க மற்றும் தனியார் பரப்புகளுக்கு இடையில் வைக்கத்தக்க மற்றுமொரு வகையான நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவை சுயாதீன நிறுவனங்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் என்ற வடிவில் காணப்படுகின்ற சந்தை ஒழுங்கமைப்பு அமைப்புக்களாகும். நன்கறியப்பட்ட ஒழுங்கமைப்பாளர்களாக இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் ஆணைக்குழு, தொலைதொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி சபை, கம்பனிகள் பதிவாளர் மற்றும் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்பு சபை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்நிறுவனங்கள் அவற்றின் சட்ட ஆணையின் காரணமாக மற்றும் அவற்றினால் ஒழுங்கமைக்கப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பான பாரியளவிலான தகவல்களைக் கொண்டுள்ளமையினால், சந்தேகத்திற்கிடமின்றி தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பகிரங்க அதிகார சபைகள் என்ற வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்படும். விசேடமாக இத்தகைய நிறுவனங்களின் பின்னணியில், ஒழுங்கமைப்பவரினால் வைத்திருக்கப்படும் ஒழுங்கமைக்கப்படுபவர்களின் தகவல்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்குள் உள்ளடக்கப்பட இயலுமா என்ற கேள்வி எழுகின்றது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் தவிர்ந்த ஏனைய தகவல்கள் தொடர்பில் இதற்கான பதில் நேர்மறையானதாக இருத்தல் வேண்டும்.

7. “உடைமை, காவல் அல்லது கட்டுப்பாடு”

பிரிவு 3 இன் கீழான தகவலுக்கான உரிமையானது அத்தகவல் பகிரங்க அதிகார சபையின் “உடைமையில், காவலில் அல்லது கட்டுப்பாட்டில்” காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரமே அளிக்கப்படுகின்றது. உடைமை, காவல் மற்றும் கட்டுப்பாடு என்பன சொந்தத்தின் பண்புகளாக காணப்படுகின்றபோதிலும் கூட, பகிரங்க அதிகார சபையானது தகவலை சொந்தங் கொண்டிருக்கத் தேவையில்லை. உடைமை என்பது ஒரு நபர் ஒன்றை உடைமை கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் அதன்மீது பிரயோகிக்கின்ற கட்டுப்பாடாகும். கட்டுப்பாடு என்பது ஒரு விடயத்தின்மீது அதிகாரத்தினைக் கொண்டிருத்தலாகும். காவல் என்பது ஒன்றின் மீது பாதுகாப்பான அக்கறையினைக் கொண்டிருத்தலாகும்.

குறிப்பிட்டத் தகவல் ஏற்கனவே பகிரங்க பரப்பில் காணப்படுமாயின், அத்தகவல் குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபையின் “உடைமையில், காவலில் அல்லது கட்டுப்பாட்டில்” காணப்படுவதாகக் கருதப்பட முடியாது. குறிப்பிட்ட தகவலானது வேறு யாரிடமும் காணப்படாது பகிரங்க அதிகார சபையிடம் மாத்திரம் காணப்படுதல் வேண்டும்.

டெல்லி மேல் நீதிமன்றமானது பின்வருமாறு கூறுகின்றது:

தகவல்கள் தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்ற “வைத்திருத்தல் வேண்டும்” அல்லது “ஏதேனும் பகிரங்க அதிகார சபையின் கட்டுப்பாட்டின்கீழ்” போன்ற சொற் பிரயோகங்கள் குறிப்பிட்ட தகவலானது வேறு யாரிடமுமன்றி குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபையினால் அதன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப்படுதல் வேண்டும் என்பதனை அர்த்தப்படுத்துகின்றது. அது ஏற்கனவே பகிரங்க அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்காது, அதாவது, பொதுவாக பிரஜைகளுடன் பகிரப்பட்டுள்ளத்

தகவல்களை உள்ளடக்காது. அத்துடன், குறிப்பிடப்பட்டுள்ள நடபடிமுறையினூடாக மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதனூடாக பகிரங்க அதிகார சபையிடமிருந்து குறிப்பிட்டத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான நியதிச்சட்ட பொறிமுறையொன்று காணப்படுமிடத்து, அத்தகவல்களும் இதற்குள் உள்ளடக்கப்படமாட்டாது. அவ்வாறாயின், பகிரங்க அதிகார சபை பகிர்ந்து கொள்வதற்கு நியதிச்சட்ட ரீதியாகக் கடப்பட்டுள்ள அத்தகையத் தகவல்களை பகிரங்க அதிகார சபை "வைத்திருக்கின்றது" அல்லது "கட்டுப்படுத்துகின்றது" என கூற இயலாது...[128]

8. அணுகுவதற்கான உரிமையின் விதிவிலக்கு: பிரிவு 5

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான விதிக்குரிய விதிவிலக்கு, அதாவது தகவல்களை மறுப்பதற்கான அடிப்படைகள் பகுதி II இல் உள்ளது. பிரிவு 5 இன் கீழ் உப பந்தி 5(1) இன் (அ) - (ங) வரையுள்ள விடயங்களின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற தகவல்களை மறுப்பதற்கான ஆணை பகிரங்க அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.[129] இது தகவலுக்கான உரிமைச் சட்டமானது பிரிவு 5(1) இன் கீழ் வரையறுக்கின்றதற்கமைய தகவல்களை பாதுகாப்பது தொடர்பில் விழிப்புடன் உள்ளமையினை எடுத்துக் காட்டுகின்றது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(2) - 5(4) என்பன மேலதிக தகுதிப்பாடுகளை கூறுகின்றன. இவ்வாக்கத்தின் நோக்கத்திற்காக அந்தரங்கம் மற்றும் வர்த்தக இரகசியங்கள் என்ற இரண்டு விதிவிலக்குகள் விபரமாக ஆராயப்படுகின்றன.

---

128 கம்பனி பதிவாளர் மற்றும் ஏனையோர் எதிர் தர்மேந்திர குமார் (W.P.(C) 11271/2009) கிடைக்கக்கூடிய வலைத்தளம்: <*http://www.supremecourtcases.com/index2.php?option=com_content&itemid=99999999&do_pdf=1&id=45279*>.

129 பிரிவு5(1) பாவிக்கப்படும் வார்த்தை வேண்டும் என்ற வார்த்தை மறுக்கப்பட்டது.

8.1 அந்தரங்கம்

தனிப்பட்ட வாழ்க்கைக்கான உரிமை என்பது சர்வதேச சட்டத்தில் நன்கு அங்கீகரிக்கப்பட்டதொன்றாகும். தனிப்பட்ட சுய அதிகாரம், தனிப்பட்ட விருத்தி மற்றும் ஏனைய மனித உயிர்கள் மற்றும் உலகத்துடன் உறவினை ஸ்தாபித்து கொள்வதற்கான மற்றும் அதனை விருத்தி செய்வதற்கான உரிமை என்பவற்றுக்கான அத்தியாவசியமான முன் நிபந்தனையாக இவ்வுரிமை தேவை என்ற அடிப்படையில் இது பரந்தளவில் பொருட்கோடல் செய்யப்படுகின்றது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) ஆனது, எந்தவொரு பகிரங்க செயற்பாடு அல்லது அக்கறையுடன் தொடர்பற்ற அல்லது பாரியளவிலான பகிரங்க அக்கறை வெளியிடுகையினை நியாயப்படுத்தாத போது அல்லது குறிப்பிட்ட நபர் வெளியிடுகைக்கான தனது சம்மதத்தினை எழுத்தில் வழங்கியிராதபோது தனிநபரொருவரின் அந்தரங்கத்தில் தேவையற்ற தலையீடுகளைச் செய்கின்ற தனிப்பட்ட தகவல்களுக்கான கோரிக்கைகளை நிராகரித்தல் வேண்டும் என்பதனைத் தேவைப்படுத்துகின்றது.

நாம் அவதானிக்கின்றதற்கமைய, இப்பிரிவானது அகவயத்தன்மை வாய்ந்தது. அதாவது தீர்மானமெடுப்பவர் ஒவ்வொரு கோரிக்கையினதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு தனது தீர்மானத்தினை எடுப்பதற்கான தற்துணிபு வழங்கப்பட்டுள்ளது. உறுப்புரை 14அ (2) ஆனது அந்தரங்கத்திற்கான உரிமை தகவலுக்கான உரிமையினை விஞ்சி நிற்பதாக அங்கீகரிக்கின்றது. உண்மையில், அவ் உறுப்புரையின் வசன அமைப்பானது "....சனநாயக சமூகமொன்றில் அவசியமாகக்கூடியவாறாக சட்டத்தினால் விதந்துரைக்கப்படும் அத்தகைய மட்டுப்பாடுகள் தவிர்ந்த, நலன் கருதி... அந்தரங்கத்தன்மை..." இது அந்தரங்கத்திற்கான உரிமையின் முக்கியத்துவத்தினையும் ஜனநாயக சமூகமொன்றில் அது முக்கிய ஆக்கக்கூறு என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது.

"அந்தரங்கம்" என்பது மனித கௌரவத்தை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படையாக விளங்குவதுடன் அது தனிநபர்கள் கருத்துக்களை விருத்தி செய்வதனையும் உறவுமுறைகளை ஸ்தாபிப்பதனையும் இயலுமானதாக்குகின்றது.[130] அந்தரங்கத்திற்கான உரிமை பற்றி எடுத்தியம்பிய இந்திய உச்ச நீதிமன்றத்தின் அண்மையத் தீர்ப்பானது, தனியாக இருப்பதற்கான உரிமையானது, மனிதர்கள் தலையீடுகளின்றி சுதந்திரமாக வாழ்வதற்கு மிக அவசியமான, "மீறப்படாத தனித்தன்மை" என்பதனை வெளிப்படுத்துகின்றது என கூறியது.[131]

அந்தரங்கத்திற்கான உரிமை என்பது அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடொன்றாகக் காணப்பட்டபோதிலும் கூட, ஏனைய பல நாடுகளைப் போலவே இலங்கையிலும் அந்தரங்கத்திற்கான உரிமையை பாதுகாப்பதற்கு தனியான சட்டம் இல்லை.[132] 1910 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலந்தொட்டே நீதிமன்றங்கள் அந்தரங்கத்திற்கான உரிமையினை அங்கீகரித்துள்ளன.[133] "அந்தரங்கம்" எவற்றை உள்ளடக்குகின்றது என்பது தொடர்பாக துல்லியமான சட்ட வரைவிலக்கணம் இல்லை. பரந்தளவில் கூறுவோமாயின், அந்தரங்கம் என்பது தனித்து இருக்கவிடப்படுவதற்கான உரிமை அல்லது தலையீடுகளிலிருந்தான சுதந்திரம் என கூறலாம். தகவல் அந்தரங்கம் எனப்படுவது உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு சேகரிக்கப்படலாம் மற்றும் பயன்படுத்தப்படலாம் என்பது தொடர்பில் கட்டுப்பாட்டினைக்

130 ஜோன் ஸ்டுவோட் மில் அவரின் பட்டயமான சுதந்திரத்தில் என்பதில் தனியுரிமை என்பதனை வரைவிலக்கணம் செய்தார். சமுதாயத்திற்கு அவர் ஏதேனும் ஒரு விதமான நடத்தைக்கு ஒரே ஒரு பகுதியாக இருக்கின்றார். இது மற்றவர்களுக்கும் பொருந்தும். இத்தகைய பகுதியானது அவரின் சுதந்திரமானது பூரணமான உரிமையாக கருதப்படுகின்றது. அவரின் மனதாலும் உடலாலும் தனிப்பட்ட இறையாண்மை கொண்டவர்....."

131 நீதியரசர் கே.எஸ் புத்தசுவாமி மற்றும் ஏனையோர் எதிர் இந்தியன் யூனியன் மற்றும் ஏனையோர் கிடைக்கப்பெறக்கூடிய வலைத்தளம்: <http://supreme-courtofindia.nic.in/pdf/LU/ALL%20WP(C)%20No.494%20of%202012%20Right%20to%20Privacy.pdf,.

132 பெர்னாண்டே எதிர் இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் ஏனையவர்கள் 1996 1 SLR 157 at page 176 / இரட்நாயக்க மற்றும் ஏனையோர் எதிர் மெடிவேக மற்றும் ஏனையோர 2005 1 SLR 323 at p. 335 /.

133 சின்னப்பா எதிர் கனகர்ட் 13 NLR 157.

கொண்டிருப்பதற்கான உரிமை ஆகும். ஏனையவர்கள் தெரிந்து கொள்ள அவசியமற்ற விடயங்களாக அத்தகையத் தகவல்களை கருதவியலும்.

தகவலுக்கான கோரிக்கையினை மறுக்கின்றபோது பிரயோகிக்கத்தக்க பல்வேறு சோதனைகளை பிரிவு 5(1) (அ) ஆனது குறிக்கின்றது.

முதலாவதாக, அது ஒரு "தனிப்பட்ட தகவலா?" "தனிப்பட்ட தகவல்" என்பதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறை இல்லாதபோதிலும் கூட, அது அடையாளப்படுத்தப்பட்ட தனிநபரொருவரின் அல்லது நியாயமாக அடையாளப்படுத்தப்படக்கூடிய ஒரு தனிநபரின் தகவல் அல்லது அபிப்பிராயம் என கருதப்படலாம்.[134] இது ஒரு தனிநபரின் தனிப்பட்ட மற்றும் குடும்பம், தொழில் உள்ளடங்கலாக அவருடைய சமூக உறவுகள் சார்ந்த தகவல்கள் என பொருள்படுகின்றது. அவை அரசியல் அபிப்பிராயம், பாலின அபிப்பிராயம், தனிப்பட்ட உறவுமுறைகள், குடும்ப விபரங்கள் போன்ற கூருணர்திறன் மிக்க தகவல்களை உள்ளடக்கலாம். மேலும், அது உடல்நிலை பற்றியத் தகவல்கள், செலவழிக்கும் முறை தொடர்பான தகவல்கள், கடன் தகவல்கள், வங்கி அறிக்கைகள், தொழிலாளர் அறிக்கைகள் போன்ற தகவல்களையும் உள்ளடக்கும். "தனிப்பட்ட தகவல்கள்: என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படக்கூடிய அனைத்து விதமான தகவல்களையும் கொண்ட ஒரு முழுமையான பட்டியலை உருவாக்குவது சாத்தியமற்றதாகும். அது ஒவ்வொரு நிகழ்வினதும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு மாற்றமடையும். பிரயோகிக்கப்படக்கூடிய பொதுவான விதி யாதெனில், குறிப்பிட்டத் தகவல் அடையாளப்படுத்தப்பட்ட தனிநபர் சார்பானதெனில் அல்லது அடையாளப்படுத்தக்கூடிய தனிநபரொருவர் சார்பானதெனில் அது தனிப்பட்ட தகவலாகக் கருதப்படும் என்பதாகும்.[135]

134. ல.119 1988 ஆம் ஆண்டு தனிப்பட்ட சட்டம் அவுஸ்ரேலியா பாகம் II வகுதி I - பொதுவான வரைவிலக்கணம்.

135 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சட்டத்தின்கீழ் (திருத்தப்பட்டவாறு) செய்யப்படுகின்ற பிரகடனங்களிலுள்ள தகவல்கள் தொடர்பில் ஒரு பிரச்சனை எழுகின்றது. பிரிவு 5(3) ஆனது, "எந்தவொரு நபரும்" எந்தவொரு பிரகடனத்தினையும் கோரி பார்வையிட இயலும் என கூறுவதுடன், குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டணத்தினைச் செலுத்துவதனூடாக அப்பிரகடனத்தினைப் பெற்றுக் கொள்கின்ற உரிமையினைக் கொண்டிருப்பார் என கூறுகின்ற போதிலும்கூட, அது பிரிவு 8 இல் விஞ்சிநிற்கின்ற இரகசியம் தொடர்பான ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகும். பிரிவு 8 இற்கு அமைவாக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்தின் பிரிவு 5 இன்படி அத்தகைய பிரகடனமொன்றினைப் பெற்றுக் கொள்கின்ற எந்தவொரு நபரும் அதனை இரகசியமாக வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் அவ் இரகசியத்தை காப்பேன் என உறுதியெடுத்தல் வேண்டும். அந் நபர் அப்பிரகடனத்தினை இலஞ்சம், மதுவரி, பரிவர்த்தனைக் கட்டுப்பாடு மற்றும் உள்நாட்டு இறைவரி போன்ற சட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட நடபடிமுறைகளையன்றி வேறு எந்நடபடிமுறைகளிலும் வெளிப்படுத்தக்கூடாது. இரகசியம் தொடர்பான இக்கடப்பாட்டிற்கு முரணாக நடத்தல் குற்றவியல் தண்டனையினை விளைவாக்கும்.[136] இத்தகைய பின்னணியில், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டமானது பிரகடனங்களை "தனிப்பட்ட தகவல்களாக" கருத எத்தனிக்கின்றது என்பதனை நியாயமாக ஊகிக்க இயலும். இவை எல்லாவற்றையும் விட, சொத்துக்கள் பிரகடனத்தில், பிரகடனப்படுத்துபவர்கள், அவர்களுடைய வாழ்க்கைத்துணைகள் மற்றும் பிள்ளைகளின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இரண்டாவதாக, அத்தகைய தகவலின் வெளிப்படுத்துகை ஏதேனும் பகிரங்க செயற்பாடு அல்லது அக்கறையுடன் தொடர்புடையதா? அதாவது இது குறிப்பிட்ட தகவலானது ஏதேனுமொரு பகிரங்க செயற்பாடு அல்லது பகிரங்க அக்கறையுடன்

136 பிரிவு-8[4] சொத்துவப்பிரகடனம் மற்றும் பொறுப்புடைமைச் சட்டம்.

தொடர்புறுகின்றதா என்பதனை வினவுகின்றது. "பகிரங்க செயற்பாடு அல்லது அக்கறை" என்ற தொடரானது பரந்ததாகும். பகிரங்க செயற்பாடு என்பதன் மூலம் குறிக்கப்படுவது யாதென அதன் சொல்லமைப்பின்படி பார்ப்பின் பொது மக்களுடன் தொடர்புடைய எந்தவொரு செயற்பாடாகவும் அது அமையலாம்.[137]

"பகிரங்க அக்கறை" என்பது பிரஜைகளுக்கிடையில் காணப்படுகின்ற பொதுவான அக்கறையாக அல்லது பொதுமக்கள் மீது தாக்கம் செலுத்துகின்ற பிரச்சனையாக அல்லது பொது மக்களுக்கு பொதுவாக அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவிற்கு மாத்திரம் பொருத்தமானதாகவுள்ள ஒரு விடயமாகக் கருதப்படலாம். அது பகிரங்க அமைப்புக்களின் விவகாரங்களுடன் தொடர்புற்றவையாக இருக்கலாம். அது வெறும் ஆர்வத்தை மாத்திரம் அர்த்தப்படுத்தக்கூடாது, மாறாக அது அரசியல் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் நலன் என்பவற்றுடன் தொடர்புற்றவையாக இருக்க வேண்டும்.[138] தகவலின் உபயோகப் பெறுமதியானது பகிரங்க செயற்பாடு அல்லது அக்கறையாகக் கருதப்படுவதற்கு அது வரம்பெல்லையினைத் தாண்டியிருத்தல் வேண்டும். அதாவது, வெறுமனே ஆர்வத்திற்காக அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக கேட்கப்படுகின்ற தகவலுக்கான கோரிக்கைகள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் சார்பான தன்மையினை பெற்றுக் கொள்ள மாட்டாது.

இப் பின்னணியில், அரசியலமைப்பின் உறுப்புரை 14 அ குறித்துக் காட்டப்படுதல் வேண்டும். உறுப்புரை 14 அ ஆனது "...ஒவ்வொரு பிரஜையும் பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு மற்றும் பாதுகாப்பதற்கு

137 உதாரணமாக அறக்கட்டளை அமைப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் பற்றிய குற்றவியல் அறிக்கை அல்லது அவரின் சேவையினை பொதுமக்களுக்கு அதிகளவில் வழங்கும் தனியார் வகுப்பு ஆசிரியரின் கல்வித் தகமை மற்றும் பல.

138 அகராதியிலிருந்து ஏற்கப்பட்டது. கிடைக்கப்பெறப்பட்ட வலைத்தள முகவரி <*https://legal-dictionary.thefreedictionary.com/Public+Interest*>.

தேவைப்படுத்தப்படுவதுமானத் தகவலை, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அணுவதற்கான உரிமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்..." வெறும் ஆர்வத்தினை அடிப்படையாகக் கொண்ட விண்ணப்பங்கள் பாதுகாக்கப்படவில்லை என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது. பிரஜைகளுடைய உரிமை நேரடியானவையாக, மறைமுகமானவையாக அதேபோல வழித்தோன்றல் உரிமைகளாகக் காணப்படலாம்.[139] உரிமைகள் இவ்விரிவான பரப்பானது உறுப்புரை 14 அ இன் கீழ் ஏற்புடையதாகின்ற உரிமைகளை தானாக அதிகரிக்கின்றது. தகவலுக்கான உரிமை என்பது ஒரு உரிமையாக விளங்குவதனால், "..பிரஜையொருவரின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு மற்றும் பாதுகாப்பதற்கு தேவைப்படுத்தப்படுவதுமானத் தகவலை..." என்ற உறுப்பரை 14 அ இன் சொற்தொடர் குறுகலாக பொருட்கோடல் செய்யப்படாது பரந்தளவில் பொருட்கோடல் செய்யப்படுதல் வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகளில் வரையறுக்கப்பட்டுள்ளதனைப் போன்று, பகிரங்க அக்கறையினை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தலாம். இதன்போது, இவ்வரைவிலக்கணமானது தோற்றம் பெறுகின்ற உள்ளார்ந்த அளவுருக்களை மனதில் கொள்ளுதல் வேண்டும். அதாவது, பாதிக்கப்பட்ட நபர் அல்லது குழு வறுமை, ஆதரவின்மை அல்லது உடற்குறைபாடு அல்லது சமூக ரீதியாக அல்லது பொருளாதார ரீதியாக பாதகமான நிலையில் காணப்படுதல் போன்ற ஏதேனுமொரு காரணத்தினால் நீதிமன்றத்தை நாடி நிவாரணம் பெற இயலாதுள்ளபோது, அரசாங்க நிறுவனங்கள் பகிரங்க அக்கறைக்கு முரணான வகையில் சட்டங்களை மீறுவதனைத் தடுக்கும் பொருட்டு நீதிமன்றங்கள் பகிரங்க அக்கறை வழிக்காட்டுதல்களை அனுமதிக்கின்றது.

---

139 மற்றைய உரிமைகள் ஏனைய உரிமைகள் பூர்த்தி செய்யப்பட அத்தியாவசியமானது.

மூன்றாவதாக, அவ் வெளியிடுகையினை பாரிய பகிரங்க அக்கறை நியாயப்படுத்தாத வரை அது அந்தரங்கத்தில் தேவையற்ற தலையீடுகளை ஏற்படுத்துகின்றதா என்பதாகும். 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பில், இந்திய உச்ச நீதிமன்றமானது[140] அந்தரங்கம் தொடர்பில் முழுமையாகக் கையாண்டதுடன் முடிவாக அந்தரங்கத்திற்கான உரிமையினை அங்கீகரித்தது. ஏனையவற்றுக்கு மத்தியில், அத்தீர்ப்பானது அந்தரங்கத்தின் நான்கு அடிப்படை நிலைகளை குறித்து காட்டியது[141] (i) தனிமை - தனிநபரொருவர் "மனம் மற்றும் மனசாட்சிக்கு இடையிலான உள் கலந்துரையாடலில்" ஈடுபடுகின்ற மிக முழுமையான அந்தரங்க நிலை (ii) நெருக்க நிலை -இது வெறுமனே வாழ்க்கைத்துணைகளுக்கிடையில் உள்ள நெருக்கமான உறவினை மட்டுமல்லாது குடும்பம், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களுக்கிடையிலான உறவினையும் குறிக்கின்றது (iii) தெரியப்படுத்த விரும்பாத நிலை - தனிநபரொருவர் பகிரங்க பரப்பில் இருப்பதனைப் பொருட்படுத்தாது அடையாளப்படுத்தப்படுதலிலிருந்து விடுபாட்டினைத் தேடுதல்மற்றும் (iv) ஒதுங்கியிருக்கின்ற நிலை - எமது சில விபரங்கள் மிகவும் தனிப்பட்டவையாக மற்றும் புனிதமானவையாக இருக்கின்ற காரணத்தினால் அல்லது வெளிப்படுத்துதல் அபசாரமானதாக அல்லது வெட்கத்திற்குரியதாக உள்ள காரணத்தினால் அவற்றை ஏனையோருக்கு வெளிப்படுத்தாமலிருப்பதற்கான தேவையினை குறிக்கின்றது.

8.2 வர்த்தக நம்பிக்கை மற்றும் வணிக இரகசியங்கள்

பிரிவு 5(1)(ஈ) ஆனது வர்த்தக நம்பிக்கை, வணிக இரகசியங்கள் அல்லது புலமைச்சார் சொத்து உள்ளடங்கலாக

---

140 நீதியரசர் கே.எஸ் புத்தசுவாமி மற்றும் ஏனையோர் எதிர் இந்தியன் யூனியன் மற்றும் ஏனையோர் கிடைக்கப்பெறக்துடிய வலைத்தளம்: *<http://supremecourtofindia.nic.in/pdf/LU/ALL%20WP(C)%20No.494%20of%202012%20Right%20to%20Privacy.pdf>*.

141 பேராசிரியர்.ஆலன் பேமர் வெஸ்டின் ஆல் வெளிப்படுத்தப்பட்ட. (1929 - 2013).

2003 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ள தகவல்களை அவற்றின் வெளியிடுகை மூன்றாந் திறத்தவரின் போட்டி நிலைக்கு ஊறினை ஏற்படுத்துமாயின் அத் தகவல்களின் வெளியிடுகையில் பாரிய பகிரங்க அக்கறை தங்கியுள்ளது என பகிரங்க அதிகார சபை திருப்தியுறாத வரையில் அத்தகவல்களின் வெளியிடுகையினை விலக்களிக்கின்றது.

வர்த்தக நம்பிக்கை என்பது குறிப்பிட்ட தகவல்கள் வழங்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டும் பகிரப்படலாம், ஆனால் மூன்றாந் திறத்தவர்களிடம் பகிரக்கூடாது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தில் வர்த்தக நம்பிக்கை பற்றி விரிவான வழிகாட்டுதலின்மையினால், தகவல் அலுவலர்கள் சந்தர்ப்பங்களின் அடிப்படையில் தீர்மானமெடுக்க வேண்டியவர்களாகின்றனர். எவ்வாறெனினும், பிரிவு 5(1)(ஈ) ஆனது, பாரிய பகிரங்க அக்கறை காணப்படுமாயின் அங்கு வர்த்தக நம்பிக்கை காணப்படினும் கூட தகவல் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், பகிரங்க அதிகார சபையானது வர்த்தக நம்பிக்கையினை பகிரங்க அக்கறையுடன் சமநிலைப்படுத்த வேண்டும்.

குயின்ஸ்லாந்தின் தகவலுக்கான ஆணைக்குழுவானது எத்தகவல்கள் “வர்த்தக நம்பிக்கை” என்ற வகைப்பாட்டிற்குள் உள்ளடக்கப்படும் என்பதனைத் தீர்மானிப்பதற்கு ஐந்து கட்டளை விதிகளை வழங்குகின்றது[142] என்பதுடன் அவ் ஐந்து கட்டளை விதிகளையும் பூர்த்தி செய்கின்ற பட்சத்தில் மட்டும்தான் குறிப்பிட்ட தகவல் வர்த்தக நம்பிக்கை என்ற அடிப்படையில் வெளியிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படும்.

---

142 ரகசிய தன்மை என்றால் என்ன? மூன்றாம் நபர்கள் மற்றும் விண்ணப்பதாரரிற்கான அறிமுகம்” (தகவல் ஆணையாளரின் அலுவலகம் குயின்ஸ்லாந்து பெற்றுக்கொள்ளப்பட்டது *<https://www.oic.qld.gov.au/guidelines/for-community-members/information-sheets-access-and-amendment/what-is-confidentiality>*.

அரசாங்க ஒப்பந்தங்கள் மற்றும் வர்த்தக நம்பிக்கை

குறிப்பிட்ட தகவலானது அனைத்து கட்டளை விதிகளையும் பூர்த்தி செய்ய முடியாமல் போகின்றபோதும், அத்தகைய வெளியீட்டிற்கெதிராக அது பகிரங்க அக்கறை காரணிகளை முன்வைக்க இயலும். வெளியிடுவதிலுள்ள பகிரங்க அக்கறையை வெளியிடாமலிருப்பதற்கான பகிரங்க அக்கறை விஞ்சி நிற்குமாயின் அத்தகவலை வெளியிடுதல் பகிரங்க அக்கறைக்கு முரணாக அமையும். அரசாங்கம் தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை செய்கின்றபோது அவற்றுள் நம்பகத்தன்மை வாசகங்கள் காணப்படும் என்பதனை அங்கீகரிக்கின்ற குயின்ஸ்லாந்தின் தகவலுக்கான ஆணைக்குழுவானது அவற்றை தகவலுக்கான உரிமைச் சட்டம் விஞ்சலாம் என கூறுகின்றது. இதேவிடயம் மின்னஞ்சல் விலக்களிப்பு தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டது. இதன்போது தகவலின் நம்பகத்தன்மைக்கு மதிப்பளித்தலினூடாக போட்டியினை ஊக்கப்படுத்தல் மற்றும் நம்பகத்தன்மையினை ஸ்தாபித்தல் என்பனவும் பகிரங்க அக்கறைகளாகக் கருதப்படுமென்பது அங்கீகரிக்கப்பட்டது.

அரசாங்க ஒப்பந்தங்களில், குறிப்பாக வெளியாட்களின் சேவையினை நாடுகின்ற ஒப்பந்தங்களில் பகிரங்க அக்கறை என்ற ஆக்கக்கூறானது, வெளிப்படைத்தன்மை, ஊழல்-எதிர்ப்பு, பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லாட்சி போன்ற தகவலுக்கான உரிமை ஆட்சியின் அடிப்டைகளுடன் தவிர்க்க முடியாத விதத்தில் இணைந்துள்ளது. பிரித்தானியவிலுள்ள தேசிய தணிக்கை அலுவகமானது[143] "...ஒப்பந்தம் செய்பவர்களுள் எவரும் பிரச்சனைகளை மறைக்க முடியாது மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தங்களுடைய வாடிக்கையாளர்களின்

143 ஐக்கிய இராச்சியம்: தேசிய தணிக்கை அலுவலகம் "பகிரங்க சேவையினை வழங்குவதில் ஒப்பந்தகாரர்களின் பிரதான வகிபங்கு" கார்த்திகை 2013 *<https://www.nao.org.uk/wp-content/uploads/2013/11/10296-001-BOOK-ES.pdf>*.

(அரசாங்கத்தின்) தேவைகளை மையப்படுத்துவதே அவர்களுடைய வர்த்தக அக்கறையாக அமைகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு வெளிப்படைத்தன்மை மிக அவசியமாகும். இது வாடிக்கையாளருக்கு அறிக்கையிடப்படுகின்ற முதன்மை செயலாக்கக் காட்டிகளை விட மேலதிக செயற்பாடுகளைத் தேவைப்படுத்துகின்றது. உதாரணமாக, அது பகிரங்க அறிக்கையிடல், பகிரங்க மீளாய்விற்காக திறந்திருத்தல், பணியாளர்கள் விநியோக சங்கிலியிலுள்ள பிரச்சனைகளை அறிக்கையிடுவதற்கு அவர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் பாவனையாளர் பின்னூட்டம் போன்றனவற்றை தேவைப்படுத்துகின்றது. ஆகவே, இதனூடாக வர்த்தக நம்பிக்கையினைக் காட்டிலும் பாரிய பகிரங்க அக்கறையே அதிகளவில் வலுப்படுத்தப்படுகின்றது."

புலமைச் சொத்து சார் பரிசீலனைகள்

வணிக இரகசியமென்பது வணிகத்தில் அல்லது அத்தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள ஒருவர் அவர்களுடைய நன்மைக்காக அத்தகவலை பயன்படுத்தக் கூடியதாக இருக்குமென்பதால் இது நம்பகத்தன்மையான தகவலிலிருந்து வேறுபடுகின்றது. தகவலுக்கான சுதந்திர சட்டமூலமானது (ஸ்கொட்லாந்து) பாராளுமன்றத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டபோது, அதனை முன்மொழிந்த அமைச்சர், "...வர்த்தக இரகசியம் என்பது வியாபாரத்தின் ஒரு சொத்தாகக் கருதப்படலாம்- பெரும்பாலும் மிகவும் பெறுமதிமிக்க சொத்தாகக் கருதப்படக்கூடியதாகும். Drambuie மற்றும் IrnBru என்பவற்றுக்கான செய்முறை குறிப்புக்கள் வர்த்தக அக்கறையிலிருந்து வேறுபட்ட குணாம்சங்களை உடையவை என மக்களால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக இரகசியங்களுக்கான உதாரணங்களாகும். சில சமயங்களில் வர்த்தக இரகசியங்கள் காப்புரிமை, பதிப்புரிமை போன்ற சட்ட பாதுகாப்பினைக் கொண்டிருக்கும், ஆனால் பெரும்பாலும் அதன்

ஒரேயொரு பாதுகாப்பாக அமைவது அவர்களின் இரகசியத்தைப் பேணுதலாகும்..."[144]

9 "பாரிய பகிரங்க அக்கறை" காப்பு வாசகத்திற்கான காப்பு வாகசம்

விஞ்சி நிற்கின்ற பகிரங்க அக்கறையானது தகவல்களை அணுகுவதற்கான உரிமையினை மீட்டளிக்கும். 2016 ஆம் ஆண்டின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 4 ஆனது "இதன் ஏற்பாடுகள் வேறு எவ் எழுதப்பட்ட சட்டத்தில் முரணாக கூறியிருப்பினும் கூட அதனைப் பொருட்படுத்தாது வலுவிலிருக்கும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்திற்கும் இடையில் முரண்பாடு எழுகின்றபோது இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கும்" என கூறுகின்றது. இதனைப் பார்க்கின்றபோது பிரிவு 5 இற்கு உட்பட்டு பாரிய பகிரங்க அக்கறையுடைய தகவல்களின் வெளிப்படுத்துகைக்கு சார்பாகவே சட்டவாக்குனரின் எண்ணம் அமைந்திருப்பதாக கருத இயலும். "பாரிய பகிரங்க அக்கறை" என்பதற்கு நியதிச்சட்ட வரைவிலக்கணமொன்று இன்மையினால் அது ஒவ்வொரு நிகழ்வினதும் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படும். "பகிரங்க பாரிய அக்கறை" என்ற சொற்தொடரானது வெறும் "பகிரங்க அக்கறை" என்பதுடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது உயர் வரம்பெல்லையினைக் கொண்டிருக்கின்றது.

---

144 ஐக்கிய இராச்சிய தகவல் ஆணைக்குழுவின் தீர்மான குறிப்பு ரோயல் மேயில் குரூப் ஆனது தன்னுடைய முகவரியிடப்படாத பரிமாற்றப்பட்ட மின்னஞ்சல்களினை கொண்ட தற்போதைய உடன்படிக்கைகளை வெளிப்படுத்த கோரியது. கிடைக்கப்பெற கூடிய வலைத்தலம் <*https://www.nao.org.uk/wp-content/uploads/2013/11/10296-001-BOOK-ES.pdf*> <*https://ico.org.uk/media/action-weve-taken/decision-notices/2011/600180/fs_50313967.pdf*> (15 ஒக்டோபர் 2018 அன்று அணுகப்பட்டது).

10 தகவல் உரிமைக்கான ஆட்சி மற்றும் கூட்டுத்தாபன துறை

நல்லாட்சியை உறுதிப்படுத்தும்பொருட்டு அரசாங்கத்தின் மொத்த செயற்பாட்டிலும் பிரஜைகள் பங்கு பற்றுவதனை உறுதிப்படுத்துவதற்காகவே தகவலுக்கான உரிமை ஆட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. தகவலுக்கான உரிமை ஆட்சியானது, பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து தகவல்களை கோருவதற்கான உரிமையினைத் தெளிவாகவும் உறுதியாகவும் ஸ்தாபித்துள்ளது என்பதுடன் பகிரங்க அதிகார சபைகளினூடாக தனியார் துறையின் தகவல்களை அணுகுவதற்கும் ஏற்பாடு செய்துள்ளது. உலகமயமாதல், தனியார்மயமாதல், கட்டுப்பாடு மற்றும் பொது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளுக்கு பாரம்பரியமற்ற நிதி முறைமைகளைப் பயன்படுத்துதல் என்பவற்றினால் தனியார் நிறுவனங்கள் பகிரங்க பணிகளை ஆற்றக்கூடிய வகையில் தனது பரப்பினை விஸ்தரித்தல் தொடர்ச்சியாக இடம்பெறும். ஊழலற்ற ஆட்சியினை உறுதி செய்வதற்கு வெளிப்படைத்தன்மை பிரதான அம்சமாகும்.

ஆகவே, தகவலுக்கான உரிமை ஆட்சி மற்றும் தனியார் துறை என்பன ஒன்றையொன்று நேராக சந்தித்து கொள்கின்றபோது அவை பொது சேவை மற்றும் ஆட்சி என்பன பகிரங்க நிறுவனங்களினாலா அல்லது தனியார் நிறுவனங்களினாலா முன்னெடுக்கப்படுகின்றன என்பதனை பொருட்படுத்தாது, ஊழலை எதிர்த்து மற்றும் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லாட்சியினை மேம்படுத்துவதனூடாக பகிரங்க வாழ்வில் பிரஜைகளின் பங்குபற்றலை உறுதி செய்யக்கூடிய ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாகப் பார்க்கப்படுதல் மற்றும் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

ஓரங்கட்டப்பட்ட மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்கள் தகவலுக்கான உரிமையினைப் பயன்படுத்துகின்ற முறைமை: தகவலுக்கான உரிமை அரச பொறுப்புக்கூறுதலை ஏற்படுத்துவதற்காக பிரயோகிக்கப்படுகின்றமை தொடர்பான மதிப்பீட்டு சோதனை[145]

அஷ்வினி நடேசன் மற்றும் ஆதில் நாதனி

1.அறிமுகம்

1966 ஆம் ஆண்டு குடியியில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (இலங்கையினால் 1980 ஆம் ஆண்டு ஏற்றங்கீகரிக்கப்பட்டது) உறுப்புரை 19 ஆனது பின்வருமாறு கூறுகின்றது:

> "ஒவ்வொருவருக்கும் அபிப்பிராயத்திற்கான மற்றும் வெளிப்படுத்தலுக்கான சுதந்திரம் உண்டு. அவ் உரிமையானது எவ்வித இடையூறுகளுமின்றி அபிப்பிராயத்தினைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரம் மற்றும் தகவல்களை மற்றும் அபிப்பிராயங்களை அதன் எல்லைகளைப் பொருட்படுத்தாது ஏதேனும்

145. இவ் ஆக்கத்தினை எழுதுவதற்கு ஆதரவளித்த மற்றும் பெறுமதிமிக்க உள்ளடக்கங்களை வழங்கிய தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் கிஷாலி பின்ரோ ஜயவர்தனவிற்கு கட்டுரையாசிரியர்கள் தமது உள்ளார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றனர். தன்னை தகவலுரிமைக்கான ஆணைக்குழுவில் பணியாற்றுவதற்கு ஊக்கப்படுத்திய மற்றும் அதனை இயலுமானதாக்கிய கலாநிதி. சுஜித் சேவியர் (*Windsor Law, Canada*) இற்கு ஆதில் நதனி தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றார். இந்தியாவில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களில் தன்னுடைய நிறுவனம் தகவலுரிமை பணிகளில் ஈடுபட்டமை தொடர்பான தகவல்களை வழங்கிய ஜம்மு, காஷ்மீரின் தகவலுரிமைக்கான அமைப்பினைச் சேர்ந்த கலாநிதி ராஜா முஸ்பர் பட் அவர்களின் பங்களிப்பு பாராட்டுதற்குரியது.

ஊடகமொன்றினூடாக **நாடுவதற்கான** மற்றும் பெற்றுக் கொள்வதற்கான மற்றும் பரிமாற்றுதற்கான சுதந்திரம் என்பனவற்றை உள்ளடக்கும்" (அழுத்தம் சேர்க்கப்பட்டுள்ளது)

தகவலை அணுகுவதற்கான உரிமையானது உறுப்புரை 14அ இனூடாக அடிப்படை உரிமையொன்றாக இலங்கை அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டமானது (தகவலுக்கான உரிமைச் சட்டம்) இந்நாட்டின் வரலாற்றில் ஐயத்துக்கிடமற்றவகையில் அதி முக்கியத்துவம் வாய்ந்தவொன்றாகக் கருதப்படுகின்றது. உச்சபட்ச வெளிப்படுத்துகையினை ஊக்குவிக்கின்ற அதன் துல்லியமான ஏற்பாடுகளின் காரணமாக தகவலுக்கான உரிமைச் சட்டம் வெகுவாக வரவேற்கப்படுகின்றது என்பதுடன் அது தென்னாசியவிலுள்ள சிறந்த சட்டங்களுள் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது.[146]

அறிந்து கொள்வதற்கான உரிமை மற்றும் திறந்த அரசாங்கத்தின் தரவுகள் கிடைக்கும்தன்மை போன்றவற்றின் நன்மைகள் பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன[147] என்பதுடன் அவற்றை விளக்குவதற்கான தேவைப்பாடு மிக அரிதாகவே காணப்படுகின்றது. இலங்கையானது பதட்டமான மற்றும்

---

146 *Global Right to Information Rating: By Country'<https://www.rti-rating.org/country-data/>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

147 எம். நாகராஜ் எதிர். இந்திய யூனியன் (2006) 8 SCC 212 என்ற வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றமானது, சுதந்திரமான பேச்சு மற்றும் வெளிப்படுத்தலுக்கான உரிமையினூடாக உட்கிடையாக பெறப்படுகின்ற அறிந்து கொள்வதற்கான உரிமையின் நேரடி பெறுபேறாக வெளிப்படையான அரசாங்கம் அமைகின்றது என்ற கருத்தேற்பின் அடிப்படையில் தகவல்களை அணுகுவதற்கான உரிமையினை ஊகித்தது. ரிலயன்ஸ் பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட் எதிர். இந்தியன் மும்பை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேபர்ஸ் பிரைவட் லிமிடெட் (1988) 4 SCC 592 என்ற வழக்கில் இந்திய உச்சநீதிமன்றமானது, தொழிற்துறைசார் விடயங்களில் மற்றும் ஜனநாயக வாழ்வின் விருத்தியில் மக்கள் பங்குபற்றும்பொருட்டு அவர்கள் அறிந்து கொள்வதற்கான உரிமையினை பாரியளவில் கொண்டுள்ளார்கள் என கூறியது.

நீண்ட காலம் நிலைத்திருந்த சிவில் யுத்தத்தினைக் கடந்து வந்திருக்கின்ற இச்சந்தர்ப்பத்தில், தகவலுக்கான உரிமையானது ஓரங்கட்டப்பட்டுள்ள அல்லது மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள அல்லது பின்தங்கிய சமுதாயங்களினால் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதனை ஆராய்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைக்குவந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தகவலுக்கான உரிமையின் வெளிப்படைத்தன்மையினை நிலைநிறுத்துவதற்கான வினைத்திறனான கருவியாகப் பயன்படுத்துவதில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கிலுள்ள சில பிரதேசங்களிலுள்ள பிரஜைகளினால் பயன்படுத்தப்படுவதில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்படுகின்றது. இக்கட்டுரையின் முதலாவது பகுதி, இலங்கையின் வடபகுதியிலிருந்து பதியப்பட்ட தகவல் கோரிக்கைகளிலிருந்து எழுந்த முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் தகவலுரிமைக்கான ஆணைக்குழு (ஆணைக்குழு) வழங்கிய குறிப்பிட்ட சில ஆணைகளின்மீது கவனம் செலுத்துகின்ற அதேவேளை, இரண்டாவது பகுதியானது பிற நியாயாதிக்கங்களைக் கலந்துரையாடுகின்ற ஒப்பீட்டு அணுகுமுறையாக அமைந்துள்ளது. இறுதியாக, முடிவுப் பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மீதான சில பிரதான சிந்தனைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

2. வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள் மீதான ஆணைக்குழுவின் ஆணைகள்

கீழே கலந்துரையாடப்பட்டுள்ள எட்டு ஆணைகளிலும் தேசிய பாதுகாப்பு, ஊழல், பாராளுமன்ற சிறப்புரிமைகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தகவலுரிமையினைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் பகிரங்க அதிகார

சபைகள் தகவல் கோரிக்கைகளினைக் கையாளுகின்றபோது பயன்படுத்தத்தகு தரமான வழிகாட்டல்களை அமைத்துள்ள வழக்குகள் என்ற அடிப்படையில் கட்டுரையாசிரியர்களினால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும், இங்கு கலந்துரையாடப்பட்டுள்ள விசேட வழக்குகளுக்கு அப்பால், குறிப்பாக கிழக்கிலிருந்து காணி உரிமைகள், சமுதாய பிரிவுகள் போன்ற பிரச்சினைகளுடன் தொடர்புடையத் தகவல்களைக் கோரி பல்வேறு தகவல் கோரிக்கைகளுக்கான மேன்முறையீடுகள் ஆணைக்குழுவில் பதியப்பட்டுள்ளன.[148] இச் சந்தர்ப்பங்கள் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்கள் மிக நெருக்கமாக வாழ்கின்ற இடங்களில் சமுதாயங்களுக்கிடையில் ஏற்படுகின்ற அதிகரித்துச் செல்கின்ற பதட்டங்களை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைகின்றன. ஆகவே, இந்த மேன்முறையீடுகளின் பின்னணி கிழக்கில் பணியாற்றுகின்ற செயற்பாட்டாளர்கள், மக்கள் அதிகளவாக இடம்பெயர்ந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் காணி எல்லைகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் சூழ்ந்துள்ள சந்தர்ப்பத்தில் எவ்வாறு சமுதாயத்தினை கட்டியெழுப்ப இயலும் என அறிந்து கொள்வதற்கு உதவி செய்யும்.

மேலும், இடம்பெயர்ந்த மக்களினால் மற்றும் அவர்களின் சார்பாக சமுதாய செயற்பாட்டாளர்களினால் முரண்பாட்டிற்குள்ளாக்கப்பட்டுள்ள காணிகளின் உரித்தினை தெளிவு படுத்திக்கொள்வதற்கு மற்றும் அடையாள ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற விடயங்களுக்கு

148 பின்வரும் உதாரணங்களைப் பார்க்க கே. பார்த்தீபன் எதிர் பிரதேச செயலகம்- வவுனியா தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் மேன்முறையீடு (நேரடியாக)/286/2018 *<http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-286-2018/rtic-286-2018-en-14102018.pdf>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது அல்லது ஏ. எஸ். எம் சதகாத் எதிர் பிரதேச செயலகம், சாய்ந்தமருது தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் மேன்முறையீடு (நேரடியாக)/71/2017 <http://www.rticommission.lk/web/images/*pdf/120502018/sadaaqath.pdf*> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

தகவலுக்கான உரிமைச் சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும கூட,[149] இது தொடர்பான மேன்முறையீடுகள் ஆணைக்குழுவில் பதியப்படவில்லை. தகவல் கோருபவர்கள் மேன்முறையீட்டு செயன்முறையினை வேண்டுவதற்கு தயக்கமுடையவர்களாக காணப்பட்டதனால் மேன்முறையீடுகள் பதியப்படாதிருக்கலாம் என்பதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றபோதிலும், குறிப்பிட்ட அரசாங்க அலுவலகங்களில் உள்ள பகிரங்க அலுவலர்கள் தகவல் கோரிக்கைகளுக்கு திருப்தியாக பதிலளித்தமையினால் மேன்முறையீடுகள் பதியப்படவில்லையென ஊகிக்கப்படுகின்றது.[150]

இலங்கையில் மோதல் காலங்களின்போது "காணாமற்போன" நபர்கள் தொடர்பானத் தகவல்களை வழங்குமாறு அரச நிறுவனங்களைக் கட்டாயப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதிலும் கூட, காணாமல்போனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இராணுவம், புலனாய்வுத்துறை, பொலிஸ் மற்றும் ஏனைய சட்ட அமுலாக்க அதிகாரிகளினால் கேள்விக்குட்படுத்தப்படுவார்கள் என்ற பயத்தின் காரணமாக இவை நிலைத்திருக்கவில்லை. உண்மையில், இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஒரு மேன்முறையீட்டில் தகவலுக்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்த ஒரு ஊடகவியலாளருக்கு எதிராக இராணுவ புலனாய்வு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளமையினை எடுத்துக் காட்டுகின்றது (ஜி. திலீப் அமுதன் எதிர் பாதுகாப்பு அமைச்சு *RTIC 70/2018)* என்பதுடன் இப்பயம் பரவலாகக் காணப்பட்டு வருகின்றது. அதேவேளை, 2018 இல் ஒரு

149 மனோரி விஜேசேகர, *'Sri Lankans Use New RTI Law to Access Land Information Following War in North' (Global Press Journal, 5 khu;r; 2017) <https://globalpressjournal.com/asia/sri_lanka/sri-lankans-use-new-rti-law-access-land-information-following-war-north/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது (சிரன் இல்லன்பெரும), *'Sri Lankan Youth are Using RTI to Help War-Affected Families' (Roar Media, 23 February 2017) <https://roar.media/english/life/reports/sri-lankan-youth-are-using-rti-to-help-war-affected-families/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது *'RTI in Sri Lanka - The Dawn of a Fish Bowl Regime' (The Social Architects) <http://www.thesocialarchitects.org/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

150 2018 டிசெம்பரில் வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பிரதேச செயலகங்களின் அலுவலர்களுடன் இடம்பெற்ற விரிவான கலந்துரையாடல்கள

சுவாரஸ்யமான முன்னேற்றம் இடம்பெற்றது. அது யாதெனில், இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள மன்னாரைச் சேர்ந்த பெண்கள் குழுவொன்று "இலங்கை ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் 30/1 இனூடாக செய்வதாக உடன்பட்டுக் கொண்ட கீழ்வரும் உடன்பாடுகள் தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் /அல்லது சட்டவாக்க வரைபுகள் மற்றும் /அல்லது கருத்தேற்பு குறிப்புக்கள் மற்றும் /அல்லது ஆவணங்களின் பிரதிகளை" தருமாறு பிரதமர் அலுவலகத்தில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரிக்கையொன்றினைப் பதிவு செய்திருந்தது

அ. காணாமல் போனோருக்கான அலுவலகத்தை ஸ்தாபித்தல்

ஆ. உண்மையைக் கண்டறிகின்ற பொறிமுறையை ஸ்தாபித்தல்

இ. விசேட வழக்குரைஞருடனான நீதி பொறிமுறையை ஸ்தாபித்தல்

ஈ. உண்மை, நீதி, இழப்பீடுகள் அல்லது மீள நிகழாமைக்கான உத்தரவாதங்கள் என்பவற்றை வழங்குகின்ற நோக்கத்திற்காக வேறு ஏதேனும் பொறிமுறையினை ஸ்தாபித்தல்

அத்துடன் மேற்கூறியனவற்றை ஸ்தாபிப்பது தொடர்பானத் திட்டமிடல் மற்றும் நாட்டினால் மற்றும் /அல்லது சர்வதேச ஆலோசகர்களினால் மற்றும் /அல்லது நிபுணர்களினால் மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் மற்றும் /அல்லது சட்டவாக்க வரைபுகள் மற்றும் /அல்லது கருத்தேற்பு குறிப்புக்கள் மற்றும் /அல்லது ஆவணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகள் மற்றும் /அல்லது கடிதத்தொடர்புகள் மற்றும் / அல்லது ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகள் என்பனவும் கோரப்பட்டன.[151] ஆரம்பத்தில் அரச நிறுவனங்கள் பல

151 ஷரீன் ஸரூர் எதிர் பிரதமர் அலுவலகம் *<RTICAppeal/01/2018<http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-001-2018/rtic-01-2018-en-08092018.pdf>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

காரணங்களை மேற்கோள்காட்டி இத்தகவல்களை வழங்குவதற்கு மறுத்தபோதிலும், ஆணைக்குழுவிற்கு முன்னிலையில் இம்மேன்முறையீடு கேட்கப்பட்டதன் விளைவாக, அதன் பணிப்பின்பேரில், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இழப்பீடுகளுக்கான சட்டமூலம் வெளியிடப்பட்டது. ஆணைக்குழு அதன்போது பின்வருவனவற்றை அழுத்தமாகக் கூறியிருந்தது

"இத்தகவல் கோரிக்கையினூடாகக் கோரப்பட்டுள்ளத் தகவல்கள் இலங்கையின் நிலைமாறுகால நீதி செயன்முறையுடன் தொடர்புடையவை ஆகும். அதனால் அது பகிரங்க அக்கறைக்கு முக்கியமானதாகும். குறிப்பாக, சட்டங்களின் வரைபு தொடர்பாகப் பார்க்கின்றபோது, கோமஸ் எதிர் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டியன் மரபுரிமை அமைச்சு (*RTIC Appeal /51 /2018, 27.02.2018* அன்று தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் நிகழ்வுக் குறிப்பினைப் பார்க்க) என்ற வழக்கில் கூறியதனை மீள எடுத்துரைத்தது. அதாவது, "பிராந்தியத்தில் அதேபோல உலகளாவியரீதியிலுள்ள பல நாடுகளில் சட்டவாக்கத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பாக மக்களிடம் பின்னூட்டங்களைப் பெற்றுக் கொள்வதனூடாக சட்டவாக்கத்தின் கட்டமைப்பு தொடர்பில் மக்களின் இணக்கத்தினைப் பெற்றுக்கொள்கின்ற ஒரு பயனான செயன்முறையினைக் கையாளும்பொருட்டு சட்ட வரைபுகள் முன்கூட்டியே மற்றும் வர்த்தமானியில் இடப்படுவதற்கு முன்னதாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றன...பிரிவு 43 இல் உள்ளடக்கப்பட்டுள்ள தகவலுக்கான வரைவிலக்கணமானது வெளிப்படடையாகவே "சட்டவாக்க வரைபினை" தன்னுடைய பரப்பிற்குள் உள்ளடக்குகின்றது என்பதனை கூறுகின்ற பின்னணியில் ஆணைக்குழுவினால் இவ் அவதானம் மேற்கொள்ளப்பட்டது."[152]

மேற்கூறப்பட்ட அவ் ஆரம்ப சிந்தனைகளை மனதில் இருத்திக்கொண்டு, வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள பிரஜைகளினால் பதிவு செய்யப்பட்ட தெரிவு செய்யப்பட்டுள்ள சில தகவலுக்கான

152 15.05.2018 அன்று தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் நிகழ்வு குறிப்பு.

மேன்முறையீடுகளைப் பார்ப்போம். இவை பொதுக் கோட்பாடுகளாகிய தகவல் வெளியிடுகை, அரசாங்கத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் அரசின் பொறுப்புக்கூறுதல் என்பனவற்றின் முக்கியத்துவம் என்பனவற்றை வலியுறுத்துகின்றது.

2.1 ஜி. திலீப் அமுதன் எதிர். வட மாகாண சபை செயலகம்[153]

மேன்முறையீட்டாளர் வடக்கு மாகாணத்தின் 33 மாகாண சபை உறுப்பினர்களின் (அமைச்சர்கள் தவிர்ந்து) இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களின் பெயர் மற்றும் விலாசங்களைக் கோரியிருந்தார். இக்கோரிக்கையினை, பகிரங்க அதிகார சபையானது, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(ஒ) இனை மேற்கோள் காட்டி மறுத்தது.[154]

ஜி. திலீப் அமுதன் எதிர். வட மாகாண சபை செயலகத்தின் பகுப்பாய்வு

பகிரங்க அதிகார சபையானது தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(ஒ) இன் கீழான விதிவிலக்கினை மேற்கோள்காட்டியிருந்தபோதிலும், அதனை நியாயப்படுத்தியிருக்கவில்லை. நிரூபிப்தற்கான சுமையினை பகிரங்க அதிகார சபை மீது சுமத்துகின்ற தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 32(4) இணை ஆணைக்குழு பகிரங்க அதிகார சபைக்கு சுட்டிக்காட்டியதுடன் பகிரங்க அதிகார சபையானது சரியான அடிப்படையில் விளக்கமளிக்காது தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5 இனை மேற்கோள் காட்டி வெறுமனே தகவலை மறுக்கமுடியாது எனத் தீர்மானித்தது. இரண்டாவதாக,

153 *RTIC* மேன்முறையீடு */17/2017, <http://www.rticommission.lk/web/images/recent_orders_in_appeal/dileep-amuthan-rti-assembly.pdf>* 1பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

154 குறிப்பிட்ட அப்பிரிவானது, "அத்தகையத் தகவல்கள் சட்டத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி பாராளுமன்றத்தின் அல்லது மாகாண சபையின் சிறப்புரிமைகளை மீறும்" என கூறுகின்றது.

நியமனங்கள் / பதவி வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் அவை நிரந்தரமானவையாக இருப்பினும் இல்லாவிடினும் வெளியிடுகைக்கு உட்படுவனவாகக் காணப்படுதல் வேண்டும். இறுதியாக, "இப்பதவிகளுக்கான சம்பளங்கள் பொது மக்கள் நிதியினால் வழங்கப்படுகின்றன என்பதனால் அவை தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை ஒரு பிரஜைக்கு உண்டு" என்ற ஆணைக்குழுவின் அவதானம் பொது மக்களுடைய பணத்தின் பயன்பாடு எப்போதும் அவதானத்திற்கு உட்படுத்தத்தக்கது என்பதனை வலியுறுத்துவதுடன் அது ஏனைய பிரஜைகள் தகவல்களை நாடுவதனை ஊக்குவிப்பதற்கான அடிப்படையாக அமையும்.

2.2 ஜி. திலீப் அமுதன் எதிர். ஆளுநர் செயலகம், வட மாகாணம்[155]

வட மாகாண சபையின் 33 மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் 5 அமைச்சர்களின் வெளிநாட்டு பிரயாண விபரங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டபோது அத்தகவல்கள் ஆளுநருடைய சம்மதத்துடன் வழங்கப்பட்டன.

பகிரங்க அக்கறை மற்றும் பொது நிதி உள்வாங்கப்பட்டிருப்பதால் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட எண்ணக்கையிலான வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பில் வெளியிடப்பட வேண்டும் என ஆணைக்குழு ஆணையிட்டது.[156]

---

155 ஜி. திலீப் அமுதன் எதிர். ஆளுனர் செயலகம், வட மாகாணம்இ RTIC Appeal/35/2017 <*http://www.rticommission.lk/web/images/pdf/dileep-amuthan-governors-secy.pdf*> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

156 வெரிதே ரிசர்ச் (பிரைவட்) லிமிடெட் எதிர். இலங்கை மத்திய வங்கி (தற்போது இடம்பெற்று வருகின்றது), RTIC மேன்முறையீடு/ (நேரடியாக)/25/2018 <*http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-026-2018/verite-research-v-central-bank-sri-lanka-si-21072018.pdf)*> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது ''ரீன் ஸரூர் எதிர் பிரதமர் அலுவலகம், சுவுஜஉ மேன்முறையீடு (நேரடியாக)/01/2018 <*http://www.rticommission.lk/web/images/pdf/18052018/shreen-saroor-appeal.pdf)*> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது துஷ்யந்தி சூர்யபெரும எதிர்.

2.3 ஜி. திலீப் அமுதன் எதிர். விவசாய அமைச்சு, வட மாகாண சபை[157]

மேலே குறிப்பிடப்பட்ட இம்மேன்முறையீடானாது "வடமராட்சி கிழக்கு மணற்காடு பிரதேசத்திலுள்ள சவுக்கு மரங்களைப் பாதுகாப்பதற்கான" நிதி தொடர்பிலான தகவல்களை வெளியிடுமாறு தேவைப்படுத்தியது. பகிரங்க அதிகார சபை இச்செயற்திட்டத்தில் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை என தகவல் அலுவலர் பதிலளித்தார். குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டபோது, முதலமைச்சரின் அமைச்சு இக்குறிப்பிட்ட அமைச்சினைக் கைக்கொண்டுள்ளமையினால் மேலதிக நேரம் தேவை எனப்பட்டது. அமைச்சு சுயமாகத்தான் செயற்பட்டு வருகின்றது என்ற அடிப்படையில் மேன்முறையீட்டாளர் ஆணைக்குழுவினை அணுகினார். ஆணைக்குழுவின் ஆணையின்பேரில் கோரப்பட்டத் தகவல்களை பகிரங்க அதிகார சபை வழங்கியது.

2.4 ஜி. திலீப் அமுதன் எதிர். வட மாகாண சபை [158]

இம்மேன்முறையீட்டில், வல்வெட்டித்துறை நகர சபையின் விசாரணை அறிக்கையினைத் தகவலாக கோரியிருந்தார். குறிப்பிட்ட அச்சபை கலைக்கப்பட்டது. பகிரங்க அதிகார சபை அவ்வறிக்கையின் ஒரு பக்க சுருக்கத்தை மேன்முறையீட்டாளருக்கு வழங்கியது. குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு மேன்முறையீடு செய்யப்பட்டபோது, முழு அறிக்கையினையும் வெளியிடுதலானது தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(ஓ) இன் கீழ் மாகாண சபை உறுப்பினர்களுடைய சிறப்புரிமைகளைப்

---

157 RTICமேன் முறையீடு/*140/2017<http://www.rticommission.lk/web/images / pdf/dileep-amuthan-v-min-of-agri.pdf>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

158 RTIC மேன்முறையீடு (நேரடியாக)/21/2017<*http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-021-2017/rtic-021-2017-en-06122018-2.pdf>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

பாதிக்கும்மென மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டது.[159] பிரிவு 5 (1)(ஓ) இனை மாகாண சபையிலுள்ள தனி உறுப்பினர்கள் தொடர்பில் தகவல் கோரப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தகவலை மறுப்பதற்காகப் பயன்படுத்தமுடியாது என ஆணைக்குழு தீர்த்தது. எவ்வாறெனினும், இவ் ஊழல் விசாரணையில் மூன்றாந்திறத்தவர்களாக 10 அலுவலர்கள் மற்றும் சாட்சிகள் உள்வாங்கப்பட்டிருந்ததால் பிரிவு 5(1)(i)[160] இணை சட்டத்தின் பிரிவு 29 உடன் இணைத்து வாசித்து அதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிவிலக்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென ஆணைக்குழு கூறியது. பிரிவு 29 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய நடபடிமுறைகளுக்கு அமைவாக, குறிப்பிட்ட அம்மூன்றாந் திறத்தவர்கள் அவர்களுடைய சான்றுகைகள் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு சம்மதிப்பார்களா என்பதனை அறியுமாறு ஆணைக்குழு பகிரங்க அதிகார சபைக்கு பணித்தது.

ஆணைக்குழுவின் இப்பணிப்பினைத் தொடர்ந்து, பகிரங்க அதிகார சபை விசாரணை அறிக்கையினை வெளியிட்டது. எவ்வாறெனினும், நகர சபையின் அலுவலர் ஒருவரினால், அதாவது இவ்விசாரணை இடம்பெறுவதற்கு அடிப்படை காரணமாக அமைந்த முறைப்பாட்டைச் செய்த அவ் அலுவலரினால், நம்பகத்தன்மையின் அடிப்படையில் வழங்கப்பட்ட சாட்சியத்தினைக் கொண்ட அறிக்கையின் ஒரு பகுதியினை பகிரங்க அதிகார சபை வெளியிடவில்லை. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) இன் கீழான அந்தரங்கம் தொடர்பான அக்கறையினை மேற்கோள் காட்டிய ஆணைக்குழு அச் சாட்சியம் வெளியிடப்பட

159 பிரிவு 5(1)(ஓ) பின்வருமாறு கூறுகின்றது: "அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையொன்றின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து அத்தகைய தகவலை மறுக்கலாம்."

160 தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1) (ஐ) ஆனது பின்வருமாறு கூறுகின்றது: "29(2)(இ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, தகவலானது, மூன்றாம் தரப்பினரால் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு அந்தரங்கமாக வழங்கப்பட்டிருந்து அத்துடன் அம்மூன்றாம் தரப்பு"

தேவையில்லை என பணித்தது.[161] அச் சாட்சியத்தினை வெளியிடுவதில் பாரிய பகிரங்க அக்கறை இல்லை என்றும் நகர சபையினுள் இடம்பெற்ற ஊழல் தொடர்பான அறிக்கையின் ஏனைய பகுதிகளை வெளியிடுதலானது வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சியினை கட்டாயப்படுத்துவதற்கான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற இலக்கினை திருப்தி செய்வதாக அமையும் என்றும் கூறப்பட்டது.

ஜி. திலீப் அமுதன் எதிர். வட மாகாண சபையின் பகுப்பாய்வு

அவ் ஆணையில், தவறுகளை சுட்டிக்காட்டுகின்ற அலுவலர்களின் பாதுகாப்பும் தகவலுரிமை கொண்டுள்ள அதே விழுமியங்கள் மற்றும் இலக்குகளைக் கொண்டுள்ளது என ஆணைக்குழு சுட்டிக்காட்டியது

> "பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மைக்காகப் போராடுதல் என்பன பகிரங்க அதிகார சபைகளின் தவறுகளை சுட்டிக்காட்டுபவர்கள் (*whistleblowers*) மற்றும் தகவலுக்கான உரிமைப் பரப்பு என்பனவற்றின் செயல்களுக்கிடையிலான பொது அம்சமாகும். அத்தகைய பகிரங்க அதிகார சபைகளின் தவறுகளை சுட்டிக்காட்டுபவர்களைப் பாதுகாக்கின்ற தனியான ஒரு சட்டம் இருப்பில் இல்லாமையினால், இடித்துரைப்பாளர்களாகச் செயற்பட்டுள்ள அத்தகைய பகிரங்க அலுவலர்களின் பாதுகாப்பிற்கு ஊறினை ஏற்படுத்தக்கூடிய தகவல்களின் வெளிவிடுகைத்

161 பிரிவு 5 (1)(அ) ஆனது பின்வருமாறு கூறுகின்றது: இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, தகவலானது, பாரிய பகிரங்க அக்கறை அத்தகைய தகவலின் வெளிவிடுகையை நீதிமுறைப்படுத்தினாலொழிய அல்லது சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய வெளிவிடுகைக்கு எழுத்தில் சம்மதமளித்திருந்தாலொழிய, ஏதேனும் பகிரங்க தொழிற்பாடு அல்லது அக்கறைக்கு தொடர்பல்லாததாகவுள்ள அல்லது தனியாளின் அந்தரங்கத் தன்மையின் அனுமதிக்கப்படாத வரம்புமீறலைச் செய்யக்கூடிய தனிப்பட்ட தகவலின் வெளிவிடுகையுடன் தொடர்புறுகின்றவிடத்து அத்தகவல் மறுக்கப்படலாம்."

> தொடர்பில் தீர்மானிக்கின்றபோது மிகவும் கவனமாக செயற்பட வேண்டிய கடமையினை இவ் ஆணைக்குழு கொண்டுள்ளது."[162]

அவ்வாறு அலுவலகத்தில் இடம்பெறுகின்ற தவறுகளைத் தைரியமாக சுட்டிக் காட்டுபவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தினை இலங்கை நடைமுறைக்கு கொண்டுவருதல் வேண்டும் என ஆணைக்குழு விதந்துரைத்தது.

2.4 ஜி. திலீப் அழுதன் எதிர். பாதுகாப்பு அமைச்சு[163]

இலங்கை இராணுவத்தினரால் வடக்கு மற்றும் கிழக்கில் நடாத்தப்படுகின்ற கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் / அல்லது உணவு விடுதிகள் உள்ளடங்கலான வியாபார நிறுவனங்கள் மற்றும் இராணுவ பணிப்பாளர் குழாமினரை வழிநடத்துகின்ற விதிகள், நடபடிமுறைகள், வழிகாட்டல் விதிகள் மற்றும் /அல்லது கொள்கைகள் மற்றும் 2007 இல் ஹய்டியில் அமைதி காப்பாளர்களாக பணியில் ஈடுபட்டிருந்தபோது ஹய்டியன் பிரஜைகள் மீது பாலியல் குற்றங்கள் புரிந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத்தினர் தொடர்பானத் தகவல்கள் பாதுகாப்பு அமைச்சிடமிருந்தும் (பகிரங்க அதிகார சபை), இலங்கை இராணுவத்திடமிருந்தும் கோரப்பட்டன. கடற்படை மற்றும் இலங்கை விமானப்படை என்பன அவர்களால் நடாத்தப்படுகின்ற விருந்தோம்பல் நிறுவனங்கள் தொடர்பானத் தகவல்களை வெளியிட்டபோதிலும், இலங்கை இராணுவமானது கோரப்பட்டத் தகவல்களை வழங்காது மேன்முறையீட்டாளர் தனது பிரஜாவுரிமையினை ஸ்தாபிப்பதற்கான அடையாளத்தை நிறுவுதல் வேண்டும் என மேன்முறையீட்டாளரை கேட்டுக் கொண்டது. ஆணைக்குழுவின் முன்னிலையில் மேன்முறையீடு

162 *RTIC* மேன்முறையீடு (நேரடியாக) /21/2017, p4.

163 *RTIC* மேன்முறையீடு (Neubahf) */70/2018<http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-70-2018/rtic-70-2018-en-25082018-2.pdf>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மேன்முறையீட்டாளரின் பிரஜாவுரிமை தொடர்பில் சந்தேகங் கொள்வதற்கான புறவய காரணங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்கச் சொல்லுதல் போன்ற மேலதிக விபரங்களை பகிரங்க அதிகார சபை கோருவதற்கு இயலும் என்பது அழுத்தமாகக் கூறப்பட்டது.[164] குறிப்பாக, டி.ஐ.எஸ்.எல் எதிர் பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி செயலகம்[165] என்பது மேற்கோள் காட்டப்பட்டது, அவற்றில் "மிக அரிதான சந்தர்ப்பங்களில் தான்" மற்றும் குறிப்பிட்ட தகவல் கோருனரின் பிரஜாவுரிமை தொடர்பில் பகிரங்க அதிகார சபைக்கு நல்லெண்ண அடிப்படையிலான சந்தேகம் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம்தான் தகவல் கோரிக்கையினை மேற்கொள்பவர்கள் பிரஜாவுரிமைக்கான சான்றினை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என கூறப்பட்டது.[166]

மேன்முறையீட்டாளரின் பின்னணி தொடர்பான பரிசீலனையொன்றை மேற்கொண்டிருந்த பகிரங்க அதிகார சபையானது, மேன்முறையீட்டாளர் ஒரு ஊடகவியலாளராக இருப்பதானால் அவர் இத்தகவல்களை வெளிநாடுகளில் பகிரங்க அதிகார சபைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தத்தக்க வகையில் பயன்படுத்த இயலும் என கூறியது. மேன்முறையீட்டாளர் முரண்பாட்டினை ஏற்படுத்தி நாட்டிற்கு மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துமென பகிரங்க அதிகார சபை வாதிட்டது. எவ்வாறெனினும், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 24 (5) (ஈ) இல் கூறப்பட்டுள்ளதற்கமைய மேன்முறையீட்டாளரின் பின்னணி மற்றும் தகவலை கோருவதற்கான அவர்களுடைய நோக்கம் என்பன தகவலுரிமை பரப்பில் தகவலை நிராகரிப்பதற்கான

---

164 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது இத்தீர்மானம் 23 மார்ச் 2018 அன்று மேற்கொள்ளப்பட்டது.

165 RTIC மேன்முறையீடு */05/2017 & RTIC* மேன்முறையீடு */06/201, RTIC* நிகழ்வு குறிப்புக்கள்- 23.02.2018.

166 பார்க்க: ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளை எதிர். தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, இல் *CIC/OK/C/2008/00016*, இந்திய மத்திய தகவல் ஆணைக்குழுவின் நிகழ்வு குறிப்புக்கள்- 26 மே 2008.

அல்லது தகவலை வழங்குவதற்கான விதிவிலக்குகளாகக் கருதப்பட முடியாது[167] என ஆணைக்குழு கூறியது. மேலும், ஒரு நபர் தகவலுக்கான கோரிக்கையொன்றினைப் பதிவு செய்துள்ளார் என்ற ஒரே ஒரு காரணத்தினை அடிப்படையாகக் கொண்டு அந்நபர் தொடர்பான பின்னணி அறிக்கையினை (இராணுவ புலனாய்வு அறிக்கையினை) பகிரங்க அதிகார சபை பெற்றுக் கொள்ளுமாயின், தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் தோற்கடிக்கப்படும் என ஆணைக்குழு உறுதியாகக் கூறியது. இராணுவத்தினரால் நடாத்தப்படுகின்ற விருந்தோம்பல் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களுக்கு பதிலிறுக்கின்றபோது இராணுவ நலன்புரி சமூக நிதியத்தினால் நடாத்தப்படுகின்ற அந்நிறுவனங்கள் பொது நிதியினால் நடாத்தப்படுபவை அல்ல என்ற ஆட்சேபனை முன்வைக்கப்பட்டபோது, "பொது நிதி" என்ற பதம் விரிவாகப் பொருட்கோடல் செய்யப்படுதல் வேண்டுமென ஆணைக்குழு கூறியது.[168] இலங்கையின் அமைதி காப்பாளர்களினால் ஹய்டியில் பாலியல் குற்றங்கள் புரியப்பட்டமை தொடர்பாக கூறுகின்றபோது, கோரப்பட்டத் தகவல்களின் சுருக்கம் வழங்கப்பட வேண்டுமென பணிக்கப்பட்டது.

ஜி. திலீப் அமுதன் எதிர். பாதுகாப்பு அமைச்சின் பகுப்பாய்வு[169]

தகவலுக்கான கோரிக்கையினை மேற்கொள்பவர்களிடம் அவர்களுடைய அடையாளத்தை வழங்கச் சொல்வதானது தகவலைக் கோருபவர்களை அச்சமுறச் செய்கின்ற உபாயமொன்றாக மற்றும் தகவல்களை தாமதப்படுத்துவதற்கான பகிரங்க அதிகார சபையின் உபாயமொன்றாகப் பார்க்கப்பட இயலும். "மேன்முறையீட்டாளர் பிரஜையொருவர் அல்ல என நம்புவதற்கு தகுந்த காரணங்களின்றி பகிரங்க அதிகார சபை அவரை மேலதிகமாக கேள்விக்குட்படுத்த முடியாதென்பது"

167 RTIC மேன்முறையீடு (நேரடியாக) /70/2018, p 14-15.

168 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது, p15.

169 இப்பகுதியில் ஒப்பீட்டு சட்டத் தீர்மானங்களை அறிந்து கொள்வதற்கு நாம் சட்டத்தரணி சுஷ்மிதா தயானந்தனின் ஆதரவினைப் பெற்றிருந்தோம்.

தொடர்பில் ஆணைக்குழு கடுமையான போக்கினை பின்பற்றியது. "புறவய காரணிகளின் அடிப்படையில் மாத்திரமே பிரஜாவுரிமையினை நிரூபிப்பதற்கான சான்றுகள் கோரப்படலாம்."[170] மேலும், பகிரங்க அதிகார சபை விண்ணப்பதாரர் ஒரு ஊடகவியலாளர் என அறிந்திருக்கின்ற சமயத்தில் அடையாளம் மற்றும் பிரஜாவுரிமைக்கான கோரிக்கைகள் புறவய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது. தகவலை அணுகுவதற்கு விதிக்கப்படுகின்ற எந்தவொரு தடையும் மொத்த தகவலுரிமைக்கான பரப்பினையும் மழுங்கடித்து விடுமென்பதால் தகவல்களை கோருபவர்களை அச்சுறுத்தாதிருப்பதன் மற்றும் அவர்களை அழுத்தத்திற்குட்படுத்தாதிருப்பதன் முக்கியத்துவத்தினை ஆணைக்குழு அழுத்திக் கூறியது. மேலும், பகிரங்க அதிகார சபையானது மேன்முறையீட்டாளர் தொடர்பில் பின்னணி சோதனை நடவடிக்கையொன்றினையும் மேற்கொண்டிருந்தது. இது பகிரங்க அதிகார சபையானது தன்னுடைய அதிகாரத்தை மீறி செயற்பட்ட ஒரு விடயமாக கருதப்படுவதுடன் இது தொடர்ச்சியாக அரச இரகசிய கலாசாரத்தினை சித்தரிக்கின்ற ஒன்றாகவும், வெளியிடுகையினைத் தவிர்த்துக் கொள்கின்ற வழியொன்றாகவும் காணப்படுகின்றது. ஆணைக்குழுவானது கீழ்வரும் தொனியில் தனது கடுமையான எச்சரிக்கையினை இது தொடர்பாக விடுத்திருந்தது

> "கொள்கைரீதியாகப் பார்க்கின்றபோது, இலங்கை பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நெறிமுறையானதும் சட்டரீதியானதுமான தகவலுக்கான கோரிக்கை யொன்றினை மேற்கொண்டுள்ளார் என்ற ஒரே காரணத்திற்காக, பகிரங்க அதிகார சபையானது ஒரு பிரஜை தொடர்பில் இராணுவ உளவுத்துறை அறிக்கையினைப் பெற்றுக் கொள்ள எத்தணித்தலானது

170 RTIC மேன்முறையீடு (நேரடியாக)/70/2018, p6.

சட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களைத் தோற்கடிப்பதாக அமையும்.[171]

ஆணைக்குழு இது தொடர்பான எவ்வித பொருட்கோடல்களுக்கும் இடமளிக்கவில்லை மற்றும் பகிரங்க அதிகார சபைகள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் எல்லைகளுக்கு உட்பட்டு செயலாற்றுதல் வேண்டும் என்பன தொடர்பான ஒரு முக்கியமான ஞாபகப்படுத்தலாக இது அமைந்துள்ளது.

தகவல் கோருபவர்களை அச்சுறுத்துல் அல்லது தொல்லை செய்தல் என்பது இலங்கையில் மட்டும் இடம்பெறுகின்ற விசேடமான பிரச்சினையொன்று அல்ல. வேறு நியாயாதிக்கங்களில் தகவலுக்கான விண்ணப்பதாரர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகி இருப்பது தொடர்பில் அவதானித்தல் இங்கு பொருத்தமுடையதாக அமையும். பொதுநலவாய மனித உரிமைகள் முன்னெடுப்பிற்கு அமைய, இந்தியாவில் 2005 மற்றும் 2016 இற்கு இடைப்பட்ட காலத்தில் 56 தகவலுரிமை செயற்பாட்டாளர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் மரணித்துள்ளனர். குறிப்பிட்ட அதே காலப்பகுதியில், தகவலுக்கான விண்ணப்பதாரர்களை தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பாக 130 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.[172] இப்பிரச்சனைக்கு ஜோஹிந்தர் தாஹியா எதிர் ராஜேஷ் கண்ணா, மாநகர சபை கூட்டுத்தாபனம், டெல்லி[173] என்ற வழக்கில் பதிலிறுத்த இந்திய மத்திய தகவல் ஆணைக்குழுவானது, "தகவலுரிமையின் பயன்பாட்டாளர்களுக்கு விடுக்கப்படுகின்ற அச்சுறுத்தல் தொடர்பில் ஆணைக்குழு தீவிர அவதானம் செலுத்துகின்றது" எனக் குறிப்பிட்டிருந்தது.

---

171 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது, p14.

172 *Express News Service, 'Stop RTI proceedings if applicant dies, proposes government' (Express News Service, 4* ஏப்பிரல் 2017) <*https://indianexpress.com/article/india/stop-rti-proceedings-if-applicant-dies-proposes-government-4598339/*,1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

173 CIC தீர்மானம் இல. *CIC/SG/A/2012/000557/18356<http://rtiactivist.com/wp-content/uploads/2012/04/MCD.pdf*,1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

மேற்குறிப்பிட்ட வழக்கில் தகவல்களை தாமதமாக வழங்குதல்கூட ஒரு வகையான தொல்லையாகவே கணிக்கப்படும் என இந்திய மத்திய தகவல் ஆணைக்குழு தீர்த்தது.

இலங்கையின் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் தீர்மானத்தில் "பொது நிதி" யின் பரப்பு குறித்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அடிப்படையில் பார்க்கின்றபோது, அனைத்து பிரதேசங்களிலுமுள்ள அரசாங்க நிறுவனங்களில் வெளிப்படைத்தன்மை காணப்படவேண்டும், குறிப்பாக பொது மக்களுடைய நிதியான வரிப்பணம் தொடர்புறுகின்ற விடயங்களில் வெளிப்படைத்தன்மை காணப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவே தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. குறைந்த பட்சம், பிரஜைகளுக்கு அவர்களுடைய பணம் எங்கு மற்றும் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்கான உரிமை காணப்படுதல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில், பகிரங்க அதிகார சபையானது விருந்தோம்பல் நிறுவனங்கள் இலங்கை இராணுவத்தின் தனிப்பட்ட நிதியினால்தான் நடாத்தப்படுகின்றன என்றும் அவை பகிரங்க நிதியினால் நடாத்தப்படுவன அல்ல என்றும் வாதிட்டது. குறிப்பிட்ட விருந்தோம்பல் நிறுவனங்கள் தனிப்பட்ட நிதியினால் நிதியளிக்கப்பட்டபோதிலும், அவை பொதுமக்களின் நிதியினை ஊதியமாகப் பெறுகின்ற பகிரங்க அதிகார சபையின் ஊழியர்களினால்தான் கட்டுப்படுத்தப்படுகின்றன, செயற்படுத்தப்படுகின்றன மற்றும் பேணப்படுகின்றன என்பதனை ஆணைக்குழு குறித்து காட்டியது. ஆகவே, இவ் அடிப்படையில் கோரப்பட்டத் தகவல்களின் வெளியிடுகையினை அனுமதித்ததனூடாக ஆணைக்குழு "பொது நிதி" என்பதனை விரிவாகப் பொருட்கோடல் செய்திருந்தது. தகுந்த காரணங்களின்றி பகிரங்க அதிகார சபைகள் தகவலை மறுப்பதனை எதிர்க்கின்ற ஒரு முன்னேற்றகரமான பொருட்கோடலாக இது அமைந்துள்ளது.

இந்தியாவில், தீர்ப்புச்சட்டங்கள் பொது நிதி என்பதற்கான வரைவிலக்கணத்தினை ஆக்கியுள்ளன. தலப்பலம் சேவை கூட்டுத்தாபன வங்கி லிமிடெட் எதிர் யூனியன் ஒப் இந்தியா[174] என்ற வழக்கில் கேரள மேல் நீதிமன்றமானது, "அரசாங்கம் கையாளுகின்ற நிதியானது பொது நிதி என வகைப்படுத்தத்தக்கது என்பதுடன் தேசிய வளம் தொடர்பில் எப்போதும் பிரஜைகளின் கூட்டான தேசிய அக்கறை தொடர்புறும்" என குறிப்பிட்டது. டெல்லி இன்டர்கிரேடட் மல்டி மொடெல் டிரான்ஸிட் சிஸ்டெம் லிமிடெட் எதிர் ராகே' அஹர்வால்[175] என்ற வழக்கானது பொருத்தமான நிதி சோதனையொன்றினை ஸ்தாபித்தது. அச் சோதனையின்படி, அரசாங்கமொன்று ஒரு அமைப்பிற்கு நிதியளிக்கின்றபோது, அங்கு பொது மக்களுடைய நிதி பயன்பாட்டிலுள்ளது என்பதுடன் அதன் நிதி நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை அரசிடமிருந்து கோருவதற்கான அக்கறை மற்றும் உரிமையினை பொது மக்கள் கொண்டுள்ளனர் என குறிப்பிடுகின்றது.

நொர்தன் க்ரூய்சர் கம்பனி எதிர் ஆர்[176] என்ற கனேடிய வழக்கில் இந்தியா மற்றும் இலங்கையின் தகவலுரிமைக்கான ஆணைக்குழுக்களின் நிலைப்பாட்டினை மீள வலியுறுத்தியது. நொர்தன் க்ரூய்சர் என்ற வழக்கில் அரசாங்கம் செலவளிக்கின்ற நிதி தொடர்பான எத்தகவல்களும் முகத்தோற்றளவில் அரசாங்கத் தகவல்களாகவே கருதப்படும் எனப்பட்டது. முகத்தோற்றளவில் அரசாங்கத் தகவல்களாகக் கருதப்படுகின்ற தகவல்களின் வெளியிடுகைக்கான விதிவிலக்குகள் மட்டுப்படுத்தப்பட்டன மற்றும் குறிப்பானவை ஆகும். அரசாங்கத் தகவல்களின் வெளியீட்டிற்கான விதிவிலக்குகளை அனுமதித்தலானது எந்தவொரு தகவலுக்கான

---

174 தலப்பலம் சேவை கூட்டுத்தாபன வங்கி லிமிடெட் எதிர் யூனியன் ஒப் இந்தியா *(UOI)(2009),WP(C) No 18175* ழக 2006 *(L)<https://indiankanoon.org/doc/322018/>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

175 டெல்லி இன்டர்கிரேடட் மலடி மொடெல் டிரான்ஸிட் சிஸ்டெம் லிமிடெட் எதிர் ராகேஷ் அஹந்வால், *WP(C) 2380-81/2010 <https://indiankanoon.org/doc/48920981/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

176 நொர்தன் க்ரூய்சர் கம்பனி எதிர் ஆர் *(Nothern Cruiser Company v R)[1991] 47 FTR 192 [FCTD].*

உரிமை அல்லது தகவலை அணுகுவதற்கான உரிமைக்கு எதிராகத் தொழிற்படுமென்பதால் இது அறிவுபூர்வமானதாகும்.

மேலும், பகிரங்க அதிகார சபையானது இத்தகவல்களின் வெளியிடுகை "நாட்டின் பாதுகாப்பை" மற்றும் /அல்லது "தேசிய பாதுகாப்பை" மழுங்கடிக்கும் மற்றும் அவ்வெளியிடுகை சர்வதேச உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற விதிவிலக்குகளின்கீழ் (தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5 (1) (ஆ) (i) மற்றும் (ii)[177]) கோரப்பட்டத் தகவல்களை மறுப்பதற்கு எத்தணினித்திருந்தது. பிரிவு 5 (1) (ஆ) (ii) தொடர்பான ஆணைக்குழுவின் அவதானம் ஐயங்களுக்கு இடமளிக்காதவிதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது:

> "சர்வதேச உடன்பாடொன்றின் மீது தங்கியிருந்து குறிப்பிட்ட தகவலை மறுக்க வேண்டுமாயின் அத்தகவல் இரகசியமாகப் பெறப்பட்டிருக்க வேண்டும் அல்லது தரப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அது ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேசச்சட்டத்தின் கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூ ரமாக பாதகமாகவிருத்தலும் வேண்டும். ஆகவே இவ்விதிவிலக்கினை நுட்பமற்ற அல்லது பொதுவான முறையில் சர்வதேச உடன்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களுக்கும் பிரயோகிக்கவியலாது."

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் கண்டிப்பான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளமையினால் புதிய தகவலுரிமைப்

---

177 பிரிவு 5 (ஆ)(i) பின்வருமாறு கூறுகின்றது: "அத்தகைய தகவலின் வெளிவ-ிடுகையானது அரசின் பாதுகாப்பை அல்லது அதன் ஆள்புல இறைமையை அல்லது தேசிய பந்தோபஸ்தை பாதிக்கக் கூடியதாக இருக்குமிடத்து" பிரிவு 5(ஆ)(ii) பின்வருமாறு கூறுகின்றது: "அத்தகைய தகவலின் வெளிவிடுகையா-னது அத்தகைய தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது அதிலிருந்து பெறப்பட்டு உள்ளவிடத்து, ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின்கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து."

பரப்பின்போது சில சிக்கல் நிலைமைகள் தோற்றம்பெறலாம் என்பதனை இம்மேன்முறையீடு எடுத்துக்காட்டுகின்றபோதும், ஆணைக்குழு உயர் தரத்திலான மீளாய்வினைப் பேணி வருவதனால் தகவல்கள் அற்ப காரணங்களுக்காக மறுக்கப்பட முடியாது. மேலும், பகிரங்க அதிகார சபைகள் தகவல் கோருபவர்களை அச்சுறுத்துகின்றமை, தொல்லை செய்கின்றமை அல்லது வேறு வகையில் அவர்களுக்கு தொந்தரவு விளைவிக்கின்றமையிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டிய தேவையினை எடுத்துரைக்கின்ற உதாரண மேன்முறையீடாக இது அமைந்துள்ளது.

2.5 நிப்ராஸ் மன்சூர் எதிர் கல்முனை மாநகர சபை[178]

மேன்முறையீட்டாளர் இரண்டு மேன்முறையீடுகளைப் பதிவு செய்திருந்தார். முதலாவது மேன்முறையீடானது, கல்முனையிலுள்ள சாந்தன்கேணி விளையாட்டு மைதானத்தின் விஸ்தீரணம், அதன் நில அளவைத்திட்டம், அவ்விடம் தொடர்பான சட்டமுரணாண அபகரிப்புக்கள் காணப்பட்டனவா என்பது தொடர்பான விபரம், இது தொடர்பான ஏதேனும் முறைப்பாட்டுக்குள் பதியப்பட்டுள்ளனவா என்பது தொடர்பான விபரம் மற்றும் இதுவரையில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் போன்ற விடயங்களைக் கோரியிருந்தது. நிலத்தின் விஸ்தீரணம் தொடர்பான தகவலைத் தவிர ஏனைய அனைத்திற்கும் "தெரியாது" என்ற பதிலே அவருக்கு வழங்கப்பட்டது. மேன்முறையீட்டின்போது, இத்தகவல் வெளியிடப்பட்டதுடன், ஆணைக்குழுவின் முன்னிலையில் மாநகரசபை ஆணையாளர், அபகரிப்பாளர்களை வெளியேற்றி முறையாக காணியின் எல்லைகளை வரையறுப்பதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என கூறினார்.

இரண்டாவது மேன்முறையீடும் அதே பகிரங்க அதிகார சபைக்கு எதிரானதாகும். தனியார் கம்பனியொன்றிற்கு

178 RTIC மேன்முறையீடு/46/2017 <*http://www.rticommission.lk/web/images/pdf/nibras-mansoor-new-31-10.pdf*> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

ஆறு மாதத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள மாநகர சபையின் இடமொன்றிற்கான குத்தகை ஒப்பந்தத்தின் பிரதி மற்றும் அதிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானம் என்பனவற்றைக் கோரியிருந்தது. குத்தகை மற்றும் அதிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இலாபம் என்பவற்றில் பொது நிதி உள்வாங்கப்பட்டிருப்பதால் அது தொடர்பான தகவல்களை மேன்முறையீட்டாளர் கோரியிருந்தார். குத்தகை ஒப்பந்தத்தின் பிரதி மேன்முறையீட்டாளருக்கு வழங்கப்பட வேண்டுமென ஆணைக்குழு பணித்தது.

நிப்ராஸ் மன்சூர் எதிர் கல்முனை மாநகர சபையின் பகுப்பாய்வு

இவ்வழக்கில், குறிப்பிட்ட காணி தொடர்பான தகவல் குறித்து காணப்படுகின்ற முரண்பாடுகள், பொதுவாக "வழக்கமான வெளிப்படுத்தல்களாக" பார்க்கப்படக்கூடிய விடயங்களில்கூட தகவலுக்கான உரிமைச் சட்டம் ஆற்றுகின்ற பிரதான வகிபங்கினை எடுத்து காட்டுகின்றது. தகவலுரிமைக்கான பரப்பானது பயன் மிக்கதாக அமைய வேண்டுமெனில், அரசாங்க நிறுவனங்கள் துடிப்பாக முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்துதல் அவசியமென்பதுடன், விதிவிலக்கான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த பொருத்தமான சந்தர்ப்பங்களில் தகவலுக்கான கோரிக்கைகளைப் பெற்றுக்கொண்டவுடன் தகவல்களை வெளியிடுதல் அவசியமாகும். பகிரங்க அதிகார சபைகளின் இப் பின்னடைவான போக்கு பொதுவான போக்காக வெளிப்படுமாயின் அது இலங்கையின் தகவலுரிமைப் பரப்பின் விருத்தியினை ஐயத்துகிடமற்ற வகையில் முடக்கும்.

பகிரங்க அதிகார சபைகளிடமிருந்து பிரஜைகளுக்கு தகவல்கள் வெளியிடப்படுதலானது பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கான முக்கியமான படிமுறையாக மற்றும் ஜனநாயக சமூகத்தின் சிறப்பான செயலாற்றுகைக்கு முக்கியமானதொன்றாகக்

கருதப்படுகின்றது. உதாரணமாக, இவ்வழக்கில், பிரஜைகள் ஆக்கிரமிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் தொடர்பானத் தகவல்களைக் கொண்டுள்ளனர் (2005 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட பட்டியலின்படி). எவ்வாறெனினும், பொறுப்புவாய்ந்த எவ் அரசாங்க அதிகாரியும் இக்குறிப்பிட்ட நிறுவனத்தின் செயலற்றத்தன்மை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. வேறுபட்ட அரசாங்க நிறுவனங்கள் பொறுப்பினை ஏனையவற்றின் மீது சுமத்துகின்றமையினால் திட்டவட்டமான முடிவுகளைப் பெற முடியாதுள்ளது. இச் செயன்முறையினை மாற்றுவதற்கான ஒரு கருவியினை தகவலுக்கான உரிமைப் பரப்பு பிரஜைகளுக்கு வழங்கியுள்ளதுடன் அது பகிரங்க அதிகார சபைகளை பொறுப்புக்கூறத்தக்கதாக மாற்றியுள்ளது.

2.6 எ.எம். அஹமட் எதிர். மாந்தை மேற்கு பிரதேச செயலகம்[179]

மேன்முறையீட்டாளர் அபிவிருத்தி அலுவலர்களால் குறிப்பிட்ட நபர்களுக்கு அளிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் தொடர்பானத் தகவல்களைக் கோரியிருந்தார். பகிரங்க அதிகார சபையின் தகவல் அலுவலர் குறிப்பிட்ட அனுமதிப் பத்திரம் மூன்றாந் திறத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையினால் தகவலுரிமைக்கானச் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) இல் தங்கியிருந்து மூன்றாந் திறத்தவர்கள் தொடர்பான விதிவிலக்கினை மேற்கோள் காட்டி தகவலை மறுத்திருந்தார்.[180] இந்நிகழ்வுகளை அவதானமாக ஆராய்ந்த ஆணைக்குழுவானது, பகிரங்க அதிகார சபைக்கு

179 RTIC மேன்முறையீடு/*287/2018 <http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-287-2018/rtic-287-2018-en-19122018.pdf*,1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

180 தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1) (ஐ) ஆனது பின்வருமாறு கூறுகின்றது: "29(2)(இ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, தகவலானது, மூன்றாம் தரப்பினரால் சம்பந்தப்பட்ட பகிரங்க அதிகாரசபைக்கு அந்தரங்கமாக வழங்கப்பட்டிருந்து அத்துடன் அம்மூன்றாம் தரப்பு அதனை வெளிவிடுவதற்குச் சம்மதமளிக்காதவிடத்து அத்தகவல் மறுக்கப்படலாம்."

நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்பட்டிராதத் தகவல்கள் தொடர்பில் மூன்றாந் திறத்தவர் தொடர்பான விதிவிலக்கு ஏற்புடையதாகாது என தீர்த்தது.

எ.எம். அஹமட் எதிர். மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் பகுப்பாய்வு

நிப்ராஸ் மன்சூர் (மேலே கூறப்பட்டுள்ளது) இல் போன்று இவ்வழக்கிலும், காணி முரண்பாடுகள் மற்றும் ஊழல் என்பன தொடர்புற்றுள்ளன. விதிவிலக்குகளில் தங்கியிருப்பதனூடாக தகவல்களை வெளியிடுவதற்கான பகிரங்க அதிகார சபையின் தயக்கத்தினை இங்கு தெளிவாக அவதானிக்க முடிகின்றது. அரசாங்கம் மற்றும் அதன் உறுப்புக்கள் மீதான நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்கு பகிரங்க அதிகார சபைகள் தகவல்களை வெளியிடுதல் தொடர்பில் விருப்பத்துடன் செயலாற்ற வேண்டுமென்பதுடன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பான குறிப்பிட்ட மட்டங்களுக்கு அவை பொறுப்பானவையாகக் காணப்படுதல் வேண்டும். இது பொது மக்களிடையே நம்பிக்கையினை ஏற்படுத்துவதற்கான அடித்தளமாக அமையும்.

2.7 ஜி. திலீப் அமுதன் எதிர். ஜனாதிபதி செயலகம்[181]

இத்தகவல் கோரிக்கையானது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2010 - 7 ஜனவரி 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மற்றும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 08 ஜனவரி 2015 முதல் 10 மார்ச் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையின் வடக்கு மாகாணத்திற்கு செய்த விஜயங்கள் மற்றும் வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பானதாகும்.

181 RTIC மேன்முறையீடு (நேரடியாக)*/114/2017 <http://www.rticommission.lk/web/images/pdf/rticappeal-114-2017/rtic-114-2017-en-06122018.pdf>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதியின் பிரயாண விபரங்கள் தொடர்பான தகவல் கோரிக்கைக்கு பதிலிறுக்கின்றபோது, அத்தகவல்கள் தம்மிடமில்லையென பகிரங்க அதிகார சபை ஆரம்பத்தில் கூறியது. தற்போதைய ஜனாதிபதியின் பிரயாண விபரங்கள் தொடர்பான தகவல் கோரிக்கைக்கு பதிலிறுக்கின்றபோது, தேசிய பாதுகாப்பு (பிரிவு 5(1)(ஆ), பாராளுமன்ற சிறப்புரிமை (பிரிவு 5(1)(ஓ)[182] மற்றும் அந்தரங்கம் பிரிவு 5(1)(அ) உள்ளடங்கலாக பல்வேறு விதிவிலக்குகள் பகிரங்க அதிகார சபையினால் மேற்கோள் காட்டப்பட்டன. மேற்கோள்காட்டப்பட்ட குறிப்பிட்ட விதிவலக்குகளுக்கு சார்பாக அமையாத ஆணைக்குழுவின் அணுகுமுறைக்கு பதிலிறுக்கும் விதமாக பகிரங்க அதிகார சபையானது கோரப்பட்டத் தகவல்கள் அதன் "உடைமை, காவல் மற்றும் கட்டுப்பாட்டில்" இல்லை என்ற பிரிவு 3 இனை மேற்கோள் காட்டி அதில் தங்கியிருந்தது.

பிரயாண விபரங்கள் மற்றும் திகதிகள் என்பன செய்திப் பத்திரிகைகள் மற்றும் வேறு ஊடகங்களின் வாயிலாக சாதாரணமாக பகிரங்கப் பரப்பில் காணப்படுகின்ற தகவல்கள் என்பதனால் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(ஆ) (i) (தேசிய பாதுகாப்பு) ஆனது இங்கு ஏற்புடையதாகாது என ஆணைக்குழு தீர்த்தது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1)(அ) தொடர்பாக பார்க்கின்றபோது, ஜனாதிபதியின் பிரயாண விபரத்தினை அவருடைய தனிப்பட்டத் தகவலாகக் கருத முடியாது என்பதனால் அத்தகவல்கள் தொடர்பில் அந்தரங்கம் தொடர்பான விதிவிலக்கு ஏற்புடையதாகாது என கூறியது. பாராளுமன்ற சிறப்புரிமை என்ற விதிவிலக்கு தொடர்பான சமர்ப்பிப்புக்கள் பற்றி கூறுகின்றபோது, ஜனாதிபதியின் அத்தகைய சிறப்புரிமைகள் "அவர் அப்பணியினை நிறைவேற்றுகின்ற சந்தர்ப்பங்களில்தான் (பாராளுமன்றத்திற்கு விஜயம் செய்கின்ற)"

182 "அத்தகைய தகவலின் வெளிவிடுகையானது, சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக பாராளுமன்றத்தின் அல்லது மாகாணசபையொன்றின் சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து அத்தகைய தகவலை மறுக்கலாம்" என அப்பிரிவு கூறுகின்றது.

ஏற்புடையதாகும் என்பதனை ஆணைக்குழு வலியுறுத்தியது. மேலும், பிரயாண நோக்கங்களுக்காகப் பொது மக்களுடைய பணம் பயன்படுத்தப்படுவதனால் அத்தகைய பணத்தினை பயன்படுத்துவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடையவர்களாகக் காணப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட பிரயாண விபரங்கள் இலங்கை ஜனாதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பிற்காக ஆவணப்படுத்தப்படாமையினால் குறிப்பிட்ட தகவலுக்கான கோரிக்கையினை பகிரங்க அதிகார சபை குறிப்பிட்ட தகவல்களின் உடைமை, காவல் அல்லது கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கவில்லை என்ற அடிப்படையில் பூர்த்தி செய்ய இயலாது போகின்றது என்பதனை இங்கு குறித்து கொள்ளுதல் பொருத்தமானதாகும்.

ஜி. திலீப் அமுதன் எதிர். ஜனாதிபதி செயலகத்தின் பகுப்பாய்வு

மேற்குறிப்பிட்ட வழக்கில் ஆணைக்குழு பின்வருமாறு தனது அவதானத்தினை மேற்கொண்டிருந்தது

“இலங்கை ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரு பகிரங்க அதிகாரி என்பதுடன் அவர் ஜனாதிபதி என்ற பதவி ரீதியான தகைமையில் பணியாற்றுகின்றபோது பயன்படுத்துவதற்கென பொது நிதி பெற்றுக் கொடுக்கப்படடுள்ளது. பொது மக்கள் நிதி செலவு செய்யப்படுகின்றமை தொடர்பில் பகிரங்க வெளிப்படைத்தன்மையினைப் பேண வேண்டும் என்பது இலங்கை தகவலுரிமைக்கானச் சட்டத்தின் அடிப்படை அம்சமாக, உண்மையில் அனைத்து சட்டங்களினதும் அடிப்படை அம்சமாக விளங்குகின்றது”

“...குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபைகள் இத்தகையச் செலவுகளைத் தணிக்கை செய்வதற்கு பொருத்தமான பொறிமுறைகளை அமுல்படுத்த வேண்டுமென ஆணைக்குழு வலியுறுத்துகின்றது. அதன் மூலமாக அனைத்து செலவுகளுக்குமான பொறுப்புடைமை பேணப்படும்...”

அரசின் தலைவர்களுடைய பிரயாணச் செலவுகள் வழக்கமாக வெளிப்படுத்தப்படுகின்ற உலகளாவிய போக்கினை நியூசிலாந்து, கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளை சுட்டிக்காட்டி ஆணைக்குழு ஒப்பிட்டிருந்தது. கனடாவின் பிரமதர் மற்றும் பல்வேறு அரசாங்க உத்தியோகத்தர்களின் பிரயாண மற்றும் விருந்தோம்பற் செலவுகள் தொடர்பானத் தகவல்கள் அவர்களுடைய உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டு அவற்றுக்கான பொது மக்களுடைய அணுகுதல் சாத்தியமாக்கப்பட்டுள்ளது.[183] அதேபோல, நியூசிலாந்தின் பிரதமர் திணைக்களம் மற்றும் அனைத்து அமைச்சரவை பிரதானிகளினதும் பிரயாணம் உள்ளடங்களான அனைத்து செலவுகளும் அவர்களுடைய அரசாங்கத் தரவு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.[184] அதேபோல, ஐக்கிய அமெரிக்காவிலும் தகவல்களுக்கான சுதந்திரச் சட்டத்தின்கீழ் ஜனாதிபதிகளின் பிரயாண செலவுகள் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளமைக்கான உதாரணங்கள் காணப்படுகின்றன.[185]ஆணைக்குழுவின் முடிவான அவதானங்கள் பிரதான பகிரங்க நபர்களின் பிரயாண விபரங்கள் ஏன் வெளியிடப்பட வேண்டும் அல்லது பேணப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை கீழ்வருமாறு எடுத்துக் காட்டியது:

> “பகிரங்க அதிகாரிகளின் பொறுப்புடைமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பொது நிதியின் பாவனையானது இவ்வாறு நுணுக்கமாக கண்காணிக்கப்பட வேண்டிய அதேவேளை, தெரிவு

183 *'Travel and Hospitality Expense Reports" <http://www.pco-bcp.gc.ca/di/expense_list.asp?cat=1&clientDeptID=1370&dept=65&year=2018&lang=eng>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

184 *Department of the Prime Minister and Cabinet Chief Executive Expenses' <https://catalogue.data.govt.nz/dataset/department-of-the-prime-minister-and-cabinet-chief-executive-expenses>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

185 *Judicial Watch v. U.S. Dept. of Homeland Security (No. 1:17-cv-01007); (Judicial Watch v. U.S. Department of Homeland Security (No. 1:15-cv-01983); (Judicial Watch v. U.S. Dept. of Homeland Security (No. 1:17-cv-01341).*

செய்யப்பட்ட மற்றும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளின் பயண விபரங்கள் தொடர்பானத் தகவல்களின் முழுமையான மற்றும் உயிர்ப்பான வெளிப்படுத்துகை தொடர்பாக பிராந்திய மற்றும் சர்வதேச பரப்புக்கள் அடைந்துள்ள முன்னேற்றத்திற்கு இசைவான முறையில் இலங்கையும் பயணித்தல் செயல்திறம் வாய்ந்ததொன்றாக அமையும். ஏனெனில், இதுவே தகவலுரிமை ஆட்சியின் ஒழுக்கவியல்புகளுக்கான அடிப்படையாக அமையும்."

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதலினை நடைமுறைப்படுத்துதல் என்ற தகவலுக்கான உரிமையின் அடிப்படைக் கோட்பாடுகளைத் தழுவிய ஆணைக்குழுவின் அவ் அவதானத்தினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கின்றபோது, பகிரங்க அதிகார சபை (ஜனாதிபதியின் அலுவலகம்) தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் தேவைப்பாடுகளை மனதில் இருத்தி அத்தகையத் தன்மையுடைய தகவல்கள் தொடர்பான பதிவுகளைப் பேண வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. அதேவேளை, பகிரங்க அதிகார சபையொன்று அது குறிப்பிட்ட கோப்புக்களை பேணுவதில்லை மற்றும் / அல்லது குறிப்பிட்டத் தகவல்கள் அதன் உடைமையில், காவலில் அல்லது கட்டுப்பாட்டில் இல்லை என கூறுகின்றபோது தகவலுரிமைக்கான செயன்முறை மட்டுப்படுத்தப்படுவதனையும் இம்மேன்முறையீடு எடுத்துக்காட்டுகின்றது. இவ்விடயங்கள் தொடர்பான உயரிய பகிரங்க வெளிப்படுத்துகையானது ஒரு வினைத்திறனான மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவியாக தகவலுரிமையினை மாற்றும் என்பதுடன் நடைமுறையிலிருக்கின்ற முறைமையில் உயர் அளவிலான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுதலை உருவாக்கும் என்பதுடன் அரச பொறுப்புக்கூறுதல் தொடர்பாகக் காணப்படுகின்ற வினைத்திறனற்ற நடைமுறைகளை மாற்றுவதற்கு வழிவகுக்கும்.

3. ஒப்பீட்டு பகுப்பாய்வு: இந்தியா, மெக்சிகோ மற்றும் தென்னாபிரிக்காவில் தகவலுரிமையின் வெற்றிகள் மற்றும் சவால்கள்

3.1 மோதலினால் பாதிக்கப்பட்ட /பின்தங்கிய பிரதேசங்களில் தகவலுரிமையின் பயன்பாடு

வேறு பிராந்தியங்களில், குறிப்பாக மோதலினால் பாதிக்கப்பட்ட அல்லது வேறு பின்தங்கிய சமுதாயங்களில் தகவலுரிமையின் பயன்பாடு காணப்படுகின்ற விதத்தினை அறிவதனூடாக அவற்றின் படிப்பினைகள் மற்றும் அனுபவங்களை இலங்கையின் பின்னணியில் பயன்படுத்திக்கொள்ள இயலும். இவ் ஒப்பீட்டு அணுகுமுறையானது, இந்தியா, மெக்சிகோ மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளை மையப்படுத்துகின்றது.

1) இந்தியா

மஸ்தூர் கிஸான் சக்தி சங்ஹடான் (Mazdoor Kisan Shakti Sanghatan (MKSS) என்ற ராஜஸ்தானில் பணியாற்றுகின்ற அடிமட்ட ஒழுங்கமைப்பொன்றின் பணிதான் இந்தியாவின் தகவலுரிமை செயற்பாட்டிற்கான பலம் மிகு அடித்தளமாக அமைந்தது. இவ் ஒழுங்கமைப்பானது குறைவான ஊதியத்தினைப் பெறுகின்ற ஊழியர்கள் பணிப்பட்டியலில் இடப்படுகின்ற தவறான பதிவுகள் தொடர்பான தகவல்களை அணுகுவதற்காக போராடியது.[186] ஆரம்பத்தில், இவ் ஆவணங்கள் இரகசியமானவை என அதிகாரிகளினால் மறுக்கப்பட்டபோதிலும்கூட, அவர்கள் அதனை வெற்றிக் கொண்டனர். இந்தியாவின் தகவலுரிமைச் செயற்பாடுகளானவை முழுமையான மீளாய்வு மற்றும் பகுப்பாய்விற்கு உட்பட்டுள்ளபோதும், ஜம்மு மற்றும் கர்ஷ்மீரில்

186 ஜஸ்வர்யா டெப், பிரித்விஷ் ரோய் சவுடரி ஒரு தசாப்தத்தின் 2005 ஆம் ஆண்டு தகவலறியும் உரிமைக்கான சட்டம்- சட்டத்தின் பரப்பெல்லை மற்றும் தாக்கம் பற்றிய விமர்சன ஆய்வு *CNLU LJ (6) [2016-17] 200.*

2000 ஆம் ஆண்டு ஜம்மு மற்றும் காஷ்மீர் சட்டத்தினூடான தகவலுரிமை பயன்பாடு குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இக்கட்டுரையின் ஆசிரியர்கள் உள்ளடங்கலாக பல்வேறு கல்வியியலாளர்களினால் பரவலாகக் குறிப்பிட்டு காட்டப்படுகின்ற மற்றும் பயன்படுத்தப்படுகின்ற காஷ்மீரில் நிலவுகின்ற மனித உரிமைகள் நிலைப்பாடு தொடர்பான அறிக்கையானது[187]பல்வேறு தகவலுக்கான விண்ணப்பங்களினால் கிடைக்கப்பெற்றத் தகவல்களைப் பயன்படுத்தியே ஆக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஜம்மு மற்றும் கர்ஷ்மீரில் பதியப்பட்ட தகவலுரிமைக்கான விண்ணப்பமொன்று மார்ச் 2016 மற்றும் ஆகஸ்ட் 2017 என்பவற்றிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 1000 இற்கும் அதிகமான நபர்கள் ஜம்மு மற்றும் கர்ஷ்மீர் பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற விடயத்தை தெரிவித்தது.

எனினும், ஜம்மு மற்றும் கர்ஷ்மீரில் புதிய சட்டவாக்கம் அமுலிற்கு வந்து பத்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், பகிரங்க அலுவலகங்கள் மற்றும் அலுவலர்கள் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை முழுமையாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.[188] ஸ்ரீ குராம் பார்வேஸ் எதிர் பி.ஐ.ஓ ஹோம் டிபார்ட்மென்ட்,[189]என்ற வழக்கில் தகவல் கிடைக்கக்கூடியதாக இல்லை என்றும் குறிப்பிட்ட தகவல்கள் வெளியிடுவதற்கு கிடைக்கக்கூடியதாக உள்ள தகவல்கள் என்ற பரப்பிற்குள் உள்ளடக்கப்படவில்லை என்றும் விண்ணப்பதாரருக்கு கூறப்பட்டது. குராம் பார்வேஸ் எதிர் பி.ஐ.ஓ சோனல் பொலிஸ்

187 ஜக்கிய நாடுகள்இ மனித உரிமைகள்இ உயர் ஆணையாளரின் அலுவலகம், கர்ஷ்மீரில் மனிதஉரிமைகளின் நிலை பற்றிய அறிக்கை, இந்திய அரசுகளான ஜம்மு மற்றும் கர்ஷ்மீர் மாநிலத்தில் 2016 ஜீன் முதல் 2018 ஏப்ரல் வரையான அபிவிருத்திகள், அசாட், ஜம்மு, கர்'மீர் மற்றும் கில்ஜீட் பால்டின் என்பனவற்றில் பொது மனித உரிமை கரிசனைகள் (2018) *<https://www.ohchr.org/Documents/Countries/IN/DevelopmentsInKashmirJune2016ToApril2018.pdf>*1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது காஷ்மீந் அறிக்கை.

188 ராஜா முசாவர் பாட் "காணி இழப்பீட்டு தகவலினை மறுத்தல்'[Denying Land Compensation Information'(3 ஜனவரி 2019)*<http://www.dailyexcelsior.com/denying-land-compensation-information/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

189 J&K அரச தகவல் ஆணைக்குழு, தீர்மான இல. SIC/ CO/SA/263/2015/801.

தலைமையகம் ஜம்மு மற்றும் கர்ஷ்மீர் என்ற வழக்கில் தகவல் அலுவலர் எவ்வித விளக்கமுமளிக்காது ஒரு விதிவிலக்கின்கீழ் தகவலை நிராகரித்திருந்தார்.[190] ஊரடங்கு சட்டங்கள், சோதனைச் சாவடிகள், கடினமான நிலப்பரப்பு மற்றும் பணரீதியான மட்டுப்பாடுகள் என்பனவற்றின் காரணமாக பிரஜைகளால் நாடு முழுவதும் சுதந்திரமாக செல்ல முடியாதுள்ளது.[191] மேலும், கல்வியறிவில்லாத மக்களுக்கு தகவலுக்கான ஆட்சிப்பரப்பின் கீழ் தகவல்களை அணுகுவதற்கான ஆதரவினை வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையினால்[192]அது அத்தகைய நபர்களை ஆதரவற்றவர்களாக மாற்றியுள்ளது.[193] ஜம்மு மற்றும் கர்ஷமீரின் தகவலுரிமை முறைமையினை பிரஜைகள் அதிகளவில் அணுகக் கூடியதொன்றாக மாற்றுவதற்கான முயற்சிகளுக்கு பல்வேறு சிக்கல்கள் தடை விதிக்கின்றன.[194]

2) மெக்சிகோ

மெக்சிகோவின் தகவலுரிமைக்கான சட்டவாக்கமானது அதன் சிறப்பான ஏற்பாடுகளின் காரணமாக வெகுவாகப் பாராட்டப்பட்டது.[195] 2002 ஆம் ஆண்டு முதல் அந்நாட்டில் தகவலுரிமைக்கான சட்டம் காணப்பட்டு வருவதுடன் 2015 ஆம் ஆண்டு அது பொது வெளிப்படைத்தன்மைச் சட்டத்தினையும்

---

190 J&K, அரச தகவல் ஆணைக்குழு தீர்மான இல. SIC/ CO/SA/265/2015/788.

191 ராஜா முசாவர் பாட் "தகலுரிமைக்கான மேன்முறையீடுகள் மற்றும் முறைப்பாடுகள்" கிரேட்டர் கர்ஷ்மீர் *Raja (16 Dec 2014) <https://www.greaterkashmir.com/news/gk-magazine/hearing-rti-appeals-complaints/182415.html>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

192 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

193 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

194 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது. For instance, Dr. Bhat attempted to use video conferencing for a hearing he was unable to attend but was instead told to record his statement.

195 Congratulations Mexico for the world's best right to information law'<https://www.law-democracy.org/live/congratulations-mexico-for-the-worlds-best-right-to-information-law/> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது 'Global Right to Information Rating'<https://www.rti-rating.org/country-data/> 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

இயற்றியது.[196] அதன் தகவலுரிமைக்கான பரப்பானது அதன் பொது நோக்கமான தகவலை அணுகுதல் என்பதனையும் தாண்டி பல மாநிலங்கள் தகவலுக்கான உரிமையினைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ள செயற்திட்டங்களை வடிவமைத்தல் என்றளவில் பல்வேறு வெற்றிகரமான பலன்களைக் கண்டுள்ளது.[197] ஊடகவியலாளர்கள் இப்புதிய சட்டத்தினை பொது மக்களுடைய பணம் செலவிடப்படுகின்றமை தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.[198] மேலும், பொது மக்கள் அழுத்தத்திற்கு பதிலிறுக்கின்றவகையில் மெக்சிகோ அரசானது தகவல் கோரிக்கைகளைப் பதிவு வெய்வதற்கான ஒரு வலைத்தளத்தினை உருவாக்கியுள்ளது.[199] *Freedom Info* என்பது "மெக்சிகோவின் இலத்திரணியற் தகவல் பரிமாற்றமானது அதனை அரச இரகசியம் என்பதிலிருந்து அரசியல் வெளிப்படைத்தன்மை என்பதாக மாற்றமடையச் செய்வதில் ஒரு முக்கிய வகிபங்காற்றும" என கூறுகின்றது.[200]

எவ்வாறெனினும், அரசாங்க நிறுவனங்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்கின்ற செயன்முறையினை ஓரளவிற்கு அச்சுறுத்தலுக்குள்ளாக்குகின்றன. தகவல்களைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்ற தனிநபர்கள் ஆரம்பத்தில் தங்களுடைய தகவலுக்கான கோரிக்கைகள் 90மூ ஆன

---

196 *Adriana Garcia, 'Transparency in Mexico: An overview of access to information regulations and their effectiveness at the federal and state level' (2016) Wilson Center, <https://www.wilsoncenter.org/sites/default/files/transparency_in_mexico_an_overview_of_access_to_information_regulations_and_their_effectiveness_at_the_federal_and_state_level.pdf>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

197 *Office of the Information Commissioner of Canada, 'Conference Proceedings: Transparency for the 21st Century" (2017) <http://www.oic-ci.gc.ca/eng/conference-transparence-21e-siecle_transparency-21st-century-conference.aspx>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

198 சுதந்திர தகவல், மெக்சிக்கோ, தகவலுக்கான சுதந்திரம்: ஓர் மேலோட்டம் *<http://www.freedominfo.org/regions/latin-america/mexico/mexico2/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

199 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

200 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

அளவு மறுக்கப்படுகின்றன என தெரிவிக்கின்றனர்.[201] மேலும், பதில் கிடைப்பதற்கு பெரும்பாலும் 40 நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன, பொதுவாக தகவலுக்கான கோரிக்கைகள் ஊடகவியலாளர்களினால் குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பான பொது மக்கள் விழிப்புணர்வினை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் பதியப்படுவதனால் 40 நாட்கள் கால எல்லையானது கோரிக்கைகளின் நோக்கத்தினைத் தோல்வியடையச் செய்வதாக அமைகின்றது.[202] உண்மையில், குறிப்பிட்ட சட்டமானது பொதுவாக விசாரணை செய்கின்ற பாங்குள்ள ஊடகவியலாளர்களினால்தான் பயன்படுத்தப்படுகின்றது என்பதனால்[203] இப் புதிய சட்டமானது தகவலுரிமையினை குறைத்துள்ளதென சில எழுத்தாசிரியர்கள் கூறுகின்றனர்.[204] மேலும், 75% இற்கும் மேலான தகவல் கோரிக்கைகள் கல்லூரி பட்டதாரிகளினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.[205] அரசாங்கமானதும் இன்னும் முன்கூட்டியே தகவல்களை வழங்க வேண்டிய அதன் கடப்பாடுடன் இணங்க வேண்டியுள்ளது.[206]

3) தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவானது அதன் இனவெறி ஆட்சி முடிவடைந்து ஆறு வருடங்களின் பின்னர் தகவல்களை அணுகுதலை ஊக்குவிப்பதற்கான சட்டத்தினை 2000 ஆம் ஆண்டு இயற்றியது. தகவலுக்கான உரிமையானது மோசடிக்கு எதிராக மற்றும் அதனைக் கட்டவிழ்ப்பதற்கு மகத்தான அளவில

---

201 "மெக்ஸிக்கோவிற்கு தகவல் சுதந்திரம் புதிய சகாப்தம்" மெக்ஸிக்கோ நீயுஸ் டெய்லி *(6 November 2015)<https://mexiconewsdaily.com/news/information-freedom-new-era-for-mexico/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது [*Mexico News Daily*].

202 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

203 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

204 *Mexico News Daily,* 201 இல் மேற்குறிப்பிடப்பட்டது.

205 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

206 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

பயன்பட்டது.[207] ஆனால் இனவெறி ஆட்சியில் நிலைத்திருந்த தீவிர இரகசியம் போன்ற கொள்கைகள் இனவெறி ஆட்சிக்கு பின்னரும் தொடர்ந்திருக்கக்கூடிய போக்கு காணப்பட்டது. ஆஉமுடெநல என்பவர் தகவலுக்கான சட்டம் இயற்றப்பட்டு மூன்று வருடங்களின் பின்னரும் பல பாரதூரமான பிரச்சினைகள் நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.[208] உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பதிவுகள் அதேபோல பொலிஸ், பாதுகாப்பு படை மற்றும் அமைச்சரவை குழுக்களின் பதிவுகள் என்பன எவ்வாறு அணுக முடியாதனவாக உள்ளன என்பதனை அவர் விளக்குகின்றார்.[209] மேலும், அவர் 2003 ஆம் ஆண்டளவில் 50மூ ஆன பகிரங்க அலுவலர்கள் தகவல்களை அணுகுதலை ஊக்குவிப்பதற்கான சட்டம் பற்றி பயிற்றுவிக்கப்பட்டிராமையினால் அது பற்றி அறிந்திருக்கவில்லை என கூறுகின்றார்.[210]

அரசாங்க நிறுவனங்கள் இரகசியத்தன்மையை பேணுவதற்கு சார்பாக நடந்து கொள்கின்றன என்பதனை தீர்ப்புச் சட்டங்கள் எடுத்துக் காட்டுகின்றன.[211] ஒவ்வொரு அமைச்சும் குறிப்பிட்ட தகவலை இரகசியமானதா இல்லையா என வகைப்படுத்தக்கூடிய அதிகாரத்தினைக் கொண்டுள்ளமையானது பிரச்சனைக்குரியதொன்றாகக் காணப்படுகின்றது.[212] மற்றுமொரு சந்தர்ப்பத்தில், தென்னாபிரிக்காவின் வரலாற்று காப்பகத்தினால் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவிற்கு பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தரவுத்தளமொன்றினை

207 *Karyn Maughan, 'Exclusive: Officials looted millions in land reform scam' Business Live (24 January 2019) <https://www.businesslive.co.za/bd/national/2019-01-24-officials-looted-millions-in-land-reform-scam/>1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

208 டேல் மெக்கின்லி "தென்னாபிரிக்காவில் தகவல் அணுகும் மாநிலம்*'[2003]* (2003) வன்முறை மற்றும் மீள்புணருத்தானத்திற்கான கற்கை நிலையம்,*<http://www.csvr.org.za/docs/trc/stateofaccess.pdf>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

209 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

210 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

211 2017 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவிற்கான கற்கைச் சுற்றுலாவினை மேற்கொண்ட இலங்கையின் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் ஆணையாளர்களுடனான கலந்துரையாடல்.

212 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக்குவதற்கு உதவியளிக்கின்ற தகவல்கள் தொடர்பாக பதியப்பட்ட கோரிக்கை, பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடுகளை பெற்றுக் கொள்ளும்பொருட்டு தம் சார்ந்த தகவல்களை பகிரங்கப் பரப்பில் வெளியிடுவதற்கான தங்களுடைய ஏக மனதான இணக்கத்தினை வழங்கியிருந்தபோதிலும் கூட,[213] குறிப்பிட்டத் தகவல்கள் மூன்றாந் திறத்தவர்களின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பானது என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டது.[214] இறுதியில் அவ் ஆவணங்கள் பயன்படுத்த இயலாத முறையில் தென்னாபிரிக்காவின் வரலாற்று காப்பகத்திற்கு வழங்கப்பட்டது என்பதுடன் அதனை பயன்படுத்தத் தக்கதாக்குவதற்கு தென்னாபிரிக்காவின் வரலாற்று காப்பகத்திற்கு பத்து வருடங்கள் தேவைப்பட்டது.[215]

மேலும், அங்கு பகிரங்க பதிவேடுகள் தொடர்பில் குறிப்பாக இனவெறி அரசாங்கத்தனிபோதான ஆவணங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்கவில் தவறான முகாமைத்துவம் இடம்பெறுகின்றது.[216]உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பல வரலாற்று பதிவுகள் அரசினால் அழிக்கப்பட்டமையானது நல்லிணக்கச் செயன்முறையினை இடைநிறுத்தியதுடன் அது தகவலை அணுகுவதற்கான உரிமைக்கும் தடையாக அமைந்தது.[217] தென்னாபிரிக்காவில் தகவலுரிமையினை தடை செய்கின்ற பிரதான காரணியாக அமைவது, அச்சட்டத்தினை சாத்தியமாக்குவதற்கான அமைப்பொன்று காணப்படாது[218] அச்சுமையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கே வழங்கப்படுவதனாலாகும்[219] 2016 இல், அச்சட்டம் இயற்றப்பட்டு 16 வருடங்களுக்கு பின்னர், அதிகளவான தகவல் கோரிக்கைகளின் அணுகுதலை சாத்தியப்படுத்துவதற்கான ஒரு ஒழுங்கமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.[220]

213 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.
214 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.
215 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.
216 எம்.சீ.கின்லே, 208 இல் மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.
217 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.
218 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது .
219 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.
220 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது

4. இறுதி பகுப்பாய்வு

கடந்த இரண்டு வருட கால தகவலுரிமை தொடர்பான தீர்மானமெடுத்தல் பற்றிய மீளாய்வு, முன்னேற்றங்கள், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுதல் மற்றும் வெளியிடுகை தொடர்பான அணுகுமுறை சார்பானதாகவே உள்ளது. இலங்கை டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனலின் புள்ளிவிபரங்களின்படி பார்க்கின்றபோது, தகவலுக்கான உரிமைச் சட்டம் அமுலுக்கு வந்து ஒரு வருட நிறைவின் இறுதியில், ஆணைக்குழுவானது பதியப்பட்ட வழக்குகளில் 84 வீதமான வழக்குகளில் தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என பணித்துள்ளது என்பது தெளிவாகின்றது.[221] இது தகவலுரிமையினை பயன்படுத்துபவர்களுக்கு நேர்மறையான ஒரு சமிக்ஞையினை வழங்குவதுடன், தங்களுடைய தகவல் கோரிக்கைகள் ஆரம்பத்தில் நிராகரிக்கப்பட்டாலும் இறுதியாக அவை மாற்றப்படும் என்ற அறிவுடன் தகவல் கோரிக்கைகளை பதிவு செய்வதற்கு ஊக்கமளிக்கின்றது.

இக்கட்டுரையானது வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து பதிவு செய்யப்பட்ட சில குறிப்பான மேன்முறையீடுகளை ஆராய்ந்துள்ள அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து பதிவு செய்யப்பட்ட மேன்முறையீடுகளுக்கும், நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து ஊழல் மற்றும் தவறான நிர்வாகம் என்பன தொடர்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ள தகவலுக்கான மேன்முறையீடுகளுக்கும் இடையில் காணப்படுகின்ற சுட்டிக்காட்டத்தகு வேறுபாடு யாதெனில், வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து தகவலுக்கான கோரிக்கைகளைப் பதிவு செய்பவர்கள் இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழலின் தாக்கத்தை காண்பிக்கின்றனர். இது ஜி. திலீப் அமுதன் எதிர் பாதுகாப்பு அமைச்சு என்ற வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது.

---

221 வேல்டர் வேத்மன் "தகவலறியும் உரிமை, டெய்லி நீயுசில் ஒரு வருடம்" *Walter Wuthmann, 'RTI, One year on' Daily News (16 February 2016) <http://www.dailynews.lk/2018/02/16/features/142984/rti-one-year> 1* பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

(RTIC 70/2018) இக்கட்டுரைக்கான அறிமுகப் பந்திகளில் எம்மால் அவதானிக்கப்பட்டதன்படி, தகவலுரிமையினைப் பயன்படுத்துபவர்களுக்கு, வடக்கு மற்றும் கிழக்கில் மாத்திரமல்லாது, நாடு முழுவதிலுமுள்ள தகவலுரிமையினைப் பயன்படுத்துபவர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையினை அமைத்துக் கொடுத்தலானது வெற்றிகரமான தகவலுரிமை ஆட்சியினை அமைக்க மற்றும் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறுத்தகு அரசாங்கத்தினை அமைப்பதற்கு இன்றியமையாததாக அமையும். தகவலுரிமையினைப் பயன்படுத்துபவர்களை அச்சுறுத்துவதற்கான முயுற்சிகள் உறுதியான சாத்தியமான எதிர்ப்பினூடாக இல்லாது செய்யப்பட வேண்டும். இந்தியா, மெக்சிகோ மற்றும் தென்னாபிரிக்காவில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களில் வாழ்கின்ற சாதாரண நபர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் இலங்கைக்கான படிப்பினைகளாக அமையக்கூடியன. தகவலுரிமைக்கான ஆணைக்குழு பகிரங்கப் பரப்பிலுள்ள மற்றும் சிவில் சமூகங்களிலுள்ள தகவலுரிமையின் வெற்றியாளர்களுடன் இணைந்து இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பணியாற்ற வேண்டும்.

அதேவேளை, பகிரங்க அதிகார சபைகளின் ஒத்துழைப்பு, பிரஜைகளின் உயிர்ப்பான பங்குபற்றுதல் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புக்கள் என்பனவும் முக்கியமானவையாகும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் இதற்கான சுமை நியதிச்சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு அமைப்பின் மீது இருப்பினும் (ஆணைக்குழு) முன்னோக்கி சிந்திப்பதாயும், அதிகபட்ச வெளிப்படுத்துகையினை ஊக்கப்படுத்துகின்ற உயர் தரத்தினை ஸ்தாபிப்பதாயும் காணப்பட வேண்டிய அதேவேளை, அரச நிறுவனங்கள் குறிப்பாக பொறுப்புக்கூறதல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய இலக்குகளை உயிர்ப்புடன் வளர்த்தல் வேண்டும். எந்தவொரு தகவலுரிமைக்கானச் சட்டமும் அதன் பாவனையாளர்கள் அதனை

வேண்டுகின்ற விதத்தில் தான் வலுமிக்கதாக அமையும்.[222] இவ் ஞாபகப்படுத்தல்கள் தகவலுரிமை ஊடாக கடந்த இரண்டு வருடங்களில் கிடைத்த பயன்கள் இனிவரும் காலங்களிலும் நிலைத்திருக்கும் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவையாகும்.

222 ஏலவே சுட்டிக்காட்டப்பட்டதனைப் போன்று, அத்தகைய பெரும்பான்மையான மேன்முறையீடுகள் சாதாரண மக்களால் மேற்கொள்ளப்பட்டவையாகும். அவை கிராமப்புற பிரதேசங்களிலிருந்து மற்றும் சட்டம் மற்றும் அதன் ஒழுங்குவிதிகள் தொடர்பாக சிறந்த விளக்கமுடைய பிரஜைகளினால் பதியப்பட்டவை ஆகும். உண்மையில், பெரும்பாலானோர் நீதிமன்றத்திற்கு சென்று பணம் மற்றும் காலம் ஆகிய இரண்டையும் விரயமாக்குகின்ற விடயங்கள் தொடர்பில் தகவலுக்கான உரிமையினை பயன்படுத்தி வருகின்றனர்" (கிஷாலி பின்ரோ ஜயவர்தன) *'Challenges for Sri Lanka's RTI for the future' (Colombo Telegraph, 29 September 2018) <https://www.colombotelegraph.com/index.php/challenges-for-sri-lankas-rti-for-the-future/>* 1 பெப்ரவரி 2019 அன்று அணுகப்பட்டது.

தன்னிச்சையாக முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு: தகவல் உரிமையின் நிவர்த்தி செய்யப்படாத கடப்பாடுகள்

விஜயானந்த ஜயவீர

அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட 19வது திருத்தச்சட்டத்துடன், பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து தகவல்களை அணுகுவதற்கான உரிமையானது இலங்கைப் பிரஜைகளின் அரசியலமைப்பு ரீதியான உரிமையாக மாறியது. 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அரச மற்றும் பகிரங்க அதிகாரசபைகளும் இந்த உரிமையின் பொறுப்பாளர்களாக கருதப்படுகின்றார்கள். எனவே, தடையின்றி இந்த உரிமையை வைத்திருப்பவர்களான பிரஜைகளுக்கு உதவுவது அவர்களின் சட்டபூர்வமான கடமையாகும்.

பகிரங்க அதிகாரசபைகளிடம் உள்ள தகவல்களை பொதுமக்கள் இரண்டு வழிமுறைகள் மூலம் அணுக முடியும். முதலாவது, பிரஜைகள் பகிரங்க அதிகாரசபைக்கு குறிப்பிட்ட தகவல் கோரிக்கையை சமர்ப்பித்து அதற்கு பதிலாக தகவலை பெற்றுக்கொள்ளல். இரண்டாவது, குறித்த தகவல் கோரிக்கைக்கு மாறாக தகவல்கள் நடைமுறைரீதியில் பகிரங்க அதிகாரசபைகளால் வெளியிடப்பட்டவை. முதலாவது எதிர்வினை வெளிப்பாடாக அறியப்படுகின்ற அதேவேளை, பொது அதிகாரசபை தானாகவே முன்வந்து தகவல் வெளியிடப்படுதல் தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு என அறியப்படுகின்றது.

எங்களுடைய தகவலுக்கான உரிமைச் சட்டமானது தகவலின் எதிர்வினை வெளிப்பாட்டை அபிவிருத்தி செய்வதில் மிகவும் பலமாக உள்ளது. தகவலை நாடுவதற்கான சரியான நடைமுறைகள், இணக்கத்திற்கான காலவரையறைகள்,

என்ன தகவல்கள் விதிவிலக்கிற்குட்பட்டவை (பொதுநலன் மேலோங்குவதால் நியாயப்படுத்தப்படுபவை தவிர்ந்தவை), பிணக்குகளை தீர்ப்பதற்கான நீதிமுறைப்பொறிமுறை மற்றும் இணங்கத்தவறியமைக்கான தண்டனை போன்ற விடயங்கள் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. எதிர்வினையான வெளிப்பாட்டின் மீதான இந்த வலுவான கவனம் பிரஜைகளுக்கான பொதுவான விதி அவர்களுடைய தகவலுக்கான உரிமையை கோருதல் என்ற அடிப்படையில் தனிப்பட்ட கோரிக்கைகளின் மீது தகவல்கள் வழங்கப்படுகின்றது என பெரும்பாலான பங்குதாரர்கள் ஊகிப்பதை தோற்றுவிக்கிறது.

எங்களுடைய சட்டத்துடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் தகவல் உரிமைச் சட்டமானது தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டில் பலமாக உள்ளது. எங்களுடைய சட்டமானது பகிரங்க அதிகாரசபைகள் ஆண்டுக்கு இருமுறை தகவல் உரிமை நடைமுறைப்படுத்தலின் அறிக்கைகள் வெளியிடப்படவேண்டும் எனவும் மற்றும் அமைச்சர்கள் தங்களுடைய குறிப்பிட்ட பெறுமதியுடைய செயற்திட்டங்களின் விபரங்களை அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் மாத்திரமே தேவைப்படுத்துகின்றது. இதனை தவிர வேறொன்றும் முன்கூட்டிய தகவல் வெளிப்படுத்துகைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென எங்களுடைய தகவல் உரிமைச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

இதற்கு மாறாக, இந்திய சட்டத்தின் பிரிவு 4 ஆனது ஒவ்வொரு பகிரங்க அதிகாரசபைகளும் தன்னிச்சையாக முன்கூட்டியே வெளியிட வேண்டிய தகவல்களை வகைப்படுத்தியுள்ளது. அவர்கள் நிறுவனரீதியான வெளிப்படைத்தன்மைக்கு முக்கியத்துவமளிக்கின்றனர். மேலும் இந்திய சட்டமானது முன்கூட்டிய வெளிப்படுத்துகையை நிறைவேற்றுவதற்கு 120 நாட்கள் என்ற நேரவரையையும் கொண்டுள்ளது. எங்களுடைய சட்டத்தில் வலுவான முன்கூட்டிய வெளிப்படுத்துகைக்கான கட்டளைகள் இல்லாததன் அவசியம் உணரப்பட்டு பகிரங்க

அதிகாரசபை முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்துவதற்கு தேவையான ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை கொண்டிருக்கின்ற வகையில் ஒழுங்கு விதிகள் இல 20 ஐ மீள வர்த்தமானியில் அமுல்படுத்துவதுடன் தொடர்புடைய அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த ஒழுங்கு விதியானது 3ந் திகதி பெப்ரவரி மாதம் 2017ம் ஆண்டு அமுலுக்கு வந்தது[223]. தகவல் உரிமைக்கான ஆணைக்குழவானது தனக்கு பிரிவு 15(ஈ) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சர் குறித்த இந்த ஒழுங்கு விதியை விநியோகிக்கும் வகையில் பகிரங்க அதிகாரசபை குறிப்பிட்ட வகையில் தகவல்களை வழங்குவதற்கு நெறிப்படுத்துகின்றது. முன்கூட்டியே தகவல்களை வெளிப்படுத்துவதை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்தின் உத்திகளை வரையறை செய்வதற்கான அவசியத்தை நாங்கள் பரீட்சிக்கும் போது நாங்கள் ஒழுங்குவிதி 20 ஆல் குறித்துரைக்கப்பட்டுள்ள தகவல் வகைப்பாடுகளை ஆராயவேண்டும்.

எப்படியிருப்பினும், தகவல் உரிமைச்சட்டத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டரீதியான கடப்பாடுகளின் மத்தியிலும், தகவல் உரிமைச்சட்டம் அறிமுகப்படுத்திய பின்னரும் கூட முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு என்பது பலவீனமாக இருப்பதாகவே இந்திய அனுபவம் காட்டுகின்றது. 2011ம் ஆண்டு இந்தியாவின் அரசாங்கத்தால் முன்கூட்டிய வெளிப்பாடுகளை மேம்படுத்துவதற்காக ஒரு செயலணி நியமிக்கப்பட்டது. அது "சட்டத்தின் பிரிவு 4 இன் பலவீனமான நடைமுறை இந்த பகுதியின் சில விதிமுறைகளை முழுமையாக விபரிக்கவில்லை என்பதற்கு காரணமாகும். மற்றும் பிரிவு 4 இன் தேவைப்பாடுகள் முழுமையாக இருப்பதை உறுதி செய்வதற்கான ஒரு இணக்க முறைமையை அமைக்க வேண்டும் என சிந்தித்தது"[224]. ஒழுங்கு

223 இலங்கை குடியரசின் வர்த்தமானி இல. *No. 2004 / 66* – வெள்ளிக்கிழமை 03 பெப்ரவரி 2017.

224 2005 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் பிரிவு-04 கிழ் செயற்படும் வெளிப்படுத்தலுக்கான நோக்கத்திற்கான பணிகள் முன்கூட்டியே வலுப்படுத்தும் பரிந்துரைகள் மூலம் செயல்படுத்தப்படல்– அமைச்சரவையிலிருந்து குழுவின் செயலாளர்களுக்கான குறிப்பு திகதி 10 ஜூலை 2012.

விதி இலக்கம் 20 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள குறைந்தளவான தேவைப்பாடுகளை சந்தித்தாலும் கூட, பொது மூலோபாயம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்த சாத்தியமான பொறிமுறையின்றி அனேகமான பகிரங்க அதிகாரசபைகள் முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டில் அவர்களுடைய சட்டக் கடப்பாடுகளை மிகவும் குறைந்த அளவிலேயே சந்திக்கின்றன.

முக்கியமாக, தனிப்பட்ட நபர்களின் கோரிக்கையினூடாக பிரஜைகள் தகவல்களை பெறுவதற்காக காத்திருக்காமல் பகிரங்க அதிகாரசபைகள் தாங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அனைத்து தகவல்களையும் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல் தன்னிச்சையான முன்கூட்டிய வெளிப்படுத்துகை எனப் பொருள்படும். எனவே, அதிகபட்ச சாத்தியமான தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்படுத்துகை பகிரங்க அதிகாரசபையின் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றில் அதன் சொந்த உறுதிப்பாட்டை சுட்டிக்காட்டுகின்றது. இது நமது தகவல் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தை விளக்கும் முன்னுரையில் உயர்த்திக்காட்டப்பட்ட முக்கியமான எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளாகும். தகவல் உரிமைக்கான சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் பகிரங்க அதிகாரசபைகள் பொதுமக்களுக்கு வெளிப்படையாக இருப்பதற்கான பொறிமுறையை உண்மையில் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், தொடர்ச்சியாக திருப்திப்படுத்தப்பட்ட எதிர்வினையான வெளிப்படுத்துகையை நமது சட்டம் மிகவும் பலமான முறையில் உறுதிப்படுத்தியிருப்பதனை விட வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கான நிறுவன உறுதிமொழிகளில் பொதுமக்கள் நம்பிக்கையானது தகவலின் முன்கூட்டிய வெளிப்படுத்துகையை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

பிரஜைகளின் தகவலுக்கான உரிமையை முழுமைப்படுத்தல் என்பது பகிரங்க அதிகாரசபைகள் தகவலை வெளிப்படுத்தலாகும் மாறாக கோரிக்கைவிடுப்பவர்களுக்கு மாத்திரம் வெளியிடுவதல்ல.

இந்தியாவின் தகவல் உரிமைச் சட்டத்தைப் போல் அல்லாது, எங்களின் தகவல் உரிமைச்சட்டத்தின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி இல 20 ஆனது தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்படுத்துகையுடன் பகிரங்க அதிகாரசபைகள் இணங்கிச் செல்வதற்கான கால எல்லையை கொண்டிருக்கவில்லை. இருப்பினும், பகிரங்க அதிகாரசபைகள் வெளிப்படைத்தன்மைக்கு அதனது உண்மையான உறுதிப்பாட்டை அதிகரிக்கவும் அதன்மூலம் செயற்திறனை அதிகரிக்கவும் ஒழுங்குவிதி இல 20 இல் பட்டியலிடப்பட்டுள்ள தகவல் தேவைப்பாடுகள் போதுமானதாக இருக்கும். அதனால், அரசாங்கமானது அரசதுறையான பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து நியாயமான காலத்திற்குள் திருப்திகரமான விளைவை அடைவதற்கு ஒழுங்குவிதி 20 உடன் முழுமையான இணங்கிச் செல்வதை உறுதிப்படுத்துவதற்கு ஒரு மூலோபாய அணுகுமுறையை நடைமுறைப்படுத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் இல்லை என்றாலும் பிரஜைகளும் அவர்களுடைய அமைப்புக்களும் எதிர்வினையான தகவல் வெளிப்பாட்டை ஆதரிக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கமும் மக்களும் தகவலுக்கான உரிமையின் முன்கூட்டிய வெளிப்படுத்தல் என்ற விதியை உருவாக்குவதற்கு அதிக முயற்சிகளை மேற்கொள்வதற்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன.

பரஸ்பரமான நன்மைகள்

தன்னிச்சையான முன்கூட்டிய வெளிப்படுத்துகையானது பகிரங்க அதிகாரசபை பல்வேறுபட்ட சேவைகளை வழங்குகின்றது என்பதனையும் அவற்றை எவ்வாறு அணுகலாம் என்பதனையும் பிரஜைகளுக்கு அரசாங்கம் அறிவிப்பதற்கு இயலுமானதாக்குகின்றது. இது மக்களுக்கு சேவை செய்வதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள படிமுறைகள் பற்றி விளக்குவதற்கு

அரசாங்கத்தை அனுமதிப்பதோடு குறித்த சேவையின் மூலமான நன்மைகளை பெற்றுக்கொள்வதை ஒப்புரவு ரீதியாக அறிந்துகொள்வதற்கும் மக்களை இயலுமானதாக்குகின்றது.

தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடானது அரசாங்கத்தினுள்ளும் மற்றும் பல்வேறுபட்ட பகிரங்க அதிகாரசபைகளுக்கிடையிலும் தகவல் ஓட்டத்தினை அதிகரிக்கின்றது. அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் முகவர்களின் கிடங்கில் பல்வேறு பயனுள்ள தகவல்கள் உள்ளன. அமைப்புக்களின் இணையத்தளம் ஊடாக பேணி வைக்கப்பட்டுள்ள எல்லா முக்கியமான தகவல்களையும் வெளிப்படையாக பகிர்வதற்கான வாய்ப்பானது ஒவ்வொரு அமைப்புக்களினதும் வகிபங்கினையும் பொதுமக்களுக்கு அவர்கள் வழங்க தேவைப்படுத்தப்பட்டுள்ள சேவையினையும் மிகவும் நல்ல முறையில் விளக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. பொதுமக்களுடன் தகவல்களை பகிர்ந்து கொள்ளுதலானது பகிரங்க அதிகாரசபைகள் அவர்களுடைய தோற்றத்தை உயர்த்துவதற்கும் அவர்களுடைய வகிபங்கு தொடர்பான பொதுமக்களின் கருத்தை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு ஆனது பல்வேறுபட்ட தாபனங்களும் அவர்களுடைய ஊழியர்களும் ஒருவருக்கொருவர் இலகுவாக தொடர்புபடுவதற்கும் அவர்களுடைய சேவையை பயனுள்ள வகையில் அதிகரிப்பதற்கான பொதுவான அடிப்படையை கண்டுகொள்வதற்கும் இயலுமானதாக்குகின்றது. பகிரங்க அதிகாரசபைகளுக்கு திறந்த தகவல் அமைப்பு இல்லாத போது அரசாங்க வணிகத்தின் பரிவர்த்தனை செலவுகள் அதிகரிக்கின்றன. இதன் மூலம் அவர்கள் தங்களுடைய நிறுவனத்தில் மட்டுமல்லாது அதனுடன் தொடர்புடைய தகவல்களை மற்றவர்களிடமும் எளிதாக அணுக முடியும். ஒவ்வொரு அமைப்பும் அதன் எல்லைக்குள் உள்ள அவற்றின் அமைப்பின் இருப்பையும் அவர்களுடைய வகிபங்கினையும்

நியாயப்படுத்த தேவையான தகவலை வெளிப்படையாக பகிரும் வரை அரசாங்க அமைச்சின் ஒரு நம்பகமான வரைபடத்தை பெற பிரஜைகளுக்கு கடினமாக உள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்கள் தங்கள் செயல்களுக்கும் அதுபோல தங்கள் செலவினங்களுக்கும் பெறுப்புக்கூறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்க செலவினங்களைப் பற்றிய தகவல்களை தானாக வெளிப்படுத்தல் என்பது அரசாங்கத்தின் சார்பில் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்ற தன்மையை குறித்துக்காட்டுகின்றது. பொதுமக்கள் கண்காணிப்பின் கீழ் செலவினம், கொள்முதல் மற்றும் அரசாங்க ஒப்பந்தங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வைத்தலானது ஊழலை தடுப்பதோடு அதிகாரசபைகள் குறிப்பிட்ட குழுக்களின் நலன் சார்ந்திருப்பதற்கு பதிலாக புறநிலைசார்ந்து தீர்மானங்களை எடுப்பதற்கு தூண்டுகின்றது. கொள்முதலில் உள்ள வெளிப்படைத்தன்மை போட்டித்தன்மையை உருவாக்குவதோடு என்ன செலவழிக்கப்படுகின்றது என்ன நோக்கத்திற்காக அதனால் என்ன விளைவு என்பவற்றை ஒவ்வொருவரும் சரிபார்த்துக்கொள்வதற்கு இயலுமானதாக்குகின்றது.

ஒவ்வொரு தகவல் கோரிக்கைகளுக்கும் தனித்தனியே பதிலளித்தலானது கணிசமான நேரத்தையும் செலவினத்தையும் தகவல் கோரிக்கையாளருக்கும் அதனை வழங்குபவர்களுக்கும் ஏற்படுத்துகின்றது. அதேநேரத்தில் தன்னிச்சையான முன்கூட்டிய வெளிப்பாடு தனிப்பட்ட தகவல் கோரிக்கையின் செயலாக்கத்தில் செலவழித்த நேரத்தையும் வளங்களையும் வினைதிறனுடன் குறைக்கின்றது. பொதுமக்களின் ஆட்சி எல்லையில் ஏற்கனவே தேவையான தகவல்கள் கிடைக்கின்ற போது தனிப்பட்ட கோரிக்கைகளை தாக்கல் செய்வதற்கு பிரஜைகள் நேரத்தை செலவிடுவதில்லை. தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடானது சாதாரணமாக கோரிக்கையாளர்களாக இருப்பவர்களுக்கு மாத்திரமல்லாது ஒவ்வொருவரும் தகவலை

அணுகுவதற்கு ஏற்பாடு செய்வதோடு எல்லா பிரஜைகளும் சமத்துவமான முறையில் தகவலை அணுகுவதனை உறுதி செய்கிறது. குறிப்பிட்ட கோரிக்கையின்றி மக்கள் தகவலை அணுகுவதற்கான திறனானது சந்தேகங்களை குறைப்பதோடு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை அதகரிக்கின்றது.

ஆகையால், தகவல் பெறும் பொருட்டு அடிக்கடி தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பொதுமக்கள் நாடுகின்ற தேவையை குறைப்பதற்கு பகிரங்க அதிகாரசபைகள் வெளிப்படுத்தக்கூடிய அனைத்து தகவல்களையும் வெளியிடுவதற்கு முயற்சி செய்யவேண்டும். ஒரு நிறுவன கலாசாரமாக ஊழியர்களிடையே தன்னிச்சையான வெளிப்படுத்தலானது பகிரங்க அதிகாரசபையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான ஒரு முக்கிய தேவைப்பாடாகும்.

கொள்கைகளை வடிவமைப்பதில் பிரஜைகளின் தகவல் தொடர்பு

தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடானது அரசாங்கம், பிரஜைகள் மற்றும் வர்த்தகத்திற்கிடையில் தொடர்பாடலை பரவச்செய்வதோடு கொள்கை உருவாக்கத்திலும் பங்களிப்பு செய்கிறது. பொதுக்கொள்கை வடிவமைப்பதில் குடிமக்களின் ஈடுபாட்டிற்கு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் மீதான உடனடி அணுகலையும் தற்போதைய உத்திகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றின் விளக்கங்களும் தேவைப்படுத்துகின்றன. அத்தகைய செய்திகள் இணைத்தள செய்திமடல்கள்இ மன்றங்கள், சமூக வலைத்தளங்கள், குறுஞ்செய்திகள், மின்னஞ்சல் திறந்த தரவு மூலம் அல்லது நிறுவன வலைத்தளத்துடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து மற்றைய சேவைகள் மூலமும் விநியோகிக்கப்பட முடியும். கொள்கை ஆலோசனை திறம்படவும் பங்குதாரர்கள் விளைவை நம்புவதற்கும் பொதுமக்களிடமிருந்தும் ஏனைய பங்குதாரர்களிடமிருந்தும் பதிலாக கருத்துக்களையும் ஒப்புதல்களையும் பெறுவது முக்கியமாகும்.

உதாரணமாக, கொள்கை வகுப்பாளர்கள் பல்வேறு பங்குதாரர்களின் நிலைகளை சுருக்கமாகவும் முன்னோக்கி வழிநடத்துவதன் மூலம் குடிமக்களுடனான உரையாடலின் விளைவு பற்றி அறிக்கை செய்யலாம். தொடர்புடைய வலைத்தளமானது கருத்துக்கணிப்புக்கள், ஆய்வுகள், அரட்டை அறைகள், வலைப்பதிவுகள், சமூக வலைத்தளங்கள், குறுஞ்செய்தி, மின்னஞ்சல், திறந்த தரவு மற்றும் உயர்ந்தளவில் ஈடுபாட்டிற்கு வசதியேற்படுத்தும் ஏனைய சேவைகள் என்பவற்றை உள்ளடக்க கூடியதாயுள்ளது. கொள்கை விடயம் தொடர்பில் இலத்திரனியல் மனுக்களை சமர்ப்பிப்பதற்கு பிரஜை குழுக்களை அனுமதிப்பதன் மூலம் அவர்களுடைய வலையத்தள ஆலோசனை தொடர்பில் பல்வேறுபட்ட பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களை வெளிக்கொண்டுவரமுடியும். அதற்கு பதிலாக, பிரஜைகள் குழுக்கள் பொதுக்கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளை உருவாக்குதல் அல்லது திருத்துதல் போன்ற விடயங்களில் அவர்களுடைய சொந்த முன்மொழிவை அறிமுகப்படுத்துவதற்கு வலைத்தளத்தை பயன்படுத்த வேண்டும். அது தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களால் அல்லது அரசாங்க அதிகாரரீதியாக எடுத்துக்கொள்ளப்படக்கூடியதாயிருக்கும்.

இந்தியாவில் தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டை சீர்திருத்துவதற்கு நியமிக்கப்பட்ட செயலணியானது எந்தவொரு சட்டமும் முன்மொழியப்படும் போது அல்லது திருத்தப்படும் போது மற்றும் குறிப்பாக பொதுமக்களை நேரடியாக பாதிக்க கூடிய சுகாதாரம், கல்வி, சமூக நலன்கள், இயற்கை வளங்கள் போன்றன தொடர்பான மிகப்பெரிய தேசிய கொள்கை உருவாக்கத்தில் தீர்மானங்களை எடுக்கும் போதும் இணைத்தள ரீதியான பொதுமக்கள் ஆலோசனையை பெற வேண்டும் என பரிந்துரை செய்தது.[225]

---

225 2005 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் பிரிவு-04 கிழ் செயற்படும் வெளிப்படுத்தலுக்கான நோக்கத்திற்கான பணிகள் முன்கூட்டியே வலுப்படுத்தும் பரிந்துரைகள் மூலம் செயல்படுத்தப்படல் . - அமைச்சரவையிலிருந்து குழுவின் செயலாளர்களுக்கான குறிப்பு திகதி 10 ஜுலை 2012.

அரசாங்க தகவல் அதிகரித்து ஒரு உட்கட்டமைப்பு வடிவமாக மாறிவருகின்றது. எங்கள் கல்வி மற்றும் சுகாதார அமைப்புக்கள், சாலைகள்இ மின்கட்டமைப்பு அல்லது நீர் வசதி அமைப்புக்கள் என்பவற்றை போல நமது சமகால வாழ்க்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தகவலின் தன்னிச்சையான முன்கூட்டிய வெளியீட்டை அதிகரித்தல் மற்றும் அரசாங்க தகவல்களை உண்மையான பொது பயன்பாடாக ஆக்குதல் போன்றன எந்தவொரு ஜனநாயக அரசாங்கத்திற்கும் முக்கியமான கடமையாகும். அது முறையாக அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை எடுக்கும் பிரஜைகளின் திறனைப்பொறுத்தது.

மீளப்பயன்படுத்தும் தகவலின் புதுமை

பொதுத்துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றை மேம்படுத்தல் போன்ற சமூக இலக்குகள் மூலம் பொதுத்துறையில் தகவல்களை அணுகுதலானது உந்துதல் பெற்றுள்ளது. இருப்பினும் தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு துணைப்பொருளாதார நலன்களையும் கொண்டுள்ளது. உதாரணமாக மறுபயன்பாட்டுக்கான பொதுத்துறை தகவல் கிடைப்பது, புதுமையான தொழில் முனைவோர் பொதுதுறை தகவல்களிடமிருந்து பெறப்பட்ட பயனுள்ள அறிவுதயாரிப்புக்களை தயாரிக்க ஊக்குவிக்கும்.

புள்ளிவிபர முகவர், கலாசார நிறுவனங்கள், பல்வேறுபட்ட காப்பகங்கள் உள்ளிட்ட பொதுத்துறை அமைப்புக்களால் தயாரிக்கப்பட்ட அல்லது நடத்தப்பட்ட அல்லது உள்ளடக்கப்பட்ட தகவல் மற்றும் உள்ளடக்கம், அதன் பொது செயல்பாடுகளின் ஒரு பகுதியாக ஒரு பொது அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட மற்றும் அல்லது சேகரிக்கப்பட்ட எந்தவொரு தகவலும் பொதுத்துறை தகவலாக கருதப்படும். பொருளாதாரம் மற்றும் வானிலை ஆய்வுத்தரவுகளில் இருந்து கரலப்படைப்புக்கள், வரலாற்று ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்து வரும் தகவல்கள்,

பல்வேறு கல்வி மற்றும் கலாசார நோக்கங்களுக்கான தொழில் முனைவோர் புதுப்பித்தலாகவும் பரந்த மக்கள்தொகைக்கு கல்வி மற்றும் கலாசார அறிவின் முக்கிய ஆதாரமாகவும் உள்ளது. தகவல் உரிமைச்சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்க அதிகாரசபையால் வெளியிடப்படும் எந்தவொரு தகவலும் ஒழுங்கு விதிமுறை 19 இன் படி பகிரங்க அதிகாரசபையினால் வெளியிடப்படும் ஏதேனும் தகவல் மீள் பயன்பாட்டிற்காக வேத்துரிமையற்றிருத்தல் *[royalty-free]* இடையறாததாக இருத்தல *[perpetual]* பிரத்தியேகமற்ற உரிமையினை கொண்டிருத்தல் *[Non-Exclusive License]* ஆகியவற்றிற்கு அமைவானதாகும்[226]

வெளியிடும் முறைமைகள்

பகிரங்க அதிகாரசபையின் வலைத்தளத்தின் ஊடாக இணையத்தளத்தில் வெளியீடு செய்யப்படும் வெளியீடுகள், அறிவித்தல் பலகைக்கான வர்த்தமானி அறிவித்தல்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளுக்கான அறிவிப்புக்கள் போன்ற பல்வேறு வழிகளைப் பயன்படுத்தி ஒரு பகிரங்க அதிகாரசபை தன்னிச்சையாக முன்கூட்டிய வெளிப்படுத்தலை அடையமுடியும்.

இணையத்தின் மூலம் அதிகளவு தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான முன்னெப்போதும் இல்லாத வகையிலான வாய்ப்புக்கள் பெறப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியில் இலங்கையின் சனத்தொகையில் முப்பது சதவீதமானோர் நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி வலையமைப்பு வசதிகளினூடாக இணையத்தளத்தை அணுகக்கூடியதாக இருந்தனர். மேலும் ஒவ்வொரு 100 மக்களுக்கும் 131 கைத்தொலைபேசி சந்தா இருந்தது.[227] இலங்கையின் பிராதன செயற்பாட்டாளர்களால் வழங்கப்படும் அனைத்து முற்பணம் செலுத்திய சிம் அட்டைகளிலும் தரவு (Data) செயலாக்கப்பட்டுள்ளது. 4G வலையமைப்பு

226 அரச அச்சகம் (2017) இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் இலக்கம். *2004/66* – வெள்ளிக்கிழமை 3 மாசி 2017 கொழும்பு.

227 *<http://www.trc.gov.lk/images/pdf/statis_q2201824082018.pdf>*.

வாடிக்கையாளர்களை கவருவதற்காக வழங்குனர்களால் தீவிரமாக விரிவுபடுத்தப்படுகின்றது. அதனால், தரவுத்தகுதி வாய்ந்த கையடக்கதொலைபேசியை கொண்டிருக்கின்ற எந்த பிரஜையும் ஒரு குறிப்பிட்ட தரவுத்திட்டத்திற்கு சந்தா இல்லாமல் இணையத்தைப் பயன்படுத்தலாம்.

பெரும்பாலான பகிரங்க அதிகாரசபைகள் அவர்களுக்கென சொந்தமாக இணையத்தளத்தைக் கொண்டுள்ளனர். அதனை பயன்படுத்தி அவர்கள் தங்களுடைய நிகழ்வுகளுடன் தொடர்புடைய தகவல்களை வெளியிடுகின்றனர். ஆனால் முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டிற்கு தகவல் உரிமைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளில் குறிப்பிட்டுள்ளதன்படி இதனை எந்த அளவிற்கு அவர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பது வேறுபடும். 2017ம் ஆண்டு டிசம்பர் மாதம் Veritg Research என்ற அமைப்பினால் 55 பகிரங்க அதிகாரசபைகளிடம் முன்கூட்டிய தகவல்வெளிப்பாட்டின் நிலையை உறுதிப்படுத்த நடாத்திய கணக்கெடுப்பில் இணையத்தளத்தில் தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்படுத்தலை தகவல் உரிமைக்கான ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்தல் ஒட்டுமொத்தமாக தகவல் வகைப்பாட்டாலும் பகிரங்க அமைப்புக்களாலும் மட்டுப்படுத்தப்பட்டதாகும்[228].

இணையத்தளம் ஒரு நிறுவனத்தின் பொதுவான முகமாகும். ஒரு தொழில்முறை, பயனுள்ள, செயற்பாட்டு, தேதிவரை மற்றும் வெளிப்படுத்தும் நட்பு வலைத்தளம் என்பன பொது தகவலை பேணி வைக்கும் நிறுவனத்தின் விருப்பத்தையே பிரதிபலிக்கின்றது. பயனாளிகள் தமக்கு விரும்பிய மொழியில் நிறுவனத்தின் வலைத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அனேகமான தகவல்களை அணுகக் கூடியதாயிருக்க வேண்டும். அழகியல் முறையீடு, ஒழுங்கமைக்கப்பட்ட தரமான மேம்படுத்தப்பட்ட உள்ளடக்கத்தின் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தின் தெளிவு

228 வெரிடே ஆய்வு (2017) தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் கீழ் முன்னைய ஆன்லைன் வெளிப்படுத்தல்கள்: கண்காணிப்பு திட்டம் மற்றும் அடிப்படை மதீப்பீடு இறுதியறிக்கை உலக வங்கி கொழும்பு.

மற்றும் பயனாளிகளுக்கு அதன் வெளிப்பாட்டை நியாயப்படுத்தல் என்பன பயனாளிகள் இணையத்தளத்திற்கு திரும்புவதற்கு சாத்தியமான காரணங்களாகும். கிராபிக்ஸ், அனிமேஷன் மற்றும் வீடியோ மற்றும் ஆடியோ போன்ற மல்டிமீடியா போன்றவற்றினூடாக இணையத்தளத்தின் உள்ளடக்கத்தை புரிந்து கொள்வதை எளிதாக மேம்படுத்தலாம். சர்வர்(surfer) ஒருங்கிணைப்பு செயல்முறைகள், பயனாளி குழுக்கள், வலையத்தள அரட்டைகள் என்பவற்றில் பங்கேற்கும் சாத்தியங்கள் ஆகியவற்றை கவர்ந்திழுப்பதையும் பகிரங்க அதிகாரசபையால் கையாளப்படும் விடயம் தொடர்பான மின்னஞ்சல்களை பெற்று அவற்றை மேம்படுத்தல் என்பவற்றை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும்.

சுருக்க குறியீடுகள் மற்றும் சுருக்கங்கள் என்பவற்றை பயன்படுத்தியும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளை மக்களுக்கு பிரச்சினைகள் தொடர்பில் விளக்கம் கொடுக்க பயன்படுத்துவதன் மூலமும் பகிரங்க அதிகாரசபையின் இணையத்தளமானது இலகுபடுத்தப்படலாம். உள்ளடக்க மதிப்பீட்டு அமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலமும் பயனாளர்களுக்கான கருத்து விருப்பங்களை திட்டமிடுவது பயனுள்ளதாக இருக்கும். பகிரங்க அதிகாரசபைகள் முக்கியமான நிகழ்வுகளை நேரடியாக ஸ்ரீமிங்(streaming) மூலம் விரிவுபடுத்தலாம். மேலும் இணையத்தளத்தில் புதிய மேம்படுத்தல்கள் வெளியிடப்படும் ஒவ்வொரு முறையும் ஊடகவியலாளர்களுக்கு விழிப்பூட்டல்களை அனுப்புவதற்கு வலைத்தளங்களை தானியங்குபடுத்துகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, பிரதான ஊடகங்கள் தங்கள் செய்தி அறிக்கையின் ஆதாரமாக வலைத்தளங்களை அதிகளவு பயன்படுத்துகின்றன.

ஒரு பொதுவான உத்தியை நோக்குதல்

ஒரு பிரஜையினுடைய உரிமையை முழுமைப்படுத்தல் என்பது பிரஜைகள் தங்களுடைய உரிமையை திருப்திகரமான முறையில் அனுபவிப்பதற்கான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும்

வளங்களை வைப்பதற்கான நடவடிக்கைகளை கடப்பாட்டாளர்கள் எடுத்தலாகும். இது அனைத்து பகிரங்க அதிகாரசபைகளினூடாக முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டை மேம்படுத்துவதற்கான ஒரு ஒட்டுமொத்த அரசாங்க மூலோபாயத்தை வளர்ப்பதில் முக்கியத்துவம் வாய்ந்தது. தகவல் உரிமைச்சட்டத்தை செயற்படுத்துவதிலிருந்து எதிர்பார்க்கப்படும் முக்கிய முடிவுகளான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை போன்றன முன்கூட்டிய தகவல் வெளியீட்டை ஊக்கப்படுத்துவதற்கு நன்கு வெளிப்படுத்தியுள்ள சாத்தியமான அரசாங்கத்தின் மூலோபாயத்தின் தேவையை நியாயப்படுத்துகின்றன. தகவல் உரிமைச்சட்டத்தின் பிரிவு 8 மற்றும் 9 மற்றும் அதனுடைய ஒழுங்குவிதி இல 20 என்பன பகிரங்க அதிகாரசபைகள் முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டிற்கான தேவைப்பாடுகளை முழுமைப்படுத்த வேண்டும் என்ற கடப்பாட்டைக் கொண்டுள்ளது. ஒழுங்கமைப்பு விதி இல 20 ஆனது 16 தகவல் வகைப்பாடுகளை பகிரங்க அதிகாரசபைகள் கடைப்பிடிக்க வேண்டிய குறைந்தபட்ச முன்கூட்டிய தகவல் தேவைப்பாடுகளாக குறித்துரைக்கின்றது.

இருப்பினும், அனைத்து பகிரங்க அதிகாரசபைகளும் தங்கள் மூத்த மேலாளர்களால் திசை திருப்பி கண்காணிக்கப்பட்டு ஒரு பொதுவான அணுகுமுறையை கடைப்பிடிக்காவிடின் ஒட்டுமொத்த வழிகாட்டுதல்களின் பற்றாக்குறை மற்றும் பல்வேறு பகிரங்க அதிகாரசபைகளின் ஒன்லைன் இருப்புநிலை மாறுபாடு என்பவற்றின் அணுகுமுறைகளின் பன்முகத்தன்மையைக் கொடுக்கும் முன்கூட்டிய தகவலின் வெளிப்பாட்டை ஒருவர் எவ்வாறு அளவிடப் போகிறார்?

நன்கு கட்டமைக்கப்பட்ட வெளியீட்டுத் திட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட விரிவான முன்கூட்டிய வெளிப்பாட்டுத் தேவைகளை மீளப்பெறுதல் மற்றும் மூத்த முகாமையாளர்கள் பகிரங்க அதிகாரசபைகள் அவர்களுடைய முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டின் கடப்பாடுகளை ஒரு நல்ல தொடக்கப்புள்ளியிலிருந்து

பெறுவதற்கான ஒரு பொதுவான வடிவமாக இருக்குமாறு பயன்படுத்த தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். தகவலுக்கான உரிமையை நடைமுறைப்படுத்துவதில் நல்ல பாதையிலுள்ள பல நாடுகள் இதேபோன்ற வெளியீட்டுத் திட்டங்களை உருவாக்கி நடைமுறையில் வெளியிடுவது என்ன என்பதனை ஒழுங்கமைத்து விளக்க உதவியுள்ளது.

இணக்கத்தின் சிக்கல்கள்

வெளிப்படையான அரசாங்க அமைப்புக்களை நிறுவுவதற்கு ஒரு முக்கிய முன்முயற்சியாக தகவலின் தன்னிச்சையான முன்கூட்டிய வெளிப்பாட்டை உணர அதன் உயர் தலைவர்கள் தயாராக இருக்காவிட்டால், அரசாங்கம் வெளிப்படையாகவும் பொறுப்புணர்வுடனும் இருக்க முடியாது. அரசியல் விருப்பமின்மையானது பொதுமக்கள் கண்காணிப்பின் பயம்: அரச திட்டங்கள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றின் தோல்வியில் வெளிப்படும் பயம்: தனிப்பட்ட நலன்களுக்கு அச்சுறுத்தல் அல்லது அரசியல் எதிர்பார்ப்பாளர்களுக்கு அதி-கமான பாதிப்பு என்பவை போன்ற பல எண்ணிக்கையிலான காரணிகளால் உந்தப்பட்டிருக்கலாம். இருப்பினும் அத்தகைய அச்சங்களை குறைப்பதானது பிரஜைகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களைப்பற்றிப் பேசுவதற்கான வெளிப்படையான உரையாடலில் பிரஜைகளுடன் உண்மையாக ஈடுபடுவதற்கான தலைவர்களின் விருப்பத்தை சார்ந்தே இருக்கின்றது. முன்கூட்டிய தகவல் பரிமாற்றமானது அமைநிலையான உரையாடலில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் மற்றும் பிரஜைகளுக்கிடையிலான நம்பிக்கையை கட்டியெழுப்ப உதவுகிறது. இது பொதுவான சவால்களை எதிர்நோக்கி அவற்றை நன்கு அறிந்த கொள்கைகளை உருவாக்குவதற்கான பரஸ்பர புரிதலை உருவாக்குகின்றது. தலைவர்களின் சொந்த மேன்மையையும் உணரப்பட்ட ஞானத்தையும் முற்றிலும் நம்புவதற்கு பதிலாக, தலைவர்கள் பொதுமக்களின் ஆலோசனைகளையும் மற்றும் பிரஜைகளை

முன்மாதிரியாக நடத்தும் போது மாத்திரமே அரசாங்கத்தின் திறந்த அமைப்புக்கள் சாத்தியமாகும்.

சில நிறுவனங்கள் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கு பதிலளிப்பதற்கு மகிழ்ச்சியாக இருப்பதாக கூறும் அதேவேளை தற்போதைய நடைமுறையிலிருந்து குறைந்தபட்ச முயற்சிகளோடு தங்கள் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க விரும்புகின்றன. குறைந்தளவான ஜனநாயக ஆட்சியில் வேலை செய்த அனுபவ அடிப்படையில் நோக்கும் போது பல அதிகாரவர்க்கங்கள் வெளிப்படுத்தாமையை அவர்களுடைய அதிகாரசபையின் ஒரு நல்ல அறிகுறியாக நம்புகின்றனர்.. அவர்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்கள் கண்காணிப்பு என்பன அவர்களுடைய அதிகாரத்தையும் செல்வாக்கினையும் பலவீனப்படுத்தும் என கருதுகின்றன. கட்டாயமான வெளிப்படைத்தன்மைக்கான பயிற்சி நிகழ்ச்சியானது பாதிக்கப்பட்ட அமைப்புக்களில் உள்ள நிறைவேற்று தரத்திலுள்ள அலுவலர்கள் குறித்த நடவடிக்கைளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றின் கலாசாரத்தை வளர்ப்பதற்கான வேகமானது உரிமையை கொண்டிருப்பவர்களிடமிருந்தும் கடமையை கொண்டிருப்பவர்களிடமிருந்தும் வரவேண்டும். அரசாங்க தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள்: மூத்த மற்றும் மத்திய தர பொது அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகம் ஆகிய மூவரும் இங்கு முக்கியமானவர்கள். இந்த மூவரினதும் ஒட்டுமொத்த இணக்கம் மற்றும் பங்குபற்றுதல் இல்லாவிடின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை என்பவற்றுக்கான வழியானது எங்களுடைய தகவல் உரிமைச்சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெறும் சொற்களாகவே இருக்கும்.

தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு ஏன் மிகவும் பயனுள்ளது என்பதனை அரசியல் தலைவர்களும் பகிரங்க அதிகாரசபைகளும் புரிந்துகொள்வது முக்கியமாகும். அந்த முடிவுக்கு, ஒட்டுமொத்த உத்திகளையும் உருவாக்கி, நிறுவனங்களின் தற்போதைய வெளியீட்டு பழக்கம் மற்றும் பொதுமக்களிடமிருந்து தகவல் பெறும் வாய்ப்பு ஆகியவற்றை கணக்கில் கொள்ளவேண்டும். இணக்கம் பகிரங்க அதிகாரசபையின் கண்ணோட்டத்தில் இருந்து யதார்த்தமானதாக தோன்ற வேண்டும். தேவைப்பட்டால் அது கூடுதலான ஆதாரங்களை கொண்டிருக்கும். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு போன்ற தகவலுக்கான உரிமையில் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பூர்த்தி செய்வதற்கு உண்மையாக விரும்புவதை விட ஒழுங்கமைப்பு விதி 20 இன் மூலம் விதிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான குறைந்தபட்ச கடமைகளை மற்ற காரணங்களுக்காக நிறைவேற்றுவது மேலோட்டமான முடிவுக்கு அதிகமாக வழிவகுக்கும்.

தகவலுக்கான உரிமைச்சட்டத்தின்படி சட்டத்தின் பிரிவுகள் மற்றும் அதன் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை செயற்திறன் மிக்க வகையில் அமுல்படுத்துவதற்கான பொறுப்பு வெகுஜன ஊடகத்துடன் ஒப்படைக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுடனேயே சார்ந்திருக்கின்றது. முடிவாக, முகவராண்மையால் வெளிப்படைத்தன்மையை உருவாக்குவதற்கான உத்தரவாதமானது, அரசாங்க தாபனங்களுக்கான பிரயோசமான இணக்கமாக பயன்பாடுடையதாயிருக்கும். குறைந்தது பொதுவெளியீட்டுத் திட்டத்தை பின்பற்றுதலானது, தகவலுக்கான உரிமைச்சட்டம் மற்றும் அதனுடைய ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முன்கூட்டிய வெளிப்படுத்தலுக்கான எல்லா தேவைப்பாடுகளுடனும் இணங்கிச் செல்வதன் மீது நொடல் முகவர் அடிப்படையான உத்தரவாதத்தை வழங்கியிருக்க முடியும். குறித்த உத்தரவாதமானது ஸ்தாபனத்தின் இணையத்தளத்தில் பகிரங்கமாக வெளியிடப்பட்டிருக்க முடியும். நொடல் முகவராண்மையானது

கண்காணிப்பு நடைமுறை மூலம் வெளிக்கொணரப்பட்ட எல்லா ஸ்தாபனங்களினதும் இணக்கத்திற்கான தரத்தினை வெளியிட முடியும். அது ஸ்தாபனங்கள் மக்களுக்கு பொறுப்புக்கூறும் வகையில் இருப்பதற்கு உதவமுடியும். இதனால், முன்கூட்டிய தகவல் வெளிப்பாட்டின் தன்மை மற்றும் அளவு என்பன பகிரங்க அதிகாரசபையின் சிறந்த செயற்திறனின் முக்கிய அடையாளமாக இருக்கும்.

எதிர்வினை வெளிப்படுத்தல் என்பது தனிப்பட்ட கோரிக்கையாளர்களின் கோரிக்கைக்கு பதிலாக தகவலை வெளிப்படுத்தலாகும். அது தகவல் உரிமையை பகுதியளவில் பூர்த்தி செய்வதற்கு இயலுமானதாக்குகின்றது. எங்களுடைய தகவல் உரிமையின் சிறந்த ஒரு விதியாக தன்னிச்சையான முன்கூட்டிய தகவல் வெளிப்பாடு வருகின்ற போது தான் பிரஜைகள் அவர்களுடைய தகவல் உரிமையை முழுமையாக அணுபவிக்க கூடியதாயிருக்கும்.

ஒப்பீட்டு நோக்கில் இலங்கையின் தகவலுரிமைக்கான சட்டப் பரப்பு

டோபி மென்டெல்

1. அறிமுகம்

இலங்கையின், 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டமானது (தகவலுக்கான உரிமைச் சட்டம்), 2016 ஆகஸ்ட் 4 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு அதற்கு ஆறு மாதங்களின் பின்னர் 2017 பெப்ரவரி 4 ஆம் திகதியன்று அமுலுக்கு வந்தது.[229] அது அமுலுக்கு வந்தவுடன், அதாவது ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர், அது தகவலுரிமைக்கான் சட்டங்களின் பலத்தினை மதிப்பிடுகின்ற பெரிதும் மதிக்கப்படுகின்ற உலகளாவிய செயல்முறையியலான தகவலுரிமைக்கான் தரப்படுத்தலில் 121 புள்ளிகளைப் பெற்று,[230] அப்போதைய தரப்படுத்தலின்போது உலகளாவிய ரீதியிலுள்ள தகவலுரிமைக்கான சட்டங்களுக்கு மத்தியில் ஒன்பதாவது இடத்தினைப் பெற்றிருந்தது. 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர்,[231] அது 131 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதுடன், உலகளாவிய ரீதியில் மூன்றாவது நிலைக்கும், தெற்காசியாவிலும், உண்மையில் ஆசியாவில், முதலாவது நிலைக்கும் கொண்டு வரப்பட்டது.[232]

229 இச்சட்டத்தின் உத்தியோகபூர்வ வர்த்தமானி வடிவத்தினை ஆங்கில மொழியில் இங்கு பார்க்க: ஈாவவி://www.news.lk/images/pdf/RTI-Act-Sri-Lanka_E.pdf.>.

230 பார்க்க: <www.RTI-Rating.org>.

231 ஒழுங்குவிதிகள் மற்றும் தகவலுரிமையின் விதிகளின் முதற் பகுதி (கட்டணம் மற்றும் மேன்முறையீடு நடபடிமுறை) 3 பெப்ரவரி 2017 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பார்க்க:<https://www.rti.gov.lk/images/resources/2004-66_E_feb.pdf>.

232 2018 மே மாதம் ஆப்கானிஸ்தானில் சிறப்பான மற்றும் உறுதியான புதிய தகவலுரிமைக்கான் சட்டம் கொண்டு வரப்பட்டதனைத் தொடர்ந்து அது உலகளாவிய ரீதியில் நான்காம் நிலைக்கும் ஆசியாவில் இரண்டாவது நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. பார்க்க: *<https://www.rti-rating.org/country-data/>*.

தெற்காசியாவில் இறுதியாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை ஏற்றுக் கொண்ட நாடுகளில் ஒன்றான,[233] மற்றும் பல தசாப்தங்களாக இச்சட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு போராடிய நாடான இலங்கையில் இது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகக் கருதப்படுகின்றது. 2001 டிசெம்பர் முதல் 2004 ஏப்ரல் வரை இலங்கையினை ஆட்சி செய்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமானது தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் நகல் வரைபினை ஆக்கியபோதும், அது சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுடன், பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கமானது இது தொடர்பில் குறைந்தளவிலான அக்கறையினையே காண்பித்தது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டு ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக நியமிக்கப்படுகின்றவரையில் இவ் அக்கறையற்ற போக்கே நிலைத்திருந்தது. இவ்வுரிமைக்கான அரசியலமைப்பு உத்தரவாதங்கள் 2015 ஏப்ரல் மாதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அதற்கான சட்டமானது ஒரு வருடம் கழித்து 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் கொண்டுவரப்பட்டது.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் அமுலாக்கத்தினை மதிப்பிடுவதற்கு இன்னும் அது முதிர்ச்சி பெறவில்லையெனினும், ஆரம்ப காட்டிகள் அது பல வழிகளில் உறுதியாக உள்ளமையினை வெளிப்படுத்துகின்றன. தகவலுக்கான கோரிக்கைகள் சாதாரண பிரஜைகளிடமிருந்து அதேபோல உயர்குடிகளிடமிருந்து நாடு முழுவதிலுமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. தகவல் கோரிக்கைகளின் விடயப் பொருட்களும் வேறுபட்டவையாகவே உள்ளன. அவற்றுள் பல பகிரங்க அக்கறை கொண்டனவாயும் சில தனிப்பட்ட தன்மையினையுடையனவாகவும் விளங்குகின்றன. இறுதியாக, சட்டத்திற்கான சுயாதீனமான கண்காணிப்பு

233 இலங்கை தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை ஏற்றுக் கொண்டபோது பூட்டானைத் தவிர தெற்காசியாவிலுள்ள அனைத்து நாடுகளும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை ஏற்றிருந்தன என்பதுடன் தற்போது அத்தகைய ஒரு சட்டம் காணப்படாத ஒரே நாடாக பூட்டான் மாத்திரமே உள்ளது.

அமைப்பாக விளங்குகின்ற தகவலுரிமைக்கான ஆணைக்குழுவில் பல மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.[234]

இக்கட்டுரையானது இலங்கையில் காணப்படுகின்ற தகவலுக்கான உரிமையின் சட்டக் கட்டமைப்பு மற்றும், குறிப்பாக, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பலம் மற்றும் பலவீனம் என்பனவற்றை ஆராய்கின்றது. முதலாவது பகுதி சட்டத்தின் பலங்களை ஆராய்கின்ற அதேவேளை, இரண்டாவது பகுதி ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் என்பன சட்டத்தினை விருத்தி செய்துள்ளவாற்றை ஆராய்கின்றது. இவ்விரண்டு பகுதிகளும் தகவலுரிமை தரப்படுத்தலை ஒரு பிரதான வளமாகக் கொண்டு எழுதப்பட்டவையாக உள்ளன. மூன்றாவது பகுதியில் இலங்கையில் தகவலுரிமைக்கான சட்டப்பரப்பிலுள்ள புத்தாக்க அம்சங்கள் குறித்து, குறிப்பாக, தகவலுரிமை தரப்படுத்தலில் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது மாத்திரமல்லாமல் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய மற்றும் குறிப்பான வினைத்திறனான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ள அணுகுமுறைகள் குறித்து ஆராய்கின்றது. இறுதியாக, நான்காவது பகுதி இலங்கையின் தகவல் உரிமைக்கான சட்டக் கட்டமைப்பு மேலும் விருத்தி செய்யப்படக்கூடிய சில வழிமுறைகளை ஆராய்கின்றது.

2. இலங்கை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பலங்கள்

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பலங்களை சிறப்பாக எடுத்துக்காட்டுவதற்கு அது தகவலுக்கான உரிமைத் தரப்படுத்தலில் பெற்ற புள்ளிகளை குறிப்பிட்டுக் காட்டலாம். தகவலுக்கான உரிமைத் தரப்படுத்தலானது மொத்தமாக ஏழு பிரதான பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் தரப்படுத்துவதற்கான 61 தனியான காட்டிகள் அமைந்துள்ளன

234 இப்பந்தியிலுள்ள பல தகவல்கள் 28 செப்ரெம்பர் 2018 அன்று ஊடக சுதந்திரம் மற்றும் சமூக பொறுப்பு தொடர்பான கொழும்பு பிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை (1998-2018) முன்னிட்டு நடாத்தப்பட்ட மாநாட்டில் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த கம்மம்பிலவினால் ஆற்றப்பட்ட உரையினைத் தழுவியவை ஆகும்.

(அட்டவணை 1 இனைப் பார்க்க). தகவலுக்கான உரிமைச் சட்டத்தினால் உள்வாங்கிக்கொள்ளப்படுகின்ற தகவல் மற்றும் பகிரங்க அதிகார சபைகளின் விசாலத்தன்மையினை அடிப்படையாகக் கொண்டு, மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ள வகைப்பாடாக "பரப்பு" அமைந்துள்ளது. இது தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் வினைத்திறனான அமுலாக்கத்திற்கு ஆதரவளிக்கின்ற ஊக்குவிப்பு நடவடிக்கைகள், வேறுபட்ட அம்சங்களின் சேர்க்கை மற்றும் இச்சட்டத்திற்கான நிர்வாகக் கண்காணிப்பு அமைப்பாக விளங்குகின்ற தகவல் உரிமைக்கான ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரங்கள் என்பவற்றின் அடிப்படையில் மேன்முறையீடுகள் என்பனவற்றால் மேலும் வலுப்பெறுகிறது. அவ்வுரிமையின் அரசியலமைப்பு உத்தரவாதம் மற்றும் சட்டத்தில் அவ்வுரிமை தொடர்பில் காணப்படுகின்ற தெளிவான நிலைப்பாடு என்பனவற்றை பிரதிபலிக்கின்ற அணுகுவதற்கான உரிமை அடுத்ததாக இடம்பெறுகின்றது.

அட்டவணை1: தகவலுக்கான உரிமைச் சட்டம் மீதான தகவலுக்கான உரிமைத் தரப்படுத்தல் புள்ளிகள்

பிரிவு	அதிகபட்ச புள்ளிகள்	புள்ளி	சதவீதம்	நிலை
1. அணுகுவதற்கான உரிமை	6	5	83	15
2. பரப்பு	30	27	90	44
3. கோருவதற்கானநடைமுறைகள்	30	22	73	16
4. விதிவிலக்குகள் மற்றும் மறுப்புக்கள்	30	23	77	14
5. மேன்முறையீடுகள்	30	26	87	10
6. தண்டனைகள் மற்றும் பாதுகாப்புக்கள்	8	4	50	32
7. ஊக்குவிப்பு நடவடிக்கைகள்	16	14	88	12
மொத்தப் புள்ளிகள்	150	121	81	9

எவ்வாறெனினும், இதனை ஒப்பீட்டு கண்கொண்டு பார்க்கின்றபோது, அதாவது இலங்கை பெற்றுள்ள புள்ளிகளின் நிலைப்பாட்டினை ஏனைய நாடுகளுடன் தொடர்புறுத்தி பார்க்கின்றபோது இது மாற்றமடையும்.

எவ்வாறெனினும், இது அதிகளவில் புறநிலை மதிப்பீடொன்றாகவே அமையும். ஏனெனில், பொதுவாக நாடுகள் ஒரு வகைப்பாட்டில் அல்லது வேறொரு வகைப்பாட்டில் சிறப்பாகச் செயற்படுகின்றபோது, இலங்கையும் அது தொடர்பில் சிறப்பாக செயற்பட வேண்டும் என எதிர்பார்க்க வேண்டும். இங்கு எழுந்துள்ள வியக்கத்தகு மாற்றம் யாதெனில், முன்னர் சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்ட பரப்பு என்ற வகைப்பாடானது உலகளாவிய ரீதியில் மிகவும் கீழ்மட்டத்திற்கு, 44 வது நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இது பொதுவாக நாடுகள் இவ்வகைப்பாடு தொடர்பில் உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொள்கின்றன என்பதனை பிரதிபலிக்கின்றது. முன்னர் மூன்றாவது நிலையிலிருந்த மேன்முறையீடுகள் உலகளாவிய ரீதியில் உயர் மட்டத்திற்கு சென்று 10 வது நிலையினை அடைந்துள்ள அதேவேளை விதிவிலக்குகள் மற்றும் மறுப்புக்கள் என்பன தொடர்பில் இரண்டு நிலைகள் அதிகரித்துள்ளன.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பலங்களை மிகவும் நுணுக்கமாக ஆராய்கின்றபோது, அது எவ்வித குறிப்பிட்ட விதிவிலக்குகளுமின்றி அனைத்து பகிரங்க அதிகார சபைகளையும் உள்ளீர்க்கக்கூடிய மிக பரந்தளவிலான நோக்கெல்லையினைக் கொண்டுள்ளது. இது புலனாய்வு அமைப்புக்களை விலக்களிக்கின்ற இந்தியா போன்ற பிராந்தியத்தின் ஏனைய சட்டங்களிலிருந்து வேறுபட்டதாகவுள்ளது. இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டமானது பகிரங்கப் பணிகளை மேற்கொள்கின்ற அல்லது பொது நிதியினூடாக தொழிற்படுகின்ற அரசினால் சொந்தங் கொள்ளப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புக்களையும் உள்ளீர்க்கின்றது.

சட்டமானது கோரிக்கைகளைப் பதிவு செய்வது தொடர்பில் உயர் தரத்திலான நடபடிமுறைகளைக் கொண்டுள்ளது என்பதுடன் அவ்விடயம் இத்தரப்படுத்தல் காட்டிகளில் முழு புள்ளிகளையும் தன்வசமாக்கியுள்ளது. கோரிக்கைகளுக்கு பதிலிறுப்பதற்கான நடபடிமுறைகள், கோருவதற்கான நடபடிமுறைகள் என்ற வகைப்பாட்டிலுள்ள ஏனைய பகுதிகளில் சில முக்கியமான இடைவெளிகள் காணப்பட்டபோதிலும் கூட, இவற்றுள் பல இவ்விடயங்கள் தொடர்பில் விதிகளை இயற்றுவதற்கான அதிகாரம் சட்டத்தின் வாயிலாக ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தமையின் காரணமாக ஏற்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆணைக்குழுவினால் ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகள் ஆக்கப்பட்டதற்கு பின்னர் இவ்வகைப்பாட்டிற்கான புள்ளி அதிகரித்திருந்தது.

விதிவிலக்குகள் மற்றும் மறுப்புக்கள் தொடர்பாகப் பார்க்கின்றபோது சட்டத்தின் பிரதான பலங்களுள் ஒன்றாக அமைவது யாதெனில், சட்டமானது முரண்பாடாகவுள்ள ஏனைய சட்டவாக்கங்களினைவிட அவை முரண்படுகின்ற அளவிற்கு மேலோங்கும் என்ற விடயமாகும். தற்போதைய தகவலுக்கான உரிமைத் தரப்படுத்தலில் உள்வாங்கப்பட்டுள்ள 123 நாடுகளில் 26 ஏனைய நாடுகள் மாத்திரமே இக்குறிப்பிட்ட காட்டி தொடர்பில் முழு புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. குறிப்பிட்ட தகவல் கோரிக்கை எவ்வகையில் நிராகரிக்கப்படினும் அதன் வெளியிடுகையானது பாரிய பகிரங்க அக்கறையைக் கொண்டிருக்குமாயின் அதனை வெளிப்படுத்த வேண்டும் என்கிற பகிரங்க அக்கறை விஞ்சி நிற்கின்ற ஏற்பாடு, மூன்றாந் திறத்தவர்களை கலந்தாலோசித்தல் தொடர்பான சிறப்பான விதிகள், வேறாக்குதல் தொடர்பான விதி மற்றும் பகிரங்க அதிகார சபைகள் கோரிக்கைகளை நிராகரிக்கின்றபோது பின்பற்ற வேண்டிய உறுதியான அறிவித்தல் தேவைப்பாடுகள் என்பனவற்றை ஏனைய பலங்களாக சுட்டிக் காட்டவியலும்.

மேன்முறையீடுகள் தொடர்பான வகைப்பாட்டினைப் பார்க்கின்றபோது, தகவலுரிமையினை கண்காணிக்கின்ற அமைப்புக்களின் வெற்றிக்கு அடித்தளமாக உள்ள பிரதான அம்சமாகிய தகவலுரிமைக்கான ஆணைக்குழு சுயாதீனத்தன்மையினை கொண்டிருத்தல் மற்றும் அது உறுதியான அதிகாரங்களைக் கொண்டிருத்தல் போன்ற காட்டிகள் தொடர்பில் சட்டமானது முழுமையானப் புள்ளிகளைப் பெற்றுள்ளது. மூன்று அடுக்குகளைக் கொண்ட மேன்முறையீட்டு முறைமை-அதாவது முதலில் உள்ளக மேன்முறையீடு-பின்னர் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவில் பதியப்படுகின்ற மேன்முறையீடு-அதனையடுத்து இறுதியாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பதியப்படுகின்ற மேன்முறையீடு மற்றும் மேன்முறையீட்டினைப் பதிவு செய்வதற்கானப் பரந்தளவான அடிப்படைகள் என்பன மேன்முறையீடு தொடர்பில் காணப்படுகின்ற ஏனைய சாதகமான அம்சங்களாகும். முக்கியமாக, பகிரங்க அதிகார சபை சட்டத்திற்கு அமைவாக நடந்து கொண்டது என்பதனை நிரூபிப்பதற்கான சுமை பகிரங்க அதிகார சபைக்கே அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டத்தில் சதவீத அடிப்படையில் தண்டனைகள் மற்றும் பாதுகாப்புக்கள் என்பன பலவீனமான வகைப்பாடாக உள்ளது. எவ்வாறெனினும், அது தகவலுக்கான அணுகுதலைத் தடைசெய்கின்ற பரந்தளவிலான நடவடிக்கைகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கைகளை ஒழுங்கு செய்துள்ளதுடன் பல நடவடிக்கைகளை குற்றவியல் குற்றங்களாக்கியுள்ளது. மேலும், அது சட்டத்தினை அமுலாக்குவதற்காக நல்லெண்ணத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற அலுவலர்களுக்கானப் பாதுகாப்பினை அளிக்கின்றது. தகவல்களை வெளிப்படுத்துவதன் காரணமாக தாம் ஏதேனும் அபாயகரமான பதில் வினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியிராது என்ற நம்பிக்கையினை அலுவலர்களுக்கு ஏற்படுத்துவதற்கு இது அத்தியாவசியமானதாகும்.

இறுதியாக, இச்சட்டமானது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முக்கியமான ஊக்குவிப்பு ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

அனைத்து பகிரங்க அதிகார சபைகளிலும் தகவல் அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படுவதுடன் அப்பகிரங்க அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க வேண்டிய பொறுப்பு தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இச்சட்டம் தொடர்பான பொது மக்கள் அறிவை அதிகரிப்பது தொடர்பில் ஆணைக்குழுவிற்கும் அமைச்சர்களுக்கும் பரந்தளவிலான வகிபாகமாகளிக்கப்பட்டுள்ள அதேவேளை, அனைத்து பகிரங்க அதிகார சபைகளும் மதிப்பளித்து பின்பற்ற வேண்டிய பதிவேடுகள் முகாமைத்துவத் தரம் தொடர்பான குறைந்தபட்ச நியமங்களை உருவாக்குதல் தொடர்பில் ஆணைக்குழு தலைமைத்துவத்தினை ஏற்றுள்ளது. சட்டத்தின் அமுலாக்கம் தொடர்பில் தம்மால் செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வருடாந்த அறிக்கைகளினைச் சமர்ப்பித்தல் வேண்டுமென பகிரங்க அதிகார சபைகள் மற்றும் ஆணைக்குழு என்பன தேவைப்படுத்தப்பட்டுள்ளன.

3. ஒழுங்குவிதிகளும் விதிகளும் தகவலுக்கான உரிமை ஆட்சிப் பரப்பினை மேலும் விருத்தி செய்துள்ள பாங்கு

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒழுங்கு விதிகள் மற்றும் விதிகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கையின் தகவலுரிமைக்கான முறைமையானது 10 முழு புள்ளிகளைப் பெற்று 131 புள்ளிகளுக்கு முன்னேறியது. ஒவ்வொரு வகைப்பாட்டிற்குமான புதிய புள்ளி விபரங்கள் அட்டவணை 2 இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அணுகுவதற்கான உரிமை, விதிவிலக்குகள் மற்றும் மறுப்புக்கள் மற்றும் தண்டனைகள் மற்றும் பாதுகாப்புக்கள் போன்ற மூன்று வகைப்பாடுகள் தொடர்பில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. இது எதிர்பார்த்திராத ஒரு விடயமல்ல. இவை சட்டப் பரப்புக்களாகும் என்பதுடன் இவற்றைத் துணை நிலை சட்டவாக்கங்களினால் மாற்றியமைத்தல் கடினமாகும். உதாரணமாக, சர்வதேச

சட்டத்தின் கீழ் நெறிமுறையானதாக அங்கீகரிக்கப்படாத அக்கறையொன்றிற்கு விதிவிலக்கொன்று பாதுகாப்பளிக்கின்ற போது அல்லது அத்தகைய அக்கறை வெளிப்படுத்தப்படுவதால் ஊறொன்றினை எதிர்கொள்ள நேரிடுமென்ற நிபந்தனைப் பாதுகாப்பினை அளிக்கத் தவறுகின்றபோது, ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளால் அவற்றை மாற்ற முடியாது. அதேபோல, பகிரங்க அதிகார சபைகளில் இடம்பெறுகின்ற முறைகேடுகளை வெளிப்படுத்துகின்ற நபர்களுக்கான பாதுகாப்பினைச் சட்டம் அளிக்காதபோது, ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளால் அதனை மாற்ற முடியாது.

அட்டவணை2: ஒழுங்குவிதிகள் மற்றும் விதிகளை ஏற்றுக்கொண்ட பின்னர் தகவலுக்கான உரிமைச் சட்டம் மீதான தகவலுக்கான உரிமைத் தரப்படுத்தல் புள்ளிகள்

பிரிவு	அதிகபட்ச புள்ளிகள்	புள்ளி	சதவீதம்	மாற்றம் (மூ)	நிலை
1. அணுகுவதற்கான உரிமை	6	5	83	0	15
2. பரப்பு	30	28	93	3	32
3. காருவதற்கான நடபடிமுறைகள்	30	26	87	14	3
4. விதிவிலக்குகள் மற்றும் மறுப்புக்கள்	30	23	77	0	14
5. மேன்முறையீடுகள்	30	29	97	10	1
6. (தண்டனைகள் மற்றும் பாதுகாப்புக்கள்	8	4	50	0	32
7. ஊக்குவிப்பு நடவடிக்கைகள்	16	16	100	12	1
மொத்தப் புள்ளிகள்	150	131	87	6	4

அதேபோல, கோருவதற்கான நடபடிமுறைகள் அதிகளவில் அதாவது நான்கு புள்ளிகளினால் அல்லது 14% இனால் அதிகரித்துள்ளமையானது எதிர்பார்க்கப்படாததொன்றல்ல. சட்டமானது வெளிப்படையாக பல விடயங்களை அவை துணைநிலை சட்டவாக்கங்களினால் தீர்மானிக்கப்பட வேண்டியன என வைத்திருந்தது என்பதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிலையான தன்மையுடைய சட்டத்தின் கருப்பொருட்களை விட இத்தகைய நடபடிமுறைகளை இவ்வாறு விதிகளினூடாக மாற்றியமைத்தல் ஏதுவானதாக அமையும். இரண்டாவதாக அதிகளவான புள்ளி அதிகரிப்பினைத் தம்வசப்படுத்திய வகைப்பாடாக, குறிப்பாக மூன்று புள்ளிகளுடனான அதிகரிப்பு கொண்ட வகைப்பாடாக மேன்முறையீடுகள் அமைந்தமையும் ஆச்சரியப்படத்தகு விடயமொன்றல்ல. ஏனெனில், சட்டவாக்க வடிவமைப்பினால் மற்றும் அதன் எளிய உள்ளார்ந்த தன்மையினால் இவ்விடயம் குறிப்பாகத் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் அதிகாரப்பரப்பிற்குள் உள்ளடக்கப்படுகின்ற ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

இதனை ஒப்பீட்டுக் கண்கொண்டு பார்க்கின்றபோது, மறுபடியும் மற்றும் அதே காரணங்களுக்காக பரப்பு மீதான உயர் புள்ளிகள், ஏனைய நாடுகளுக்கிடையில் அதனை ஒரு உறுதியான நிலைக்கு இட்டுச் செல்லவில்லை. இலங்கையின் 93% புள்ளிகள் (மூன்றாவது உயர் புள்ளி) அதனை 32 வது நிலையிலேயே நிறுத்தியது (ஏனைய வேறுபட்ட வகைப்பாடுகளுக்கிடையில் கடைசியானதாகக் காணப்பட்ட தண்டனைகள் மற்றும் பாதுகாப்புக்களுக்கு சமமான நிலையினையே பெற்றுள்ளது). ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள் என்பன சதவீதம் மற்றும் நிலை ஆகிய இரண்டிலும் உயர் மட்டத்தினைப் பெற்றுக்கொண்டன (ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பார்க்கின்றபோது, அது பூரணமான புள்ளிகளை சுவீகரித்து கொண்டமையினால் தானாக முதலாம் நிலையினைப் பெற்றுள்ளது). இவற்றைத்தவிர வேறு பல வகைப்பாடுகளில் சதவீதம் மற்றும் ஒப்பீட்டு நிலை

ஆகியவற்றுக்கிடையில் தோராய சமநிலை காணப்படுகின்றது. இதன்போது குறித்துக்காட்டப்பட வேண்டியதொரு விடயம் யாதெனில், விதிவிலக்குகள் மற்றும் மறுப்புக்கள் என்பன சதவீத அடிப்படையில் ஆறாவது நிலையினைப் பெற்றுள்ள அதேவேளை ஒப்பீட்டு நிலையாக நான்கினை அடைந்துள்ளது.

பெற்றுக்கொள்ளப்பட்ட 10 புள்ளிகளில், ஆறு ஒழுங்குவிதிகளையும் நான்கு விதிகளையும் தழுவியதாக அமைந்துள்ளன. ஒழுங்குவிதிகளானவை தகவல் கோருபவர்கள் தகவல் மற்றும் குறிப்பான ஆவணங்கள் ஆகிய இரண்டினையும் அணுகுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளனர் மற்றும் பகிரங்க அதிகார சபைகள் தகவல்களை கொண்டிராதபோது குறிப்பிட்ட தகவல்கோரிக்கைகளை உரிய இடத்திற்கு அனுப்புதல் வேண்டும் போன்ற தெளிவு படுத்தல்களையும், பகிரங்க அதிகார சபை வைத்துள்ள அனைத்து ஆவணங்களினதும் பட்டியலை வெளியிட வேண்டும் மற்றும் அதன் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் வேண்டும் போன்ற பகிரங்க அதிகார சபைகளுக்கான நீடிக்கப்பட்டுள்ள கடப்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் குறிப்பிடத்தக்கவொன்றாக சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட தகவலை இலவசமாக மீள பயன்படுத்திக்கொள்வதனை சாத்தியமாக்குகின்ற ஒழுங்குவிதி இல. 19 இனைக் குறிப்பிடலாம்.

விதிகளுடன் இணைந்த இரண்டு விடயங்களும் கட்டணங்கள் பற்றியதாகும். குறிப்பாக தகவலுரிமைக்கான ஆணைக்குழு முன்னிலையில் கோரிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகளைப் பதிவு செய்தல் இலவசமானது என்பதனை தெளிவுபடுத்துகின்றது. விதி 27 ஆனது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இவ்விதியானது, அமுலாக்கத்தின் பொருட்டு பதிவேட்டு முகாமைத்துவத்தினை விருத்தி செய்தல் அல்லது பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் போன்ற கட்டமைப்புசார் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பகிரங்க அதிகார சபைகளைப் பணிக்கும் அதிகாரம் தகவலுரிமைக்கான

ஆணைக்குழுவிற்கு உண்டு என கூறுகின்றது. அத்தகைய ஒரு முக்கியமான மாற்றத்தினை "வெறுமனே" ஒரு விதியினூடாக ஆக்குதல் பொருத்தமானதா என ஒருவர் சிந்திக்கலாம்.

4. தகவலுரிமைக்கான இலங்கையின் சட்டப் பரப்பில் எழுந்துள்ள சில பிரதான புத்தாக்க விடயங்கள்

தகவலுரிமையின் தரப்படுத்தல் காட்டிகளினால் மதிப்பீடு செய்யப்பட்ட முக்கிய அம்சங்களுக்கு அப்பாற்சென்று நோக்குகின்றபோது, தகவலுரிமைக்கான இலங்கையின் சட்டப்பரப்பானது வேறு சட்டங்களில் காணப்பட முடியாத அல்லது மிக அரிதாகக் காணப்படுகின்ற குறிப்பான சில புத்தாக்க அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. இதன் முக்கியமான அம்சங்களுள் ஒன்றாக அமைவது யாதெனில், மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி வலுவான சுயாதீன அமைப்பாக விளங்குகின்ற தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மிக உறுதியான வகிபாகம் வழங்கப்பட்டுள்ளமை ஆகும்.

பொதுவான முறையில், சட்டத்தின் பிரிவு 14 ஆனது, மேன்முறையீடுகளை கேட்பதற்கு அப்பால் பல வகைப்பட்ட நடவடிக்கைகளினை மேற்கொள்ளக்கூடிய மிக பரந்தளவான ஆணையினை தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளது. மேலும், நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இப்பரந்தளவான நேர்மறை ஆணைக்கு மேலதிகமாக, கீழ்வருவன உள்ளடங்கலாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குறிப்பான பணிகள் மற்றும் ஒழுங்குபடுத்தும் அதிகாரங்கள் என்பன தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன:

- விதிவிலக்குகளின் பிரயோகம் தொடர்பில் தகவல் அலுவலர்கள் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் ஆலோசனையினை நாடலாம் என்பது அவ்வாலோசனை 14 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும் (சட்டத்தின் பிரிவு 5(5)).

- பகிரங்க அதிகார சபைகள் இணங்கி பின்பற்ற வேண்டிய பதிவேட்டு முகாமைத்துவ தரம் தொடர்பான விதிகளை தகவலுரிமைக்கான ஆணைக்குழு ஆக்கலாம் (சட்டத்தின் பிரிவு 7(2)).

- தகவலுரிமைக்கான ஆணைக்குழுவானது உயிர்ப்பான வெளிப்படுத்துகைக்கான "வடிவத்தினை" தீர்மானிக்கலாம் (சட்டத்தின் பிரிவு 8(1)).

- செயற்திட்டங்களுடன் தொடர்புடைய தகவல்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கான விதிகளை தகவலுரிமைக்கான ஆணைக்குழு ஆக்கலாம் (சட்டத்தின் பிரிவு 9(1)(ஆ)).

- தகவலை அணுகுவதற்கான கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கான ((சட்டத்தின் பிரிவு 14(இ)-(உ)) மற்றும் தகவல் சரியான நேரத்தில் வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் பகிரங்க அதிகார சபை பெற்றுக்கொண்ட கட்டணத்தினை மீள செலுத்த வேண்டும் என பணிப்பதற்கான (சட்டத்தின் பிரிவு 15(எ) மற்றும் விதி 12) பரந்தளவான ஆணை தகவலுரிமைக்கான ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தகவலைக் கோருபவர் மேன்முறையீட்டில் வெற்றியடைகின்றபோது அவர் கட்டணத்தினை செலுத்த வேண்டிய அவசியமில்லை (விதி 11).

- தகவலுரிமைக்கான ஆணைக்குழுவானது பொருத்தமான அதிகார சபைகளுக்கு ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பில் அறிவிக்கலாம் என்பதுடன் அதற்கு பதிலிறுக்கும் வகையில் அவ் அதிகார சபைகள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து ஆணைக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும் (சட்டத்தின் பிரிவு 38).

- சட்டத்தின் கீழான குற்றவியல் குற்றங்களுக்கான வழக்குத் தொடுப்புக்கள் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படுதல் வேண்டும் (சட்டத்தின் பிரிவு 39(4)).

- உயிர்ப்பான முன்கூட்டிய வெளிப்படுத்துகை தொடர்பில் தமக்கிருக்கும் கடப்பாடுகளை பகிரங்க அதிகார சபைகள் சரிவர நிறைவேற்றவில்லை என கண்டறிகின்ற தனிநபர்கள் அது தொடர்பான முறைப்பாட்டினை அவ் அதிகார சபையின் தலைவருக்கு மேற்கொள்ளலாம் என்பதுடன் அதன் பின்னர் அம் முறைபாட்டினை தகவலுரிமைக்கான ஆணைக்குழுவில் மேற்கொள்ளலாம். இதுவே, தகவலுரிமைக்கான சட்டங்களின் பொதுவான பிரச்சனையாகவுள்ள, குறிப்பாக உயிர்ப்பான முன்கூட்டிய வெளிப்படுத்துகை தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறுகின்றமையினை தீர்க்கின்றது (ஒழுங்குவிதி 20(4)).

இவற்றை ஒன்றிணைத்து பார்க்கின்றபோது, இது ஈர்க்கக்கூடிய பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களின் தொகுப்பாக அமைகின்றது என்பதுடன் இவை உலகிலுள்ள அதிகாரம் மிக்க ஆணைக்குழுக்களுள் ஒன்றாக இலங்கை தகவலுரிமைக்கான ஆணைக்குழுவினையும் தரப்படுத்துகின்றது. மேலே பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, தகவலுரிமைச் சட்டத்தின் வெற்றிக்கு பங்களிக்கின்ற பிரதான அம்சங்களுள் ஒன்றாக ஒரு சுயாதீன-மான கண்காணிப்பு அமைப்பு அமைகின்றது. இலங்கை இது தொடர்பில் சிறந்து விளங்குகின்றது.

அவ்வாறின்றேல், விதி 18 (3) ஆனது, மேன்முறையீடுகள் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் தற்றுணிபின்பேரில் ஒன்றில் "ஆவண நடபடிமுறை" மூலமாக அல்லது "நேரடியான விளக்கங்கள்" மூலமாக இடம்பெறலாம் என கூறுகின்ற

அதேவேளை, விதி 19 மற்றும் 20 என்பன இவ்வொவ்வொரு வகையான முறைக்குமான தனித்தனியான நடபடிமுறைகளை கூறுகின்றன. இது பொதுவாக, ஏதேனுமொரு முறையில் மாத்திரம் மேன்முறையீடுகளைக் கையாளுகின்ற பொதுவான முறையிலிருந்து பிறழ்வடைகின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. இலங்கையின் அணுகுமுறை அர்த்தமுள்ளதாக அமைகின்றது. பெரும்பாண்மையான மேன்முறையீடுகள் மெலிதான ஆவணச் செயன்முறையினூடாக கையாளப்பட முடியுமென்பதுடன், சில நேரடியான விளக்கங்களினூடாகக் கையாளப்பட முடியும். கண்காணிப்பு அமைப்புக்கள் விரும்புகின்ற முறையினைத் தெரிவு செய்வதற்கு அவை இயலுமானவையாக இருத்தல் வேண்டும்.

இது வேறு பல உறுதியான நிறுவனரீதியான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. பிரிவு 2 இற்கு அமைவாக, சட்டத்தின் "வினைத்திறனான அமுலாக்கத்தினை உறுதி செய்வதற்கான" பொறுப்பு குறிப்பிட்ட அமைச்சருக்கு காணப்படுகின்றது. இது பொதுவாக காணப்படுகின்ற ஒன்று என்றபோதிலும், அத்தகைய பொறுப்பினை குறிப்பாக ஒதுக்கியளித்திருப்பது தகவலுரிமையின் உறுதியான அமுலாக்கத்திற்கு ஆதரவாக அமையும். உயிர்ப்பான முன்கூட்டிய வெளிப்படுத்துகை தொடர்பில் பார்க்கின்றபோது, பிரிவு 8(1) இன்படி விதிகள் சரியான முறையில் பின்பற்றப்பட்டுள்ளன என்பதனை உறுதி செய்கின்ற பொறுப்பானது பகிரங்க அதிகார சபைகளின் தலைவருக்கு மட்டுமல்லாது குறிப்பிட்ட பகிரங்க அதிகார சபைகளுக்கு பொறுப்பான அமைச்சருக்கும் காணப்படுகின்றது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மிகவும் மையப்படுத்தப்பட்ட மற்றும் உயர் அதிகாரமளிக்கப்பட்ட பொறுப்புக்கான குறிப்பிட்ட ஒரு இடத்தினை உருவாக்குவதுடன் இது நடைமுறைப்படுத்தலை இலகுவாக்கும் என ஊகிக்கப்படுகின்றது.

பல்வேறு நாடுகளில் நடைமுறையிலுளுள்தனைப் போன்று, பகிரங்க அதிகார சபைகள் தகவல் அலுவலர்களை நியமிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன (பிரிவு 23(1)(அ)) மற்றும், அவ்வாறு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் அதிகார சபையின் தலைவரே

தகவல் அலுவலராகக் கருதப்படுவார் (பிரிவு 23(1)(ஆ)). தகவல் அலுவலர்களுக்கு தகவல் கோரிக்கைகளை கையாளுகின்ற பொறுப்பு மாத்திரம் பாரப்படுத்தப்படவில்லை, மாறாக, மிகவும் பரந்தளவிலான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் பொதுவாக இவர்கள் சட்டத்தின் முறையான அமுலாக்கத்தினை உறுதிப்படுத்த வேண்டும் (ஒழுங்குவிதி 21(2)). அதற்கப்பால், அதிகார சபைகள் தகவல் அலுவலர்களை முறையாக (எழுத்துமூலமாக) நியமித்தல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு அவர்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான "பொருத்தமான நேரம் மற்றும் ஆதரவு" என்பன வழங்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்காக அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும் (ஒழுங்குவிதி 21(2), (5) மற்றும் (6)). இவை அனைத்தும் சிறந்த நடைமுறை அணுகுமுறைகளாகும். ஆனால் ஏனைய நாடுகளுக்கிடையில் இலங்கை மாத்திரமே அவற்றை இம்முறையில் முறைப்படுத்தியுள்ளது. தகவல் அலுவலர் உதவியினை நாடுகின்றபோது ஏனைய அலுவலர்கள் அவருக்கு தேவையான உதவியினை வழங்க வேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்றனர் (பிரிவு 23(3)). இது பொதுவான விடயமொன்றே என்ற போதிலும், சட்டம் ஆக்கியுள்ள மற்றுமொரு சுவாரஸ்யமான புதுமை யாதெனில் அவ்வாறு ஏனைய அலுவலர்கள் அவ்வாறு உதவி வழங்க மறுக்கின்றபோது அது சட்டத்தின்கீழ் குற்றவியல் குற்றமொன்றாகின்றது (பிரிவு 39(2)).

மேலும், பகிரங்க அதிகார சபைகள், உள்ளக மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ள ஒருவரை "குறித்தளிக்கப்பட்ட அலுவலராக" நியமிக்க வேண்டும் எனவும் தேவைப்படுத்தப்படுகின்றன. இது உள்ளக மேன்முறையீட்டுச் செயன்முறையினை முறைப்படுத்துவதற்கு உதவும் என்பதுடன் அம்மேன்முறையீட்டுச் செயன்முறை அணுகத்தக்கதாக மற்றும் முறையான மேன்முறையீட்டு மட்டத்தினை பிரதிபலிப்பதாக உள்ளது (அதாவது, அடிக்கடி நிகழ்வதனைப் போன்று மேன்முறையீடுகள்

மீளவும் தகவல் அலுவலரைச் சென்றடையாது அவ்வதிகார சபையிலுள்ள ஒரு சிரே்ட தனிநபரைச் சென்றடைகின்றது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதனூடாக) என்பதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு உதவும். அனைத்து தகவல் அலுவலர்கள் மற்றும் குறித்தளிக்கப்பட்ட அலுவலர்களின் ஒரு பதிவேட்டினை தொகுத்து வைத்திருக்கும்படி பொறுப்பான அமைச்சர் தேவைப்படுத்தப்படுகின்றார் (ஒழுங்குவிதி 18).

இம்முறைமையானது நோக்க எல்லை தொடர்பாக சில சுவாரஸ்யமான அணுகுமுறைகளை உட்சேர்க்கின்றது. பகிரங்க அதிகார சபைகள் 25மூ அல்லது அதற்கு மேலான சொந்தத்தினை கொண்டுள்ள எந்தவொரு நிறுவனமும் பகிரங்க அதிகார சபையொன்றாகவே கருதப்படுதல் வேண்டும் (பகிரங்க அதிகார சபைகளினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கு மேலதிகமாக). இவ்விடயம் சட்டத்தின் பரப்பு தொடர்பான தெளிவுபடுத்தலை வழங்குவதற்கு உதவுகின்றது. ஒழுங்குவிதி 4(7) இற்கு அமைவாக, தகவல் என்பது பகிரங்க அதிகார சபைகளினால் வைத்திருக்கப்படும் பதிவேடுகளிலிருந்து நியாயமான முயற்சியுடன் தொகுக்கப்படக்கூடிய உள்ளடக்கங்களை உள்ளடக்குகின்றது. பல நாடுகளிலுள்ள அதிகார சபைகள் தகவல்களை தொகுப்பதற்கான அத்தகைய முயற்சியினை அடிக்கடி மேற்கொள்கின்றபோதும், அதனை ஒரு பொறுப்பாக முறைப்படுத்தலானது இது தொடர்பான மற்றுமொரு முன்னேற்றப்படியாக அமைகின்றது. ஒழுங்குவிதி 19 ஆனது தகவல்களை மீள பயன்படுத்துதல் தொடர்பான அடிப்படை விதியினை கூறுகின்றது. இது பயனுள்ளதாக உள்ள போதிலும், அதனை செயற்பாட்டு ரீதியாக வினைத்திறனாக்குவதற்கு அது இன்னும் விருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

இத்தகைய நிறுவனம்சார் நடவடிக்கைகளுக்கு அப்பால், இம்முறைமையானது தகவல்கள் சரியாக பொதுமக்களை வந்தடைவதனை சாத்தியமாக்குகின்ற சில நடைமுறை அணுகுமுறைகளையும் இம்முறைமை உட்சேர்த்துள்ளது.

அத்தகைய சில புத்தாக்கமான மற்றும் தனித்துவமான பொறிமுறைகளுள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- பிரிவு 5(2) இற்கு அமைவாக, சில விதிவிலக்குகள் 10 வருடங்களுக்கு பின்னர் ஏற்புடையதாகாது. ஏனைய பல சட்டங்களுடன் ஒப்பிடுகின்றபோது இப்பத்து வருட காலப்பகுதி மிகவும் குறைவானதாகக் காணப்படுகின்றது.

- உயிர்ப்பான முன்கூட்டிய வெளிப்படுத்துகை தொடர்பான பொதுவான விதிகளுக்கு மேலதிகமாக, உயரிய பெறுமதியுள்ள செயற்திட்டங்கள் தொடர்பான பரந்தளவிலான தகவல்களை பொதுமக்களுக்கு மற்றும் குறிப்பாக அச்செயற்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன (பிரிவு 9).

- பிரிவு 24(4) ஆனது கோரிக்கைகளுக்கான "உடனடி பதிலிறுப்பினை" வெளிப்படையாக தேவைப்படுத்துகின்றது. பல சட்டங்கள் கோரிக்கைகள் "முடியுமானளவு விரைவாகப்" பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும் என தேவைப்படுத்துகின்ற அதேவேளை, உடனடி பதிலிறுப்பு என்பதன் உட்சேர்க்கையானது சுவாரஸ்யமான புத்தாக்கமொன்றாக அமைகின்றது.

- பிரிவு 26 (1) இற்கு அமைவாக, தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்களை (இது பொதுவானது) மாத்திரமல்லாது கோரிக்கைகளுக்கான கட்டண விபரங்களையும் பகிரங்க அதிகார சபைகள் தமது வலைத்தளத்தில் மற்றும் தமது அலுவலகத்திலுள்ள பார்வைக்கு படுகின்ற இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றன.

- தகவலைக் கோருபவர் விரும்புகின்ற வடிவத்தில் தகவலை வழங்க முடியாதபோது, தகவல் அலுவலர் பொருத்தமான வடிவமொன்றினைத் தெரியும்பொருட்டு தகவல் கோருபவருடன் கலந்தாலோசித்தல் வேண்டும் (இது பல சட்டங்களில் தகவல் அலுவலர் வேறு ஒரு வடிவத்தில் தகவலை வழங்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ள அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு காணப்படுகின்றது)(பிரிவு 27(2)). இது விதி 8 இனால் மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. இவ்விதியின்படி, தகவலுக்கான பெரிய கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்கின்றபோது, தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வேறுபட்ட வடிவங்கள் மற்றும் அவற்றுக்குரிய கட்டணங்கள் என்பனவற்றை தகவல் கோருபவருக்கு அறிவித்து, அவ் அறிவினை அடிப்படையாகக் கொண்டு தகவல் கோருபவர் தீர்மானமெடுப்பதனை சாத்தியப்படுத்த வேண்டுமென தகவல் அலுவலர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

5. விருத்திக்கான பகுதிகள்

இலங்கையில் தகவலுரிமைக்கான சட்டப்பரப்பு ஈர்க்கக்கூடிய வகையில் உறுதியானதாகக் காணப்பட்டபோதிலும் கூட, அது மேலும் விருத்தி செய்யப்படுவதற்கான வழிமுறைகள் காணப்படுகின்றன. அரசியலமைப்பின் உறுப்பரை 14 அ (1) ஆனது பின்வருமாறு தகவலுக்கான உரிமையினை உத்தரவாதப்படுத்துகின்றது:

> "ஒவ்வொரு பிரஜையும் அப்பிரஜையின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுகின்ற எந்தவொரு தகவலையும் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறாக பெற அணுகுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளார்..."

இவ்வுரிமைக்கான அரசியலமைப்பு உத்தரவாதமொன்றினைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாக உள்ள அதேவேளை, இக்குறிப்பிட்ட உருவாக்கத்தில் தெளிவான பலவீனங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, அது இரண்டு வழிகளில் புரிந்துகொள்ளத்தக்கதாக உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது ஒன்றில் அது "எந்தவொரு தகவலையும்" அணுகுவதற்கான உரிமையினை ஆக்குகின்றது என புரிந்து கொள்ளப்படலாம் அல்லது "பிரஜையின் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தேவைப்படுகின்ற தகவலை" மாத்திரம் அணுகுவதற்கான உரிமையினை ஆக்குகின்றது என புரிந்து கொள்ளப்படலாம். பின்னையது மட்டுப்படுத்தப்பட்ட பாதுகாப்புக்களைக் கொண்டுள்ளதாக அமையும்.

தகவலுக்கான உரிமைச் சட்டமானது முரண்படுகின்ற அளவிற்கு ஏனைய சட்டங்களை விட மேலோங்குகின்றது (பிரிவு 4). எவ்வாறெனினும், அத்தகைய எல்லா ஏற்பாடுகளினூடாகவும் இது ஒரு பின்னோக்கிய முறையாகவும், பின்னோக்கி பிரயோகிக்கத்தக்கதாகவுமே அமைகின்றது. வேறு வகையில் கூறுவோமாயின், தகவலுக்கான உரிமைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர் உருவாக்கப்பட்ட சட்டங்கள் தொடர்பில்தான் அது மேலோங்கும். ஏனெனில், எதிர்காலத்தில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை மேலோங்குகின்ற வேறு சட்டங்களை அரசியலமைப்பிற்குட்பட்டு ஆக்குவதற்கு பாராளுமன்றம் உரித்துடையதாக உள்ளது. இது தேசிய தணிக்கைச் சட்டமூலம் தொடர்பில் இலங்கையில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளது.[235] இதன் பிரிவு 9(1) ஆனது அச்சட்டத்திற்கு கீழ் தணிக்கை சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தங்களுடைய கடமைகள் தொடர்பாக பெற்றுக்கொள்கின்ற தகவல்கள் தொடர்பில் தகவலுக்கான உரிமைச் சட்டம் விலக்களிக்கப்பட்டுள்ளது என கூறுகின்றது. அச்சட்டமூலமானது அரசியலமைப்புக்கு ஏதுவானதா என ஆராயப்பட்டபோது, இவ்விலக்களிப்பானது

235 16 மார்ச் 2018 அன்று வர்த்தமானியிலிடப்பட்டது.

அனைத்தையும் உள்ளடக்குவனவாக காணப்பட்டதை மற்றும் அவ்விலக்களிப்பின் பரப்பினை கூருணர்திறன் மிகு தகவல்களுக்கு மட்டும் மட்டுப்படுத்துவதற்கான எந்த முயற்சிகளும் சட்டவாக்குனர்களினால் மேற்கொள்ப்படாததை பொருட்படுத்தாது, அச்சட்டமூலம் அரசியலமைப்பின் உறுப்புரை 14 அ இற்கு முரணாக அமையவில்லை என உச்சநீதிமன்றம் தீர்மானித்தது.[236] இவ் ஏற்பாடு மாற்றப்படாமலேயே அச்சட்டமூலம் தற்போது சட்டமாக வலுவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.[237] இது இனி எதிர்காலத்தில் எவ்வாறு மேலும் விருத்தியடையப்போகின்றது என்பதனை காண வேண்டியுள்ள அதேவேளை, தகவலுரிமைக்கான ஆபத்து தெளிவாகத் தெரிகின்றது.

தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் பாயிரமானது பொறுப்புக்கூறுதல், பங்குபற்றுதல், ஊழலை எதிர்த்தல் மற்றும் நல்லாட்சி என அதன் பல நன்மைகளைக் குறிப்பிட்டு காட்டுவது உண்மையில் பயனுள்ளதாகும். எவ்வாறெனினும், இச்சட்டத்தினை பொருட்கோடல் செய்பவர்கள் இத்தகைய நன்மைகளுக்கு வலு சேர்க்கும் விதத்தில் அதனை பொருட்கோடல் செய்ய வேண்டுமென இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அது வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும்.

தெற்காசியாவிலுள்ள அனைத்து சட்டங்களிலும் பொதுவாகக் காணப்படுவதனைப் போன்று, இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டமும் தகவலுக்கான கோரிக்கைகளை செய்யும் உரிமையினை பிரஜைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தியுள்ளது. இலங்கை ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிராந்திய கோட்பாட்டினைப் பின்பற்றுதல் வேண்டுமென்பது பெரும்பாலும் புரிந்துகொள்ளப்படக்கூடியதொன்றாகவே உள்ளபோதும், அது துரதிஷ்டவசமானதொன்றாக உள்ளது. இதுவரையில் தகவலுரிமைக்கான ஆணைக்குழுவின் முன் தோன்றியுள்ள பிரச்சினைகளைப் பாரக்கின்றபோது, கோரிக்கைகள் உண்மையில்

236 டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷ்னல் ஸ்ரீலங்கா எதிர். சட்டமா அதிபர், *SD 14/2-18*.
237 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைச் சட்டம்.

பிரஜைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் கூட அத்தகைய ஒரு விதி எவ்வளவு துரதிஷ்டவசமானதாக உள்ளது என்பதனைப் பார்க்க முடிகின்றது.[238] எவ்வாறெனினும், கோரிக்கைகளை மேற்கொள்வதற்கான உரிமையிலிருந்து பிரஜைகள் அல்லாதோரை விலக்களிப்பது துரதிஷ்டவசடமானதாகும். அத்தகைய பெரும்பான்மையான கோரிக்கைகள் இரண்டு பிரதான வகைப்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படும். இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வமாயுள்ள வியாபார நபர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அல்லது இலங்கை தொடர்பில் ஆய்வு செய்பவர்கள். இவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும், தகவல்களுக்கான அணுகுதலை சாத்தியப்படுத்துவதில் தெளிவான தேசிய பகிரங்க அக்கறை காணப்படுகின்றது.

இலங்கையின் சட்டத்திலுள்ள தனித்தன்மைகளுள் ஒன்றாகக் கருதப்படுவது யாதெனில், அது கோரிக்கைகளுக்கு பதிலிறுப்பதற்கு பகிரங்க அதிகார சபைகளுக்கு 14 நாட்களை வழங்கிய பின்னர், தகவல்களை வழங்குவதற்காக மீண்டுமொரு 14 நாட்களை அவர்களுக்கு வழங்குகின்றது (பிரிவு 25(2)). இது தேவையற்றதொன்றாகும். அதிகார சபைகள் கோரிக்கைகளுக்கு பதிலிறுக்கும் பொருட்டு (14 நாட்களுக்குள்) குறிப்பிட்ட தகவல்களை தொகுத்திருக்கும் என ஊகிப்பதற்கு இயலும். ஆகவே, கோரிக்கைகளுக்கு பதிலிறுத்த உடனே தகவல்கள் வழங்கப்பட முடியும். இதுவே பல தகவலுரிமைக்கான சட்டங்களின் பொதுவான போக்காக உள்ளது. மேலும், 14 நாள் கால அவகாசம் என்பது ஒப்பீட்டு இறுதியில் இறுக்கமானதாக இருப்பினும், பத்து நாள் அல்லது அதை விட குறைவான கால அவகாசத்திற்கே இக்காட்டி தொடர்பில் பூரண புள்ளிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போது தகவலுரிமைக்கான தரப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட

238 பார்க்க. டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷ்னல் ஸ்ரீலங்கா எதிர். பிரதமர் அலுவலகம் ஜனாதிபதி/ செயலகம், தகவலுரிமைக்கான ஆணைக்குழு மேன்முறையீடு *5/2017 & 6/2017*.

123 நாடுகளில் 51 நாடுகள் இக்காட்டி தொடர்பில் பூரண புள்ளிகளைப் பெற்றுள்ளமையானது அது மிகையான குறுகிய கால எல்லை அன்று என்பதனை எடுத்துரைக்கின்றது..

மொத்தமாகப் பார்க்கின்றபோது, இலங்கையின் கட்டணத்திற்கான முறைமையானது பரீட்சயமானதாக உள்ள அதேவேளை கட்டணங்கள் சாதாரணமானவையாக உள்ளன. இங்கு காணப்படுகின்ற சிறு குறைபாடு யாதெனில், விதி 6(1) ஆனது, நான்கு பக்கங்களே இலவசமாக வழங்கப்படவேண்டும் என கூறுகின்றது. ஆனால் அதிக எண்ணிக்கையிலான பக்கங்களைக் கொண்ட தகவல்கள் அதாவது பத்து அல்லது இருபது அளவிலான பக்கங்களினைக் கொண்ட தகவல்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்பதே சிறப்பான நடைமுறையாக உள்ளது. அத்துடன் வறுமைக்கோட்டில் வாழ்பவர்கள் தகவல்களை கோருகின்றபோது பணம் அறவிடப்படக்கூடாது என்பது சிறப்பான நடைமுறையாக உள்ள அதேவேளை இவை இலங்கையிலும் நடைமுறையில் கொண்டு வரப்படலாம்.

இலங்கையின் சட்டமானது விதிவிலக்குகளின் பண்பு தொடர்பில் குறிப்பிட்டளவான புள்ளிகளை இழந்துள்ளது. தொழிற்சார் பண்பாட்டாளர்களுக்கிடையிலான தொடர்பாடல், பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் வர்த்தக ஒப்பந்தங்கள் ஆகிய மூன்றும் முதல் நிலையில் நெறிமுறைத்தன்மையானவையாகக் கருதப்படாதவை ஆகும். இவை கூருணர்திறன் தன்மையுடையனவாகக் காணப்படுகின்றபோது, அவை ஏற்கனவே அந்தரங்கம் மற்றும் ஏனைய நாடுகளுடனான தொடர்பு போன்ற பிற விதிவிலக்குகளினால் விலக்களிக்கப்பட்டுள்ளன. மூன்றாந் திறத்தவர் தொடர்பான தகவல்கள், நீதிமன்ற அவமதிப்பு மற்றும் அமைச்சரவை குறிப்பாணைகள் ஆகிய மூன்றும் ஊறு தொடர்பான சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை (அதாவது, அத்தகவல்களின் வெளிப்படுத்துகையானது நெறிமுறைத்தன்மையான அக்கறைக்கு ஆபத்தொன்றினை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படவில்லை).

பிரிவு 5(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்து வருட கால எல்லையானது பிரமிக்கத்தக்க வகையில் குறுகியதாகக் காணப்பட்டபோதிலும்கூட, துரதி'டவசமாக அது குறிப்பிட்ட சில விதிவிலக்குகள் தொடர்பில் மட்டுமே ஏற்புடையதாகின்றது. இவ்விடயம் தொடர்பான சிறப்பான நடைமுறை யாதெனில், பகிரங்க அக்கறைகளைப் பாதுகாக்கும்பொருட்டு அனைத்து விதிவிலக்குகள் தொடர்பிலும் கால எல்லை ஏற்புடையதாகுதலாகும்.

மேலே குறிப்பிட்டுள்ளதன்படி, தகவலுரிமைக்கான ஆணைக்குழுவானது மிக பரந்தளவான ஆணையினையும் அவ் ஆணையினைப் பிரயோகிப்பதற்கான பரந்தளவான அதிகாரங்களையும் கொண்டுள்ளது. எவ்வாறெனினும், அதற்கு பகிரங்க அதிகார சபைகளைப் பரிசீலனை செய்கின்ற அதிகாரம் காணப்படுவதில்லை. இவ்வதிகாரம் அடிக்கடி பிரயோகிக்கப்படாவிடினும்கூட இது ஒரு முக்கியமான அதிகாரமாகக் காணப்படலாம். உதாரணமாக பகிரங்க அதிகார சபைகள் தங்களிடம் தகவல்கள் இல்லை என கோருகின்ற சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு அதனை நம்பாத தருணங்களில் இது ஒரு முக்கியமான அதிகாரமாகக் காணப்படலாம்.

தகவலுக்கான அணுகுதலைத் தடை செய்கின்ற தனிநபர்களுக்கு எதிரான ஒழுக்காற்று மற்றும் குற்றவியல் தண்டனைகளை வழங்குவதற்கான ஒரு பலமான முறைமையினை தகவலுக்கான உரிமைச் சட்டம் கொண்டுள்ள அதேவேளை, பகிரங்க அதிகார சபைகள் சட்டத்தினை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டரீதியில் தவறுகின்ற சந்தர்ப்பத்தில்கூட அவற்றின் மீது தண்டனைகளை விதிக்கத் தவறியுள்ளது. நடைமுறையில், தகவல் வழங்கப்படாதுள்ளபோது, அது தனிநபரொருவரின் தவறென்பதனைப் போலவே அது அதிகார சபையினதும் தவறொன்றாகும். இதனைத் தீர்ப்பதற்கு, பகிரங்க அதிகார சபை மீது தண்டனைகளை விதிப்பதற்கான சாத்தியப்பாடுகளை அனுமதித்தல் முக்கியமானதாகும்.

அதேபோல, தகவலுக்கான உரிமைச் சட்டமானது அதன் ஏற்பாடுகளுக்கு அமைவாக தகவல்களை வெளிப்படுத்துபவர்களை பாதுகாக்கின்ற அதேவேளை, பகிரங்க அதிகார சபைகளில் இடம்பெறுகின்ற தவறுகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துகின்ற நபர்களுக்கான பாதுகாப்பினை வழங்கத் தவறியுள்ளது. பல நாடுகளில், அத்தகைய பாதுகாப்பு தனியான சட்டமொன்றினால் வழங்கப்படுகின்றது.

முடிவு

இக்கட்டுரையின் இறுதிப் பகுதியானது இலங்கையின் தகவலுரிமையின் சட்டப்பரப்பினை விருத்தி செய்வதற்கான வழிமுறைகள் பற்றி கலந்தாலோசித்துள்ளபோதும், அவை இதன் முதல் மூன்று பகுதிகளில் அழுத்தமாகக் கூறப்பட்ட விடயங்களை, அதாவது இலங்கையின் தகவலுரிமைக்கான சட்டக் கட்டமைப்பானது உலகிலுள்ள சிறந்த கட்டமைப்புக்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது என்பதன் அழுத்தத்தினை குறைப்பதாகக் கணிக்கப்படக்கூடாது. அது குறிப்பிட்ட தகவலுரிமைத் தரப்படுத்தலில் உயர் மட்டத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது மாத்திரமல்லாமல் அது இலங்கையின் குறிப்பான தேவைகள் மற்றும் பின்னணிக்கு அவசியமான மற்றும் தகவலுரிமைக்கான சட்டப் பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய போக்கினைப் பிரதிபலிக்கின்ற பல புத்தாக்க அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

அதன் பலங்கள் மற்றும் பலவீனங்களுக்கு மத்தியில், தகவலுரிமைக்கானச் சட்டமானது அதன் அமுலாக்கம் தொடர்பில் சிறப்பாகத் தொழிற்படுகின்றதென அதன் ஆரம்ப சமிக்ஞைகள் எடுத்துக் காட்டுகின்றன. தகவலுரிமைச் சட்டத்தின் அமுலாக்கத்தின் ஆரம்ப நாட்களில் இத்தகைய தேனிலவு சூழ்நிலை எதிர்பார்க்கப்படலாம் என்கின்ற அதேவேளை, அது எந்நேரத்திலும் மாற்றமடைவதற்கு பிணிக்கப்பபட்டுள்ளதாகும்

என்பதனால் இது மிகவும் முக்கியமாகின்றது. தகவலுரிமைத் தொடர்பான சிறந்த நடைமுறைகளை நிறுவனமயப்படுத்தல் தொடர்பான முன்னேற்றங்களை இலங்கை இத்தேனிலவு காலப்பகுதியில் ஆக்கிக் கொள்வதனூடாக பிற்காலப்பகுதியில் நிறுவனங்கள் தகவலுரிமையுடன் இணங்காதிருப்பதனை கடினமானதாக்கலாம்.

தென்னாபிரிக்காவில் தகவல் உரிமையின் ஆட்சி: ஒப்பிட்டு நலனின் பிரதான அம்சங்கள்

ரிச்சர்ட் கலன்ட்

1. அறிமுகம்: ஒரு போட்டியிடப்பட்ட இடம்

தென்னாபிரிக்காவின் தகவல் உரிமைக்கான பயணமானது சிகரங்கள் மற்றும் தொட்டிகள் மீதான ஏற்ற இறக்க சவாரி போன்றிருந்தது. வெளிப்படுத்தலானது அரசியல் ரீதியில் போட்டியிடப்பட்ட இடமாகும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். நிலவுகின்ற சூழல் முக்கியமானது. ஆகவே இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தென்னாபிரிக்காவானது இன ஒதுக்கீட்டுக் கொள்கையிலிருந்து அரசியலமைப்பு ஜனநாயகம் என்ற அரசியல் மாற்றத்திற்கு கவனமாக வழிநடத்தப்பட்டது என்பது அடையாளப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவதாக, 1990களின் நடுப்பகுதியில் பேச்சுவார்த்தை மூலமான தீர்விலிருந்து வெளிப்பட்ட தென்னாபிரிக்காவின் ஜனநாயக ஒருங்கிணைப்புக்காலமானது அரசியலமைப்பு ஒழுங்கமைப்பு தொடர்பில் கடுமையான சவால்களை எதிர்கொண்டிருக்கின்றது. பிரதானமாக, 2009ம் ஆண்டு பெப்ரவரி மாதம் சீர்திருத்தவாதி சிறில் ரமபோசாவால், ஜனாதிபதி பதவியிலிருந்து அகற்றப்படும் வரை ஜேக்கப் ஜுமா தலைமையில் "அரசைக் கைப்பற்றுதல்" என்ற செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டிருந்தது.

தென்னாபிரிக்காவாவின் தகவல் உரிமையானது இந்த நடமுறையின் சில கூறுகளின் பயனாளியாக இருக்கின்றது அதேவேளை சில நேரங்களில் இணை சேதத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஜுமா சகாப்தத்தின் முடிவில் இறுதியில் அரசியலமைப்பினைப் போல தென்னாபிரிக்காவின் தகவலுக்கான உரிமை சட்டமும்

அழுத்தமாக சோதனை செய்யப்பட்டு நாட்டின் புதிய ஜனநாயக ஒழுங்கமைப்பில் தவிர்க்கமுடியாத சக்கரமாக வெளிவந்துள்ளது. ஒரு ஒப்பீட்டு சட்ட பத்திரிகையின் சமீபத்திய கட்டுரையில்: நான் "அதன் மிகவும் பாராட்டத்தக்க அரசியலமைப்பில் பொதிந்துள்ள தகவலை அணுகுவதற்கான உரிமையானது சட்டவாக்கத்தை இயக்கும் பிரதான பயனாளிகளுக்கு ஒரு பெறுமதியான கருவி என்பதனை நிரூபித்துள்ளது. 2000ம் ஆண்டின் தகவல் அணுகுவதனை மேம்படுத்துவதற்கான சட்டமானது பத்திரிகையாளர்கள் அல்லது எதிர்க்கட்சியினர் போன்றோர் அதிகாரத்திலுள்ளவர்களை சவாலுக்குட்படுத்துவதற்கு ஏற்றதாயமைந்துள்ளது. தென்னாபிரிக்காவில் தகவலை அணுகுவதற்கான சட்டத்தை பயன்படுத்தும் நபர்களின் சான்று பரிந்துரை செய்வதாவது, அது *Sisyphus* பணியாக முன்வைக்கப்படலாம். அதன்விளைவு அரசியல் ரீதியாகவும் சட்டரீதியாகவும் முக்கியமானது. இதனால் நேரத்தையும் வளங்களையும் முதலீடு செய்வதனை நியாயப்படுத்துகின்றது.[239]" என கருத்து தெரிவித்திருந்தேன்.

இந்த கட்டுரையானது பரப்பெல்லையின் விஸ்திரம், நடைமுறைப்படுத்தல் மற்றும் அமுலாக்கம் என்ற கட்டமைப்பின் கீழ் தென்னாபிரிக்காவின் தகவல் உரிமை வரலாற்றின் பிராதான அம்சங்கள் பற்றி ஆராய்கின்றது.

2. சட்டத்தின் பரப்பெல்லை

தென்னாபிரிக்காவின் தகவல் உரிமைச் சட்டம் மற்றும் தகவலை அணுகுவதனை மேம்படுத்தும் சட்டம் என்பன 1994ம் ஆண்டின் அதன் ஜனநாயக மாற்றத்தின்

239 ரிச்சாட் கலன்ட், அணுகப்பெற்றுக் கொள்ள கூடியது-தகவல் மற்றும் அரசியலமைப்புரீதியிலான கூட்டுப்பொறுப்புடைமை: பறக்கும் சுழற்றும் சிறகுகள், தென்னாபிரிக்கா:சிறப்பு பதிப்பு:தகவலுக்கான உரிமையானது *VRU* அரசியலமைப்பு மற்றும் வெளிநாட்டு சட்டங்கள் [தென்னாபிரிக்கா, ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் சட்டம் மற்றும் அரசியல்] 2017 பக்கம் 367 – 389.

விளைவாக அரசியலமைப்பின் ஒரு பகுதியாக வெளிப்பட்டது. தென்னாபிரிக்காவானது இன ஒதுக்கீட்டுக் கொள்கையின் போது இரகசியத்தன்மை என்பது சர்வாதிகார ஆட்சியாளர்களின் கைகளில் ஒரு ஆயுதமாக இருந்தது என்பது அரசியலமைப்பு பேச்சுவார்த்தையின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, புதிய ஜனநாயக ஆட்சிமுறைக்கான கண்காணிப்பு வார்த்தைகளாக வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்ததன்மை என்பன அமைந்துள்ளன. எனவே இறுதி அரசியலமைப்பின் ஆரம்ப வாசகத்தில் இந்த வெளிப்பாட்டை காணலாம்: பிரிவு ஒன்று ஆனது "வயது வந்தவர்களுக்கான உலகலாவிய வாக்குரிமை, தேசிய பொது வாக்குரிமை, வழக்கமான தேர்தல் முறைமை மற்றும் ஜனநாயக அரசாங்கத்தின் பலகட்சிமுறைமை, **திறந்ததன்மை மறுமொழி பகிர்தல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை"** (என்னுடைய வலியுறுத்தல்அழுத்தம்) என்பவற்றை உறுதிப்படுத்தல் போன்ற பெறுமதிமிக்க விடயங்களைப் மையப்படுத்திய நாட்டினை பேசுகின்றது. 1996ம் ஆண்டின் இறுதி அரசியலமைப்பின் பிரிவு 32 ஆனது தகவலை அணுகுவதற்கான உரிமையை வெளிப்படுத்தியுள்ளது.

(1) ஒவ்வொருவரும் பின்வரும் தகவலை அணுகுவதற்கு உரித்துடையவர்கள் (அ) அரசிடம் இருக்கும் எந்தவொரு தகவல் (ஆ) ஏனைய நபர்களிடம் இருக்கும் தகவல்கள் அது எந்தவொரு உரிமையையும் பாதுகாக்க அல்லது பயன்படுத்த தேவையான தகவல்களாக இருப்பின்.

(2) இந்த உரிமைக்கு விளைவு கொடுப்பதற்கு தேசிய ரீதியான சட்டம் இயற்றப்பட வேண்டும். மேலும் அரசாங்கத்தின் நிர்வாக மற்றும் நிதி சுமையைத் தணிக்க நியாயமான நடவடிக்கைகளை வழங்கலாம்.

பிரிவு32(2) இன் படி அரசியலமைப்பின் அட்டவணையில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு மூன்று வருட கால எல்லையில்

நீண்ட கால செயல்முறையின் பின்னர் பாராளுமன்ற சட்ட வரைபில் 2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் *PAIA* உருவாக்கப்பட்டது[240]. பாராளுமன்றத்தை திரட்டும் நோக்கில் உருவாக்கப்பட்ட திறந்த ஜனநாயக பிரச்சாரக்குழுவான சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பிரச்சாரக்குழுவில் நான் உறுப்பினராக இருந்தேன். குறித்த பிரச்சார குழுவானது வர்த்தக சங்க அமைப்பின் பிரதிநிதிகளையும் (*COSATU*) முக்கியமான தேவாலய குழுக்களையும் *IDASA* போன்ற மனித உரிமைகளுக்கான அமைப்புக்களையும் உட்கொண்டிருந்தது என்பது வெளிப்படைத்தன்மை எப்படி முக்கியமானது என்பதனை காண்பித்தது. மேலும் அது *PAIA* நெறிமுறைத்தன்மையை கொண்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்தியது. பொதுமக்கள் ஒப்பந்தம், ஆலோசனை மற்றும் கருத்துரைக்கு ஏராளமான வாய்ப்பினைக் கொண்டுள்ள ஒரு கவனம் செலுத்திய சட்ட பூர்வமான ஜனநாயக செயல்முறையாக அது இருந்தது.

இறுதியில் என்ன வெளிவந்ததெனில் சட்ட ரீதியாக பலமான சில விதங்களில் விவாதிக்கக்கூடிய தேவையற்ற மடிப்புக்களைக் கொண்ட சட்டமாகும். 2000ம் ஆண்டுகளுக்குப்பின்னர் கூட மொத்தமாக 100 நாடுகளைச் சேர்த்த வகையில் பல நாடுகளில் தகவல் உரிமைச்சட்டத்தின் அதிவேக வளர்ச்சியை நாங்கள் கண்டோம்.[241]

2003ம் ஆண்டிலிருந்து ஒரு ஆய்வு குறிப்பிட்டது என்னவெனில் தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பை போலவே *PAIA* உம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரவலாக புகழ் பெற்றது. இது சர்வதேச சட்டங்களின் படி ஒரு தீவிரமான சட்டம் அல்லது ஒரு காப்பாளர் இதனை தங்க தராதரம் (*the golden standard*)

240 சட்டமூலத்தின் வரையப்பட்ட வரலாறு
ஜஸ்டின் வைட்டின் திறந்த ஜனநாயகம் ஷ மூடப்பட்ட வாய்ப்புக்களுக்கான ஒரு ஜன்னல், மனித உரிமைகளுக்கான தென்னாபிரிக்க சஞ்சிகை 14 (1998) இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

241 ஒரு ஆய்வு ஆவது எண்ணிக்கையை 123ஆக காண்பிக்கின்றது. '*The RTI Rating*' பார்க்க <https://www.rti-rating.org/> (இறுதியாக பெறப்பட்டது 22 கார்த்திகை 2018).

(ஹரிஸ், 2003b)[242]என அழைத்துள்ளார். தனியார் கையாளும் தகவலை பெறுவதற்கான நோக்க எல்லை விரிவுபடுத்தப்பட்டமை மிகவும் ஆர்வமிக்கதாயிருந்தது. அலாஸ்டர் ராபர்ட்ஸ் போன்ற தகவல் உரிமைக்கான கல்வியலாளர்கள் பொது மற்றும் தனியார் அதிகாரங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் இடையிலான எல்லைகள் மங்களாகும் சந்தர்ப்பங்களை அரசின் நவீன பன்முகத்தன்மையான கட்டமைப்பு என அழைக்கின்றனர்.[243] இதனை அங்கீகரித்து தென்னாபிரிக்காவின் சட்டமன்ற உறுப்பினர்களும் சிவில் சமுதாய பிரச்சார குழுவும் அரசியலமைப்பு உரிமைகளின் எல்லைகளை விரிவுபடுத்தும் அபூர்வமான(அக் காலகட்டத்தில்) படிமுறைகளை எடுத்துஇ இதன் மூலம் தேசிய சட்டங்கள் தனியாரிடமுள்ள தகவல்களை உள்ளடக்கின்றன.

PAIA இல் உள்ள மிகப்பெரிய குறைபாடு அதாவது மலிவான விரைவான மற்றும் சிறப்பான அமுலாக்க அமைப்பின் குறைபாடு விரைவில் வெளிப்பட்டது - இக் கட்டுரை இப்பிரச்சினை தொடர்பாக மீண்டும் ஆய்வு செய்யும். தகவல் கோரிக்கை மறுக்கப்பட்டிருக்கின்றபோது கோரிக்கையாளர் கடினமான தெரிவை எதிர்நோக்குகின்றனர். குறித்த விடயத்தை கைவிடுவதா அல்லது மேல் நீதிமன்றில் மேலதிக நடவடிக்கையை தொடர்வதா-மெதுவான, செலவு கூடிய மற்றும் நிபுணத்துவமல்லாத தெரிவு.

3. அமுலாக்கம்

அமுல்படுத்துவதற்கு முன்னர், தென்னாபிரிக்காவின் கதை மிகவும் உச்சமான கலவையாகும். நான் இது பற்றி விபரமாக வேறு இடத்தில் குறிப்பிடுகின்றேன்[244] நான் முன்குறிப்பிட்டவாறு

242 <*http://citeseerx.ist.psu.edu/viewdoc/download?doi=10.1.1.560.1016&rep=rep1&type=pdf*> என்பதற்காக டாலே மக்கின்லி என்பவரால் எழுதப்பட்ட, தென்னாபிரிக்காவில் தகவலை அணுகுவதின் தரம்.

243 அலாஸ்டர் எஸ்.ராபர்ட்ஸ் இன் பன்முகத்தன்மையான கட்டமைப்பு மற்றும் தகவலுக்கான உரிமை (21ம் திகதி யூலை மாதம் 2001). டொரன்டோ பல்கலைக்கழகத்தின் சட்ட சஞ்சிகை பாகம் 51, இல.3, பக்கம் 243 – 271, யூலை 2001. SSRN இல் கிடைக்கப்பெறும்: <*https://ssrn.com/abstract=1305423*>.

244 கலண்ட் 2017. மேலே குறிப்பிட்டது.

PAIA மற்றும் அதன் கீழான அரசியலமைப்பு உரிமைகள் என்பன விசாரணை ஊடகவியலாளர்களுக்கும் எதிர்க்கட்சியினர் மற்றும் சுதந்திரமான மனித உரிமைகளுக்கான அமைப்புக்கள் போன்ற முக்கியமான சமூக பங்குதாரர்களுக்கு தென்னாபிரிக்காவின் முன்னனி மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி எட்டியேன் முரேனிக் 1990 களில் அரசியலமைப்பு பேச்சுவார்த்தையின் போது "அதிகாரத்தில் இருப்போரின் "இறகுகளை சுழற்றுவதற்கும்" அதன் மூலம் நியாயப்படுத்தும் ஒரு புதிய கலாசாரத்தை உருவாக்குவதற்கும் உதவுகிறது" என விவரிக்க விரும்பியவாறு செயற்படுத்தியுள்ளது.

தகவல் உரிமை சட்டத்தின் விளைவாக பல முக்கியமான வெற்றிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தென்னாபிரிக்காவின் முன்னால் ஜனாதிபதி ஜேகப் ஜுமா அவர்களின் ஆட்சியின் ஊழலை நிரூபிக்க நடந்த முயற்சிகள் குறிப்பிடத்தக்கதாகும். தென்னாபிரிக்காவின் பொது சட்டவாதி (ஓம்புட்) சட்ட ரீதியற்ற வகையில் ஜுமா ஜனாதிபதி அவர்களால் அவரது தனிப்பட்ட வதிவிடத்திற்கு(நகண்டலா) பாதுகாப்பு என்ற அடிப்படையில் செலவிட்ட 60 மில்லியன் அமெரிக்க டொலர் தொடர்பில் விசாரணை செய்தார். பொது வழக்கறிஞர் தனக்கு அரசியலமைப்பு ரீதியாக உள்ள அதிகாரத்தின்படி ஜனாதிபதி ஜுமா அவர்கள் தனக்கும் தனது குடும்பத்திற்கும் சட்ட ரீதியற்ற வகையில் செலவு செய்த பணத்தை நியாயமான அடிப்படையில் மீளச்செலுத்துவதற்கான நிவாரண நடவடிக்கையை மேற்கொண்டார்[245].

---

245 தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பின் பிரிவு 182(1)(இ) ஆனது பொது வழக்கறிஞர்கள் நிவாரண நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது.–அரசியலமைப்பு நீதிமன்றம் உறுதிப்படுத்தி ஒரு அதிகாரமானது நீதிமன்ற மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டால் கட்டுப்படுத்தப்படும். பொருளாதார சுதந்திர போராளிகள் எதிர் தேசிய சபையின் சபாநாயகர் மற்றும் ஏனையோர்; ஜனநாயக கூட்டணி எதிர் தேசிய சபையின் சபாநாயகர் மற்றும் ஏனையோர;*[Economic Freedom Fighters v Speaker of the National Assembly and Others; Democratic Alliance v Speaker of the National Assembly and Others] [2016] ZACC 11.*

இரண்டு வருடங்களிற்கு மேலாக ஜுமா அவர்கள் அதனை செய்வதற்கு மறுத்து வந்தார். அதே நேரம் ஜுமாவின் ஆதரவாளர்களும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் பொது வழக்கறிஞரை அச்சுறுத்தி பிரச்சினைகளை குழப்பியடித்து வந்தார்கள். ஆனால் 31 மார்ச் 2016ந் திகதி பொது வழக்கறிஞரின் அறிக்கையை ஏற்று பணத்தை மீளச் செலுத்துவதை மறுப்பதாக ஜுமாவின் செயற்பாடுகள் இருப்பதை அவதானித்த அரசியலமைப்பு நீதிமன்றம் ஜுமா அரசியலமைப்பை பாதுகாத்து மதிக்க வேண்டும் என்ற கடமையை மீறியுள்ளார் என கண்டறிந்தது.[246] அவருக்கு 600,000 அமெரிக்க டொலர்களை (R8m) பொதுச் செலவுக்கு செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது. அரசியலமைப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு தென்னாபிரிக்காவின் தகவல் உரிமையை அணுகுவதற்கான சட்டத்தை முற்தீர்ப்பாக பயன்படுத்தியது. 2009ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ம் திகதி மெயில் அன்ட் கார்டியன் பத்திரிகையில் Nkandlaவின் ஊழல் அம்பலப்படுத்தப்பட்டது[247]. பத்திரிகையானது ஆவணங்களை அணுகி பெற்றுக்கொள்வதற்கு தென்னாபிரிக்காவின் தகவல் அணுகுதலுக்கான சட்டத்தைப் பயன்படுத்தியது. அது வழக்கு மற்றும் கதைகளை உருவாக்குவதற்கு புலன்விசாரணை பத்திரிகையாளர் குழுவிற்கு உதவியது.

மேலும் இது தென்னாபிரிக்காவின் சமூக பொருளாதார உரிமைகளுக்கு ஒரு துணையானது என நிரூபிக்கப்பட்டுள்ளது. நியாயமான வீட்டிற்கு அணுகுவதற்கான உரிமை போன்ற சமூக பொருளாதார உரிமைகள் தகவலுக்கான உரிமை இன்றி வழங்கப்படுவது கடினம் என்பது பல வழக்குகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தகவலுக்கான உரிமையானதுமிகவும் பலமுள்ள உரிமையாக பார்க்க கூடியதாயுள்ளதுஅது

246 மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

247 மெயில் அன்ட் கார்டியன், *Zumas's R65m Nkandla splurge, http://mg.co.za/article/2009-12-04-zumas-r65m-nkandla-splurge* (இறுதியாக பெறப்பட்டது 30 ஏப்ரல் 2016).

ஏனைய உரிமைகளை கோருவதற்கு பயனுள்ள உபகரணமாயுள்ளது[248].

இந்த சூழ்நிலையில் ராஜஸ்தானில் *MKSS* இன் அனுபவம் மிகவும் செல்வாக்குப் பெற்றது. *MKSS* ஆனது ராஜஸ்தானில் தகவல் உரிமைக்கான சட்டம் இயற்றப்படுவதற்கான பிரச்சாரத்தை மட்டும் வழிநடத்தவில்லை மாறாக பொதுச்சேவை வழங்கல் மற்றும் பொதுமக்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை மேம்படுத்துவதற்காக சட்டத்தை பயன்படுத்தி திட்டங்களை அபிவிருத்தி செய்து ஒரு சமூக செவிபுலத் திறனை வளர்த்தனர்.[249] தென்னாபிரிக்காவின் முன்னனி சிவில் சமூகத்திற்கான சட்டத்தரணி அலிசன் டில்லி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"*MKSS* மிக முக்கியமானது. அந்த வேலையைப் பற்றி தெரிந்து கொள்வதோடு, அந்தவகையான அணுகுமுறை நேரடியாக மக்களுடைய பொருளாதார நிலைமைகளை எப்படி மாற்றிவிடும் என்பதை உணர்ந்து கொள்கிறது. இது ஒருசக்தி வாய்ந்த வாதம். ஆனால் அது தந்திரோபாயமாக இருந்தது ஏனெனில் தகவலை அணுகுதல் வெள்ளத்திற்கு வாயில்களை திறப்பது போல ஒரு தடையாக அமைந்து அரசாங்கத்தின் சேவைகளை வழங்குவதை தடுக்கக்கூடும். அதனால் 1990களில் அரசாங்கத்தின் மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டம் பொருளாதார மாற்றம் என்பவற்றிற்கு எவ்வாறு ஆதரவளிக்க முடியும் என்பதனை காட்ட எங்களுக்கு ஒரு எதிர்வாதம் தேவையாயிருந்தது."[250]

---

248 சரஸ் ஜக்வன்த், தகலுக்கான உரிமை என்பது கருவூல உரிமை: ரிச்சாட் கோலன்/அலிசன் டில்லே, அறிந்து கொள்வதற்கான உரிமை, வாழ்வதற்கான உரிமை: தகவலினை அணுகுதல் மற்றும் சமூக பொருளாதார நீதி, ஹேப்டவுன் 2002 பக்க எண் 3 - 16. .

249 தகவலினை அணுகுதல் மற்றும் சமூக பொருளாதார உரிமைகள் மீதான சர்வதேச இலக்கியத்தின் ஆரம்ப பங்களிப்பு. மற்றும் MKSS இன் சமூக தணிக்கை அணுகுமுறையின் கோட்பாட்டு கருத்தியல், பார்க்க ரோப் ஜென்கின்ஸ்/அனே மரி ஹோட்ஸ், கணக்குகள் மற்றும் கூட்டுப்பொறுப்புடைமை, இந்தியாவில் தவலுக்கான உரிமை தாக்க செயற்பாடுகள், மூன்றாம் உலக காலாண்டு 20 (1999), பக்க எண். 603 – 22.

250 கலண்ட் 2017, மேற்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தென்னாபிரிக்காவில் தகவலுக்கான உரிமையை பயன்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட நன்மைகள் இருந்த போதிலும் நாட்டின் இனக்கலவரம் இரகசியத்தின் தன்னிச்சையான கலாசாரத்தால் திருப்பப்பட்டுவிட்டது என விவாதிக்க முடியாது. சான்றுகளின்படி உண்மையில் பொது பதிவுகளை அணுகுதல் என்பது எளிதான ஒரு விடயமல்ல.வழக்கமாக அதற்கு சிவில் சமூக சட்ட மையம் போன்ற இடைநிலை அமைப்பின் தலையீடு அல்லது ஆதரவு தேவைப்படும்.[251] சிவில் சமூக அமைப்பினால் நடத்தப்பட்ட தகவலை அணுகுவதற்கான மிகவும் பயனுள்ள கற்கைநெறி ஒன்றான தகவலை அணுகுதலுக்கான வலையமைப்பு தமது 2016 நிழல் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. "தகவலை அணுகுதலுக்கான உரிமையானது அரசியலமைப்பு ரீதியாக பேணப்பட்டுள்ள உரிமையாக இருந்தும் *PAIA* ஆனது 2001ம் ஆண்டிலிருந்தே நடைமுறைக்கு வந்ததிருந்தாலும் *ATI* வலையமைப்பிலுள்ள உறுப்பினர்கள் தனியார் மற்றும் பொது அமைப்புக்களிடமிருந்து தகவலை அணுகி பெற்றுக்கொள்வதில் இன்னமும் சவால்களை எதிர்கொள்கின்றனர்.[252] ஒரு வருட காலத்தில் குறித்த வலையமைப்பின் உறுப்பினர்கள் *PAIA* படி தகவல்களை அணுவதற்காக 369 கோரிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அவற்றில் 46 வீதமானவை பொருத்தமான பகிரங்க அதிகாரசபைகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 58 வீதமானவையும் நிராகரிக்கப்படக் கூடியதாயுள்ளது. அதாவது குறித்த கோரிக்கைகள் முறையாக மறுக்கப்படவில்லை. ஆனால் அவற்றுக்கு சாதாரணமாக பதில் எதுவும் வழங்கப்படாமலுள்ளது.

கோரிக்கைகளை நிராகரிக்கும் செயலானது தென்னாபிரிக்காவின் தகவலுக்கான உரிமையின் பயணத்தில்

251 கிரிஸ்டினா பென்ட்லே/ரிச்சாட் கோலன்ட,தகவல் அணுகப்பெறப்பட்டது, நடைமுறையிலான மாற்றம் ஒரு கோட்பாடு, மெல்கோம், லக்போட், பென் கசின்ஸ், ஜக்கி டுகாட் மற்றும் டிசிப்போ மட்லின்கோசி, தென்னாபிரிக்காவில் சமூக பொருளாதார ரீதியான உத்திகள், சின்னங்கள் மற்றும் பொருள்கள் ஹேம்பிரிஜ் 2014.

252 தகவலை அணுகுவதற்கான வலையமைப்பு, நிழல் அறிக்கை, *2016. https://cer.org.za/wp-content/uploads/2017/02/CER-Shadow-Report-Final.pdf* (22 நொவெம்பர் 2018 அன்று அணுகப்பட்டது).

கவலையளிக்கும் ஒரு விடயமாகவுள்ளது. 2006ம் ஆண்டிற்கு பின்னர் நீதியின் ஆரம்பத்திற்கான திறந்த சமூக அமையம் *[Open Society Foundation Justice Initiative]* ஆல் நடத்தப்பட்ட உலகலாவிய ஆய்வில் தென்னாபிரிக்கா உட்பட பதினான்கு நாடுகளின் செயற்திறனை ஆய்வு செய்ததில் "அமைதியான மறுப்பு" என்ற அறிக்கையில் தென்னாபிரிக்கா முதலிடத்தில் இருந்தது.[253]

இரகசிய கலாசாரத்துடன் தொடர்பான ஒரு உதாரணம், அரசின் பாதுகாப்பு அமைச்சர் சியோபோகா சில்லேயின் "தகவல் பரிமாற்றம்" தொடர்பான பவர்பய்ன்ட் விளக்கக்காட்சியின் (*powerpoint presentation*) காகிதப்பிரதியை கோரி செய்யப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையை தென்னாபிரிக்காவின் பிரதான எதிர்கட்சி மேற்கோள்காட்டியது.[254] இவ் விளக்காட்சி ஊடகங்களுடன் கூடிய திறந்த பாரளுமன்ற கூட்டத்திலேயே தகவலை பாதுகாப்பதற்கான சட்டமூலம் மீதான தனிப்பட்ட செயற்குழுவிடம் காட்சிக்கப்பட்டது. கூட்டம் முடிவடைந்த பின்னர் குறித்த ஆவணங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் குறித்த விளக்க குறிப்பு தொடர்பான காகிதப்பிரதியை உறுப்பினர்களுக்கு வழங்க அமைச்சர் மறுத்துவிட்டார். குறித்த தகவல் பரிமாற்றம் தொடர்பான கூட்டத்தின் உள்ளடக்கங்கள் ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டு மேலும் கூட்டநடவடிக்கைச் சுருக்க குறிப்புக்கள் பாராளுமன்றத்தின் கண்காணிப்பு குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.[255] *PAIA*வினது கோரிக்கை "குடியரசின் பாதுகாப்புக்கு தீங்கை ஏற்படுத்தும் எனவும் மற்றைய அரசு சார்பாக அல்லது சர்வதேச அமைப்பு சார்பாக நம்பிக்கையுடன் வழங்கப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தும் எனவும் நியாயமாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது" என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டது.

253 வெளிப்படைத்தன்மை மற்றும் அமைதி. *OSF Justice Initiative. 2006.*

254 கலண்ட் 2017, மேலே குறிப்பிட்டது.

255 பாராளுமன்ற கண்காணிப்பு குழு www.pmg.org.za (இறுதியாக அணுகப்பெறப்பட்டது 26 கார்த்திகை 2017).

"சுழற்றும் சிறகுகள்" [*'RufflingFeathers'*] என்ற கட்டுரைக்கான எனது நேர்காணலில் வெளிப்பட்டவாறு[256] என்னவெனில் தடையான அரசாங்கத்துடன் அவர்கள் ஏமாற்றமடைந்திருந்தாலும் எதிர்கட்சியானது *Cadre "Cadre Deployment"* பற்றி வெளிப்படுத்துவதற்கு *PAIA* ஐ பயன்படுத்தியது. *ANC* இன் உறுப்பினர்களுக்கு தான் நடைமுறையில் அரசாங்கத்தின் வேலைகள் செல்லும்[257] *ANC* ஆனது உப ஒப்பந்தக்காராகளுடன் தொடர்பை கொண்டிருந்தது[258]. ஜோஹன்னஸ்பார்க் மற்றும் பிரிட்டோரியாவில் அமைந்துள்ளதொழிற்துறையின் மையப்பகுதியான கௌதெங்கின் மாகாணத்தில் உள்ள சர்ச்சைக்குரிய மின்இணைப்புடன்தொடர்புடைய ஒப்பந்த பதிவுகள் கோரப்பட்டிருந்தன[259]. மேலும் கட்சியானது வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சினதும்[260] அது போல தென்னாபிரிக்காவின் நம்பிக்கைக்குரிய பர்மா தூதுவரினதும் ஹோட்டல் கட்டணங்கள் தொடர்பான விபரங்களையும் கேரியிருந்தது[261]. மேலும் குற்றச் செயல்கள் அதிகமாக இருப்பதால் எதிர்கட்சியானது மக்கள் தொகையின் விகிதமும் பொலீஸார் என்ற விகிதாசாரத்தையும்

256 கலண்ட் 2017, மேலே குறிப்பிட்டது.

257 எதிர்க்கட்சியானது நேர்முகதேர்வுடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் ரெபேட் மக்பிரைட் என்பவர் பொலிஸின் சுதந்திர விசாரணையின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட நடவடிக்கைமுறைமை பற்றிய அறிக்கையையும் முறையாக கோரி விண்ணப்பித்திருந்தது.

258 எதிர்க்கட்சியானது அரசுக்கு சொந்தமான நிறுவனங்களால் வழங்கப்பட்ட துணை ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களை கோரியிருந்தது.

259 தகவலினை அணுகப்பெறுதல்: 'பொறிமுறை செயற்படுத்தப்பட்டது: 20 - 30 வரையான பதிவுகளின் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன."

260 தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

261 சர்வதேச உறவுகள் மற்றும் ஒழுங்கமைப்புக்கான திணைக்களம் பர்மாவின் தூதுவர் தொடர்பான ஆதாரச் சான்றுகளை குறித்த தகவல்கள் வழங்க மறுத்துவிட்டது. விண்ணப்பமானது 2007 யூன் -2008 பெப்ரவரிக்கிடையில் மேற்கொள்ளப்பட்டது. MyintNaung இன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த காலப்பகுதியில் பர்மா இராணுவத்தினர் அட்டகாசமான நியாயமற்ற செயற்பாடுகளை செய்தனர். அதாவது இடம்பெயர்ந்த மக்களை தாக்கினர், மக்கள் மறைந்திருந்த இடங்களை தாக்கினர், பாடசாலைகளை அழித்தனர், உணவுகள், உடைகள் மற்றும் போர்வைகளை சூரையாடினர்.

கோரியிருந்தது[262]. இறுதியாக *PAIA* ஆனது திறனற்றதாக இருக்க முடியும். மேலும் அதற்கு பொறுமை மற்றும் பிடிவாதமும் தேவை. பெரும்பாலும் ஒரு நிபுணரின் உதவி அவசியமாகும். பகிரங்க அதிகாரசபை விண்ணப்பங்களை புறக்கணித்தல் என்பது தவிர்க்க முடியாததாகும். மேலும் தகவலுக்கான உரிமையானது இயங்கக்கூடியது, பயன்படுத்தக்கூடியது. திருப்பதிகரமாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. சில வேளைகளில் சக்திவாய்ந்ததாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

4. நடைமுறைப்படுத்தல்.

எந்தவொரு தகவலுக்கான உரிமைக்கு திட்டமுறைமையையும் அமுல்படுத்துவதற்கு சாத்தியப்பாடும் மற்றும் அதுபோல நம்பகத்தன்மையும் முக்கியமானதாகும். உரிமையை நடைமுறைப்படுத்துவற்கான பலமான திட்டம் இல்லாவிட்டால் அது மிகவும் மழுங்கலான ஒரு கருவியாக நிரூபிக்கப்படும். சந்தர்ப்பவசமாக தென்னாபிரிக்காவில் சட்டவாட்சியானது நெகிழும் தன்மையுடையதாகவும் அதனுடைய நீதிமன்றங்களும் நீதிபதிகளும் சுதந்திரமானவர்களாளவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தகவல் உரிமை தொடர்பில் மேல் நீதிமன்றங்களில் இருந்து வரும் பல எண்ணிக்கையிலான தீர்ப்புக்கள் மிகவும் பயனுடையது என நிரூபித்துள்ளதோடு புதிய வெளிப்படைத்தன்மையான கலாசாரத்தை உட்புகுத்துவதற்கான சட்டஇயல் சார்ந்த நிவாரணமாகவும் சேர்க்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, ஒரு வழக்கில் நீதிபதி சன்டில் நகோபோ (*Sandile Ncgobo*) அவர்கள் (பிற்காலத்தில் பிரதம நீதியரசரானார்) தகவல் மறுப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான 30 நாள் கால எல்லையானது 32ம் பிரிவின் கீழுள்ள தகவலை அணுகுதலுக்கான உரிமைக்கு மட்டுமல்ல மாறாக 34ம் பிரிவின்

262 எதிர்க்கட்சியானது ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் உள்ள மக்களுக்கான பொலிஸாரின் விகிதாசாரத்தை கோரியிருந்தது. குறித்த கோரிக்கையானது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்க தவறிய பின்னரே மேற்கொள்ளப்பட்டது.

கீழுள்ளவாறு நீதிமன்றத்தை அணுகுவதற்கும் ஏற்புடையதாகும் என தீர்ப்பளித்தார். தென்னாபிரிக்க வரலாற்று காப்பகம் நீதிமன்றத்தின் உதவிபுரினரின் அனுபவத்தை வழக்கில் சுட்டிக்காட்டிஇ நீதிபதி நகோபோ அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்.

> அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் தனிநபர் கோரிக்கையாளர்களுக்கும் எமது ஜனநாயக அரசாங்கம் பொறுப்புகூறக்கூடியது, வெளிப்படைத் த்தன்மையானது என்பதனை வெளிப்படுத்துவதில் முக்கியபங்கினை வகிக்கின்றனர். அரசியலமைப்பானது பொது நிர்வாகத்துறை பொறுப்புகூறக்கூடியதாயிருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. மேலும் வெளிப்படையான, நேரடியான, அணுகக்கூடிய மற்றும் துல்லியமான தகவலை மக்களுக்கு வழங்குவதன் மூலம் வெளிப்படைத்தன்மையை வளர்க்க வேண்டும் என குறிப்பிடுகின்றது.[263]

நீதிபதி நகோபோ அவர்கள் 30 நாள் கால எல்லை என்பது 180 நாட்களாக விரிவுபடுத்தப்பட வேண்டும் என கட்டளையிட்டார். மற்றுமொரு வழக்கில் நீதிமன்றமானது பல வழக்குகளில் அணுகல் கோரிக்கையின் பதிவுகளை நீதித்துறை கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளல் நீதிமன்றத்திற்கு ஏற்புடையதாயிருக்கும் என கீழ் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை அரசியலமைப்பு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது[264]. இருப்பினும் உதவும் வகையிலான நீதிமன்றத்தின் தலையீடானது தகவலுக்கான உரிமையானது அரசாங்கத்தின் நிர்வாக கலாசாரத்தின் தேவையற்ற பலவீனங்களால் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்த

263 புரும்மர் எதிர் சமூக அபிவிருத்திக்கான அமைச்சர் மற்றும் ஏனையோர் [*Brümmer v Minister for Social Development and Others*] *(CCT 25/09) [2009] ZACC 21; 2009 (6) SA 323 (CC); 2009 (11) BCLR 1075 (CC)* (13 ஆவணி 2009).

264 தென்னாபிரிக்க குடியரசின் தலைவர் மற்றும் ஏனையோர்:எம்.மற்றும்ஜீ வரைறுக்கப்பட்ட ஊடகம் *President of the Republic of South Africa and Others vjpu; M & G Media Limited (998/2013) [2014] ZASCA 124; 2015 (1) SA 92 (SCA); [2014] 4 All SA 319 (SCA)* (19 புரட்டாதி 2014).

வேண்டும். மேன்முறையீட்டு அமைப்பில் தகவல் ஆணையாளர் போன்ற நிபுணத்துவ இடையீட்டாளர் அற்றதும் மிகப்பெரிய பலவீனமாக நிரூபிக்கப்பட்டு மேலும் தென்னாபிரிக்காவின் தகவல் உரிமையின் விளைவாந்தன்மையையும் கடினமாக்கின்றது.

2013ம் ஆண்டின் தனிநபர்களின் தகவல்களை பாதுகாக்கும் சட்டத்தின் படி தகவல் ஒழுங்குபடுத்துனர் என்ற புதிய அமைப்பு வேறு ஒரு பிரச்சினை ஏற்பட்டதன் காரணம் தான் வழிவகுக்கப்பட்டுள்ளது. இது தென்னாபிரிக்காவின் தகவலுக்கான உரிமைக்கான ஒரு மாற்று அபிவிருத்தியாயிருக்கும் ஏனெனில் குறித்த தகவல் ஒழுங்குபடுத்துனர் *PAIA* இருந்து மறுக்கப்படும் விண்ணப்பங்களின் மேன்முறையீடுகளை விசாரிப்பதற்கான அதிகாரத்தை கொண்டிருப்பார். 2016ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐந்து உறுப்பினர்களை கொண்ட தேசிய அரசுப் பேரவை நியமிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த அலுவலகம் 2107ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த கட்டுரையை எழுதும் போது (2018ம கார்த்திகைக்) வரைக்கும் அது நடவடிக்கைக்காக திறக்கப்படவில்லை. மேலும் தகவல் ஒழுங்கமைப்பாளருடன் தொடர்புடைய *POPI* இன் பகுதிகள் இன்னமும் விளைவாந்தன்மையை கொண்டிருக்கவில்லை ஏனெனில் புதிய அமைப்பை உருவாக்குவதற்கு பொருத்தமான பணத்தொகையை வழங்குவது தொடர்பில் பொதுநிதி முகாமைத்துவ அதிகாரசபை மிகவும் மெதுவாக செயற்படுகின்றது.

சிவில் சமுதாய அமைப்புக்கள், வழக்கறிஞர் பன்சி லகுலா (*Pansy Tlakula*) அவர்களின் நியமனத்தின் மூலம் உற்சாகமடைந்திருந்தன. அவர் ஆபிக்காவிற்கான, தகவல் அணுகுதல் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரம் என்பவற்றின் முன்னால் சிறப்பு அறிக்கையாளரும் தகவல் ஒழுங்கமைப்பின் தலைவரும் *ATI* இன் ஒரு நம்பகமான ஆதரவாளருமாவார். ஆனால் தகவல் ஒழுங்கமைப்பாளர் எவ்வளவு வித்தியாசத்தைக் கொண்டுவருவார் என்பதனை தெரிவிப்பது ஆரம்பமாகும்[265].

265 கலண்ட், 2017 மேலே குறிப்பிட்டது.

வெளிப்படையான வழக்கறிஞர் முகலனி டிம்பாவால் கூறப்பட்டபடி "சாதாரண தூண்டுதலைக்கொண்ட ஒரு அமைப்பாக அல்லாமல் பலமான அதிகாரங்களை கொண்ட ஒரு நிறுவனத்தையே நாங்கள் வேண்டுகின்றோம். மேலும் தென்னாபிரிக்காவின் தரவு பாதுகாப்பு சட்டத்தில் கொடுக்கப்பட்ட உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக தைரியமாக பணியாற்றும் ஒரு நிறுவனத்தையே நாங்கள் விரும்புகின்றோம்."[266]

5. முடிவுரை

தென்னாபிரிக்கா மிகவும் சக்தி வாய்ந்த சட்டவாட்சியை கொண்டுள்ளது. தகவலுக்கான உரிமை அரசியலமைப்பு ரீதியாக வெளிப்படுத்தப்பட்டு தேசிய சட்டத்தால் விளைவு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் வலுவான ஆளுமை மற்றும் ஒரு சுதந்திரமான நீதித்துறை ஆகியவற்றின் ஆதரவுடன் பரந்த மற்றும் ஆழமான நோக்குடன் தகவல் உரிமை மீதான நீதித்துறை முற்போக்கு மற்றும் உரிமையின் மதிப்பை ஆதரிப்பதுடன் வெளிப்படையான ஒரு புதிய கலாசாரத்தையும் ஊக்கப்படுத்துகின்றது. எனினும் தென்னாபிரிக்காவின் திறமையற்ற கலாசாரம் மற்றும் பொதுச்சேவையிலுள்ள இரகசியத்தன்மையும் தகவல் உரிமையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளதுடன் எதிர்மறையான அரசியல் தலைவர்களுடன் பிணைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தென்னாபிரிக்காவின் அரசிலமைப்பு மற்றும் சட்டவாட்சியைப்போல தகவலுக்கான உரிமையும் நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்தியுள்ளது. தற்போது புதிய முறையான நடவடிக்கையுடன் கூடிய அமுலாக்க அமைப்பை நிறுவுவதற்கு புதிய வாய்ப்புள்ளது. தகவல் ஒழுங்கமைப்பாளர் எவ்வாறு அமைக்கப்பட்டு அது செயற்படுகின்றது என்பதில் மிக அவதானமாக கவனஞ் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அது

266 2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி [*Mail & Guardian newspaper*] மெயில் மற்றும் ஹடியன் இல் வெளிவந்த ரிச்சாட் கலண்ட் மற்றும் அலிசன் டில்லியின் தென்னாபிரிக்கா தகவல் ஒழுங்கமைப்பாளருக்கு காத்திருக்கின்றது.

விரைவாக செயற்படுதல் வாக்காளர்களுக்கும், பயனாளிகளுக்கும், தென்னாபிரிக்காவின் பொருளாதாரத்திற்கும் நன்றாக இருக்கும்.

அதனது திட்டம் மற்றும் அமைப்பு என்பவற்றை உருவாக்கும் போது தகவல் ஒழுங்கமைப்பாளர் மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள கூடும். அதாவது ஒப்பிடக்கூடிய அமைப்புக்கள் குறிப்பாக இரண்டைத்தன்மையை கொண்டுள்ள நாடுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் (அதாவது ஜேர்மனி ஜப்பான் ஐக்கிய இராச்சியம்). மேலும் இதேவகையான அரசியல் சமூக பொருளாதார சாவல்களை எதிர்கொள்ளும் இலங்கை போன்ற நாடுகளிலுள்ள அமைப்புக்களுடன் பங்காளராயிருக்க வேண்டும்.

தொகுப்பாளர் மற்றும் பங்களிப்பாளர்கள் பற்றிய விபரம்

கிஷாலி பின்ரோ - ஜயவர்தன தகவலுக்கான உரிமைச் சட்டத்தையீட்டிய 2003/2015 அரச வரைபு குழுக்களில் உறுப்பினராக பணியாற்றினார். 1995 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீடத்தின் கௌரவ பட்டம் பெற்ற இவர், 1997 முதல் 2007 வரை பொது சட்டத்தில் சேவையாற்றினார். மேலும் ஐ.நா சபை மனித உரிமைகள் குழுவின் முன்னும் பர்னாண்டோ எதிர் அரசு (இல.*1189/2003/, 2005*) போன்ற வழக்குகளில் தோன்றியுள்ளார். சட்டத்தரணிகள் சங்கத்தின் நீதிமன்ற அவமதிப்பிற்கான 2005ம் ஆண்டு சட்ட வரைபினை இயற்றவும் உதவியுள்ளார். சண்டே டைம்ஸ் பத்திரிக்கையின் தொகுப்பு (சட்ட) ஆலோசகராக, நீண்ட காலமாக செய்தித்தாள்-பத்திக்கு பங்களிக்கின்றார். பொதுநலவாய கல்விக்கான நிலையம் (*Institute of Commonwealth Studies*), லண்டன் பல்கலைகழகம், அபிவிருத்திக் கல்விக்கான நிலையம் (*Institute of Development Studies*), சசெக்ஸ் பல்கலைகழகம் the Dignity Institute, Denmark மற்றும் சர்வதேச சட்டவல்லுனர் ஆணையம் (*the International Commission of Jurists*) ஆகிய நிறுவனங்களில் அவர் ஒரு மூத்த சட்ட ஆலோசகர் ஆவார். *Rule of Law in Decline (the Dignity Institute, 2009), Still Seeking Justice (ICJ, 2010),Embattled Media* (இணைத் தொகுப்பாளர்கள் டேவிட் பேஜ் மற்றும் வில்லியம் கிரோவ்லி, ளூயபந, 2015) மற்றும் *The Search for Justice; The Sri Lanka Papers* (இணைத் தொகுப்பாளர் குமாரி ஜயவர்தன *Zubaan, 2016*) ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். *2013 Bellagio Visiting Delegate, Rockefeller Foundation, Italy; Scholar of Peace, WISCOMP, New Delhi, 2002; Salzburg Fellow, 2000* மேலும் 2013ன் மேன்மைதங்கிய வருகையார் இ ஆசிய பசுபிக்கிற்கான ஆய்வுக் கல்லூரி, அவுஸ்ரேலிய தேசிய

பல்கலைகழகம் (*ANU*), ஆகியவற்றை உள்ளடங்கலாக பல சக ஆய்வாளர் நிலைகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

அருளானந்தம் சர்வேஸ்வரன் முதுநிலை சட்ட விரிவுரையாளராக கொழும்புப் பல்கலைக் கழக சட்ட பீடத்தில் பணியாற்றி வருகின்றார். இவர் கொழும்புப் பல்கலைக் கழகமும் நீதி அமைச்சும் இணைந்து நடாத்தும் சட்ட ஆய்வு நிலையத்தின் பணிப்பாளராகவும் உள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்திலிருந்து தொழிற் சட்டத்தில் சட்ட தத்துவமாணிப் பட்டத்தையும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சமாதானக் கற்கைகளுக்கான பல்கலைக் கழகத்திலிருந்து சர்வதேச சமாதான கற்கைகளில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட மறுசீரமைப்பு கருத்திட்டத்தில் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். சர்வதேச தொழில் தாபனத்தின் கருத்திட்டங்களின் வெளியக வளவாளராகவும் இவர் இருந்துள்ளார். இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சங்கத்தின் சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் இவர் உள்ளார். ஆசிய அபிவிருத்தி வங்கியானது சுற்றாடற் சட்ட முன்னோடி விருதினை இவருக்கு வழங்கியுள்ளது. ஜப்பானிய சர்வதேச இல்லமும் ஜப்பான் நிறுவகமும் இணைந்து இவருக்கு ஆசிய தலைமைத்துவ விருதினையும் வழங்கியுள்ளது. இவர் கொழும்புப் பல்கலைக் கழக பட்டமேற்படிப்பு பீடம், மொறட்டுவைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை திறந்த பல்கலைக் கழகம், இலங்கை சட்டக் கல்லூரி உட்பட பல்வேறு கல்வி நிறுவனங்களில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

பிரசாந்தி மஹிந்தரட்ன *Julius & Creasy* நிறுவனத்தின் ஒரு சட்ட ஆலோசகர். 2017 நடுப்பகுதியில் தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிவின் மூத்த சட்ட ஆலோசகராக பணிபுரிந்தார். ஐ.நா. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்றங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்த வழக்கரிஞரான முதல் இலங்கை

பெண்மணி இவர் சாராஜிவோவில் நடந்த குற்றங்கள், டப்ரோவிக் குண்டுவீச்சி, கிரேரியாவின் நடந்த இன அழிப்பு, சர்பியாவின் முன்னால் ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு போன்ற உயர் மட்ட போர்க்குற்றங்களுக்கு எதிராக வாதாடினார். ஐ.நா விற்கு முதல் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச ஆலோசனையாக பணியாற்றினார். அப்போது, கிரிசாந்தி குமாரசுவாமி யின் கற்பழிப்புக்கு எதிரான வழக்கையும் தொடர்ந்தார்.

இடைக்கால நீதி மற்றும் நல்லிணக்க வழிமுறைகள் பற்றிய அரசாங்கத்தின் பணிக்குழு உறுப்பினரான இவர், 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும் நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தை வரைபு செய்தவர்களுள் ஐவரும் ஒருவர். இலங்கை சட்டக் கல்லூரியில் முதல் வகுப்பு கௌரவத்துடன் முடித்த இவர், நியூயோர்க் பல்கலைக்கழகம் மற்றும் லண்டன் பல்கலைக்கழகத்தின் இரண்டு எல்.எல்.எம் பட்டங்களையும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் தடயவியல் மருத்துவம் மற்றும் விஞ்ஞானத்தில் டிப்ளமோ பெற்றுள்ளார். ஆக்ஸ்போர்டில் முன் நீடான வாதிடும் பயிற்சிகளையும் பெற்றுள்ளார். இவர் *Mahapola Scholar, a Hauser Global Scholar kw;Wk; British Chevening Scholar* ஆவார்.

கலாநிதி தீபிகா உடகம இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவர் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் முதன்மை பேராசிரியர். சர்வதேச ரீதியிலும் அரசியலமைப்பு ரீதியிலும் மனித உரிமை பாதுகாப்புக்கு இடையிலான ஊடறுப்பு அவரது ஆராய்ச்சியின் பிரதான தொனிப்பொருளாகும். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் (2003-2006) இலங்கை சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் (2004-2009), அரச சார்பற்ற மனித உரிமைக்கான நிறுவனங்களிலும் சேவையாற்றியுள்ளார். அத்தோடு ஐ.நா வின்

உறுப்பினராகவும் (2008-2013), மனித உரிமைகள் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஐ.நாவின் தன்னார்வ நிதி அறங்காவலர்கள் குழுவின் தலைவராகவும், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான ஐ.நா. உப ஆணைக்குழுவின் இலங்கையின் மாற்று உறுப்பினராகவும் (1998 - 2001) பணியாற்றியுள்ளார். "உலகமயமாக்கல் மற்றும் மனித உரிமைகள் மீதான அதன் தாக்கம்" என்ற தொனிப்பொருளில் செய்யப்பட்ட ஒரு முன்னோடி ஆய்விற்கு (*Prof. Joe Oloka-Onyango of Uganda* உடன்) இணை அறிக்கையாளராக உப - ஆணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐ.நா பல்கலைக்கழகத்திலும் டோக்யோ, ஹான்க் காங் பல்கலைக்கழகத்திலும் டெல்லி தேசிய சாதா பல்கலைக்கழகத்திலும் கற்பித்ததோடு, மேலும் *Netherlands Quarterly on Human Rights* உட்பட சர்வதேச மற்றும் தேசிய கல்வித்துறை பத்திரிகைகளின் ஆசிரியர் குழுக்களில் பணியாற்றியுள்ளார். கொழும்பு பல்கலைக்கழக *LLB, LLM* பட்டங்களையும், *Boalt Hall of Law*, கலிபோனியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச மனித உரிமைகள் பற்றிய சட்ட அறிவியல் முனைவர் பட்டத்தையும் கொண்டுள்ளார்.

கலாநிதி சுசில் சிரிவர்தண (ஓய்வுபெற்றவர், இலங்கை நிர்வாக சேவை, *SLAS*) இலங்கையின் பொது சேவையில் பல தனித்துவமான பதவிகளை வகித்துள்ளதுடன், நகரப்புற வீடுகள் மற்றும் குடியிருப்புகள் போன்ற துறைகளில் ஒரு கொள்கை தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார்.

சின்கா ரட்ணதுங்க சண்டே டைம்ஸ் பத்திரிக்கையின் தலைமை ஆசிரியர், விஜய செய்தித்தாள் டுவன இன் நிர்வாக இயக்குனர், மற்றும் *World Association of Newspapers and News Publishers (WAN-IFRA)* வின் குழுவில் ஒருவராகவும் பணிபுரிகின்றார். இலங்கை பதிப்பாசிரியர் சங்கத்தின் *(The Editors' Guild of Sri Lanka (TEGOSL)* முன்னால் தலைவரும், *TEGOSL*வின் மற்றும் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின்

(*SLPI*) தொற்றுனரும் ஆவார். இவை தகவலுக்கான உரிமை சட்டத்தினை இலக்காக ஊடக சட்ட சீர்திருத்தத்திற்கான ஒரு தளத்தை முன்னெடுத்தது

கலாநிதி ஜயந்த டி அல்மெய்டா குணரட்ன ஒரு ஜனாதிபதி ஆலோசகர் பிஜி குடியரசின் (*Republic of Fiji*) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி, இலங்கை சட்ட ஆணைக்குழுவின் முன்னால் உறுப்பினர், சட்டக் கல்லூரி மற்றும் கொழும்பு பல்கலைக்கழக முன்னால் விரிவுரையாளர் மேன்முறையீட்டு சட்ட ஆவணத்தின் தலைமை பதிப்பாசிரியர். அரசியலமைப்பு சுதந்திரம் சம்பந்தப்பட்ட பல முக்கிய வழக்குகளில் ஆலோசகர். 1995-1997 காலப்பகுதியில் தெற்கு, மேற்கு மற்றும் சபரகமுவ மாகாணங்களில் உள்ள அகதிகளை அகற்றும் மற்றும் காணாமல் போனவர்கள் மீதான ஜனாதிபதி ஆணைக்குழுவின் உறுப்பினர். அவரது வெளியீடுகளுக்குள் - *The Swiss Constitution: Lessons for Sri Lanka (The Centre for Policy Research and Analysis, University of Colombo, 1995), authored (with Kishali Pinto-Jayawardena) Habeas Corpus in Sri Lanka; Theory and Practice of the Great Writ in Extraordinary Times, (Law & Society Trust, Colombo, 2011 and (authored with Kishali Pinto-Jayawardena and Gehan Gunetilleke), The Judicial Mind in Sri Lanka, (Law & Society Trust, Colombo, January 2014).*

ஹர்ஷ பர்னான்டோ ஒரு வழக்கறிஞர், 2017 நடுப்பகுதியில் ஒரு மூத்த சட்ட ஆலோசனை ஆலோசகராக தகவல் அறியும் உரிமைக்கான பணிஆணைக்குழுவில் புரிந்தார். இவர் சிவில், வர்த்தக மற்றும் நிர்வாகச் சட்டம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். அவர் ஆசிய அபிவிருத்தி வங்கி (சர்வதேச அளவில்), தேசிய கொள்முதல் ஆணைக்குழு (இலங்கை) ஆகியவற்றின் ஆலோசகர். அத்தோடு *IOM, UNDP* ஆட்சியில், ஊழல் எதிர்ப்பு, கொள்முதல், பொது நிதி மேலாண்மை மற்றும் திட்ட நிதி / மேலாண்மைபோன்றவற்றிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அவர்

ஒரு மூத்த அரச ஆலோசகர் - சட்டமா அதிபர் திணைக்களம், மத்திய வங்கி மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்திற்கு சட்ட ஆலோசகர். அவர் ஒரு பயிற்சி பெற்ற பேரன் பேச்சாளர் மற்றும் மத்தியஸ்தர். அத்தோடு சிங்கப்பூர் கடல் மாற்ற பங்குதாரர்களுக்கு ஆலோசகராகவும் உள்ளார்.

இலங்கை சட்டக் கல்லூரியில் கற்று (1995) சிங்கப்பூர் *Nanyang Technological University*இல் *MBA* பட்டம், *USA Massachusetts Institute of Technology*இல் *MIT* பட்டம், லண்டன் பல்கலைக்கழகத்தில் *LLM* பட்டம் ஆகியவற்றை பெற்றுள்ளார். அவர், *Chevening Scholar (UK) Nanyang Fellow (Singapore*) ஆவார்.

அஷ்வினி நடேசன் *(Master of Laws, International Business Law, (National University of Singapore); BA, LL.B (Hons), (School of Excellence in Law, Chennai, India)* தொழில்நுட்பம், ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு சட்டத்தில் சிறப்பு ஆர்வமுள்ள ஒரு சட்ட வழக்கறிஞர் ஆவார். அவர் *LIRNEasia* நிறுவனத்தில் தரவு பாதுகாப்பு மற்றும் அந்தரங்கம் தொடர்பான கொள்கை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் ஒரு சக அராய்ச்சியாளர். அத்தோடு, இலங்கையில் *APIIT* சட்ட கல்லூ ரியின் விரிவுரையாளர். அவர் முன்பு இந்தியாவில் வழக்கு மற்றும் பெருநிறுவன சட்ட அலுவலகங்களில் பணிபுரிந்தார், மேலும், சென்னையில் தகவல் உரிமை கோரிக்கைகளை தாக்கல் செய்வதிலும் ஈடுபட்டுள்ளார்.

ஆதில் நாதனி வின்ட்சர் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் ஒரு முனைவர் வித்தியார்த்தி. 2018 ஆம் ஆண்டில் வின்ட்சர் சட்டத்திடமிருந்து *Social Justice Fellowship* விருது பெற்றவர். 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஜூலை மாதம் வரை இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் சட்ட ஆராய்ச்சியாளராகவும் பணியாற்றினார். தனது சட்ட கற்கையை தொடர்ந்து கொண்டே, தற்போது முனைவர்.

அன்னக்கே ஸ்மித்திடம் (*Dr. Anneke Smit - Windsor Law, Canada*) ஆராய்ச்சி உதவியாளராக உள்ளார். பட்டம் பெற்றதின் பின்னர், சர்வதச சட்டம் பயில்வதோடு, உலகெங்கிலும் உள்ள ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கான நிலைமைகளை மேம்படுத்துவது அவர் எதிர்ப்பார்ப்பாகும்.

விஜயானந்த ஜயவீர ஓய்வுபெற்ற சர்வதேச பொது பணியாளர். 2011இல் அவரது ஓய்வின் போது, வின் தொடர்பாடல் அபிவிருத்திக்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் (*IPDC*) நிர்வாகஸ்தராக இருந்தார். அவர் *UNESCO*வில் 1994 ஆம் ஆண்டில் பாரிஸ் அடிப்படையிலான தலைமையகத்தில் ஒரு நிரல் நிபுணராக இணைந்தார், அதன்பிறகு ஆசியாவிற்கான *UNESCO*வின் பிராந்திய தொடர்பாடல் ஆலோசகராக பணியாற்றினார். தகவல் சுதந்திரம், ஊடகவியலாளர், பத்திரிகை கல்வி, அறிவியல் தகவல் தொடர்பு மற்றும் ஊடகவியலாளர் ஆகியோருடன் *UNESCO*வின் உதவித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அவர் உறுப்பினர் நாடுகளில் பல *UNESCO* திட்டங்களை மேற்கொண்டார். அவர் யுனெஸ்கோவின் ஊடக மேம்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் பத்திரிகை கல்விக்கான *UNESCO*வின் தரநிலைகளை பரவலாக அங்கீகரித்து வளர்ப்பதில் கருவியாக இருந்தார். ஆசியாவில் ஊடக அபிவிருத்திக்கான அவரது பங்களிப்பை கௌரவப்படுத்தி மணிலாவை அடிப்படையாகக் கொண்ட ஆசிய ஊடக மற்றும் தகவல் தொடர்பு நிலையம் (*AMIC*) அவருக்கு *AMIC* விருது வழங்கியது. *UNESCO*வில் இணைவதற்கு முன், அவர் ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒளிப்பதிவு பத்திரிகையாளராக பணியாற்றினார்.

2015 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் தகவலுக்கான உரிமை சட்டத்தை மீளாய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினராக பணியாற்றுவதற்காக அவர் அழைக்கப்பட்டார். அதன் பின்னர், தகவல் ஆணைக்குழுக்கு தனது முதல் மூன்று வருட மூலோபாய அமுல்பாட்டு திட்டத்தை

அபிவிருத்தி செய்வதற்காக உதவுவதில் உலக வங்கிக்கு ஆலோசகராக பணியாற்றினார். அவர் *Leister* பல்கலைக்கழகத்தில் (*UK*) வெகுஜன தகவல்தொடர்புகளில் ஒரு மாஸ்டர் பட்டம் பெற்றுள்ளார், மேலும் தகவல் மற்றும் ஊடக அபிவிருத்தி பிரச்சினைகள் சுதந்திரம் பற்றி எழுதுகிறார்.

டோபி மென்டெல் சட்டம் மற்றும் ஜனநாயக மையமென்ற (*Centre for Law and Democracy*) கனடாவை சார்ந்த சர்வதேச மனித உரிமைக்கான அரச சார்பற்ற நிறுவனத்தின் தோற்றுனரும் நிர்வாக இயக்குனரும் ஆவார். இது தகவலுக்கான உரிமை, கருத்து தெரிவிப்பதக்கான சுதந்திரம், பங்கேற்றல் மற்றும் ஒன்று கூடுவதற்கான மற்றும் ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம் போன்றவற்றை கட்டியெழுப்புகின்ற நிறுவனமாகும். இதற்கு முன்னர், 12 வருடங்களாக எனும் மனித உரிமைக்கான அரச சார்பற்ற நிறுவனத்தில் மூத்த இயக்குனராக பணியாற்றினார். உலக வங்கி, *UNESCO*, ஐ.நா மற்றும் வெளிவிவகார சுதந்திரம், *OSCE* மற்றும் ஐரோப்பிய கவுன்சில் மீதான சர்வதேச அறிக்கையாளர்கள் - உட்பட உலகம் முழுவதும் உள்ள பல அரசாங்கங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புக்களோடு பரந்த அளவில் ஒத்துழைத்துள்ளார். அவரது வேலை சட்ட சீர்திருத்தம், வழக்காடல், ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், பயிற்சி, வாதிடுதல் மற்றும் திறன் கட்டியெழுப்பல் ஆகியவற்றுடன் சட்டத்தின் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. வெளிப்பாட்டு சுதந்திரம், தகவல் தொடர்பு, தொடர்பாடல் உரிமை மற்றும் அகதி பிரச்சினைகள் ஆகியவை தொடர்பாக அவர் பல வெளியீடுகளை மேற்கொண்டுள்ளார் *ARTICLE 19* இல் இணைவதற்கு முன், அவர் கனடா *Oxfam*இல் மூத்த மனித உரிமைகள் ஆலோசகராகவும், கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (*Canadian International Development Agency*) இல் மனித உரிமைகள் கொள்கை ஆய்வாளராக பணியாற்றினார்.

ரிச்சர்ட் கலன்ட் கேப் டவுன் பல்கலைக்கழகத்தில் பொது சட்டத்தில் இணை பேராசிரியர் ஆவார் 2001 ஆம் ஆண்டில் அவர் ஆரம்பித்த திறந்த ஜனநாயக அறிவுரை மையம் (*Open Democracy Advice Centre*) மையத்தின் உறுப்பினர் மற்றும் உலக வங்கியின் சுயாதீனமாக தகவலை அணுகல் மேன்முறையீட்டு சபையின் உறுப்பினர்.

****